# අල් ෆික්හුල් ඉස්ලාම්

(ඉස්ලාමීය නීති පද්ධතිය)

**ඉස්ලාමීය දීනිය්යාත් ධර්මාචාර්යවරුන් (උපදේශකවරුන්)**
**සඳහා සහතික පත්‍ර විභාගය සඳහා පෙළ පොත්**

# அல் பிக்ஹுல் இஸ்லாம்

(இஸ்லாமியச் சட்டநெறி)

**இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ்**
**பரீட்சைக்குரிய பாடப்புத்தகம்**

# Al Fiqhul Islam

**(Islamic Law)**

**Text Books for**
**Islamic Deeniyyath (Dharmacharya) Certificate Examination**

# الفقه الإسلامي

**الكتاب المقرر لشهادة الإمتحانات**
**الدينية (للمعلمين)**

**إصدار: إدارة الشؤون الإسلامية**
**كولومبو-سريلانكا**

***Published by :***
***Department of Muslim Religious and Cultural Affairs***
***180, T. B. Jayah Mawatha,***
***Colombo - 10,***
***Sri Lanka.***



2-CM014797


بسم الله الرحمن الرحيم

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மத் (நளீமி)
பிரதிப் பணிப்பாளர்,
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்,
துணைத் தலைவர்,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி (நளீமி)
முன்னாள் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் (நளீமி)
பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள்** : அஷ்ஷெய்கு எம். ஏ. எம். முபாரக் B. A. (மதனி)
செயலாளர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி B. A.(Hons)PGDE
முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம

அஷ்ஷெய்க் எம். எஸ். எம். அனஸ் (நளீமி) B. A. PGDE
முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை
தர்கா நகர்

**செம்மையாக்கக் குழு** : அல்ஹாஜ் எஸ். எச். எம் ஜெமீல் M. A.
முன்னாள் செயலாளர்
முஸ்லிம் விவகார இராஜாங்க அமைச்சு

| | | |
|---|---|---|
| **செம்மையாக்கக் குழு** *(தொடர்ச்சி)* | | அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன் (M.A.)<br>முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்<br>பேராதனை பல்கலைக்கழகம் |
| | | கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி)<br>முன்னாள் பீடாதிபதி, சிரேஷ்ட விரிவுரையாளர்<br>தென்கிழக்கு பல்கலைக்கழகம் |
| | | அஷ்ஷெய்க் ஏ. எல். றிழா (ஹஸனி) B.A.(CEY)<br>அதிபர்<br>ஹஸனிய்யா அரபுக் கல்லூரி திஹாரி |
| | | அல்ஹாஜ் எம். எச் எம். நாளிர் B.A. (Hons)<br>வளவாளர்,<br>தேசிய கல்வி நிறுவகம், மஹரகம |
| | | அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபீர் M.A.<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| **இணைப்பாக்கம்** | : | மௌலவி அல்ஹாஜ் எம். எச். எம். லாபீர் (கபூரி) B.A. PGDE<br>மத்திய அஹதிய்யா சம்மேளனப் பாடத்திட்டக் குழுத்தலைவர் |
| | | மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி) BA (Cey)<br>உதவிப் பணிப்பாளர்,<br>முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **அல் பிக்ஹுல் இஸ்லாம்**<br>**(இஸ்லாமியச் சட்டநெறி)**<br><br>இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்குரியது |
| பதிப்பாசிரியர் | : | மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி) BA (Cey)<br>உதவிப் பணிப்பாளர்,<br>முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| வெளியீடு | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>இல. 180, T. B. ஜாயா மாவத்தை<br>கொழும்பு - 10. |
| பதிப்பு | : | அரசாங்க அச்சகத் திணைக்களம்<br>இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,<br>கொழும்பு - 08. |
| முதற்பதிப்பு | : | 2014 |

| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

# மாண்புமிகு பிரதமர், புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் அவர்களது ஆசிச் செய்தி

இலங்கை சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் ஒரு தேசமாகும். சிறுபிராயம் முதல் பிள்ளைகளிடையே கலாசாரம், சகவாழ்வு, மானிடத்துவம் பற்றிய மனப்பாங்கை வளர்ப்பதன் ஊடாகவே தேசத்தையும் சமூகத்தையும் மதிக்கின்ற, சமய கலாசாரத்தை கௌரவிக்கின்ற, மனிதமாண்பை புரிந்து கொண்ட சமூகமொன்றை உருவாக்க முடியும். பரீட்சையை மையப்படுத்திய கல்வித் திட்டத்தின் மூலம் சிலவேளை தார்மீக பண்பாட்டு ரீதியான கல்வியை வழங்குவது கடினமாகலாம். இதனால் தான் இலங்கையில் ஞாயிறு சமய பாடசாலைக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமய பிள்ளைகள் தத்தமது சமய ஸ்தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு சென்று சமயக்கல்வியைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமயக் கல்விப் போதனைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை வளப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள், சீருடை வழங்கல் மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைந்நூல், மாணவர்களுக்கான பாடநூல் என்பனவும் இலவசமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பௌத்த சமய பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும் ஏனைய சமயம் சார்ந்த பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அஹதிய்யா என்ற பெயரில் வழங்கப்படும் இஸ்லாமிய சமய பாடசாலைகளுக்கு அவசியமான பாடத்திட்டத்தை தயார் செய்யும் வேலைத்திட்டத்தினை சிறப்பாக நிறைவு செய்துள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதே பிரகாரம் பாடநூல் தொகுதியொன்றை வெளியிட மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

சமயக் கல்விப் போதனையின் இலக்கை அடைவதில் ஆசிரியர் களுக்கான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாததாகும். மிக விரைவில் இது விடயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

எந்தவொரு மட்டத்திலாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடு வெற்றியளிப்பதற்கு உரிய பாடநூல்கள் அவசியம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இவ்வவசியத் தேவையை சரியாகப் புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய பாடத்திட்டத்திற்கமைவாக இரு பரீட்சைகளுக்குமான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்திருப்பது காலத்தின் தேவையாகும். சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் இதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதை செய்து முடிப்பதற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. மு. ஜயரத்ன**
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் பிரதமரும்
புத்த சாசனம் மற்றும்
மத அலுவல்கள் அமைச்சரும்.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# கௌரவ புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் பிரதியமைச்சரின் ஆசிச் செய்தி

பல்லின சமய கலாசார விழுமியங்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டு மக்கள் மத்தியில், தார்மீக சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையில் வதியும் பிரதான நான்கு சமயத்தவர்களும் தத்தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மூலம் முதன் முறையாக இஸ்லாமிய சமய (அஹதிய்யா) பாடசாலை மாணவர்களுக்காக பாடத்திட்டத்தினையும் அப்பாடத்திட்டத்திற்கமைவாக பாடநூல்களையும் வெளியிடும் இச்சிறப்பான வேளையில் வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிடக் கிடைத்தமையினை பெரும் நற்பேறாகக் கருதுகிறேன்.

நீண்டகாலமாக நிலவிவந்த இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு எமது அமைச்சின் ஊடாக பங்களிப்புச் செய்வது எமது கடமை என்பதோடு பல தசாப்தங்களாக இயங்கிவரும் அஹதிய்யா சமய பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமது சமய கல்விப்பணிகளை முன்கொண்டு செல்வதற்கு இது பேருதவியாக அமையும் என நம்புகிறேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலைத்திருப்பது அரசியல் பொருளாதார அபிவிருத்தியுடன சமய சமூக மட்டத்திலான அபிவிருத்தியும் இணைந்தது என உறுதியுடன் நம்பிக்கை பூண்டுள்ளேன். குறிப்பாக சமூக மட்டத்திலான ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதாயின் சமய கலாசார துறைசார் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்படி சமய சமூக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதில் அஹதிய்யா முதலான சமயப் பாடசாலைகள் ஆற்றும் பணி விலைமதிக்க முடியாததாகும்.

சிறு பராயம் முதல் பிள்ளைகளை சமய பின்னணியில் வாழப் பயிற்றுவிப்பது போல் அதற்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் ஒழுக்க விழுமியங்களால் போஷிக்கப்பட்ட இளைய தலைமுறையொன்று உருவாகுவதை எதிர்பார்க்க முடியும்.

எங்களைப் போல் பல்லின சமய கலாசார சமூகமொன்று வாழும் நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மக்கள் தமது பிள்ளைகளுக்கு அவரவர்களது சமய அறிவையும் விளக்கத்தையும் வழங்குவதற்கு இதுபோன்ற சமய பாடசாலைகள் ஊடாக மேற்கொள்ளும் அறப்பணி மகத்தானதாகும்.

இம்மகத்தான பணியைச் செய்வதில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இதற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது அமைச்சின் நன்றியறிதலை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

**எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,**
பிரதியமைச்சர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரது ஆசிச் செய்தி

தார்மீக சமுதாயமொன்றை தோற்றுவிப்பதில் சமயக் கல்வி அதிமுக்கிய பங்காற்றுகிறது. பாலர் பருவம் முதல் பிள்ளைகளிடையே சமய விழுமியச் சிந்தனையை ஏற்படுத்த முடியுமாயின் நாட்டின் சமூக சூழலை நல்ல நிலைக்கு மாற்றுவது கஷ்டமாயிராது. யாவரிடத்திலும் நல்ல மனப்பாங்கு ஏற்படுவது அனுபவங்கள் ஊடேயாகும். பயனுள்ள அனுபவங்களை வழங்குவதில் சமயக் கல்வி சிறந்த ஊடகமாகும். பரீட்சையை மையப்படுத்திய பொதுக்கல்வியுடன் மாத்திரம் சமய அறிவைப் புகட்டுவது சிரமமான காரியமாகும். இதற்கு மாற்றீடாக இலங்கையில் ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் சமய பாடசாலைகள் முறை இத்துறையில் பெருமளவு வெற்றியை ஈட்டித்தந்துள்ளது.

பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ பிள்ளைகளிடையே சமய சூழலும் சமய அறிவும் விருத்தி செய்யப்படும் வகையில் ஒவ்வொரு சமயம் சார் பிள்ளைகளுக்குமாக வெவ்வேறான சமயப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. சமய பாடசாலைகளுக்கான பாடத்திட்டம், பாடநூல் என்பன தற்போதைக்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு அவசியப்படும் பயிற்சித்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் சீருடை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு முக்கிய குறைபாடாக விளங்கி வந்த பாடநூல்களை வழங்க ஏற்பாடு செய்கின்றமை முக்கிய அம்சமாகும். சகல சமய குழந்தைகளுக்கும் ஒரே விதமான வசதிகளை செய்து கொடுப்பது அரசின் கொள்கையாகும். இஸ்லாமிய சமய பாடசாலைகள் விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடத்திட்டத்தை தயாரித்து சிறப்பாக வெளியிட்டு வைத்த இத்திணைக்களம் தேவையான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்தமை சமய கல்வித்துறையில் ஒரு திருப்பு முனையாகும். எந்தவொரு கல்வி மட்டத்திலும் பாடத்திட்டத்தின் உரிய பலாபலன்களை அடைவதில் பாடநூல்கள் முக்கிய பங்கு வகிப்பதை மறுக்க முடியாது. இவ்வவசியத் தேவையினை சரிவரப்புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆரம்ப நடவடிக்கையாக அஹதிய்யா (தஹம்) இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்

களையும், அஹதிய்யா (தஹம்) தீனிய்யாத் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்களுடன் மொத்தம் 10 நூல்களை வெளியிட எடுத்துள்ள நடவடிக்கையினையிட்டு இத்திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

மேற்படி அறப்பணியில் ஈடுபட்டிருக்கும் திணைக்கள ஊழியர்கள், வளவாளர்கள், நூலாக்கக்குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளை சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

**எம். கே. பீ. திசாநாயக்க,**
செயலாளர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

## முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இன்றைய உலகு பயங்கர ஆன்மீக வறுமையிலும் வெறுமையிலும் வாடிக் கொண்டிருக்கிறது. உண்மையாக இன்றைய உலகின் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது ஆன்மீகப் பிரச்சினையும் அதனடியாகப் பிறந்துள்ள பண்பாட்டு வீழ்ச்சியுமாகும் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

சமய சார்பற்ற சிந்தனை, சடவாதம், உலோகாயதவாதம் முதலான மதவிரோத கொள்கைகளின் செல்வாக்கின் காரணமாகவே ஆன்மீக, தார்மீக, ஒழுக்க பண்பாட்டுத் துறைகளில் பயங்கர பின்னடைவை இன்று நாம் கண்டு வருகிறோம். அறிவைப் பூஜிக்கின்ற சமூகம் ஆன்மீகத்தைப் புறக்கணிக்கிறது. உடலைக் கவனிக்கின்ற சமூகம் உள்ளத்தை மறந்துவிடுகின்றது. இம்மையை நேசிக்கின்ற சமூகம் மறுமையை நிராகரிக்கின்றது.

சமகால உலகின் இத்தகைய சமய விரோத சவால்களுக்கு முகங்கொடுத்து மனித சமூகத்தை சன்மார்க்க அடிப்படையில், ஆன்மீகப் பாதையில் வழிநடாத்த வல்ல அறிவையும், புலமையையும், ஆளுமையையும் உருவாக்குகின்ற பயிற்சிப் பாசறைகளான அரபுக் கல்லூரிகளோடு இணைந்து அஹதிய்யா பாடசாலைகளும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஹதிய்யா பாடசாலைகள் இலங்கையில் 50 வருடங்களுக்கு மேலாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அஹதிய்யா பாடசாலைகளை சிறந்த முறையில் வழிநடத்துவதற்காக திணைக்களம் அதற்கான முழுமையான பாடத்திட்டத்தை வெளியிட்டு வழிநடாத்தி வந்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

இந்த வகையில் இப்பாடத்திட்டங்கள் மூலம் பூரண பயனைப் பெற முடியாது என்பதை அறிந்த திணைக்களம், முதற்கட்டமாக இப்பாடத்திட்டங்களுக்கு அமைவாக இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச்சான்றிதழ் பரீட்சை மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த பணியை சிறப்பாக மேற்கொண்ட புத்தக

ஆக்கக்குழுவுக்கும் தொகுப்பாசிரியர் குழு மற்றும் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்ட எமது திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் அவர்களுக்கும் மற்றும் இப்பணியில் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இப்பணியில் ஈடுபட்டவர்களது உழைப்பையும், அவர்களது முயற்சி யையும் அல்லாஹ் அங்கீகரித்துச் சிறந்த நற்கூலிகளை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல்,**
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்) ஆசிச் செய்தி

இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறியாகும். முஸ்லிமாக வாழ்வதாயின் அல்குர்ஆன், அல்ஹதீஸ் தொடர்பான தெளிவான அறிவைப் பெறுவது அவசியமாகும். "அறிவைத்தேடுவது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலார் மீதும் கடமையாகும்." என்ற கருத்தில் வரும் நபிமொழியும் "அல்குர்ஆனைக் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்" என்ற கருத்தில் வரும் நபிமொழியும் இதனை வலியுறுத்துகின்றன. இலங்கையில் இஸ்லாத்தை பாடசாலைப் பருவத்தில் கற்றுக்கொள்வதற்கான ஒரு சிறந்த ஊடகமாக அஹதிய்யா பாடசாலைகள் காணப்படுகின்றன. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளின் வளர்ச்சியில் போற்றத்தக்க சேவைகளை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததாகும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளுக்கு வருடாந்தம் வழங்கி வரும் சேவைகள் அஹதிய்யாவின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமைகின்றன.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையான 14 வருடங்களுக்குரிய தேசிய அஹதிய்யாப் பாடத்திட்டம், இலங்கை அரசாங்க பரீட்சை திணைக்களம் மூலம் அஹதிய்யா இறுதி சான்றிதழ் பரீட்சை, இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) சான்றிதழ் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளையும் நடாத்த ஏற்பாடு செய்தமை, மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட அஹதிய்யா ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளும் கருத்தரங்குகளும், அஹதிய்யா ஆசிரியர்களுக்கான வருடாந்த நூல் கொள்வனவுக் கொடுப்பனவு, வருடாந்தம் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கல் என்பன அப்பணிகளில் சிலவாகும்.

இவற்றில் அஹதிய்யா பாடசாலைகளது வரலாற்றில் தேசிய பாடத்திட்டத்துக்கு அமைவாக பாடநூல்கள் வெளியிடப்படுவது முக்கியதொரு மைல்கல்லாகும். அஹதிய்யா சமூகத்தின் ஏகோபித்த கோரிக்கையின் முதற்கட்டம் இன்று நிறைவேறுவதையிட்டு உளப்



3-CM014797

பூரிப்படைகிறேன். முதற் கட்டமாக, அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை வகுப்புகளுக்குரிய அகீதா, மஸாதிறுச்ஷரீஆ, பிக்குஹுல் இஸ்லாம், ஸீரா வத்தாரீக், அஹ்லாக் ஆகிய நான்கு பாடங்களுக்கும் தீனிய்யாத் பரீட்சைக்குரிய மேற்படி நான்கு பாடங்களுடன் *அரபு மொழியும் இஸ்லாமிய இலக்கியமும் ஆகிய ஆறு பாடங்களுக்குமாக பத்து பாட நூல்கள் வெளிவருகின்றமை சிறப்பித்துக் கூறவேண்டிய தொன்றாகும். புதிய பணிப்பாளர் தலைமையில் இப்பணிகள் யாவும் தொடரும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

மேற்படி பணிகளை முன்கொண்டு செல்வதில் ஆரம்பம் முதல் இன்றுவரை அயராது உழைத்துவரும் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் எழுத்தாளர குழு அங்கத்தவர்கள், தொகுப்பாசிரியர்கள் ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்களாவர். அல்லாஹ் அவர்களது முயற்சிகளை அங்கீகரித்துத்துக் கொள்வானாக. இப்பணியில் இவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கு கிடைத்தமையை அல்லாஹ் எனக்கு வழங்கிய ஒரு மகத்தான சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன்.

இதற்காக என்னால் ஆன பணிகளைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

அல்லாஹ்வின் அருள் வேண்டி அனைவருக்கும் பிரார்த்திக்கிறேன்.

ஆமின் !

**அஷ்ஷெய்க் Y. L. M. நவவி**,
உயர் கல்வியமைச்சின்
சிரேஷ்ட உதவிச் செயலாளரும்,
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்

உயர் கல்வியமைச்சு,
இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

# மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத் தலைவரின் ஆசிச் செய்தி

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அஹதிய்யாப் பாடசாலைகள் மூலம் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் பல நன்மைகளையடைந்து வந்துள்ளது. இருப்பினும் எதிர்பார்க்கப்படும் முறையான பயனை சமூகம் அடைவதற்கு முக்கிய சில தடைகள் இருந்து வந்துள்ளன. அவற்றுள் ஒன்று பாடநூல் இல்லாமை, மற்றையது தேவையான ஆசிரிய வளம் கிடைக்காமை எனலாம்.

பெரும்பாலும் அஹதிய்யாப் பாடசாலைகளில் க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது க.பொத.(உயர் தரம்) வரை கற்றவர்களே கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில இடங்களிலேயே உலமாக்களும் பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களும் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அஹதிய்யா பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்தும் வகையிலேயே இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியைக் கற்றுத் தேர்வதன் மூலம் அவர்கள் சன்மார்க்க போதனாசிரியர்களுக்கான தராதரத்தைப் பெறுகின்றனர். இச்சான்றிதழ் உடையவர்களை சமய ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தினை அரசு முன் கொண்டுள்ளது. எனவே இப்பாடத்திட்டம் முறையாக கற்பிக்கப்படுவதன் மூலம் அஹதிய்யாக்கள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும். அத்தோடு ஆசிரியர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தவும் முடியும். மேலும் இவர்களிடம் கற்கும் மாணவர்களது அறிவுமட்டம் உயர்வடையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கரிசனை கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு செயற்பட்டுவருகின்றமை பாராட்டுக்குரியது. இதற்கு முன்னோடியாக விளங்கிய முன்னாள் பணிப்பாளர் அஷ்ஷெய்க Y. L. M. நவவி அவர்களது பங்களிப்பு மெச்சத்தக்கதாகும். அவரது வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இதற்கு உறுதுணையாக விளங்கின. அவருக்கு பக்கபலமாக விளங்கிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. நூறுல் அமீன் அவர்களது அயராத முயற்சியும் ஈடுபாடும் இங்கு குறிப்பிடத்தக்கவை. அஹதிய்யாப்

பாடசாலைகள் மத்திய சம்மேளனம் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இந்தப் பங்களிப்பினை நன்றியுணர்வோடு நோக்குகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை பூராவும் எமது இளைய தலை முறையினரான பாடசாலைப் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவையும் உணர்வையும் ஊட்டி தூய இஸ்லாமிய ஷரிஆவின் வழியில் நடாத்தும் பொறுப்பையேற்று செயற்பட்டு வரும் அஹதிய்யாவின் முன்னோடிகள், அதன் தொண்டர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்கள் என்பதை கூறவிரும்புகிறோம்.

அஹதிய்யாவின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.அப்துல் அஸீஸ் அவர்களைத் தொடர்ந்து எம்மோடு பணியாற்றியாற்றுகின்ற தலைவர்கள், நிருவாகிகள் யாவருக்கும் இவ்விஸ்தாபனத்தை வழிநடாத்திச் செல்வதற்கான மனோபலத்தையும் உடற்சுகத்தையும் நல்க வேண்டுமென மத்திய அஹதிய்யா சம்மேளனம் பிரார்த்திக் கின்றோம்.

மத்திய அஹதிய்யா சம்மேளனம் 1988 ஆம் ஆண்டு பொதுப் பாடத்திட்டத்தை வகுத்தது, இதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியாக 2003 ஆம் ஆண்டு பொதுப்பாடத்திட்டத்தனை அறிமுகஞ் செய்தது, 2005 ஆம் ஆண்டு முதல் தேசிய மட்டத்தில் அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சைகள் இடம் பெற்றாலும் பரீட்சைகளுக்கான பாடநூல்கள் எதுவும் இல்லா திருந்தமை பெரும் குறைபாடாக இருந்தது. இதனால் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது எண்ணிக்கையும் குறைவாக இருந்ததுடன் விண்ணப்பித்தோருள் பரீட்சைக்குத் தோற்றாமலிருப்போரின் எண்ணிக்கையும் கணிசமாயிருந்தது.

மேற்படி குறைபாட்டை முன்னாள் முஸ்லிம் சமய, பண்பாட்டலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி அவர்களிடம் எடுத்துக்கூறியபோது அவர் தேவையான நூல்களைத் தயாரித்து வெளியிட முன்வந்தார். அவர் விட்ட இடத்தில் இருந்து இப்பணியை சிறப்பாக தொடர்கின்ற பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் அவர்களின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது.

இப்பணியில் ஒத்துழைத்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. அவர்களின் பணியை அங்கீகரிப்பானாக.

**மௌலவி எம். எச். எம். லாபிர்,**
மத்திய அஹதிய்யா சம்மேளனம்,
பாடத்திட்டக் குழுத்தலைவர்.

# பதிப்புரை

## பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர் றஹீம்

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும்! அல்ஹம்துலில்லாஹ் !

“(எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை.”(அல்குர்ஆன் - 51 : 56)

இவ்வுலகில் மானிட வர்க்கம் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை அடிச்சுவடுகளை முறையாக பின்பற்றி முஸ்லிமாக வாழ்ந்து மரணிப்பதே யாகும். அல்லாஹ்வின் அடியார்கள் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஆத்மீக சிந்தனையுடன் தனது வாழ்வை இபாதத்துடன் இணைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கு பின்வருமாறு சான்று பகர்கின்றது : "இவ்வுலகத்தில் அல்லாஹ் ஒருவனுக்கு நன்மையை நாடினால் அவனுக்கு மார்க்கத்தில் தெளிவான விளக்கத்தை வழங்குகிறான்." (அல்ஹதீஸ்)

மேற்படி இறைவசனத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைக்கும் ஏற்ப மார்க்கத்துடன் தொடர்புடையவனாக வாழ்வது கட்டாயக் கடமையாகும். இவ்வாறாக ஒரு முஸ்லிம் இறையச்சம், பொறுமை, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், நற்பண்புகளுடன் வாழ்வதற்கு இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை பெற்றுக் கொள்வது இன்றியமையாத தாகும். மார்க்கக் கல்வியை பெறுவது உண்மையான மு.ஃ.மினாக வாழ்வதற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நல்லொழுக்கமுடைய ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இன்று நாடளாவியரீதியில் பல இஸ்லாமிய ஷரீஆ கல்வி நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் தங்களாலான பங்களிப்புகளைச் செய்து வருவது உண்மையில் போற்றத்தக்கதாகும்.

மேற்படி நோக்கத்தை மையமாகக் கொண்டு சுமார் ஆறு தசாப்தங்களுக்கு மேல் அஹதிய்யா கல்வியை மேம்படுத்துவதற்காக திட்டங்களை வகுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் மத்திய அஹதிய்யா சம்மேளன தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பணி என்றும் பாராட்டத்தக்கதாகும்.

அத்துடன் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக அரபுக் கல்லூரிகள், அஹதிய்யா பாடசாலைகள், குர்ஆன் மத்ரஸாக்கள் போன்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதிலும், பௌதிக வளங்களை விரிவுபடுத்துவதிலும் இத்திணைக்களம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவற்றுள் அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பல திட்டங்களை வகுத்து செயல்பட்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் முதல் பணியாக அஹதிய்யா மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டத்தினை 2003 ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்தமையும் இப்பாடத்திட்டத்திற்கமைவாக 2005 ஆம் ஆண்டு அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சையை நடாத்துவதற்கு இத்திணைக்களம் நிதியுதவி வழங்கி தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 2008 ஆம் ஆண்டு இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சையையும் பரீட்சைத்திணக்களத்தின் மூலமாக நடாத்துவதற்கு சகல நடவடிக்கை களையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. மேலும் 2008 ஆம் ஆண்டு அஹதிய்யா பாலர் வகுப்பு முதல் இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சை வரைக்குமான பாடத்திட்டங்களை வகுத்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இத்திணைக்களம் வருடந்தோறும் அஹதிய்யா ஆசிரிய ஆசிரியைகளுக்கான சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவு வழங்குதல்; கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் பாடப் புத்தகங்கள் இல்லாததன் காரணமாக பரீட்சைக்கு தோற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்திற்கொண்டு பரீட்சைகளுக்கு ஏற்றவிதமாக பாடப்புத்தகங்களை உருவாக்கும் பணியை எமது திணைக்களம் மேற்கொண்டது.

மேற்படி நூல்களை வெளியிடுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் முன்னோடியாக விளங்கி, ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய முன்னாள் பணிப்பாளர்களான அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களுக்கும் அஷ்ஷெய்க் M. I. அமீர் அவர்களுக்கும் இந்நூல் எவ்வித தங்கு தடையுமின்றி துரிதமாக வெளிவர காரணமாக இருந்த தற்போதைய பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. M. ஸமீல் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இப்பாடப் புத்தகத்தை வடிவமைத்து பிரசுரிப்பதற்கு எல்லா வகையிலும் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி மற்றும் பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சீ. அகார் முஹம்மத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இப்பணியை செவ்வனே முடிப்பதற்கு ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் வழங்கியவர்களையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

இப்புத்தகம் நூலுருவில் வெளியாவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியில் பாடவிதானங்களுக்கேற்ப பாடங்களை எழுதி வடிவமைத்து தந்த எழுத்தாளர் குழு அங்கத்தவர்களான அகில இலங்கை ஜெம்மியத்துல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷெய்க் எம். எம். ஏ. முபாரக் B. A. (மதனி), மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரியான அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி (நளீமி) மற்றும் தர்கா நகர் முஸ்லிம மகளிர் கல்லூரியின் ஆசிரியர் அஷ்ஷெய்க் எம். எஸ். எம். அனஸ் ஆகியோர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இப்புத்தகத்தினை செம்மைப்படுத்தி, வடிவமைத்து தந்தவர்களான முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்டீன் (கபூரி), திஹாரி ஹஸனிய்யா அரபுக்கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ. எல். றிழா, தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளர் அல்ஹாஜ் எம். எச். எம் நாளிர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் எம். எம். எம். சாபீர், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் திட்டமிடல் அதிகாரியான அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை நூலாக்குவதற்கு ஆரம்பம் முதல் இன்று வரை என்னுடன் இணைப்பாளராக செயலாற்றிய மௌலவி எம். எச். எம். லாபீர் (கபூரி) மற்றும் அல்முபாரக் தேசிய பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி எம். டீ. எஸ். றுவைதா அவர்களுக்கும் இப்புத்தகம் நூல் வடிவில் வெளிவருவதற்கு பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸப்கான் (நளீமி), அஷ்ஷெய்க் எம். ஜே. எம். அறபாத் கரீம் அவர்களுக்கும் மேலும் ஒத்துழைப்பு நல்கிய எமது திணைக்கள அதிகாரிகளான அஷ்ஷெய்க் எம். ஐ. முனீர் (நளீமி), திருமதி எம். ஐ. ரஸீனா, அல்ஹாஜ் ஏ. ஏ. எம். அஸ்ரின், திருமதி எம். வை. எப். இன்சிபா, மற்றும் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய திணைக்கள அனைத்து அதிகாரிகளுக்கும், சிற்றூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை கனிணி வடிவமைத்துத் தந்த திருமதி எம். எப். ஷாமிலா, திருமதி எம். எச். எஸ். பாத்திமா மஹ்ஸனி, திருமதி எம். எச். எப். ரிஸானா ஆகியோருக்கும் மற்றும் இப்புத்தகத்தின் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த ஜனாப் அஸார் வஸீர்

அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கனிணி பிரிவில் கடமையாற்றும் திருமதி ஏ. என். ஹிதாயா அவர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடநூல் சம்பந்தமாக ஏதேனும் ஆலோசனைகளும் கருத்துக் களும் இருப்பின் மறுபதிப்பில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனவே இப்பணியில் ஈடுபட்ட சகலரது முயற்சியையும் எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன் உரிய பயனை அடைவதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக!

ஆமீன் !!

**மௌலவி எம். எச்.நூறுல் அமீன்,**
உதவிப்பணிப்பாளர்,
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உள்ளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | இபாதத் | 01 |
| 02. | அத்தஹாரத் | 05 |
| 03. | தொழுகை | 13 |
| 04. | ஸகாத் | 38 |
| 05. | அஸ்ஸவ்ம் | 51 |
| 06. | ஹஜ் | 57 |
| 07. | உணவு, உடை, உறையுள் | 67 |
| 08. | குர்பானிகள் | 78 |
| 09. | முஆமலாத் | 82 |
| 10. | முனாகஹாத் | 91 |
| 11. | ஜினாயாத் | 113 |

# அல் பிக்ஹுல் இஸ்லாம்
# (இஸ்லாமியச் சட்டநெறி)

## நூல் அறிமுகம்

இப் பாடநூல் இலங்கையின் அஹதிய்யாப் பாடசாலைகளின் புதிய பாடத்திட்டத்திலுள்ள பிக்ஹுல் இஸ்லாமி - இஸ்லாமியச் சட்டநெறி என்ற பாடத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தைக் கற்பவர் அதனை அன்றாட வாழ்வில் எடுத்து நடப்பதிலேயே யதார்த்தமான வெற்றி தங்கியுள்ளது. அந்த வகையில் ஒரு முஸ்லிம் தன்னுடைய வாழ்வின் ஆன்மீக, தார்மீக தேவைகளை நிறைவு செய்து கொள்வதற் கேற்ற வழிகாட்டல் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளது.

வேகமாக மாறிவரும் உலகின் சவால்களுக்கு முன்னால் மனிதனின் சமய ரீதியான ஆளுமைப் பண்புகள் தளர்ந்து விடாமல் காப்பாற்று வதற்கான ஒரு வழிமுறையாகவே அஹதிய்யாப் பாடசாலைகளின் போதனைகள் அமைந்து காணப்படுகின்றன. அந்த வகையில் இந்தப் பாடநூல் மிகக் கவர்ச்சிகரமான முறையில் கற்பிக்கப்பட வேண்டும். மாணவர்களை சிந்தனைச் சிக்கலுக்குள்ளாக்காமல் அவர்கள் இஸ்லாத்தை எளிதாகப் புரிந்து கொள்ளவும் அதன் மீது ஆழ்ந்த பற்றுக்கொண்டு அதனை பின்பற்றியொழுகவும் வழிப்படுத்துவதாக இப்பாடபோதனை அமைய வேண்டும். நூலின் உள்ளடக்கத்தோடு மாத்திரம் ஆசிரியர் தன் போதனைகளை சுருக்கிக் கொள்ளாமல் மாணவரது விருப்புக்களையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு அவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திச் சுயமாகத் தேடிக் கற்க வழிநடாத்துவதன் மூலம் கல்விச் செயன்முறையில் மாணவரது ஈடுபாட்டை இரட்டிப்பாக்க வழி செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

மாணவர்களுடன் நெருக்கமான தொடர்பு கொள்பவர்கள் என்ற வகையில் ஆசிரியர்கள் இதய சுத்தியோடு இந்த நூலை சிறப்புறப் போதித்து நல்லதொரு சந்ததியை இஸ்லாத்தின் நிழலில் வார்த்தெடுக்க உதவுவார்கள் என்று நம்புகிறோம்.

இப்பாடநூலை எழுத வழிகாட்டிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் நூலை எழுத உதவிபுரிந்த ஆலோசனை சபையினருக்கும் நூலாக்க குழுவினருக்கும் பரிசீலனை செய்தோர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

நூலாக்கக் குழுவின் சார்பாக

**அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி,**
முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

# இபாதத்

## தஹாரத்

### அதன் முக்கியத்துவம்

சுத்தம் என்பதைக் குறிக்கும் பதம் அரபியில் "அத்தஹாரா" எனப்படுகிறது. "சுத்தம் ஈமானில் பாதி" (முஸ்லிம்) என நபி (ஸல்) குறிப்பிட்டார்கள். சுத்தமில்லா நிலையில் நிறைவேற்றப்படும் தொழுகை போன்ற வணக்கங்கள் அங்கீகரிக்கப் படுவதில்லை. இஸ்லாத்தின் பார்வையில் சுத்தம் என்பது பரந்த அளவில் நோக்கப்படுகிறது. அதனை அகச்சுத்தம், புறச்சுத்தம் என்று வகுக்கலாம்.

அகச்சுத்தம் என்பது உளச்சுத்தத்தைக் குறிக்கிறது. மனித உள்ளங்கள் பாவகாரியங்களால் அசுத்தமடைகின்றன. அதன் தாக்கம் மனிதனின் நடத்தைகளிலும் செயற்பாடுகளிலும் வெளிப்படுகின்றன. இணைவைத்தல், சந்தேகம், பொறாமை, குரோதம், வஞ்சகம், மோசடி, ஏமாற்று, பெருமை, மமதை, முகஸ்துதி முதலியன மூலம் உள்ளம் தூய்மையை இழந்து விடுகிறது. அத்தன்மையை நீக்க "தவ்பா" செய்து பாவத்துக்குப் பரிகாரம் தேடலாம். உளத்தூய்மை, (இக்லாஸ்) உறுதி, (யகீன்) நலவை நாடுதல், உண்மை, பணிவு, அனைத்து காரியங்களையும் அல்லாஹ்வின் திருப்தியை நாடிச்செய்தல் என்பவற்றின் மூலம் எமது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தலாம்.

வெளிச்சுத்தம் என்பது நஜீஸ் அழுக்குகளைத் துப்பரவு செய்வதையும் பெருந்தொடக்கு, சிறு தொடக்கு என்பவற்றிலிருந்து நீங்குவதையும் குறிக்கிறது.

### சுத்தத்துக்கும் இபாதத்துக்கும் இடையிலான தொடர்பு

மேலே நாம் குறிப்பிட்டது போல் எமது வணக்கங்கள் அங்கீகரிக்கப்பட சுத்தம் - தூய்மை அவசியமாகும். அது இரண்டுவகையான சுத்தங்களையும் உள்ளடக்கும். தொழுகை அங்கீகரிக்கப்பட அகச் சுத்தம், புறச் சுத்தம் ஆகிய இரண்டும் அவசியமாகும். சுத்தமில்லாது நிறைவேற்றப்படும் எந்தத் தொழுகையும் அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## அன்றாட வாழ்வில் சுத்தத்தின் முக்கியத்துவம்

சுத்தத்தை விரும்பாத மனிதர் எவரும் இருக்க முடியாது. அப்படி சுத்தத்தை விரும்பாது அசுத்தமாக வாழ்பவன் மனிதரால் வெறுக்கப்படுவான். எமது உடை மட்டுமன்றி, எமது தோற்றமும் தூய்மையானதாக அழகாக இருக்க வேண்டும். சுத்தமாக இருப்போரையே அல்லாஹ் விரும்புகிறான்.

ஐந்து அம்சங்களை இஸ்லாம் இயல்பான குணங்கள் எனக்கூறுகிறது. அந்த ஐந்தையும் பேணிவருவது ஒருவனது தூய்மையான வாழ்க்கைக்குத் துணையாக அமையும். அந்த ஐந்து விடயங்களும் பின்வருவனவாகும். “மறைவிடத்திலுள்ள உரோமத்தை நீக்குதல், விருத்த சேதனம் செய்தல், மீசை கத்தரித்தல், அக்குள் உரோமம் நீக்குதல், நகம் வெட்டுதல்.” ( )

* விருத்த சேதனம் : பிள்ளை பிறந்து ஏழாம் நாள் இதனைச் செய்வது ஏற்றமாகும்.
* மீசை கத்தரித்தல் : தாடியை சீவி அழகாக வைத்திருங்கள், மீசையைத் கத்தரியுங்கள், நெருப்பு வணங்கிகளுக்கு மாற்றமாக நடவுங்கள் (முஸ்லிம்)
* அக்குள் உரோமத்தைக் களையலாம் அல்லது பிடுங்கி விடலாம்.
* நகம் வெட்டுவது நாற்பது நாட்களைத் தாண்டாது நடை பெறவேண்டும்.
* அந்தரங்க உறுப்பைச் சூழ உள்ள முடிகளை நீக்குதல்.

## நீரும் அதன் பயன்களும்

உயிர் வாழ்வன அனைத்துக்கும் தண்ணீர் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். எல்லாவித தாவரங்களுக்கும், ஊர்வனவுக்கும், பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் இவை தவிரவுள்ள அல்லாஹ்வின் படைப்பினங்கள் அனைத்துக்கும் நீர் இன்றியமையாததாகும். அவற்றின் தேவை கருதியே அல்லாஹ் நீரை அருளாக இறக்குகிறான். வானத்தி லிருந்து நாம் தூய்மையான தண்ணீரை இறக்கினோம் என அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

மழைநீர், கிணற்று நீர், ஆற்று நீர், கடல் நீர், ஊற்று நீர் என்பன தன்னில் சுத்தமாயிருப்பது போலவே பிறவற்றையும் சுத்தம் செய்ய வல்லனவாகும். அதனால் இதனை “அல்மாஉத் தஹுர்” (மிகச் சுத்தமான நீர்) என்கிறோம்.

சுத்தமான பிற பொருட்களின் சேர்க்கையால் மாற்றம் பெற்றிருக்கும் தேனீர், பன்னீர், மென்பானங்கள் முதலியனவும் இளநீர் போன்று இயல்பான நீரின் இயற்கைத் தன்மையிலிருந்து மாற்றம் பெற்றவை போன்றனவும் அல்மாவுத் தாஹிர் எனப்படுகிறது.

இயல்பில் நஜீஸான நீரும், நஜீஸான பொருள்கள் கலந்த நீரும் அல்மாஉல் முதனஜ்ஜிஸ் எனப்படுகிறது. உதாரணமாக சிறுநீர், சாக்கடை நீர் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வுளு செய்யவும் கடமையான ஸுன்னத்தான குளிப்புகளை நிறைவேற்றவும் மிகச்சுத்தமான நீர் அவசியமாகும். நீரின் வகைகள் பற்றி விரிவாக முன்னைய வகுப்புக்களில் கற்றுள்ளோம்.

## வுளு

தொழுவதற்கும் க.்.பாவை தவாப் செய்வதற்கும், அல்குர்ஆனை எடுத்து ஓதவும் வுளுவோடிருப்பது அவசியமாகும். வுளு இல்லாமல் தொழும் தொழுகையோ, தவாபோ நிறைவேறமாட்டாது. வுளு செய்வதன் மூலம் அதன் உறுப்புக்களால் செய்யும் சிறிய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

## வுளுவின் பர்ளுகள் ஆறு :

1. “வுளுவின் பர்ளை நிறைவேற்றுகிறேன்” என்று மனதில் (நிய்யத்து) நிர்ணயம் செய்தல்.
2. அத்தோடு முகத்தை கழுவுதல். (தலைமுடி உரோமம் வளரும் இடத்துக்கும் நாடிக்குழிக்கும் இடைப்பட்ட, இருகாதுச் சோணைகளுக்கும் இடைப்பட்ட பகுதி கழுவப்படவேண்டும்.)
3. முழங்கை உட்பட இருகைகளையும் கழுவுதல்.
4. தலையிற் சில பகுதியை மஸ்ஹு செய்தல்.
5. இருகால்களையும் கரண்டையுட்படக் கழுவுதல்.
6. மேற்கூறப்பட்ட ஒழுங்குமுறைப்படி செய்தல்.

## வுளுவின் ஸுன்னத்துக்கள்

1. பிஸ்மில் சொல்லுதல்
2. மணிக்கட்டுவரை கைகளைக் கழுவுதல்
3. பல்துலக்கல், வாய்கொப்பளித்தல்
4. நாசிக்கு நீர் செலுத்துதல்
5. தலை முழுவதையும் மஸ்ஹு செய்தல்
6. இருகாதுகளையும் மஸ்ஹு செய்தல்
7. தாடி, கை, கால் விரல்களைக் குடைந்து கழுவுதல்
8. வலது பக்கத்தை முதலில் கழுவுதல்
9. கிப்லாவை முன்னோக்கி வுளுசெய்தல்
10. ஒவ்வொரு உறுப்பையும் மும்மூன்று முறை கழுவுதல்
11. ஷஹாதத்துக் கலிமாச் சொல்லி வுளுவுடைய துஆவை ஓதுதல்

## வுளூவை முறிப்பன

1. முன்பின் துவாரங்களால் ஏதும் வெளிப்படல்.
2. நித்திரை.
3. திரையின்றி அகங்கை மர்மஸ்தலத்தில்படுதல்.
4. மயக்கமேற்படல்.
5. திருமண விலக்கில்லாத (அஜ்னபியான) பெண்கள் திரையின்றி உடலில் படுதல்.

## தயம்மும்

கடும் குளிர், தண்ணீர் இல்லாமை, நோய் போன்ற காரணங்களினால் தண்ணீரைப் பயன்படுத்த முடியாமல் போவதுண்டு. அதன் காரணமாக கடமையான குளிப்பையோ, வுளூவையோ செய்து கொள்ள முடியாமல் போகும். அச்சந்தர்ப்பங்களில் தயம்மும் எனும் இலகுவான வழி மூலம் பிரதியீடு செய்யலாம்.

"நீங்கள் முழுக்குடையவர்களாக இருந்தால் (கை, கால்களை மட்டும் கழுவினால் போதாது. உடல் முழுவதையும் கழுவி) தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். அன்றி, நீங்கள் நோயாளியாக இருந்தோ அல்லது பயணத்தில் இருந்தோ அல்லது உங்களில் எவரும் மலஜல பாதைக்குச் சென்று வந்திருந்தோ, அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டியிருந்தோ (தொழுகையின் நேரம் வந்து, உங்களைச் சுத்தம் செய்து கொள்வதற்கு வேண்டிய) தண்ணீரை நீங்கள் பெறவில்லையெனில் (தயம்மும் செய்து கொள்ளுங்கள். அதாவது) சுத்தமான மண்ணை (உங்கள் கைகளால் தொட்டு அதனைக் கொண்டு உங்கள் முகங்களையும் கைகளையும் துடைத்துக் கொள்ளுங்கள். (5 : 6)"

## தயம்முமின் பர்ளுகள்

1. நிய்யத் - தண்ணீர் கிடைக்காததால் அல்லது பாவிக்க முடியாமலிருப்பதனால் தயம்மும் மூலம் தொழுகையை ஆகுமாக்கிக் கொள்கிறேன் என நிய்யத் வைத்தல்.

2. புழுதியுள்ள மண்ணில் இரண்டு கைகளையும் பதித்து, முதலில் முகத்திலும் அடுத்து முழங்கையுட்பட இரண்டு கைகளையும் (புழுதியைக் கொண்டு) தடவுதல்.

3. முகத்துக்கு ஒரு முறையும் கைகளுக்கு இன்னுமொரு முறையுமாக புழுதியில் கையைப் பதித்து தடவுதல்

4. மேற்சொன்ன ஒழுங்குப் பிரகாரம் செய்தல்.

## தயம்மும் செய்யும் முறை

தண்ணீரைப் பயன்படுத்துவதனால் நோய் ஏற்படும் அல்லது நோய் மேலும் அதிகரிக்கும் ; அல்லது தன் பாவனைக்குரிய தண்ணீர் முடிவடைந்து விடும் என்ற நிலையில் ஒருவன் தயம்மும் செய்ய முடியும்.

தயம்மும் செய்ய நாடும் ஒருவன் சுத்தமான புழுதியுள்ள மண்ணைத் எடுத்து முன்னர் கூறப்பட்ட பிரகாரம் நிய்யத் செய்து இரண்டு கைகளையும் அந்த மண்ணில் பதிய வைத்து பின்னர் கையை முகத்தில் தடவ வேண்டும். அவ்வாறே மீண்டும் கையை அந்த மண்ணில் வைத்து எடுத்து ஒரு கையால் மற்றக் கையை முழங்கையுட்பட இரண்டு கைகளையும் தடவிக் கொள்ள வேண்டும்.

## தயம்முமை முறிப்பன

1. தண்ணீரைப் பெற்றுக் கொள்ளல்
2. வுளுவை முறிப்பன யாவும் தயம்முமை முறித்து விடும்.
3. நோய் காரணமாகத் தயம்மும் செய்திருத்தல் நீரை உபயோகிக்க முடியுமான நிலை ஏற்பட்டால் தயம்மும் முறிந்து விடும்.

## நஜீஸும் அதன் வகைகளும்

இஸ்லாம் சுத்தத்தை வலியுறுத்தும் ஒரு வாழ்க்கை நெறியாகும். சுத்தம், அசுத்தம் பற்றி அது தெளிவாக விவரித்திருக்கிறது. அசுத்தம் என்பதைக் குறிக்க நஜீஸ் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. நஜீஸின் வகை மூன்றாகும். அவையாவன :

**நஜீஸ்**

சாதாரணமானது    இலகுவானது    கடுமையானது

### சாதாரண நஜிஸ் என்பது

1. மலம்
2. சிறுநீர்
3. இரத்தம்
4. சீழ்
5. வாந்தி
6. மதி
7. வதி
8. மதுபானம்
9. செத்த பிராணிகள்
10. உயிருள்ள பிராணியிலிருந்து பிரிந்த பகுதிகள்
11. ஆழ்ந்த நித்திரையிலுள்ளவனின் வாயிலிருந்து வடியும் வீணீர்

இவை உடம்பிலோ, உடையிலோ வேறு ஏதேனும் பொருட்களிலோ பட்டால் அதனை சுத்தம் செய்யும்போது முதலில் அந்த நஜீஸை நீக்கிவிட்டு நன்கு கழுவ வேண்டும். வெயில்பட்டு உலர்ந்து விடுவதனால் அது சுத்தமாக மாட்டாது. நஜீஸின் மணம், சுவை, நிறம் என்பன நீங்கும் வண்ணம் தண்ணீரால் அல்லது சவர்க்காரம் கலந்தேனும் கழுவ வேண்டும். கழுவிய பின் சுவை எஞ்சியிருந்தால் அது சுத்தமாகவில்லை என்பதே பொருளாகும். அதுவன்றி நிறம், மணம் ஆகிய இரண்டில் ஏதும் எஞ்சியிருப்பது பாதிக்காது. தாய்ப்பால், மீன், வெட்டுக்கிளி, மனிதன் என்பனவும் உண்பதற்கு அனுமதிக்கப்பட்ட பிராணியிலிருந்து பிரிந்த உரோமம், இறகு, உடற்பகுதிகள், மனித உடற்பகுதிகள் என்பனவும் சுத்தமானவையே. இவை நஜீஸாகக் கணிக்கப்படமாட்டாது.

### இலகுவான நஜீஸ்

தாய்ப்பாலை மாத்திரம் குடித்து வளரும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர் இதற்கு உதாரணமாகும். அந்த நஜீஸை பிளிந்துவிட்டு பின்னர் அவ்விடத்தில் தண்ணீரைத் தெளித்து விடுவது போதுமானதாகும்.

### கடுமையான நஜீஸ்

நாய், பன்றி முதலியனவும் அவை இரண்டில் ஒன்றிலிருந்து பிரிந்தவையும் இந்த வகை நஜீஸாகும். மேலும் இவற்றின் மலம், சலம், உமிழ் நீர், இரத்தம், வியர்வை முதலியனவும் கடுமையான நஜீஸ்களே. இவை பட்ட இடம், உடை,

உடம்பு முதலியன சுத்தப்படுத்தப்பட வேண்டும். அதற்காக ஏழு தடவைகள் நீருற்றிக் கழுவுவதோடு ஒரு முறை மண் கலந்து கழுவுதல் வேண்டும்.

### குளிப்பின் விதிமுறைகள்

இஸ்லாம் குளிப்பை சுன்னத்தாக்கியிருக்கிறது. சில போது அது கட்டாய கடமையாகவும் மாறுகிறது. குளிப்பைக் கட்டாயப்படுத்தும் காரியங்களை ஒவ்வொரு முஸ்லிமும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அவை :

1. ஆண், பெண் உடல் உறவு கொள்ளுதல்.
2. தூக்கத்திலோ விழிப்பிலோ இந்திரியம் வெளிப்படல்.
3. மரணம் சம்பவித்தல்.
4. பெண்களுக்கு "ஹைளு" எனும் மாதவிடாய் வந்து நின்றுவிடுதல்.
5. பிள்ளைப் பேற்றின் பின் "நிபாஸ்" எனப்படும் பிரசவ இரத்தம் நின்றுவிடல்.
6. பிரசவம் நிகழ்தல்.

மேற்கண்ட யாவும் குளிப்பைக் கட்டாயப்படுத்தும் காரியங்களாகும்.

# இபாதத்

**பத விளக்கமும், பிரயோகமும்**

இச்சொல் வணக்கம், வழிபாடு என்ற பொருளைத் தருகிறது. இஸ்லாமிய பரிபாசையில் அல்லாஹ்வின் திருப்தியை நாடி செய்யப்படும் எல்லா நற்கிரியைகளும் வணக்கமாகவே கருதப்படுகின்றன. “நல்லனவெல்லாம் தா்மமே” (புகாரி) என்பது எனவே எந்தவொரு நற்கிரியை செய்வதற்கும் பின்நிற்கலாகாது. "சூரியன் உதயமாகும் ஒவ்வொரு நாளிலும் மனிதன் தன் உடம்பின் ஒவ்வொரு மூட்டுக்காகவும் ஸதகா செய்வது அவசியமாகும். இருவா் மத்தியில் நீதி வழங்குவது ஸதகாவாகும். ஒரு மனிதருக்கு அவரது வாகனத்தில் ஏறவும் பொருட்களை ஏற்றவும் உதவுவது ஸதகாவாகும். இனிய வாா்த்தையும் ஸதகாவாகும். தொழுகைக்காக எடுத்து வைக்கும் காலெட்டு ஒவ்வொன்றுக்கும் ஸதகாவின் நன்மையுண்டு. பாதையில் காணப்படும் தீங்கிழைப்பவற்றை நீக்குவதும் ஸதகாவாகும். (புகாரி)

ஆழமான கருத்தை இந்த நபிமொழி உள்ளடக்கியுள்ளது. முழு வாழ்க்கை யையுமே ஒரு தா்ம வாழ்வாக அமைத்துக் கொள்ளத் தூண்டுகிறது.

இதன்வழி ஒரு மனிதன் தன் வாழ்வை வணக்கமாகவே கழிக்க முடிகிறது. படைத்த இறைவன் அமைத்துத் தந்த வழிமுறைக்கேற்ப வாழ்வதே வணக்கமாகும். ஒரு குடும்பத்தலைவன் குடும்பத்துக்கு செலவிடுவதும் வணக்கமே. மனைவியோடு குடித்தனம் நடாத்துவதும் வணக்கமே. வியாபாரம் செய்வதும் வணக்கமே. “ஏழு வானங்களும் பூமியும் இவற்றிலுள்ள அனைத்தும் அவனைப் புகழ்ந்து கொண்டே இருக்கின்றன. (இவற்றில்) ஒன்றுமே அவனைத் துதிசெய்து புகழாதிருக்கவில்லை. எனினும், அவை துதிசெய்து புகழ்வதை நீங்கள் அறிந்து கொள்வதில்லை”. (17 : 44) இவ்வாறு விரிந்த பொருளை உள்ளடக்கியதாக இபாதத் என்ற பதம் காணப்படுகிறது.

இபாதத்துக்கள் உடம்பாலும் உள்ளத்தாலும் நிறைவேற்றப்படுகின்றன. கலிமாவை மொழிதல், தொழுகை, அதில் ஓதப்படுவன, நோன்பு, ஸக்காத், ஹஜ் அதில் மொழியப்படுவன போன்ற யாவும் உடம்பால் நிறைவேற்றப்படுகின்றன. இருப்பினும் உள்ளத்தில் தோன்றும் எண்ணத்துக்கேற்பவே கூலியுண்டு. ஜாபிா் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறாா்கள். “நாங்கள் ஒரு யுத்தத்திலே நபி(ஸல்) அவா்களோடிருந்தோம். அப்போது ரஸூலுல்லாஹ்(ஸல்) அவா்கள்

கூறினார்கள். நிச்சயமாக மதீனாவிலே சிலர் இருக்கிறார்கள். நீங்கள் (ஜிஹாதுக்காக) தொலைதூரம் சென்றாலும் பள்ளத்தாக்குகளைத் தாண்டிச் சென்றாலும் அவர்களும் உங்களுடனே இருந்தவர்களாவர். நோய் அவர்களை உங்களோடு வராது தடுத்துள்ளது. எனினும் நற்கூலி பெறுவதில் உங்களோடு பங்கு கொள்வர்" (முஸ்லிம்). நோய் காரணமாக ஜிஹாதிலே பங்குபற்ற முடியாது போனாலும் அவர்களின் எண்ணத்துக்காக கூலி வழங்கப்படுகிறது என்பதையே நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"எவரேனும் ஒருவர் மற்றொருவருக்கு நற்கிரியை ஒன்றின்பால் வழிகாட்டி விட்டால் அவருக்கு அவ்வேலையைச் செய்ததற்கான கூலி உண்டு." (முஸ்லிம்) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே உடலால் மாத்திரமின்றி, உள்ளத்தாலும் நன்மைகள் ஈட்டிக் கொள்ளப்படுகின்றன. அவ்விரண்டு வழிகளிலும் நன்மைபெற்றுத்தரும் அனைத்தும் இபாதத்தாகவே கருதப்படும். அதற்கான கூலி கிடைக்க இக்லாஸ், வரஉ, தக்வா, குஷூஉ, குழூஉ போன்றன அத்தியவசியமாகின்றன. அவை பற்றி பின்னர் விரிவாக நோக்குவோம்.

## இபாதத்தின் பிரிவுகள்

இபாதத்களை "பர்ளு" (கட்டாயமானது) என்றும் "ஸுன்னத்" (மேலதிகமானது) என்றும் இரண்டாக வகுக்கலாம். பர்ளான இபாதத்களை பர்ளு ஐன், பர்ளு கிபாயா என இரண்டாக வகுக்கலாம்.

1. **பர்ளுஐன்** : பருவமடைந்த சித்த சுவாதீனமான ஒவ்வொரு முஸ்லிமும் நிறைவேற்ற வேண்டிய இபாதத் பர்ளுஐன் எனப்படுகிறது. தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் போன்றவற்றை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம். இவை கட்டாயம் தகைமையுடைய ஒவ்வொரு முஸ்லிமாலும் நிறைவேற்றப்பட வேண்டியனவாகும். நிறைவேற்றாதுவிட்டால் குற்றமாகும். அதனால் தான் இது பர்ளுஐன் என்று கூறப்படுகிறது. அதாவது ஒவ்வொரு தனிநபர் மீதும் கடமையானது என்பதே அதன் பொருள்.

2. **பர்ளுகிபாயா** : ஒவ்வொரு நபருமன்றி எவரேனும் ஒருவரோ பலரோ செய்வதனால் சகலரது கடமையும் நீங்கிவிடும். இத்தகு கடமை பர்ளுகிபாயா எனப்படும். நன்மையை ஏவி தீமையை தடுத்தல், ஜனாஸாவுக்குரிய கடமைகளை நிறைவேற்றல், மார்க்க அறிஞர்களை, வைத்தியர்களை உருவாக்குதல், ஆஸ்பத்திரி கட்டுதல், வைத்தியம் செய்தல், தீயணைத்தல், சன்மார்க்கத் தீர்ப்பு (பத்வா) வழங்கல் என்பன பர்ளு கிபாயாவுக்கான சில உதாரணங்களாகும்.

பர்ளு கிபாயாவான கடமையொன்றை எவரும் நிறைவேற்றாதுவிட்டால் முழுச் சமூகமும் குற்றவாளியாகும்.

### ஸுன்னத் முஅக்கதாவும் கைரு முஅக்கத்தாவும்

குறித்த ஓர் இபாதத்தைச் செய்வது கட்டாயமில்லாவிடினும் அதனைச் செய்யுமாறு ஊக்குவிக்கப்பட்டிருப்பின் அதனை ஸுன்னத் என்பர். அதனை நிறைவேற்றுவதால் நன்மை கிடைக்கிறது. விடுவதால் பாவம் நிகழ்வது இல்லை. அத்தகைய செயல்களில் சிலவற்றை நபி (ஸல்) அவர்கள் ஓரிரு விடுத்தம் விட்டபோதிலும் தவறாமல் செய்துவந்தார்கள். தொழுகைக்காக "அதான்" சொல்வதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். அவ்வாறே ஜமாஅத்தாகத் தொழுவதை எடுத்துக்கொள்ளலாம். வுளு செய்யும் போது வாய் கொப்பளித்தல், தொழுகையில் பாத்திஹா ஸுறாவுக்குப் பிறகு மற்றுமொரு ஸுறாவை ஓதுதல் போன்றவற்றையும் இதனுள் அடக்கலாம்.

இது ஸுன்னத் முஅக்கதா எனப்படும். இதனைவிடுவது தண்டனைக் குரியதல்லாவிடினும் நபி(ஸல்) அவர்கள் தவறிவிடாது நிறைவேற்றி வந்தவைகளாகும்.

### ஸுன்னத்தின் பயன்கள் :

(1) பர்ளான கடமைகளை நாம் நிறைவேற்றும் போது சிலவேளை அதில் குறைபாடுகள் ஏற்படலாம். அக்குறைபாடுகளை ஸுன்னத்துக்கள் நிவர்த்திக்கின்றன.
(2) நாம் நபியின் ஸுன்னத்துக்களைக் கடைப்பிடித்த நன்மை கிடைக்கும்.

(3) நமது பர்ளான வணக்க வழிபாடுகள் பரிபூரணமடையும்.
(4) மறுமையில் நபி(ஸல்) அவர்களது நெருக்கம் கிடைக்கும்.
(5) பர்ளானவற்றை நிறைவேற்றுவதன் மூலம் கடமை நிறைவேறிவிடும். ஸுன்னத்தை நிறைவேற்றுவதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்கும்.

**ஸுன்னத்தின் சிறப்பு பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.**

1. "எந்த முஸ்லிமான அடியான் பர்ளான தொழுகைக்குப் புறம்பாக 12 ரக்அத்து (ஸுன்னத்துகளை) தொழுவாரோ அவருக்கு சுவனத்தில் ஒரு வீட்டை அல்லாஹ் கட்டுகிறான். (முஸ்லிம்)

2. "ஓர் அடியான் நோயுற்றால் அல்லது பிரயாணத்திலிருந்தால் அவன் சுகமாகவும் ஊரிலும் இருக்கும்போது செய்தவற்றின் நன்மை போன்று (இப்போதும்) அவனுக்கு எழுதப்படும் நன்மை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்." (புகாரி)

3. "நிச்சயமாக மறுமையில் ஓர் அடியானிடம் முதலில் விசாரிக்கப்படுவது அவனது தொழுகை பற்றியாகும். அது சீராக நிறைவேறியிருப்பின் அவன் வெற்றியடைந்துவிட்டான். அது சீராக இருந்திராவிட்டால் கைசேதமும் நஷ்டமுமடைந்தவனாவான். பர்ளான தொழுகையில் குறை ஏதும் இருப்பின் அல்லாஹ் மலக்குகளுக்கு எனது அடியான் செய்த ஸுன்னத்தான தொழுகைகள் ஏதும் உண்டா என்று பாருங்கள் என்று மலக்குகளுக்கு கூறுவான். (அப்படியேதும் இருந்தால் பர்ளிலே ஏற்பட்ட குறைபாடு (ஸுன்னத்து) மூலம் நிரப்பப்படும். இவ்வாறே ஏனைய அமல்களிலும் (பார்த்து நிறைவு) செய்யப்படும்." (திர்மிதி)

4. திண்ணைத்தோழர் அபூபிராஸ் ரபீஅதுல் அஸ்லமி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : நான் நபி (ஸல்) அவர்களோடு இரவைக் கழித்தேன். வுளூ எடுக்கத் தண்ணீர் கொண்டுவந்து வைத்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் வேண்டியதைக்கேள் எனக் கூறினார்கள். நான் உங்களோடு சுவர்க்கத்திலிருக்க விரும்புகிறேன் என்றேன். வேறு ஏதும் வேண்டாமா எனக் கேட்டார்கள். இல்லை அது மாத்திரமே என்றேன். அப்படியென்றால் அதிகமாகத் தொழுது ஸுஜூது செய்வதன் மூலம் எனக்கு ஒத்துழைப்பாயாக எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

## இபாதத்தின் வகைகள்

"இபாதத்" என்றால் வணக்க வழிபாடு எனப் பார்த்தோம். இச்சொல்லை நிகர்த்ததாக “ஆதத்” என்றொரு சொல்லுமுண்டு. இது பழக்க வழக்கங்களைக் குறிக்கிறது. இவ்விரண்டுக்குமிடையில் வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக : ஆகாரம் உட்கொள்வதை எடுத்துக்கொள்ளலாம். பசிக்காக ஒருவன் புசிப்பது வழக்கம். ஆதத் ஆகும். அதேநேரம் நீங்கள் உண்ணுங்கள் பருகுங்கள் (04 : 31) என்ற இறைகட்டளைக்கு கட்டுப்பட்டு ஒருவன் உண்ணும் போது அது இபாதத் ஆக கருதப்படுகிறது. அவ்வாறே சுகம் நாடிக் குளிப்பவன் வழமைக்காகச் செய்தவனாகிறான். முழுக்கை (கட்டாயக்குளிப்பை) நிறைவேற்றக் குளிப்பவன் கடமையொன்றை நிறைவேற்றியவனாகின்றான். அது இபாதத் ஆகிறது. சகலதும் எண்ணத்தைப் பொறுத்தது. அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் “எண்ணத்தைப் பொறுத்தே செயல்கள் அமைகின்றன” என்று கூறினார்கள். (புகாரி)

கட்டாயம் நிறைவேற்ற வேண்டியவை. இது வாஜிப் எனக்கூறப்படும்.

1. கலிமாவை மொழிந்த ஒருவன், தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் ஆகியவற்றை நிறைவேற்றல், மனைவி மக்களுக்கு செலவழித்தல், உண்மை பேசுதல் போன்றன இதில் அடங்கும். இவை கட்டாயம் செய்யவேண்டும் என அல்லாஹ்வால் வலியுறுத்தப்பட்டவையாகும்.

2. கட்டாயமென வலியுறுத்தப்படாவிட்டாலும் நிறைவேற்றுவதன் மூலம் நற்கூலி கிடைப்பவை என உற்சாகமூட்டி வந்த இறைக் கட்டளைகளை நிறைவேற்றுவது ஸுன்னத்தான (உபரியான) செயல்களில் அடங்கும். இரவிலே நின்று வணங்குதல், பள்ளியினுள் நுழைந்ததும் தொழுதல், (தஹிய்யதுல் மஸ்ஜித்), திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் நோன்பு நோற்றல், ஷவ்வால் மாத ஆறு நோன்புகளை நோற்றல், அல்குர்ஆனை ஓதுதல், அதனை மனனம் செய்தல் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

3. கட்டாயம் தவிர்க்கவேண்டுமென அல்லாஹ் வலியுறுத்தியவை ஹராம் எனப்படுகிறது. அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், திருடுதல், விபசாரம் புரிதல், புறம்பேசுதல் போன்றன இதில் அடங்குகின்றன.

4. தவிர்ப்பது சிறப்பானது என்ற பொருள்பட வந்துள்ள அம்சங்கள் மக்ரூஹ் என்று கூறப்படும். அதாவது வெறுக்கத்தக்கது. தொழுகையில் ஈடுபட்டுள்ள ஒருவர் தன் நகத்தை கடித்தல், பள்ளிக்குச் செல்லுமுன் வெள்ளைப்பூடு உண்ணல் போன்றன இதற்கு உதாரணமாகும்.

5. ஒரு விடயத்தை செய்யலாம் அல்லது செய்யாது விடலாம் என்று விடப்பட்டுள்ளவை முபாஹ் எனப்படும். அனுமதிக்கப்பட்டது என்பதே அதன் பொருள். சுருக்கமாக கூறின் செய்யவேண்டியன பர்ளு, வாஜிப், ஸுன்னத் என்றும் விடவேண்டியன ஹராம், மக்ரூஹ் என்றும் செய்யவும், செய்யாது விடவும் அனுமதியுள்ளவை முபாஹ் என்றும் விளங்கிக் கொள்ளலாம்.

# அடிப்படை இபாதத்துகள்

## தொழுகை

வணக்கங்களில் தலையானது தொழுகை. இது முஸ்லிமையும் முஸ்லிம் அல்லாதவனையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. இதனை "அஸ்ஸலாத்" என்கிறோம். நபித்துவத்தின் பதினாராம் வருடம் புனித மி∴ராஜ் இரவன்று இக்கடமை விதிக்கப்பட்டது. மி∴ராஜ் எனும் விண்ணுலக யாத்திரையை மேற்கொண்ட நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட ஒரு மாபெரிய அன்பளிப்பென இது கூறப்படுகிறது. 50 நேர தொழுகையாக வழங்கப்பட்ட இது ஐந்து நேரத் தொழுகையாகக் குறைக்கப்பட்டது. ஒரு முஸ்லிம் ஐவேளைத் தொழுகைகளிலும் மொத்தமாக 17 ரக்அத்களை நிறைவேற்றுகிறான். தொழுகை முன்சென்ற நபிமார்கள் அனைவரும் நிறைவேற்றிய ஒரு கடமையாகும்.

நபி இப்றாஹீம் (அலை) இவ்வாறு பிரார்த்தித்தார்கள். இறைவா! என்னை தொழுகையை நிலை நிறுத்தக்கூடியனவாக ஆக்கிவிடுவாயாக. மேலும் என் சந்ததியிலிருந்தும் (தொழுகையை நிலை நாட்டுபவர்களை) உண்டாக்குவாயாக! மேலும் என் இறைவா! என் பிரார்த்தனையை அங்கீகரிப்பாயாக. (      )

நபி ஈஸா (அலை) இவ்வாறு கூறினார் : "நான் உயிர்வாழும் காலமெல்லாம் தொழுகையைக் கொண்டும் ஸகாத்தைக் கொண்டும் எனக்குக் கட்டளையிட்டான்." ("நபியே உங்கள் குடும்பத்தவருக்கு தொழுகையைக் கொண்டு ஏவுவீராக! மேலும் அதன் மீது பொறுமை கொள்வீராக") (       )

அதனால் தான் உத்தம தோழர்கள் தொழுகையை விடுவது நிராகரிப்பு (குப்ர்) ஆகும் என்று கணித்தனர்.

தொழுகையை நிறைவேற்றுபவன் தூய்மையடைகிறான். இறை பக்தியைப் பெறுகிறான். அல்லாஹ்வின் அருளுக்காளாகிறான். இது குறித்து நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். உங்களில் ஒருவனது வீட்டுக்கு அண்மையில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருக்க அதில் அவன் தினமும் ஐவேளை குளித்து விடுவானாயின் அவனது உடம்பில் அழுக்குப்படிந்திருக்குமா? என்று நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் கேட்டார்கள். அதற்கவர்கள், இல்லை அப்படி

எந்த ஓர் அழுக்கும் தேங்கி நிற்காது என்றார்கள். அதுவே ஐவேளைத் தொழுகைக்கும் உதாரணம். அதன் மூலம் அல்லாஹ் பாவங்களை அழித்து விடுகிறான் என்றார்கள். (புகாரி)

இவ்வாறு அகச்சுத்தம், புறச்சுத்தம் என்பவற்றைத் தரும் தொழுகையை பருவமடைந்த முஸ்லிமான ஆண், பெண் இருபாலாரும் நிறைவேற்றவேண்டும். உலகிலுள்ள அனைத்துப் படைப்புகளும் அதனது நிலையிலிருந்து அல்லாஹ்வைத் துதிக்கின்றன.

ஏழு வானங்களும் பூமியும் இவற்றில் உள்ள யாவும் அவனைத் துதி செய்து கொண்டே இருக்கின்றன. (இவற்றில்) அவனைத்து துதி செய்து புகழாத ஒன்றுமே இல்லை. எனினும் அவை துதி செய்து புகழ்வதை நீங்கள் அறிந்து கொள்வதில்லை. (17 : 44)

"வானங்களிலும் பூமியிலும் உள்ளவைகளும் இவற்றிற்கு மத்தியில் உள்ளவைகளும் குறிப்பாக இறக்கைகளை விரித்துப் பறந்த வண்ணமாக நிச்சயமாக அல்லாஹ்வைத் துதி செய்து கொண்டிருக்கின்றன என்பதை (நபியே) நீர் காணவில்லையா? இவை யாவும் தாங்கள் துதிசெய்து வணங்க வேண்டிய முறையை நிச்சயமாக அறிந்தேயிருக்கின்றன. அல்லாஹ்வும் அவை செய்பவைகளை நன்கறிந்து கொள்கிறான். (24 : 41)

ஐயறிவுள்ள படைப்புக்கள் அனைத்தும் வணங்கும்போது ஆறறிவு வழங்கப்பட்ட மனிதன் அல்லாஹ்வை வணங்காது நன்றிகெட்டு வாழலாமா என்று சிந்திக்கவேண்டும். தன்னை மனிதனாகப் படைத்ததற்கு நன்றியோடு வாழும் மனிதனுக்கு அடையாளம் தொழுகையை நிறைவேற்றுவதாகும்.

ஒருவனது உள்ளத்தில் காணப்படும் தெளிவான நம்பிக்கையே அவனைத் தொழத்தூண்டுகிறது. எந்தளவு ஈமான் உள்ளத்தில் உறுதிமிக்கதாக இருக்குமோ, அந்தளவு தொழுகையைப் பேணி நடப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பான். தொழுகை ஒருவனது ஈமானை அளக்கும் அளவுகோலாக இருக்கிறது. நயவஞ்சகர்கள் தொழுகையை சோம்பலுடனேயே நிறைவேற்றுவர்.

நிச்சயமாக “நிராகரிக்கும்” இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்(கக் கருது)கின்றனர். எனினும் அவனோ அவர்களை வஞ்சித்து விடுகின்றான். அவர்கள் தொழுகையில் நின்றாலோ சோம்பேரிகளாக நின்று மனிதர்களுக்குக் காண்பிக்க விரும்புகின்றார்கள்” (04 : 142) ஒருவர் நேர்மையாக வாழ தொழுகையே துணை நிற்கும். மனிதன் நிறைவேற்றும் அமல்களில் சிரேஷ்டமானது தொழுகையாகும்.

தொழுகை மூலம் ஒருவன் எத்தனையோ ஈருலகப் பேறுகளை அடைந்து கொள்கிறான். இந்தப் பேற்றினை அடைந்து கொள்ள விரும்புபவர் அதனை சரிவர நிறைவேற்ற வேண்டும். தொழுகைக்குரிய ஷர்த்துகள், பர்ளுகள், ஸுன்னத்துகள் என்பவற்றை பேணி தொழுகையை நிறைவேற்றவேண்டும். இவற்றைப் பேணி நடப்பவனே தொழுகையை நிலை நிறுத்தியவனாவான்.

அரசருக்கரசனான அல்லாஹ் முன்னிலையில் எழுந்து நிற்கும் ஒருவன் மணம் பூசி நல்லாடை அணிந்து சகல ஒழுங்குகளையும் பேணி தொழுவதன் மூலமே சிறப்பாக தொழுகையை நிறைவேற்றியவனாகிறான். தொழுகை நிறைவேற இவை நிபந்தனையில்லாவிடினும் அதனைப் பரிபூரணப்படுத்தும் ஒன்றாகவே இவை உள்ளன.

## தொழுகையின் ஷர்த்துக்கள்

"ஷர்த்" என்ற சொல் நிபந்தனை எனப்பொருள்படும். அவை பேணப்படாவிட்டால் தொழுகை நிறைவேறாது. தொழுகை “**கடமையாக ஐந்து ஷர்த்துக்கள்**” கவனத்திற் கொள்ளப்படும். அதில்

1. முஸ்லிமாயிருத்தல்.
2. புத்தி சுவாதீனமாயிருத்தல்.
3. பருவமடைந்திருத்தல்.
4. நேரம் வருதல்.
5. மாதவிடாய், பிள்ளைப்பேறு காரணமாக வெளிப்படும் இரத்தம் முதலிய வற்றிலிருந்து துப்புரவாயிருத்தல்.

* அவ்வாறே தொழுகை **“நிறைவேற மேலும் சில நிபந்தனைகள்”** கவனத்திற் கொள்ளப்படும்.

1. சிறுதொடக்கு (வுளுவின்றியிருத்தல்) பெருந்தொடக்கு (கடமையான குளிப்பு) முதலியவற்றிலிருந்து தூய்மையாயிருத்தல். சுத்தமின்றி நிறைவேற்றப்படும் எந்தத் தொழுகையையும் அல்லாஹ் அங்கீகரிக்கமாட்டான். (முஸ்லிம்) என்பது நபிமொழியாகும்.

2. அவ்ரத்தை மறைத்தல். அதாவது, ஆண்கள் தொப்புளுக்கும் முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதியையும், பெண்கள் முகம் இரண்டு மணிக்கட்டு தவிர்ந்த பகுதிகளையும் மறைக்க வேண்டும். தொழும் இடங்களிலெல்லாம் உங்களுக்குரிய அலங்காரங்களை எடுத்துக் கொள்ளுங்கள் என அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

3. தொழும் இடம், உடை, உடம்பு என்பன சுத்தமாயிருத்தல்.

4. கிப்லாவை முன்னோக்குதல்.

5. தொழுகையின் பர்ளு, ஸுன்னத் என்பவற்றை பிரித்தறிதல்.

6. நிறைவேற்றும் முறையை அறிதல்.

7. தொழுகைக்கு நேரமாகி விட்டதை அறிதல்.

8. பர்ள் தொழுகையை பர்ளு என அறிதல்.

மேற்குறித்த அம்சங்களின்றேல் தொழுகை நிறைவேறமாட்டாது.

### தொழுகையின் பர்ளுகள்

தொழுகை நிறைவேற பத்தொன்பது பர்ளுகள் உண்டு. அதிலொன்று விடுபடினும் தொழுகை நிறைவேறமாட்டாது. பர்ளு என்றால் என்ன என்பது பற்றி ஏற்கனவே நாம் அறிந்துவைத்துள்ளோம். அவற்றோடு சம்பந்தமான சில விபரங்களைப் பார்ப்போம்.

அவையாவன :

1. நிய்யத் வைத்தலும் முடியுமானவர் நின்று தொழுதலும், "நிய்யத் இல்லா எந்த அமலும் அங்கீகரிக்கப்படமாட்டாது" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

3 “அல்லாஹு அக்பர்” என தக்பீர் கூறுதல். பேசும் சக்தியுள்ளவர் வாயால் மொழியவேண்டும். இது குறித்து நபி (ஸல்) அவர்கள் தொழுகையின் திறவுகோல் சுத்தமாகும். தொழுகையை ஆரம்பிப்பது தக்பீரைக் கொண்டாகும். அதனை நிறைவு செய்வது ஸலாம் மூலமாகும் எனக் கூறினார்கள்.

4 பாத்திஹா ஸூறாவை ஓதுவது. இதனை ஓதாத எந்தத் தொழுகையும் நிறைவேறமாட்டாது. ஸூறா பாத்திஹா ஓதப்படாத எந்தத் தொழுகையும் தொழுகையாகமாட்டாது. (முஸ்லிம்)

5-6 ருகூஉவும் அதில் தாமதித்தலும் ; தொழுகையை திறம்பட நிறைவேற்றாத ஒருவரைப் பார்த்து, நபி (ஸல்) அவர்கள் ருகூஉவுக்குச் செல்லுங்கள்; அதில் தாமதித்து நில்லுங்கள் எனக் கூறினார்கள்.

7-8 இ∴திதால் எனும் நிலைக்கு வருதல். அதில் நேரே நிற்பது போலவே தரித்தும் நிற்கவேண்டும். அவசரப்பட்டு இ∴திதாலை செய்யவோ குனிந்து வளைந்த நிலையிலோ நிற்கக் கூடாது.

9-10 ஸுஜூது செய்தலும் அதில் தாமதித்தலும். நெற்றியைப் பூமியில் பதியச் செய்வதோடு, இரண்டு கைகளும் இரண்டு கால் பெருவிரல்களும் முழங்கால் இரண்டும் விரிப்பில் பதித்து நிற்கும் வண்ணம் ஸுஜூது அமைய வேண்டும். அவசர அவசரமாக ஸுஜூது செய்வதோ, கை விரல்களை பதியவைக்காது குத்திவைத்துக் கொள்வதோ, கால்களை உயர்த்திக் கொள்வதோ ஸுஜூது ஆகமாட்டாது. அவசர அவசரமாக ஸுஜூது செய்பவர் கோழிபோன்று கொத்துபவர் என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள்.

11-12 இரண்டு ஸுஜூதுகளுக்குமிடையில் இருப்பதும் அதில் தரிப்பதும்.

13-14 இரண்டாவது ஸுஜூது செய்வதும் அதில் தரிப்பதும்.

15-16 கடைசி இருப்பும் அதில் அத்தஹிய்யாத் ஓதுவதும்.

17 அத்தஹிய்யாத்தில் நபி (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்துச் சொல்லுதல்.

18 முதலாவது ஸலாம் சொல்லல்.

19 குறித்த ஒழுங்குப் பிரகாரம் தொழுகையை நிறைவேற்றல்.

## தொழுகையின் ஸுன்னத்துக்கள்

| தொழுகையில் நுழைய முன்பு | தொழுகையில் நுழைந்த பின்பு |
|---|---|
| 1. அதான் | 1. அப்ஆளு |
| 2. இகாமத் | 2. ஹைஆத் |

தொழுகைக்கு நுழைய முன்னுள்ள ஸுன்னத்துக்களான அதான், இகாமத் என்பன பற்றி ஏற்கனவே நாம் அறிந்திருக்கிறோம்.

தொழுகையில் நுழைந்த பின்பு இரண்டு ரக்அத்துக்கு மேற்பட்ட தொழுகையில் இரண்டாவது ரக்அத்தின் முடிவில் முதல் அத்தஹிய்யாத் ஓதுவது ஸுப்ஹுத் தொழுகையிலும் ரமழான் மாதம் கடைசிப்பகுதியில் வித்ருத் தொழுகையிலும் குனூத் ஓதுவது "அப்ஆளு" ஸுன்னத்துக்களில் அடங்கும். இவற்றிலேதும் ஒன்று விடுபட்டால் கடைசி அத்தஹிய்யாத் ஓதி முடிந்த பின்பு **மறதிக்கான ஸுஜுது** செய்ய வேண்டும் இதனை "ஸஜ்தா ஸஹ்வு" என்பர்.

அவ்வாறே தொழுகையில் அமைப்பு முறை சார்ந்த ஸுன்னத்துக்களும் உள்ளன. பர்ளான தொழுகையில் ஈடுபடும் ஒருவன் அவற்றை முழுதாகச் செய்வதன் மூலம் முழு அலங்காரத்தோடும் தொழுதவனாகின்றான். அதாவது ஆரம்பத் தக்பீர் கட்டும்போதும் ருகூஉக்குச் செல்லும்போதும் அதிலிருந்து நிமிரும்போதும் கையிரண்டையும் உயர்த்தி தக்பீர் சொல்வதும், தக்பீர் கட்டும்போது இடக்கைமீது வலக்கையை வைப்பதும், நடு இருப்பு அத்தஹிய்யாத் போன்றவற்றுக்காக அமரும்போது இரு தொடைகளின்மீது கைகளிரண்டையும் வைப்பதும், அத்தஹிய்யாத் ஓதும்போது இடக்கை விரல்களை நீட்டிவைத்தும் வலக்கை விரல்களைப் பொத்திக்கொண்டு சுட்டுவிரலை நீட்டி வைப்பதும், சைகை செய்வதும், கடைசி அத்தஹிய்யாத்தில் "தவர்ருக்" இருப்பில் இருப்பதும், ஏனைய சந்தர்ப்பங்களில் "இப்திராஷ்" இருப்பில் இருப்பதும், இரண்டாவது ஸலாம் சொல்வதும் ஆகிய இவை "ஹைஆத்" ஸுன்னத்துக்கள் எனப்படும். மேலும் சப்தமிட்டு ஓதவேண்டிய இடத்தில் சப்தமிட்டும், மெதுவாக ஓதவேண்டிய இடத்தில் மெதுவாக ஓதுவதும், ஆமின் சொல்வதும் ஸுன்னத்தாகும். எனினும் இதிலொன்று விடுபடுவதால் தொழுகை பாதிப்படையாது.

### தொழுகையை முறிப்பன

தொழுகையின் பர்ளு, ஷர்த்து, ஸுன்னத்து என்பவற்றை அறிந்துகொண்ட நாம், அதனை முறிக்கும் "முப்திலாத்" எனப்படும் காரியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

1. தொழுகையை ஆரம்பித்த பின்பு அதில் நிலைத்து நிற்போமா அல்லது விட்டுவிடுவோமா என்று நினைப்பதன் மூலம் தொழுகை முறிந்து விடும்.
2. தகுந்த காரணங்களின்றி தொழுகையை உருக் குலைக்கும் வண்ணம் ஆடி அசைவது, மூன்று தடவைகளுக்கு அதிகமாக அதிகம் ஒரு செயலை செய்வது தொழுகையை முறிக்கும்.
3. பேசுதல், சிரித்தல், கனைத்தல், ஊதுதல், முணங்குதல்
4. தொழுகையின் ஷர்த்துக்களில் ஒன்றைத் தவறவிடுதல், ஆனால் எதிர்பாராத விதமாக அவ்ரத் வெளியாகி உடனே மறைத்துக் கொண்டால் தொழுகை முறியாது.
5. உண்ணல், குடித்தல்.
6. பர்ளுகளில் ஒன்றை விடுதல்.
7. செயலாலுள்ள பர்ளுகளில் ஒன்றை அதிகமாக்குதல்.

# ஜமாஅத்துத் தொழுகை

“ஜமாஅத்தாகத் தொழுவது தனித்து தொழுவதை விட 27 மடங்கு நன்மை பயக்கக் கூடியது” (புகாரி) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதலால் ஐங்காலத் தொழுகைகளை ஜமாத்தாக தொழுவதே மிகவும் சிறப்பானதாகும்.

அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் என்ற நபித்தோழர், “அல்லாஹ்வின் தூதரே என்னைப் பள்ளிக்கு அழைத்துவர எவரும் இல்லை ; ஆதலால் நான் வீட்டில் தொழட்டுமா எனக் கேட்டார். அவருக்கு சலுகை வழங்கிய நபி (ஸல்) அவர்கள் பின்னர் அந்தத் தோழரை அழைத்து அதான் சப்தத்தைக் கேட்கின்றாயா? என வினவினார். அதற்கு அவர் ஆம் என்றார். அப்படியென்றால் அதானுக்கு விடையளி (ஜமாஅத்துக்கு வா) என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

“எனது உயிர் யார் வசமுள்ளதோ அவன்மீது சத்தியமாக, ஒருவரை விறகு எடுத்து வருமாறு ஏவி அனுப்பிவிட்டு, பின்னர் தொழுகைக்கு அழைப்பு விடுமாறு மற்றுமொருவரை ஏவி தொழுகையை கூட்டாக நிறைவேற்ற வராதிருப்பவர்களிடம் சென்று அவர்களது வீட்டை எரிக்க நாடினேன்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

ஜமாஅத் (கூட்டுத்) தொழுகையை நிறைவேற்றுவதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். “எந்த ஒரு குக்கிராமத்தில் அல்லது ஊரில் ஜமாஅத் தொழுகை நடைபெறவில்லையோ, அங்கு சைத்தான் ஆட்கொள்ளாமல் விடுவதில்லை” (அபூதாவூத்) என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள்.

## ஜும்ஆத் தொழுகை

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை கூட்டாக நடாத்தப்படும் இத்தொழுகையை கட்டாயமாக சித்தசுவாதீனமான பருவ வயதை அடைந்த சுதந்திர முஸ்லிம் ஒவ்வொருவரும் நிறைவேற்றவேண்டும். ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றப்படும் நாள் “அல்யவ்முல் ஜுமுஆ” எனப்படும்.

விசுவாசம் கொண்டவர்களே! வெள்ளிக்கிழமை நாளன்று தொழுகைக்கு அதான் சொல்லி அழைக்கப்பட்டால் வியாபாரத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வைத் தியானிக்க விரையுங்கள். (62 : 9)

ஜுமுஆ விதியாவதற்கு பின்வரும் நிபந்தனைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

1. ஜும்ஆத் தொழுகை ஜமாத்தாக நடைபெறல் வேண்டும். தனித்து ஜும்ஆத் தொழமுடியாது.
2. முஸ்லிமான, புத்திசுவாதீனமுள்ள, பருவ வயதை அடைந்த, ஊரில் குடியிருப்பவர்களான, ஆண்கள் 40 பேராவது இருத்தல். எனினும் எண்ணிக்கை தொடர்பில் இமாம்களிடம் அபிப்பிராய பேதங்களுமுண்டு.
3. ஊரின் எல்லைக்குள் ஜும்ஆ நடைபெறல்.
4. ளுஹர் நேரத்தில் குத்பாவும் ஜும்ஆ தொழுகையும் இடம்பெறல்.
5. ஓர் ஊரில் ஒரு ஜும்மா மாத்திரம் நடைபெறுதல். ஆயினும் ஊரவர் எல்லோரும் ஒன்று சேரமுடியாவிட்டால் தேவைக்கேற்ப அதிகரிக்கலாம்.
6. இரண்டு குத்பாக்களின் பின்னர் ஜும்ஆத் தொழுகை இடம்பெறல்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டே ஜும்ஆ தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

## ஜனாஸாத் தொழுகை

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றே ஜனாஸாத் தொழுகை. நான்கு தக்பீர் கொண்ட இத்தொழுகை பர்ளு கிபாயா என்ற வகையைச் சேர்ந்ததாகும். ஒரு முஸ்லிம் மரணித்தால் அவரைக் குளிப்பாட்டி, கபன் செய்து, தொழுகை நடாத்தி, அடக்கம் செய்வது ஏனைய முஸ்லிம்கள் மீது கடமையாகும். இத்தொழுகை நான்கு தக்பீர்களைக் கொண்ட முதலாவது தக்பீருக்குப் பின் ஸூறா பாத்திஹாவை ஓத வேண்டும். இரண்டாம் தக்பீருக்குப் பின் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்ல வேண்டும். மூன்றாவது தக்பீருக்குப்பின் வபாத்தானவருக்காக துஆக் கேட்கவேண்டும். நான்காவது தக்பீருக்குப்பின் ஸலாம் சொல்ல வேண்டும்.

இரண்டாம் தக்பீருக்குப்பின் நாம் வழமையாக அத்தஹிய்யாத்தில் ஓதும் ஸலவாத்தை ஓதுவது ஏற்றமாகும். அவ்வாறே மூன்றாம் தக்பீருக்குப் பிறகு ஜனாஸாவுக்கு பிழைபொறுக்கத் தேடி ஓத வேண்டும். “அல்லாஹும்மஹ்பிர் லஹு வர்ஹம்ஹு” என்று ஓதினாலும் போதுமெனக் கூறப்பட்டபோதிலும் அதைவிடப் பெரிய துஆக்களை ஓதுவது ஸுன்னத்தாகும்.

# ஸுன்னத்தான தொழுகைகள்

**பெருநாள் தொழுகை :**

முஸ்லிம்களுக்கு இரண்டு பெருநாட்கள் தவிர வேறு பெருநாட்களோ திருவிழாக்களோ கிடையாது. நோன்பு முடிவுற்றதும் ஷவ்வால் மாத தலைப்பிறையன்று கொண்டாடப்படும் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளும் துல்ஹஜ் பிறை பத்தாவது நாளன்று கொண்டாடப்படும் "ஈதுல் அழ்ஹா" எனும் தியாகத் திருநாளுமே அவ்விரு பொருநாட்களாகும்.

பெருநாள் தொழுகை இரண்டு ரக்அத்துக்களைக் கொண்டது. முதலாவது ரக்அத்தில் ஆரம்ப தக்பீர் தவிர ஏழு தக்பீர்களும் ; இரண்டாவது ரக்அத்தில் மீள எழும்போது சொல்லும் தக்பீர் தவிர ஐந்து தக்பீர்களும் சொல்ல வேண்டும். பெருநாள் தொழுகைக்குப் பின் பெருநாள் குத்பா நிகழ்த்தப்படும். அதனை செவிமடுத்து அதிலே மு..மின்களுக்காக ஓதப்படும் துஆவிலே ஆண்கள், பெண்கள், சிறியோர், பெரியோர், பெண்களில் மாதவிடாயுள்ளோர் உட்பட அனைவரும் கலந்து கொள்ளவதன் சிறப்பினை நபி (ஸல்) அவர்கள் எடுத்துக்கூறியுள்ளார்கள். இத் தொழுகையை ஒருமைதானத்திலோ, மஸ்ஜிதிலோ நிறைவேற்றலாம். மேற்படி தொழுகை சூரியன் உதித்து சுமார் இருபது நிமிட நேரம் கழித்து நிறை வேற்றப்படும். இது ஜமாஅத்தாக தொழப்படும் ஒரு ஸுன்னத்துத் தொழுகையாகும்.

**மழைத் தேடித் தொழும் தொழுகை :**

இது "ஸலாதுல் இஸ்திஸ்கா" என்று கூறப்படும். வரட்சி ஏற்பட்டு தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது நிறைவேற்றப்படும் ஒரு தொழுகையே இது. இத்தகைய நிலைமைகள் ஏற்படும்போது மனிதன் தன் பாவங்களை நினைத்து அல்லாஹ்விடம் பிழை பொறுக்கத் தேடி, மழை கேட்டுத் தொழும் இத்தொழுகை இரண்டு ரக்அத்துகளைக் கொண்டது.

இத்தொழுகை நிறைவேற்றப்பட சில தினங்களுக்கு முன்னர் மக்கள் தமது பாவங்களுக்காக இஸ்தி..பார், தவ்பா என்பவற்றில் ஈடுபடுமாறும், தான தர்மங்கள் செய்யுமாறும் ; அநியாயங்கள், பாவகாரியங்கள் செய்வதைவிட்டு ஒதுங்கிக்

கொள்ளுமாறும் ; நோன்பு பிடிக்குமாறும் வலியுறுத்தப்படுவர். நன்மைகள் செய்வதே அல்லாஹ்வின் அருள் கிடைக்கும் வழியென்றும் உணர்த்தப்படுவர்.

அதைத்தொடர்ந்து குறித்த நாளில் ஒன்று திரண்டு பெருநாள் தொழுவது போன்று இரண்டு ரக்அத்துகள் தொழுது அதையடுத்து ஒரு குத்பாப் பிரசங்கம் நிகழ்த்தப்படும். அதிலே அதிகமதிகம் இஸ்தி∴பாரின் அவசியம் வலியுறுத்தப்படும். குத்பாவின் இறுதியில் துஆ ஓதும்போது குத்பா நிகழ்த்தியவர் கிப்லாத்திசையை நோக்கி நின்று துஆவை ஓதுவதோடு தனது மேலங்கியை அல்லது அணிந்திருக்கும் போர்வையை தலைகீழாக மாற்றி புரட்டி அணிந்து கொள்வார். பின்வரும் ஹதீஸ் அதனைத் தெளிவுபடுத்துகிறது.

ஆபூஹுுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். "நபி (ஸல்) அவர்கள் மழைதேடித் தொழுவதற்காக எம்மை அழைத்துச் சென்றார்கள். அதானோ; இகாமத்தோ இன்றி இரண்டு ரக்அத்துக்கள் தொழுவித்தார்கள். பின்னர் எமக்குப் பிரசங்கமொன்றை நிகழ்த்தினார்கள். அதிலே பிரார்த்தனை (துஆ) செய்தார்கள். தன் கையிரண்டையும் உயர்த்தியவர்களாக கிப்லாத் திசை நோக்கி நின்று பிரார்த்தித்தார்கள். தனது மேலங்கியாக இருந்த போர்வையின் வலதை இடமாகவும் இடதை வலமாகவும் மாற்றினார்கள். (முஸ்னத் அஹ்மத்)

**கிரகணத் தொழுகை :**

சூரியனும், சந்திரனும் அல்லாஹ்வின் படைப்புகளாகும். அதனை அல்லாஹ் தான் விரும்பிய வண்ணம் செயற்படுத்துகிறான். அதனால் தான் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான். "வானங்கள் பூமி என்பவற்றின் படைப்பிலும் இரவு பகலின் மாற்றத்திலும் அறிவுடையோருக்கு நிச்சயமாக பல அத்தாட்சிகளுண்டு (3 : 190). எனவே அதில் ஏற்படும் எந்த ஒரு அசாதாரண நிலைமைகளும் அல்லாஹ்வின் வல்லமைக்கு எடுத்துக்காட்டு என்பதை நாம் விளங்கவேண்டும்.

கிரகணம் தோன்றினால் அது நீங்கும் வரை தொழுகையில் ஈடுபடுவதும் இஸ்தி∴பார் செய்வதும் ஸுன்னத்தாகும்.

இந்தத் தொழுகை இரண்டு ரக்அத்துகளைக் கொண்டது. ஒவ்வொரு ரக்அத்திலும் இரண்டு ருகூஉகள் செய்யப்படும். அதாவது முதலாவது ரக்அத்தில் பாத்திஹா ஸுறாவுக்குப்பிறகு நீண்ட ஸுறா ஒன்றை ஓதிய பின் ருகூஉ செய்து

விட்டு நிலைக்கு வரவேண்டும். திரும்ப ஸூறா பாத்திஹாவுடன் ஒரு நீண்ட ஸூறா ஓதி விட்டு மீண்டும் ருகூஉ செய்ய வேண்டும். அதன் பின் ஸுஜூது செய்யவேண்டும். ஸுஜூதிலிருந்து எழும்பிய பின் முதலாவது ரக்அத்தில் செய்தது போன்றே செய்ய வேண்டும்.

கிரகணம் தோன்றுவது நாட்டுக்கோ ஆட்சியாளருக்கோ பாதிப்பைத்தரும் என நம்புவது பாவமாகும். நபி (ஸல்) அவர்களது மகன் காலமான நாளன்று சூரிய கிரகணம் ஏற்பட்டது. நபியின் பிள்ளையின் வபாத்துக்குத்தான் இது நிகழ்கிறது என மக்கள் கதைத்துக் கொண்டனர். கிரகணத் தொழுகையை முடித்துக் கொண்ட நபியவர்கள் மக்களை நோக்கி “நிச்சயமாக சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஒன்று. எவருடைய பிறப்புக்கோ இறப்பிற்கோ கிரகணம் தோன்றுவதில்லை. அவ்வாறு கிரகணத்தை நீங்கள் கண்டால் அல்லாஹ்வைப் பிரார்த்தியுங்கள். தக்பீர் சொல்லுங்கள். தர்மம் செய்யுங்கள். தொழுங்கள்” என்று கூறினார்கள். (புகாரி)

### வித்ரு :

இந்தத் தொழுகையை நபி (ஸல்) அவர்கள் ஊரிலிருக்கும் போதும் பிரயாணத்திலிருக்கும் போதும் தொழுது வந்தார்கள். இத்தொழுகையின் ரக்கஅத்துக்கள் ஒற்றையாக நிறைவேற்றப்படுவதனால் இது ஒற்றை என்ற பொருள்பட அல்வித்ர் எனப்படுகிறது. ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என ஒற்றையாகத் தொழலாம். எப்படித் தொழுத போதிலும் இறுதியாக ஒரு ரக்அத்தாக முடித்துக் கொள்ள வேண்டும். இதனை இரவின் கடைசிப் பகுதியில் நிறைவேற்றுவது ஏற்றமாகும். தொழுகை தவறும் எனப் பயப்படுபவர் இஷாவின் பிந்திய ஸுன்னத்தை அடுத்து தொழுது கொள்ளலாம்.

மூன்று ரக்அத்கள் தொழுபவர் முதலாவது ரக்அத்தில் பாத்திஹா ஸூறாவுக்கு பிறகு “ஸப்ஹிஸ்ம ரப்பி” என்ற ஸூறாவையும் இரண்டாவது ரக்அத்தில் “குல்யா அய்யுஹல் காபிரூன்” என்ற ஸூறாவையும் ஓதுவது சிறந்தது. கடைசி ஒரு ரக்அத்திலும் பாத்திஹாவுக்குப் பிறகு குல்ஹுவல்லாஹு ஸூறாவை ஓதுவதும் ஸுன்னத்தாகும். நடுநிசியில் தஹஜ்ஜுத் தொழுது பழகியவர்கள் வித்ர் தொழுகையை இறுதியாகத் தொழுவது சிரேஷ்டமானது.

### தஹஜ்ஜுத்

இது ஸுன்னத்தான தொழுகைகளில் மிகவும் சிரேஷ்டமான ஒன்றாகும். நடுநிசியில் நித்திரைவிட்டு எழுந்து தொழும் தொழுகையையே இது குறிக்கிறது. “தஹஜ்ஜுத் தொழுகையை நபிலாக, இரவில் ஒரு பாகத்தில் நீர் தொழுது வருவீராக.” (17 : 79) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. இத்தொழுகை நபி

(ஸல்) அவர்கள் மீது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. மு.்.மீன்கள் மீது இது ஸுன்னத்தாக்கப்பட்டுள்ளது. இக்கடமையை நிறைவேற்றுவது மு.்.மீன்களின் பண்புகளிலொன்று என குர்ஆன் கூறுகிறது "அவர்கள் (இரவில்) படுக்கையில் இருந்து தங்கள் விலாக்களை உயர்த்தி, (எழுந்து அப்புறப்பட்டு) தங்கள் இறைவனிடம் நம்பிக்கை வைத்தும் பயந்தும் (அவனைத் தொழுது) பிரார்த்தனை செய்வார்கள். நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றில் இருந்து அவர்கள் (தானமாக) செலவு செய்வார்கள்." (32 : 16) நடுநிசியில் கால்கள் வீங்கும் வரை நபி (ஸல்) அவர்கள் நின்று தொழுதார்கள். தமது தோழர்களுக்கும் அத்தொழுகையில் ஆர்வமுட்டினார்கள். "மனிதர்களே, ஸலாத்தைப் பரப்புங்கள், விருந்தோம்புங்கள், மனிதர்கள் உறங்கும் வேளையில் எழுந்து தொழுங்கள். அப்போது தடைகள் எதுவுமின்றி சுவனம் நுழைவீர்கள்."(திர்மிதி)

## ளுஹாத் தொழுகை

இத்தொழுகையின் சிறப்பு பற்றி நபி (ஸல்) அவர்கள் சிலாகித்துக் கூறியுள்ளார்கள். சூரியன் உதித்து ஓர் ஈட்டியளவு உயர்ந்தது முதல் சூரியன் உச்சிப் பொழுதை அடைய சற்று முன் வரை இத்தொழுகைக்குரிய நேரமாகும்.

இதனை இரண்டு ரக்அத்தாக தொழலாம். அவ்வாறே எட்டு ரக்அத்தும் தொழலாம். ஹிஜ்ரி எட்டில் மக்கா வெற்றி நிகழ்ந்த நாளன்று உம்மு ஹானி.்.(ரலி) அவர்கள் வீட்டிலே நபி (ஸல்) அவர்கள் எட்டு ரக்அத்துக்கள் தொழுதார்கள். பின்வரும் ஹதீஸ் மூலம் ளுஹாத் தொழுகை, வித்ர் தொழுகை என்பவற்றின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ள முடிகிறது.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். "எனது நேசத்துக்குரிய அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு பின்வரும் மூன்று விடயங்களை உபதேசித்தார்கள். மாதம் தோறும் மூன்று நோன்புகள் பிடித்தல், ளுஹா இரண்டு ரக்அத் தொழல், நித்திரைக்குச் செல்லமுன் வித்ரைத் தொழல் ஆகிய மூன்றுமே அவை. (புகாரி, முஸ்லிம்)

## தஹிய்யதுல் மஸ்ஜித்

இது பள்ளியினுள் நுழையும் ஒவ்வொருவரும் நிறைவேற்றும் ஒன்றாகும். இதனைப் பள்ளிவாசலுக்கான காணிக்கைத் தொழுகை என்றும் அழைப்பர். பள்ளியினுள் நுழையும் போது ஜமாஅத் நடைபெற்றுக் கொண்டிருந்தால் அதிலே சேர்ந்து விட வேண்டும். அவ்வாறே அதான் சொல்லப்பட்டுக் கொண்டிருந்தால் அதான் முடியும் வரை காத்து நின்று தொழலாம். ஜும்ஆ நாளன்று இமாம் குத்பா ஓதிக் கொண்டிருக்கையில் பள்ளியினுள் நுழைபவர் தஹிய்யதுல் மஸ்ஜிதை நிறைவேற்றிவிட்டு குத்பாவை செவிமடுப்பதே சிறந்தது.

# ஸகாத்

“ஸகாத்” என்ற சொல் தூய்மை, வளர்ச்சி, அபிவிருத்தி, அருள் எனும் மொழிக் கருத்துக்களில் பிரயோகிக்கப்படுகின்றது. ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு விதியாக்கப்பட்ட இக்கடமை இஸ்லாமிய பரிபாஷையில் பின்வரும் கருத்திலே பிரயோகிக்கப்படுகிறது. "ஸகாத் விதியாவதற்குரிய நிபந்தனைகளுக்குட்படுகின்ற முஸ்லிம்கள் ; தமது சொத்தில் (அவற்றின் நிஸாபையும், காலத்தையும் அடைந்ததன் பின்னர்) அல்லாஹ் விதியாக்கிய ஒரு குறித்த விகிதத்தை குர்ஆன் கூறும் எட்டுக் கூட்டத்தினரிடையே பகிர்ந்தளிக்கும் ஓர் அடிப்படையான கடமையினையே இது குறிக்கின்றது"

## ஸகாத்தின் முக்கியத்துவம்

### 1. அடிப்படை வணக்கங்களில் ஒன்று

இஸ்லாம் ஐந்து தூண்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதனை நபி (ஸல்) அவர்களுடைய ஹதீஸ்கள் உறுதிப்படுத்துகின்றன. "ஹதீஸ் ஜிப்ரீல்" தொடரில் இஸ்லாம் என்றால் என்ன? என ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டபோது நபி (ஸல்) அவர்கள் "இஸ்லாம் என்பது அல்லாஹ்வைத்தவிர வேறு கடவுள் இல்லை ; முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார் எனச்சான்று பகர்வதும், தொழுகையை நிலை நாட்டுவதும், ஸகாத்தைச் செலுத்துவதும், ரமழானில் நோன்பு நோற்பதும், சக்தி பெற்றிருந்தால் ஹஜ்ஜை நிறைவேற்றுவதுமாகும்." (புகாரி) எனப் பதிலளித்தார்கள். இதன் மூலம் ஸகாத் அடிப்படை வணக்கங்களில் ஒன்று என்பதை மிகத் தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

### 2 குர்ஆன், ஸுன்னா ஸகாத் கடமையினை வலியுறுத்தியுள்ளமை :

> "(நபியே!) அவர்களின் செல்வங்களில் இருந்து ஸகாத்தை எடுத்து அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக" (9 : 103)

> "அல்லாஹ் தன் அருளினால் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் யார் உலோபித்தனம் செய்கின்றார்களோ அது தமக்கு நல்லது என்று (அவர்கள்) நிச்சயமாக எண்ண வேண்டாம். அவ்வாறன்று, அது அவர்களுக்குத் தீங்குதான். அவர்கள் உலோபித்தனத்தால் சேர்த்து வைத்த (பொருட்கள்) எல்லாம் மறுமையில் அவர்களின் கழுத்தில் அரிகண்டமாகப் போடப்படும்" (3:180)

மேற்படி வசனங்கள் ஸகாத்தை வழங்குவதனால் கிடைக்கும் நன்மைகளையும், அதனைத் தடுத்துக் கொள்வதனால் ஏற்படக்கூடிய தீமைகளையும் குறிப்பிடுவதன் மூலம் ஸகாத்தின் முக்கியத்துவத்தை உணர முடிகின்றது.

ஸகாத்தின் முக்கியத்துவத்தை நபி (ஸல்) அவர்களது ஹதீஸ்களும் எடுத்துக் கூறுகின்றன.

"ஸகாத் மூலம் நீங்கள் உங்கள் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்." (அபூதாவூத்)

"செல்வத்திலிருந்து வேறாக்கப்படாத ஸகாத் குறித்த செல்வத்தை அழித்துவிடும். (பைஹகீ)"

"ஸகாத்தை வழங்காது தடுத்துக் கொள்ளும் சமூகத்தினரை அல்லாஹ் பஞ்சத்தைக் கொண்டு சோதிப்பான்" (தபராணி)

ஸகாத் வழங்குவதன் மூலம் செல்வங்களைப் பாதுகாக்க முடியும் என்பதும், ஸகாத்தை தடுத்துக் கொள்ளும் போது அழிவுக்கு உட்பட நேரிடும் என்பதும் மேற்படி ஹதீஸ்களின் மூலம் எடுத்துக் கூறப்பட்டு ஸகாத்தின் முக்கியத்துவம் விளக்கப்பட்டுள்ளது.

3. **தொழுகையுடன் இணைத்து ஸகாத் அல்-குர்ஆனில் குறிப்பிடப் பட்டுள்ளமை**. அல்-குர்ஆனில் சுமார் இருபத்தியேழு இடங்களில் தொழுகையுடன் இணைத்து ஸகாத் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முஸ்லிம்கள் மீது எந்தளவு தொழுகை முக்கியமானதாக இருக்கின்றதோ அதே போன்று ஸகாத்தும் முக்கியமான கடமையென்பதை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

   "தொழுகையை நிலைநாட்டுங்கள் ; ஸகாத்தைக் கொடுங்கள்" (2:110). தப்ஸீர் தபரியில் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்ற அறிவிப்பு மேலும் இதனை உறுதிப்படுத்துகின்றது. "தொழுகையை நிலைநாட்டுமாறும், ஸகாத் கொடுக்குமாறும் கட்டளையிடப்பட்டுள்ளீர்கள். யார் ஸகாத் கொடுக்கவில்லையோ அவருக்கு தொழுகை கிடையாது" (தப்ஸீர் தபரி பா : 14 ப: 153)

4. **ஸகாத் வழங்காதிருப்பவர் பெரும் பாவியாவார்.** ஸகாத் கொடுக்காதவன் பெரும் பாவியாவான். அது கடமை என்பதை மறுப்பவன், அதனை இழிவுபடுத்துபவன் முர்தத்தாக மாறிவிடுகின்றான். அவனுக்கெதிராக ஆயுதமேந்திப் போராடுவது இஸ்லாத்தில் கடமையாக்கப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் இஸ்லாத்தில் ஸகாத் எந்தளவு முக்கியமானது என்பதைப் புரிந்து கொள்ளப் போதுமானதாகவுள்ளது.

"மக்கள் அல்லாஹ் ஒருவன் எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் எனவும் மொழிந்து, தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுக்கும் வரை நான் அவர்களோடு போராட ஏவப்பட்டுள்ளேன்" (புகாரி, முஸ்லிம்)

5. **ஸக்காத்தை வழங்குவதில் முன்னோர்களின் ஈடுபாடு :** நபித்தோழர்களும், முஸ்லிம் ஆட்சியாளர்களும், தாபிஈன்களும், அறிஞர்களும் ஸகாத் விடயத்தில் காட்டிய கவனமும், ஈடுபாடும் ஸகாத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள போதிய சான்றாகவுள்ளன.

முதற் கலீபா அபூபக்கர் (ரலி) அவர்கள் ஸகாத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் உமர் (ரலி) அவர்கள் போன்றோரின் சிபாரிசைக் கூட ஏற்றுக் கொள்ளாமல் மிகத்தீவிரமாக செயற்பட்டார்கள். "நபிகளாரின் காலத்தில் செலுத்தப்பட்ட ஸகாத் அது ஒரு ஒட்டகைக் குட்டியளவிருந்தாலும் சரியே கட்டாயம் செலுத்தப்பட வேண்டும். இன்றேல் அதற்காக நான் போர் தொடுப்பேன்" என்று கலீபா அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறியதோடு மாத்திரம் நின்று விடாமல் போராடி அதனை நிலைநிறுத்தினார்கள்.

உமைய்யா ஆட்சியாளர் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் தமது ஆட்சியில் ஸகாத்தை முறையாக நடைமுறைப்படுத்தியதால் ஸகாத்தை பெறத்தகுதியானவர்களை தேடிக்கண்டு பிடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவை ஸகாத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள போதிய வரலாற்றுச் சான்றுகளாகும்.

6. **அல்லாஹ்வின் அருள் தக்வாவுடன் வாழ்ந்து ஸகாத் கொடுப்பவருக்கே கிடைக்கும்** :

".... என்னுடைய அருட்கொடை அனைத்தையும் விட மிக விரிவானது. ஆகவே எவர்கள் (எனக்கும்) பயந்து ஸகாத்தும் கொடுத்து வருகிறார்களோ அவர்களுக்கு (என்னுடைய அருளை) நான் முடிவு செய்கிறேன்." (7 : 156)

**7. இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படை அம்சமாக ஸகாத் இருக்கின்றமை :** ஸகாத், செல்வம் முடக்கப்படுவதை நீக்கி, செல்வம் இயக்கம் பெறுவதற்கு வழிவகுக்கின்றது.

பணத்தைப் பரிமாற்றம் செய்யாமலும் முதலிடாமலும் தேக்கி வைப்பதை இஸ்லாம் விரும்பவில்லை.

> "எவர்கள் பொன்னையும் வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவிடாதிருக்கின்றார்களோ (நபியே) அவர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு என்று நன்மாராயம் கூறுவீராக. (9 : 34)

ஒருவன் தன் செல்வத்தை முதலீடு செய்தாலும் செய்யாவிட்டாலும் அதிலிருந்து 2.5%தை வருடந்தோறும் ஸகாத்தாக கொடுக்க வேண்டும். எனவே ஸகாத் செல்வத்தை இயக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும், உழைக்கும் சக்தியைக் கூட்டவும், விருத்தியை உண்டு பண்ணவும் வழிவகுக்கிறது.

ஸகாத், பணச் சுற்றோட்டத்திற்கு வழிவகுக்கின்றது. இதனால் உழைப்புச் சக்தி அதிகரித்து பணம் நாட்டின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும். வேலையில்லாப் பிரச்சினை நீங்கும். எனவேதான் செல்வ விநியோகம் பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது. "உங்களில் உள்ள செல்வந்தர்களுக்குள்ளேயே (செல்வம்) சுற்றிக் கொண்டிருக்காமல் இருப்பதற்கு இவ்வாறு பங்கிட்டுக் கொடுக்கக் கட்டளையிடப்பட்டுள்ளது." (59 : 7)

8. **ஸகாத் தனிமனித, சமூக பயன்பாடுகளைப் பெற்றுத்தரும்**

தனிமனிதனைத் தூய்மைப்படுத்தி அவனிடமுள்ள கஞ்சத்தனத்தை அகற்றி சமூகத்தின்பால் கரிசனையோடு நடந்துகொள்ள வழியமைக்கிறது.

## ஸகாத் கடமையாகும் பொருட்களும் அதனோடு தொடர்புடைய விதி முறைகளும் :

குர்ஆனும், ஸுன்னாவும் எவ்வகையான பொருட்களில் ஸகாத் பெறப்பட வேண்டுமென வரையறுத்துக் கூறாமல் "செல்வம்" என்ற பொதுச் சொல்லையே அதற்குப் பயன்படுத்தியுள்ளது.

> "அவர்களது செல்வங்களில் கேட்பவர்களுக்கும் தேவையிருந்தும் வெட்கத்தால் பிறரிடம் கேட்காதோருக்கும் பங்கிருக்கிறது." (70 : 25)

> "அவர்களது செல்வங்களில் ஸகாத்தை அல்லாஹ் கடமை யாக்கியுள்ளான் என்பதை அவர்களுக்கு விளக்குவீராக." (புகாரி)

ஆகவே மனிதர்களுக்கு பிரயோசனம் தரக் கூடியவையாக அமைகின்ற அனைத்துச் செல்வங்களிலும் ஸகாத் கடமையாகின்றது என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

ஸகாத்தின் மூலம் ஸகாத் வழங்கப்படும் செல்வங்களும் தூய்மைப்பட வேண்டும் என்பது அதன் அடிப்படை இலக்குகளில் ஒன்றாகும். ஒரு சில பொருட்களோடும், வருமானங்களோடும் அதனைச் சுருக்கிவிட முடியாது. மாறாக அனைத்துச் செல்வங்களிலும் ஸகாத் விதியாகின்றது. இதுவே ஆதாரபூர்வமான கருத்தாகவுள்ளது.

உதாரணமாக பாரிய பண்ணைகள், பாரிய தொழிற்சாலைகள், வாடகைக்கு விடப்படும் பெரும் கட்டடங்கள், பெருந்தோட்டப்பயிர்ச் செய்கைகள், அதிக சம்பளம் பெறப்படும் தொழில்கள் போன்றவற்றை நவீன காலப்பிரிவில் அறிமுகமாயிருக்கின்ற புதிய சில வருமான மூலங்களாகக் குறிப்பிடலாம். இவற்றுக்கு ஸகாத் வாஜிபாகும் என்பதே நவீன கால இஸ்லாமிய அறிஞர்களது கருத்தாகும்.

ஆகவே நிஸாப் அளவு வைத்திருக்கும் சாதாரண வியாபாரி ஸகாத் வழங்கும் போது, பாரிய பண்ணை வைத்திருக்கும் ஒருவர், பெருந்தோட்டப்பயிர்களை வைத்திருக்கும் ஒருவர், அதிக சம்பளம் பெறும் ஒருவர், நிஸாபை அடையும் போது ஸகாத்தை வழங்க வேண்டியதில்லை எனக் கருத்துக்கொள்வது அல்லது வழங்காமலிருப்பது எவ்வகையிலும் பொருத்தமானதல்ல. இஸ்லாமிய ஷரீஅத் இந்த முரண்பாட்டை ஒரு போதும் கொண்டிருக்காது.

**ஸகாத் விதியாகும் பொருட்களுக்கான நிபந்தனைகள்**

1. **குறிப்பிட்ட சொத்தின் மீது பூரண உரிமை பெற்றிருத்தல்.** பிறருக்கு எத்தகைய அதிகாரமும், உரிமையும் இல்லாத தனக்குச் சொந்தமான, தான் விரும்பியவாறு உபயோகிக்க முடியுமான பொருட்கள் மீதுதான் ஸகாத் கடமையாகும்.

2. **நிஸாபை அடைந்திருத்தல்.** நிஸாப் என்பது ஸகாத் விதியாகும் ஒவ்வொரு பொருளும் அவ்வாறு விதியாவதற்கு குறிப்பிட்டதொரு பெறுமானத்தை அல்லது அளவை அடைந்திருத்தலைக் குறிக்கும் அரபுச் சொல்லாகும். பொருளுக்குப் பொருள் நிஸாப் அளவில் வேறுபாடு காணப்படும்.

3. **ஒரு வருடம் பூர்த்தியாகியிருத்தல்.** அல்லது கையில் கிடைத்ததும் அவை நிஸாபை அடைந்திருந்தால் ஸகாத்தை வழங்க வேண்டும்.

   சந்திர வருடக் கணக்கெடுப்பே பின்பற்றப்படும். வருடம் பூர்த்தியாகாமல் இருக்கின்ற பொருட்களில் கைக்கு கிடைத்ததும் நிஸாபை அடைந்திருப்பின் ஸகாத்தை வழங்க வேண்டும்.

4. **ஹராமான வழியில் சேர்த்த செல்வமாக இல்லாதிருத்தல்** உதாரணமாக வட்டி, சூது, கொள்ளை, அதிஷ்ட சீட்டிழுப்பு, களவு, மோசடி, ஏமாற்று போன்ற ஹராமான வழிகளில் பெறப்பட்டவை.

5. **ஷரீஅத் தடைசெய்த பொருளாக இல்லாதிருத்தல்.** உதாரணமாக: மது, பன்றி, இறந்தவை, அழுக்கானவை.

6. **அடிப்படைத் தேவைகளை விட மேலதிகமாக இருத்தல்.**
   "செல்வந்தனாக இருக்கும் நிலையிலேயே ஸகாத் கடமையாகிறது" (முஸ்னத் அஹ்மத்) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

   பொதுவாக உணவு, உடை, வீடு ஆகியனவே அடிப்படைத் தேவையாக கருதப்படுவதுண்டு. தொழில் செய்வதற்கான உபகரணங்கள், மருத்துவத் தேவைகள் போன்றவையும் இதில் அடங்கும்.

7. **கடன் பொறுப்பு நீங்கியிருத்தல்.** ஒருவரிடம் செல்வம் இருந்த போதிலும் ஸகாத் விதியாவதற்கான நிஸாப் அளவைக் குறைக்குமளவு அல்லது அதனை முழுமையாக அடைக்குமளவு அவருக்கு கடன் இருக்குமாயின் அவர் மீது ஸகாத் கடமையாகமாட்டாது.

8. **விருத்தியுறக்கூடியதாக இருத்தல்.** ஸகாத் பெறப்படும் பொருள் தானாக வளரும் தன்மை கொண்டதாக (உதாரணம் : பயிர்கள், பழங்கள்) அல்லது அதன் உரிமையாளர் தனது உழைப்பால் அதனை வளர்த்து இலாபத்தையும், வருமானத்தையும் பெறத்தக்கதாக இருக்க வேண்டும் என்பது இதன் விளக்கமாகும்.

**ஸகாத் விதியாகும் செல்வங்களும், அளவைக் கணிப்பிடும் முறைகளும்**

ஒரு வருடம் பூர்த்தியாக வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்ட பொருட்கள்

1. **பணம்**

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 85 கிராம் தங்கத்தின் பணப் பெறுமானம் (சுமார் 10 $^1/_2$ பவுண் | $2^1/_2$ % | வருட இறுதியில் சேமிப்பில் இருக்கும் பணம் நிஸாப் அளவை (85 கிராம் தங்கத்தின் பணப்பெறுமானத்தை) எட்டியிருத்தல் |

2. **தங்கம், தங்க நகைகள், தங்கப்பாத்திரங்கள், பொருட்கள்**

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 85 கிராம் தங்கம் (சுமார் $10^1/_2$ பவுண் இதன் பணப் பெறுமானம்) | $2^1/_2$ % | * தங்கத்தின் நிறை, வருட இறுதியில் ஆகக் குறைந்தது 85 கிராம் அளவை எட்டியிருத்தல்.<br><br>* சாதாரண நிலையை மீறி பெண்கள் பாவிக்கும் தங்க நகைகளிலும், மற்றும் தங்கத்தினால் செய்யப்பட்ட பாத்திரங்கள், பொருட்களிலும் ஸகாத் விதியாகும். இவற்றின் அப்போதைய சந்தைப் பெறுமானம் 85 கிராம் தங்கத்தின் பெறுமான அளவை எட்டியிருக்குமாயின் அதில் 2 $^1/_2$% ஸகாத் கொடுக்க வேண்டும். |



6-CM14797

3. **வெள்ளி, தங்க நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள், பொருட்கள்**

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 595 கிராம் வெள்ளி (56 $^1/_2$ தோலா இதன் பணப் பெறுமானம்) | $2^1/_2$% | தங்கத்தில் கணிப்பீடு செய்யப் படும் அதே ஒழுங்குமுறையில் வெள்ளிக்குரிய நிஸாப் அள வான 595 கிராம் வெள்ளியின் நிறை அளவை அடிப்படை யாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

4. **மாணிக்கக் கற்கள், முத்துக்கள் பவளங்கள் போன்றவையும் அவற்றால் செய்யப்பட்ட ஆபரணங்கள், அலங்காரப் பொருட்கள்***

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 85 கிராம் தங்கத்தின் (சுமார் $10^1/_2$ பவுண் பணப் பெறுமானம்) | $2^1/_2$% | இஸ்லாம் அனுமதித்த சாதாரண நிலையை மீறி பாவிக்கப்படும் இத்தகைய நகைகள், மற்றும் அலங்காரப் பொருட்கள் முதலான வற்றில் ஸகாத் விதியாகும். இவற்றின் அப்போதைய சந்தைப் பெறுமானத்தைக் கணிப்பிட்டு அப்பெறுமானம் 85 கிராம் தங்கத்தின் பணப் பெறுமான அளவை எட்டியிருக்குமாயின் அதில் 2 $^1/_2$% ஸகாத் கொடுக்க வேண்டும். |

5. **வியாபாரப் பொருட்கள்**

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 85 கிராம் தங்கத்தின் (சுமார் $10^1/_2$ பவுண்) பணப்பெறுமானம் | $2^1/_2$ % | வியாபார நோக்கில் ஒருவர் வைத் துள்ள அனைத்துப் பொருட்களும் அதில் அடங்கும். (உ+ம் : கடை யிலுள்ள வியாபாரப் பொருட்கள், விற்பனை நோக்கில் வைக்கப்பட்டு ள்ள வாகனங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் முதலியவற்றையும் வைத்தே கணிப்பிட வேண்டும்.) வர வேண்டியிருக்கும் கடன்களைக் அவற்றோடு சேர்த்து, கொடுக்க வேண்டியுள்ள கடன்களைக் கழிக்க வேண்டும். மேலும் இலாபம், சேமிப்பு, கைவசமுள்ள பணம் மற்றும் கிடைத்த காசோலை களது பெறுமதி என்பவற்றை அவற்றோடு சேர்க்க வேண்டும். இதன் பிரகாரம் மொத்தக் கையிருப்பு 85 கிராம் தங்கத்தின் பணப் பெறுமான அளவு காணப்படு மாயின் அவற்றில் 2½ % ஸகாத் கொடுக்க வேண்டும். இதன் போது குறிப்பிட்ட வியாபாரி இலாபமடைந் தாரா அல்லது நஷ்டமடைந்தாரா என்பது நோக்கப்படமாட்டாது. அவரிடம் இருக்கும் செல்வம் நிஸாப் அளவை அடைந்திருக்கின்றதா என்று மட்டுமே அவதானிக்கப்படும். இத்தகைய பொருட்களுக்கு ஸகாத் கணிக்கும் போது அவற்றுக்கான சந்தை விலையை (விற்பனைவிலை) வைத்தே கணிக்கப்படும். |

6. **தொழிற்சாலைகள்**

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 85 கிராம் தங்கத்தின் (சுமார் $10^1/_2$ பவுண்) பணப்பெறுமானம் | $2^1/_2$% | உற்பத்திச் செலவினங்கள் அனைத் தையும் கழித்ததன் பிறகு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் 85கிராம் தங்கத்தின் பெறுமானத்தை அடைந் திருக்குமாயின் அதில் 2½ % ஸகாத் தாகக் கொடுக்க வேண்டும். இயந் திரத்துக்கான தேய்வு பெறுமானத்தைக் கணிப்பிட்டு வருடா வருடம் அதனைக் கழித்துவிட்டே ஸகாத் கணிக்க வேண்டும். |

7. **வாடகைக்கு விடப்படும் கட்டிடங்கள், வாகனங்கள்**

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 85 கிராம் தங்கத்தின் (சுமார் $10^1/_2$பவுண்) பணப்பெறுமானம் | $2^1/_2$ % | இவற்றுக்கான தேய்வு மற்றும் திருத் தச் செலவுகள், வரிகள் முதலான வற்றைக் கழித்ததன் பிறகு வாடகை வருமானம் 85 கிராம் தங்கத்தின் பணப் பெறுமான அளவை எட்டி யிருக்குமாயின் அதில் 2 ½ % ஸகாத் கொடுக்க வேண்டும். |

9. **சம்பளங்களும் கூலிகளும்**

(உ+ம்) வைத்தியர், பொறியியளாளர், வழக்கறிஞர், முகாமையாளர், விரிவுரையாளர் போன்றோரது சம்பளங்களும் கூலிகளும்)

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 85 கிராம் தங்கத்தின் ($10\ ^1/_2$ பவுண்) பணப் பெறுமானம் | $2^1/_2$ % | ஒரு வருடம் முழுவதற்குமான சம்ப ளத்தைக் கூட்டி அதிலிருந்து அந்த வருடத்துக்கான குடும்பச் செல வினங்களையும் கழித்தால் எஞ்சு வது 85 கிராம் தங்கத்தின் பணப் பெறுமான அளவை எட்டியிருக்கு மாயின் அதில் 2½ % ஸகாத் கொடுக்க வேண்டும். குடும்பச் செல வீனம் என்பது சாதாரண நடுத்தர வாழ்க்கைச் செலவையே குறிக்கும். |

**ஒரு வருடம் பூர்த்தியாக வேண்டும் என்ற நிபந்தனைக்குட்படாத பொருட்கள்**

(தானியம், பழ வகைகள் உட்பட ஏனைய விவசாய விளைபொருட்கள், மற்றும் தேன், புதையல், கனிப்பொருட்கள் போன்ற செல்வங்களுக்கான ஸகாத்தை அவை கிடைத்தவுடனேயே கொடுக்க வேண்டும்)

**1. தானியங்கள் (அரிசி, கோதுமை போன்றன)**

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 653 கிலோ | 5 % அல்லது 10 % | உற்பத்திச் செலவினங்கள் கழித்ததன் பின் எஞ்சும் தொகை நிஸாப் அளவை எட்டுமாயின் (653 கிலோ) நீர்பாசனத்துக்கு குறிப்பிடத் தக்களவு செலவு செய்யப்பட்டிருப்பின் 5% ம் அவ்வாறில்லையேல் 10% உம் ஸகாத்தாகக் கொடுக்க வேண்டும் |

**2. தானியங்களல்லாத ஏனைய விவசாய விளைபொருட்கள் (உ+ம் தேயிலை, தென்னை, இறப்பர், கராம்பு, சாதிக்காய், மிளகு, பழவர்க்கங்கள்)**

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 653 கிலோ பிரதான தானியத்தின் பணப் பெறுமானம் | 5 % அல்லது 10 % | எமது நாட்டை பொறுத்தவரை நடுத் தர விலை கொண்ட அரிசி வகை ஒன்றின் 653 கிலோ பணப் பெறுமானத்தைக் கணிப்பிட வேண்டும். அப்பெறுமானத்துக்கு குறிப்பிட்ட விவசாய விளை பொருளில் (உ+ம் தேயிலை, தேங்காய்) எவ்வளவு வாங்க முடியுமோ அந்த அளவே குறிப்பிட்ட பொருளின் நிஸா பாகும். உற்பத்திச் செலவு கழிக்கப்பட்ட பின்னரே நிஸாப் அளவைத் தீர்மானிக்க வேண்டும். இவ்விதம் அடைந்திருக்குமாயின் நீர்பாசனத்துக்காக குறிப்பிடத் தக்களவு செலவு செய்யப்பட்டிருப்பின் 5% உம் அவ்வாறில்லையேல் 10%உம் ஸகாத்தாக கொடுக்க வேண்டும். |

3. **விலங்கு வேளாண்மை**

(ஆடு, மாடு, கோழி, தேனீ பண்ணைகள் இதற்கு உதாரணங்களாகின்றன.)

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 653 கிலோ பிரதான தானியத்தின் பணப் பெறுமானம் | 10 % | உற்பத்திச் செலவினங்கள் அனைத்தையும் கழித்ததன் பின்னர் கிடைக்கும் ஆடு, மாடு, கோழி ஆகிய வற்றின் இறைச்சி அல்லது கோழி முட்டை, பசுப்பால், அல்லது தேன் போன்றவை நடுத்தர விலை கொண்ட அரிசி வகையொன்றின் 653 கிலோ பணப்பெறுமானத்தை எட்டியிருக்குமாயின் அதில் 10% ஸகாத் கொடுக்க வேண்டும். |

4. **மீன்**

| *நிஸாப் (இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அளவு)* | *கொடுக்க வேண்டிய அளவு* | *ஸகாத் கணிப்பிடும் முறை* |
|---|---|---|
| 653 கிலோ பிரதான தானியத்தின் பணப்பெறுமானம் | $2^1/_2$ % | மீன்பிடிப்பதற்காக ஏற்படும் செலவினங்கள் அனைத்தையும் கழித்ததன் பின்னர் பிடிக்கப்பட்ட மீன்கள் 653 கிலோ தானியத்தின் பணப் பெறுமானத்தை எட்டியிருக்கு மாயின் அதில் $2^1/_2$% தை ஸகாத்தாக கொடுக்க வேண்டும். |

ஆடு, மாடு ஆகியன விலங்கு வேளாண்மை என்ற அடிப்படையில் பண்ணையிட்டு வளர்க்கப்படாமல் மந்தை வளர்ப்பு என்ற சாதாரண நிலையில் காணப்படுமாயின் அவற்றின் எண்ணிக்கையைக் கவனத்திற் கொண்டு ஸகாத் வழங்க வேண்டும். இவ்விலங்குகளுக்கான ஸகாத் அளவை கீழ் கண்டவாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

## 1. மாடுகளுக்கான ஸகாத்

மாடு என்ற பிரயோகத்தில் எருமையும் அடங்கும் என்பது சட்ட அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும். ஆயினும் இவ்விருவகை விலங்குகள் மீதும் ஸகாத் விதியாவதற்காக ஆகக் குறைந்த தொகை எத்தனை என்பது திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை. எனினும் இவற்றின் குறைந்தபட்ச எண்ணிக்கையை முப்பதாகக் கொள்வதே சாதாரண நிலையில் பொருத்தமானதாகக் கருதப்படு கின்றது. இதன் பிரகாரம் ஒவ்வொரு 30க்கும் ஒரு வருட கன்று ஒன்று ஒவ்வொரு 40க்கும் இரு வருடக் கன்று ஒன்று என்ற வகையில் அதிகரித்துச் செல்லும் தொகைக்கேற்ப கணக்குப் பார்த்து ஸகாத் வழங்க வேண்டும்.

## 2. ஆடுகளுக்கான ஸகாத்

ஆடுகள் மீது ஸகாத் விதியாவதற்கான குறைந்த தொகை நாற்பதாகும். இதன் பிரகாரம் 40 முதல் 120 வரை ஓர் ஆடும், 120 முதல் 200 வரை இரண்டு ஆடுகளும் 201 முதல் 399 வரை மூன்று ஆடுகளும், இதற்கு மேலாக இருக்கும் ஒவ்வொரு நூறு ஆடுகளுக்கும் ஒவ்வொரு ஆட்டை மேலதிகமாகக் கூட்டியும் ஸகாத் வழங்க வேண்டும்.

## 3. புதையல்

முற்காலங்களில் மனிதர்களினால் பூமியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த தங்கம், வெள்ளி, செம்பு போன்ற செல்வங்களை இது குறிக்கும். இத்தகைய பொருட்கள் எவரது கையிலாவது கிடைத்தால் அதில் $^1/_5$ பகுதியை உடனே ஸகாத்தாக கொடுத்துவிட வேண்டும். நிஸாப் அடைவதும், ஒரு வருடம் பூர்தியாக வேண்டும் என்பதும் புதையலைப் பொறுத்தவரையில் நிபந்தனையாகக் கொள்ளப்படமாட்டாது என்பதே இமாம்களான மாலிக், அபூஹனீபா, அஹ்மத், இஸ்ஹாக் போன்றோரின் கருத்தாகும். இமாம் ஷாபி (ரஹ்) அவர்களும் ஆரம்பத்தில் இதே கருத்தைக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

4. **கனிப்பொருட்கள்**

கனிப்பொருட்களில் ஸகாத் எந்த அளவு விதியாகும் என்பதில் சட்ட அறிஞர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு நிலவுகின்றது. சிலர் பெறப்படும் மொத்தக் கனிப்பொருட்களில் $^{1}/_{5}$ பகுதி ஸகாத்தாகக் கொடுக்கப்பட வேண்டும் எனக் கூற, வேறு சிலர் $^{1}/_{40}$ பகுதி கொடுக்கப்பட வேண்டும் என்கின்றனர். இந்த இரண்டு கருத்துக்களையும் நியாயப்படுத்தக்கூடிய ஹதீஸ்களும் இருக்கின்றன.

இத்தகைய முரண்பாடான ஹதீஸ்களுக்கு இடையில் இணக்கம் காண முற்பட்ட சில அறிஞர்கள் இந்த விடயத்தில் மூன்றாவது ஒரு நிலைப்பாட்டுக்கு வந்தனர். அதாவது, கஷ்டமும், செலவுமின்றி அவை பெறப்பட்டிருப்பின் மொத்தத்தில் $^{1}/_{5}$ பகுதி வழங்கப்பட வேண்டும் என்றும் கஷ்டத்துடனும் செலவுடனும் பெறப்பட்டிருப்பின் மொத்தத்தில் $^{1}/_{40}$ பகுதி வழங்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனர்.

## ஸகாத்தின் பர்ளுகள்

1. **நிய்யத்து வைத்தல்**

ஒரு முஸ்லிம் நிறைவேற்றுகின்ற அனைத்துச் செயற்பாடுகளுக்கும் நிய்யத் மிகப் பிரதானமானதாகும். அதிலும் குறிப்பாக ஸகாத் அடிப்படை இபாதத்தாக இருப்பதனால் அதனைக் கொடுப்பவர் கட்டாயமாக நிய்யத் வைக்க வேண்டும். இதனைக் குர்ஆனும் ஸுன்னாவும் பின்வருமாறு வலியுறுத்துகின்றன.

> "(எனினும் அவர்களுக்கோ) இறைவனுடைய கலப்பற்ற மார்க்கத்தையே பின்பற்றி தொழுகையையும் கடைப்பிடித்து, ஸகாத்தும் கொடுத்து வருமாறேயன்றி (வேறெதுவும் இத்தூதர் மூலம்) ஏவப்படவில்லை. இதுதான் நிலையான மார்க்கம்" (98 : 5)

"செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொறுத்தது" (புகாரி). மேற்படி போதனைகள், நிய்யத் வைக்காது நிறைவேற்றப்படும் ஸகாத் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதற்கு போதிய சான்றுகளாகும். சிறுவன், சித்த சுவாதீனமற்றவன், மூளை வளர்ச்சி குன்றியவர் ஆகியோரின் சொத்துக்களுக்கு, பொறுப்பாளன் ஸகாத் வழங்கும் போது நிய்யத் வைக்கவேண்டும்.

2. **தகுதியுடையோருக்கு வழங்குதல்**

குர்ஆனும் ஸுன்னாவும் ஸகாத் பெறத் தகுதியானவர்களுக்கு ஸகாத் வழங்க வேண்டுமெனக் கூறுகின்றன.

> "(ஸகாத் எனும்) தர்மங்கள் பகீர்களுக்கும், மிஸ்கீன்களுக்கும், அதனைச் சேகரித்து விநியோகிக்கின்ற பணியாளர்களுக்கும், இஸ்லாத்தின்பால் இணக்கமானோருக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும் ; கடனில் மூழ்கியிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வுடைய பாதையில் போர் புரிவதற்கும், வழிப்போக்கர்களுக்கும் (உரித்தான தாக) அல்லாஹ் ஏற்படுத்திய கடமை யாகும். அல்லாஹ் (யாவற்றையும்) மிக அறிந்தோனும் ஞானமுடை யோனுமாக இருக்கின்றான்" (9 : 60)

ஒரு முறை ஒரு மனிதன் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்து ஸகாத்திலிருந்து தனக்கு உதவும் படி வேண்டிக்கொண்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "ஸகாத் விடயத்தில் அல்லாஹ் ஒரு நபியினதோ அல்லது ஒரு மனிதரினதோ தீர்ப்பில் திருப்தி காண்பதில்லை. அவனே ஸகாத் பெறத்தகுதியானோரை வரையறுத்து அவர்களை எட்டுப் பிரிவினர்களாக வகைப்படுத்தியுள்ளான். அப்பிரிவுகளின் ஒன்றில் நீர் இடம் பெறுவதாக இருந்தால் உமக்குரிய பங்கை என்னால் தரமுடியும் என்றார்கள்" (அபூதாவூத்)

## ஸகாத் பெறத் தகுதியானோர்

அல் குர்ஆன் ஸகாத் விதியாகும் செல்வங்கள். அளவுகள், காலங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிடாவிட்டாலும் ஸகாத் பெறத் தகுதியுடையோர் பற்றிய விபரத்தை மாத்திரம் விளக்கமாக குறிப்பிட்டு இவ்வம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. அல் குர்ஆனின் 9 : 60 வசனமும், ஸுன்னாவும், குலாபாக்களின் வழி முறைகளும் ஸகாத் பெற தகுதியுடைய எட்டுப் பிரிவினர்களின் விளக்கத்தைக் கூறுகின்றன.

1. **பகீர்** :- இவர் தனதும், தனது பராமரிப்பில் உள்ளவர்களதும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள எவ்வித வருமானமுமற்றவர் அல்லது மிகக் குறைந்த நிலையில் வருமானம் பெறுபவர்.

2. **மிஸ்கீன்** :- தனதும், தனது பராமரிப்பில் உள்ளவர்களினதும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் அளவுக்கு தேவையான வருமானத்தை முழுமையாகப் பெறாவிட்டாலும் அதன் அரைப்பகுதியையோ அதற்கு மேலாகவோ பெறுபவர். இவ்விரு சாராரும் ஸகாத்பெறத் தகுதியானவர்களில் முதலாவது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவர்களாவர். இவர்களுள் அநாதைகள், விதவைகள், தலாக்சொல்லப்பட்ட பெண்கள், வயோதிபர்கள், நோயாளிகள், உதவி தேவைப்படும் மாணவர்கள், தொழிலற்றோர், சிறைக்கைதிகளின் குடும்பத்தினர், காணாமற் போனோரின் குடும்பத்தினரும் அடங்குவர்.

3. **ஆமில்கள்** :- ஸகாத்தை திரட்டுதல், களஞ்சியப்படுத்தல், பாதுகாத்தல், பதிவுகள் செய்வோர், விநியோகத்தில் ஈடுபடுவோருக்கு மொத்த ஸகாத்தில் எட்டில் ஒரு பங்குக்கு மேற்படாமல் வழங்கமுடியும்.

4. **முஅல்லபதுல் குலூப்** :- இஸ்லாத்தின்பால் இணக்கமானோரை இது குறிக்கின்றது. புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோர், இஸ்லாத்தைத் தழுவுவார்கள் என எதிர்பார்க்கப்படுவோர், முஸ்லிம் மத்தியிலுள்ள ஈமானில் பலவீனமானவர்கள், இஸ்லாமிய நாட்டின் எல்லைப் புறங்களில் எதிரிகளின் தாக்குதலுக்கு உட்படக்கூடிய இடங்களில் வாழும் முஸ்லிம்களும் இப்பிரிவில் அடங்குவார்கள்.

5. **பிர் – ரிகாப் அல்லது முகாதப்** :- உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள். (ஏனைய அடிமைகளையும் விடுதலைசெய்ய பங்கு வழங்குவதை இது குறிக்கின்றது.) அடிமைகள் தற்போது நடைமுறையில் இல்லாததால் காபிர்களிடத்தில் சிறைப்பட்டிருப்போரை விடுதலை செய்ய, ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டிருக்கும் முஸ்லிம் நாடுகளை விடுவிக்க இப்பங்கைப் பயன்படுத்த முடியும் என்பது ஒரு சில நவீன இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தாகும்.

6. **அல் - காரிமூன்** :- தமக்காக அல்லது பிறருக்காக கடன்பட்டு அதனைச் செலுத்த முடியாதோர். வாழ்க்கைச் செலவு, வைத்தியச் செலவு, குழந்தை நலன் காத்தல், இயற்கை அனர்த்தங்களிலிருந்து தம்மை விடுவிக்கவென தமக்காக கடன்பட்டோரையும் இது குறிக்கும்.

7. **பீ ஸபீலில்லாஹ்** :- இறை பாதையில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்காக (ஜிஹாத்) ஸகாத்திலீருந்து ஒரு பங்கு வழங்குவதை இது குறிக்கும். இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும், அவர்களது உடமைகளையும், இஸ்லாமிய அரசையும் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் புனித போர்களுக்கும், சிந்தனா ரீதியான எதிர்ப்புக்கள் பாதிப்புக்களின் போது பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கும் இப்பங்கைப் பயன்படுத்தலாம்.

8. **இப்னு ஸபீல்** :- பாவமான காரியங்களுக்காகவன்றி சன்மார்க்க அல்லது சுய தேவைக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு பிரயாணத்தில் ஈடுபட்டு அப்பிரயாணத்தை முடித்துக்கொள்ள அல்லது பிரயாணத்திலிருந்து மீண்டு வர வசதியற்றிருப்பவர்களுக்கு ஸகாத்திலிருந்து வழங்கப்படும் பங்கு. உதாரணமாக கல்வி, தொழில், வர்த்தகம் போன்றவற்றுக்காக மேற்கொள்ளப்படும் பிரயாணம்.

## ஸகாத் பெறத் தகுதியற்றோர்

1. செல்வந்தர்கள். "செல்வந்தனுக்கும் தொழில் செய்ய சக்தியுள்ள திடகாத்திர மானவனுக்கும் ஸகாத்தைப் பெறுவது ஆகுமாகாது. (ஹலாலாகாது)"

2. தொழில் செய்ய சக்தியுள்ளவர்கள்.

3. இஸ்லாத்தின் எதிரிகள் :- நாஸ்திகர், மதம் மாறியோர், ஹர்பி காபிர்கள்.

4. ஸகாத் கொடுப்பவரின் பெற்றோர், மனைவி, பிள்ளைகள்.

5. நபி (ஸல்) அவர்களது குடும்பத்தார் (அஹ்லுல்பைத்) "முஹம்மத் (ஸல்) அவர்களது குடும்பத்தவர்களுக்கு ஸகாதில் பங்கில்லை" (அஹ்மத், முஸ்லிம்)

## ஸகாத் ஒரு கூட்டுக் கடமை, அதனைக் கூட்டாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம்

ஸகாத் முஸ்லிம்களில் செல்வந்தர்கள் மீது விதியாக்கப்பட்டுள்ள, சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகக் கடமையாகவுள்ளது. சமூகவாழ்வின் பொருளாதார மேம்பாட்டிற்கான பணிகளை கூட்டமைப்பின்றி செவ்வனே நிறைவேற்ற முடியாது. ஸகாத் விதியாக்கப்பட்டுள்ள மைக்கு பல நோக்கங்கள் இருக்கின்றன. குறிப்பாக வறுமை, நிர்க்கதி நிலைகளை நீக்கி சமூகத்தை கௌரவமாக வாழ வைப்பதே இதன் பிரதான நோக்கமாகும். இந்த நோக்கத்தை தனித்தோ எந்தக் கூட்டமைப்போ, திட்டமிடலின்றியோ அடைந்து கொள்ள முடியாது.

ஸகாத்தை சேகரிக்கவும், பாதுகாக்கவும், அவற்றை விநியோகிக்க ஏற்பாடு செய்யவும், அவை மக்களுக்குப் பிரயோசனமாக அமைய வழிகாட்டவும் கூட்டமைப்பு தேவைப்படுகின்றது. கூட்டாக இதனை முஸ்லிம் சமூகம் நிறைவேற்றினால்தான் இதன் பயன்களை உச்சமாக அடையலாம்.

ஸகாத்தை கூட்டாக நிறைவேற்ற வேண்டும் என்பதை பின்வரும் குர்ஆன் போதனைகள் உறுதிப்படுத்துகின்றன.

> "(நபியே) அவர்களது பொருள்களிலிருந்து (கடமையான) ஸகாத்தை எடுப்பீராக" (9 : 103)

> "நாம் அவர்களுக்கு பூமியில் ஆதிக்கம் கொடுத்தால் அவர்கள் தொழுகையை நிலை நிறுத்தி ஸகாத்தையும் கொடுப்பார்கள்" (22:41)

அல்குர்ஆன் (9:60) வசனத்தில் இடம்பெற்றுள்ள "ஆமிலூன்" என்ற சொல் ஸகாத்தை சேகரித்து விநியோகிப்பவர்களைக் குறிக்கின்றது. இதுவும் கூட்டாக நிறைவேற்றுவதற்கு சான்றாகும்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் ஸகாத்தை ஒழுங்காக திரட்டி நடைமுறைப்படுத்தியமையும், அவர்களது தோழர்களைக் கொண்டு செய்வித்தமையும் வரலாற்றாதாரங்களினூடாகக் கண்டு கொள்ள முடிகின்றது. ஸகாத்தை நிறைவேற்ற அதிகாரிகளை நியமித்து இஸ்லாமிய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் அதனை நிறைவேற்றத் தேவையான சட்டங்கள், வழிக்காட்டல்கள், அறிவுரைகளையும் நபி (ஸல்) வழங்கியுள்ளார்கள். யமன் நாட்டுக்கு முஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்களை ஆளுனராக நியமித்து அனுப்பும் போது "நீர் அந்த மக்களில் உள்ள செல்வந்தர்களிடமிருந்து ஸகாத்தை வசூலித்து அவர்களிலுள்ள வறியவர்களுக்கு அதனை விநியோகிக்க வேண்டும். இதனை நீர் அந்த மக்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்" எனக் கூறினார்கள் (புகாரி, முஸ்லிம்). இது கூட்டாக நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைகின்றது.

ஒருமுறை ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து கடமையான ஸகாத்தை உங்களது பிரதிநிதிகளிடம் வழங்கினால் எமது பொறுப்பு நீங்கிவிடுமா? எனக் கேட்ட போது "ஆம். உமது கடமையை நிறைவேற்றியவராக நீர் கணிக்கப்படுவீர். அதற்குரிய கூலியும் உமக்கு கிடைக்கும். அதனைப் பிழையாக பயன்படுத்துப வர்கள் அதற்காக தண்டனையைப் பெறுவார்கள்" எனக் கூறினார்கள். (முஸ்னத், அஹ்மத்) இதுவும் கூட்டாக நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

இதே போன்று குலபாஉர் ராஷிதூன்கள், ஸஹாபாக்கள், தாபிஈன்கள், உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) போன்றோர் ஸகாத்தை கூட்டாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு, கூட்டாக நிறைவேற்றுவதை வலியுறுத்தியுமுள்ளார்கள்.

### ஸகாத்தை கூட்டாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம்

1. செல்வத்தின் மீதான மனிதனது பற்று, தனிநபர்களது தேவைகளை முறையாக நிறைவேற்ற தடையாக அமையுமானால் வறியவர்கள் பாதிக்கப்பட நேரிடும். ஆகவே கூட்டாக நிறைவேற்றுவது அவசியம்.

2. தனி நபர்கள் ஸகாத் பெறத் தகுதியானவர்களை சரியாக அடையாளம் காண்பது சிரமமாதலால் கூட்டாக நிறைவேற்றுவது அவசியம்.

3. ஸகாத்தை செல்வந்தர்கள் வழங்கும் போது செல்வந்தர்களது கெடுபிடிகளுக்கு ஸகாத் பெறுபவர்கள் உட்பட்டு அவர்களது சுயகௌரவம் பாதிக்கப்படுமாகையால் அதனைக் கூட்டாக நிறைவேற்றுவது அவசியம்.

4. ஸகாத் சேகரிப்பு, களஞ்சியப்படுத்தல், பாதுகாத்தல், கணக்கிடுதல் விநியோகித்தல் என்பன மிகச்சரியாக இடம்பெற கூட்டாக நிறைவேற்றுவது அவசியம்.

5. ஸகாத் தனியாக செல்வந்தர்களினால் வழங்கப்படும் போது பகிர்வில் ஒழுங்கீனங்கள் இடம்பெற வாய்ப்புள்ளதால் அதனைக் கூட்டாக நிறைவேற்றுவது அவசியமாகவுள்ளது.

6. ஸகாத் மூலம் உடனடியாக நிறைவேற்ற வேண்டிய தேவைகளை தனிநபர்களினால் இனங்கண்டு நிறைவேற்றுவது சிரமமாதலால் அதனை துரிதமாக நிறைவேற்ற கூட்டமைப்பு அவசியமாகின்றது.

7. இஸ்லாம் மார்க்கமாகவும், அரசாகவும் இருப்பதால் அதன் நிதி, நிருவாக ஒழுங்கிற்கு ஸகாத் கூட்டாக வழங்கப்படுவது அவசியமாகின்றது.

8. தனிமனிதனால் நிறைவேற்றப்படும் பணிகள் மூலம் கிடைக்கும் பயன்பாடுகளை விட கூட்டாக நிறைவேற்றும் போது கிடைக்கும் பயன்பாடுகள் அதிகமாகவே இருக்கும்.

### ஸகாத்தின் பயன்பாடுகள்

1. **ஸகாத் வழங்குபவர்களுடன் தொடர்பானவை**

- உலோபித்தனம் நீங்கி ; தாராளத் தன்மையை பெற்றுக் கொள்வான்.
- சொத்தாசை; சுயநலம் நீங்கி பொதுநலன் பேணும் தன்மையை பெறுவான்.
- உள்ளமும், செல்வமும் தூய்மையடைகின்றன.
- செலவு செய்யப் பயிற்றுவிக்கப்படுவான்.
- அல்லாஹ்வின் அருளுக்கும், அன்புக்கும் உரித்தானவனாக மாறுகின்றான்.

- அல்லாஹ்விற்கு நன்றியுள்ளவனாக மாறுகின்றான்.
- அல்லாஹ்வின் குணத்தை அணிகலனாக பெறுகின்றான்.
- ஏழைகளோடு கருணையோடு நடந்துகொள்வான்.
- செல்வம் விருத்தியடையும்.
- மறுமையில் மகத்தான கூலி கிடைக்கப்பெறுவான்.

2. **ஸகாத் பெறுபவருடன் தொடர்பானவை**

- வறுமையின் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவான்.
- வாழ்க்கைத் தரம் உயரும்.
- பொருளாதார மேம்பாடு ஏற்படும்.
- மோசமான செயற்பாடுகள் நீங்கும்.
- பிறரிடம் தேவையற்றிருக்கச் செய்யும்.
- பொறாமையிலிருந்து தூய்மைப்படுத்தப்படுவான்.
- உளத்திருப்தி, மனச்சாந்தியைப் பெறுவான்.
- ஆரோக்கியமான மனிதர்களை உருவாக்கும்.

3.**சமூகத்துடன் தொடர்பான பயன்பாடுகள்**

- இஸ்லாமிய அகீதா பாதுகாப்புப் பெறும்
- சகோதரத்துவம், ஒற்றுமை வலிமைபெறும்
- செல்வந்தன், ஏழை பரஸ்பர ஒத்துழைப்பு வளரும்
- போட்டி, பொறாமை நீங்கும்
- சமூகக் குறைபாடுகள் நீங்கும்
- சமூக, பொருளாதார வளர்ச்சியும், விருத்தியும் சகல துறைகளிலும் ஏற்படும்.
- பாதுகாப்பான சமூக சூழ்நிலை உருவாகும்.
- நற்பண்புகளால் நிறைந்த சமூகம் உருவாகும்.
- பொருளாதார ஏற்றத் தாழ்வு குறையும்
- செல்வச் சுழற்சிக்கு வழிவகுக்கும்.

**ஸகாதுல் பித்ர் :**

ஸகாதுல் பித்ர் என்பதை ஸதகதுல் பித்ர் என்றும் அழைப்பர். நமது நாட்டில் இதனை “பித்ரா” என்று வழங்குகிறோம்.

ரமழான் மாதத்தின் கடைசி நாளன்று பொழுது மறைந்து ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை தோன்றும் போது இந்த ஸகாத் கடமையாகிறது. எனவே ரமழான் மாதம் கடைசி நாளன்று பொழுது மறையும் போது உயிருடன்

உள்ள முஸ்லிம்களின் பெருநாளன்று பகலுக்கும் இரவுக்கும் போதுமான உணவு மற்றும் உடை தேவைகளுக்கு மேலதிகமான வசதியுள்ளவர்கள் மீது இது கடமையாகும். அதேபோல் ஷவ்வால் பிறை தோன்றியதிலிருந்து ஈதுல் பித்ர் தொழுகை முடிவதற்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்களுக்காகவும் பித்ராக் கொடுப்பது அவர்களின் பொறுப்பாளர்கள் மீது கடமையாகும்.

மேலே கூறிய தகைமைகளை உடைய ஒருவர் தனக்காகவும் தன் மனைவி; மக்கள், தன்மீது “நபகா” பராமரிப்பு கடமையானவர்களுக்காகவும் இந்த ஸகாத்தைக் கொடுப்பது வாஜிபாகும். உழைக்கத் தகுதியில்லாத வளர்ந்த பிள்ளைகள், வறிய பெற்றோர், தன்னிடம் சம்பளம் பெறாது ஊழியம் புரியும் முஸ்லிமான வேலைக்காரன் போன்றவர்களுக்காகவும் ஸதகதுல் பித்ர் கொடுப்பது அவர்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது கட்டாயமாகும்.

பித்ரா கொடுக்கக் கடமைப்பட்ட ஒவ்வொருவருக்குமாக $2\ ^1/_4$ கி.கிராம் அரிசி கொடுப்பது வாஜிபாகும். ஒவ்வொரு ஊரிலும் பிரதான உணவாக உட்கொள்ளப்படும் பொருளையே அந்தவூரில் பித்ராவாகக் கொடுக்க வேண்டும் என்பது விதியாகும். அவ்வாறான பொருளைக் கொடுக்காது, அதன் பெறுமதியைக் கொடுப்பதால் பித்ராவைப் பெறுவோருக்கு அதிகம் பயனுண்டு என்று கண்டால் அவ்வாறு கொடுப்பதும் கூடும் என்று கருதுவோரும் உள்ளனர்.

பித்ராவாகக் கொடுக்கும் பொருட்களை ஷவ்வால் தலைப்பிறை பிறந்தது முதல் ஈதுல் பித்ர் பெருநாள் தொழுகை முடியுமுன் கொடுப்பது ஸுன்னத்தாகும். நியாயமான காரணமின்றி பித்ராவைப் பெருநாள் தினத்தன்று கொடுக்காது பிற்படுத்துவது ஹராமாகும். இவ்வாறு கொடுக்கத் தவறியோர் அவர்கள் மீது கடமையான பித்ராவைப் பின்னரேனும் கொடுப்பது வாஜிபாகும். வசதி, தேவை கருதி பெருநாள் தினத்துக்கு முன் ரமழான் நாட்களிலேயே பித்ராவைக் கொடுத்து முடிப்பதற்கும் அனுமதியுண்டு.

ஸகாத்தைப் பெறத் தகுதியுள்ளவர்களுக்கே பித்ரா வழங்கவேண்டும். பித்ராவை உரிய முறையில் கொடுப்பதால் ஏழைகளும் பெருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாட உதவுவதோடு நோன்பு காலத்தில் நிகழ்ந்த சிறு பாவங்கள் மன்னிக்கப்படவும் வழி பிறக்கிறது.

“கேளிக்கைகள், வீண் பேச்சுக்கள், பொய் பேசுதல் என்பவற்றின் காரணமாக ஏற்படும் பாவங்களை விட்டும் நோன்பாளிகளை தூய்மைப்படுத்தும் முகமாக நபி (ஸல்) அவர்கள் ஸகாதுல் பித்ரைக் கட்டாயமாக்கினார்கள்” என்ற இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் கூற்று பித்ராவினால் நோன்பாளிகளுக்குக் கிடைக்கும் பயன்களை உணர்த்துகிறது.

# நோன்பு

## அஸ்-ஸவ்ம்

"ஸாம" எனும் அரபுச் சொல்லிலிருந்து "ஸவ்ம்" எனும் அரபுப் பதம் தோற்றம் பெற்றது. தவிர்த்தல், தடுத்துக் கொள்ளல் எனும் மொழிக் கருத்துக்களில் இப்பதம் பிரயோகிக்கப்படுகின்றது. இஸ்லாமிய ஷரீஅத்தில், "நோன்பு விதியாவதற்குரிய நிபந்தனைகளுக்குட்படுகின்ற ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் திருப்தியை நாடி நோன்பு நோற்கிறேன் என்ற நிய்யத்தோடு கிழக்கு வெளுத்ததிலிருந்து அல்லது வைகறை முதல் சூரியன் மறையும் வரை உண்ணல், பருகல், பாலுறவில் ஈடுபடுதல் என்பவற்றிலிருந்து தவிர்ந்து அல்லாஹ்விற்காக நிறைவேற்றுகின்ற ஓர் இபாதத்தினை இது குறிக்கின்றது". இக்கடமை ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு விதியாக்கப்பட்டது.

நோன்பு இரண்டு வகைப்படுகின்றது.

1. பர்ளான நோன்பு
2. ஸுன்னத்தான நோன்பு

பர்ளான நோன்பு ரமழான் மாத நோன்பு, நேர்ச்சை நோன்பு என இரண்டு பிரிவுகளுக்கு உட்படுகின்றது. இந்த வகையில் ரமழான் மாத நோன்பு என்பது; "ரமழான் தலைப்பிறை தென்பட்டது முதல் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்படும் வரை ஒரு மாத காலம் நோற்கும் நோன்பினைக் குறிக்கின்றது. நேர்ச்சை நோன்பு என்பது "ஒருவர் தன் மீது விதியாக்கிக் கொள்கின்ற நோன்பினைக் குறிக்கின்றது". இவை தவிர "ஸவ்முல் கப்பாரா" என அழைக்கப்படுகின்ற குற்றப்பரிகார நோன்பு என மற்றொரு வகையும் உண்டு.

## நோன்பின் முக்கியத்துவம்

இபாதத்துக்கள் அனைத்தும் அல்லாஹ்வின் கட்டளை என்பதனாலேயே முஸ்லிம்கள் நிறைவேற்றுகின்றார்கள். இபாதத்துக்களை நிறைவேற்றுவதனூடாக முஸ்லிம்கள் தமது நடத்தையில் மாற்றங்கள் ஏற்படுவதைக் கண்டு கொள்கின்றார்கள். அவ்வாறு மாற்றங்கள் ஏற்படுவதையே இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. குர்ஆனும், ஸுன்னாவும் இவ்விபாதத்துக்கள் பற்றி கூறும் போது இதனை தெளிவுபடுத்துவதைக் காண முடிகின்றது.

"ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன்பிருந்தோர் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப் பட்டுள்ளது. அதன் மூலம் நீங்கள் தக்வாவைப் பெற்றுக் கொள்வீர்கள்" (2 : 183)

மனிதன் உடல், ஆன்மா, அறிவு என்பவற்றைக் கொண்டு படைக்கப் பட்டுள்ளான். இம் மூன்று பகுதிகளையும் சமமான முறையில் போஷிப்பதனூடாகவே மனிதன் ஈருலக வாழ்விலும் வெற்றி பெறலாம். நோன்பு, உடல், ஆன்மா, அறிவு என்பவற்றுக்கு பயிற்சி வழங்கி முஸ்லிமான மனிதனை சமநிலைப்படுத்து கின்ற ஓர் உயரிய இபாதத்தாகவுள்ளது. நடைமுறை உலகில் மனிதன் உடலை மாத்திரம் போஷித்து ஆன்மாவைப் பற்றி எந்த அக்கறையும் காட்டாததால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறான். இந்நிலையில் நோன்பின் முக்கியத்துவம் பற்றி அறிந்து அதன் மூலம் ஆன்மா, உடல், அறிவு என்பவற்றை சமநிலைப்படுத்திக் கொள்ள நோன்பு எவ்வாறு உதவுகின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

1. அடிப்படை வணக்கங்களில் ஒன்று. "இஸ்லாம் ஐந்து அம்சங்களில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது…" எனும் ஹதீஸ் தொடரிலும், "ஹதீஸ் ஜிப்ரீல்" தொடரிலும் நோன்பு ஐந்து அடிப்படை அம்சங்களில் ஒன்றாக நபி (ஸல்) அவர்களினால் குறிப்பிடப்பட்டுள்ளமை இதற்கு சிறந்த ஆதாரமாகவுள்ளது.

2. முன்னைய சமுதாயங்களுக்கும் விதியாக்கப்பட்ட கடமைகளில் ஒன்றாக இது உள்ளமையும் அதன் முக்கியத்துவத்திற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

   குர்ஆனின் (2:183) வசனம் இதனை உறுதிப்படுத்திக் காட்டுகின்றது.

3. நோன்பின் முக்கியத்துவத்தை குர்ஆன், ஸுன்னாவின் போதனைகளிலிருந்தும் புரிந்து கொள்ளலாம்.
   குர்ஆனின் (2:183) வசனம் நோன்பு விதியாக்கப்பட்டதன் நோக்கமே தக்வாவை ஏற்படுத்துவதற்காக எனக் கூறுகின்றது.

   "யார் ரமழானில் நன்மையை எதிர்பார்த்து, ஈமானுடன் இரவில் தொழுகின்றானோ அவன் முன்னர் செய்த அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிடும்" (புகாரி, முஸ்லிம்) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

"அல்-குர்ஆனும், நோன்பும் மறுமை நாளில் அடியானுக்காகப் பரிந்துரை செய்யும். நோன்பு அல்லாஹ்வைப் பார்த்து எனது இரட்சகனே! நான் அவனை உணவிலிருந்தும் இச்சைகளிலிருந்தும் தடுத்துவிட்டேன். எனவே அவனுக்காக ஷபாஅத் செய்யும் உரிமையைக் கொடு" என்று சொல்லும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அஹ்மத், தபரானி)

4. நோன்பு மறைவான இறைவணக்கம் என்ற வகையிலும் முக்கியத்துவ மடைகின்றது. அனேகமாக நோன்பு தவிர்ந்த ஏனைய இறைவணக்கங்களை ஏனையவர்களினால் அறிந்து கொள்ள முடிகின்றது. நோன்பைப் பொறுத்தவரை நோன்பு நோற்பவனுக்கும் அல்லாஹ்வுக்கும் மாத்திரமே அதன் உண்மை நிலையை அறிய முடியும்.

5. ரமழான் மாத நோன்பு நீண்ட காலத்தை உள்ளடக்கிய வணக்கம் என்ற வகையிலும் முக்கியத்துவமடைகிறது. சுமார் ஒரு மாத காலம் தினமும் சுமார் பதினான்கு அல்லது பதினைந்து மணித்தியாலங்கள் இவ்விறை வணக்கம் தொடர்கிறது.

6. அதிகமதிகமான நற்கூலிகளைப் பெற்றுத்தரும் இறைவணக்கம் என்ற வகையிலும் நோன்பு முக்கியத்துவமடைகின்றது.

"மனிதர்களே ! உங்களிடத்தில் பரகத் பொருந்திய ஒரு மகத்தான மாதம் வந்திருக்கிறது. இந்த மாதத்தில் ஆயிரம் மாதங்களை விட சிறந்த ஓர் இரவு காணப்படுகிறது. இந்த மாதத்தில் தராவீஹ் தொழுகையை ஸுன்னத்தாக்கினான். இதில் யார் ஒரு ஸுன்னத்தான செயலை செய்கிறாரோ அவர் ஏனைய மாதங்களில் ஒரு பர்ளான கடமையை நிறைவேற்றிய நன்மையைப் பெற்றுக் கொள்வார். இதில் யார் ஒரு பர்ளை நிறை வேற்றுகிறாரோ அவர் ஏனைய மாதங்களில் எழுபது பர்ளுகளை நிறைவேற்றிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வார்..." (இப்னு குஸைமா)

7. ரமழான் மாதத்தை பல்வேறு நிகழ்வுகளைக் கொண்டு அலங்கரிப்பதன் மூலமும் நோன்பை சிறப்பும், முக்கியத்துவமும் வாய்ந்ததாக அல்லாஹ் அமைத்துள்ளான். நோன்பை அல்லாஹ் பல்வேறு அம்சங்களைக் கொண்டு சிறப்படையச் செய்துள்ளான். உலக மாந்தருக்கு நேர்வழிகாட்டியாக வந்த அல்குர்ஆன் ரமழான் மாதத்தில் இறக்கிவைக்கப்பட்டதன் மூலமும், ஆயிரம் மாதங்களை விட சிறப்பான இரவான லைலதுல் கத்ர் இரவை ரமழான்

மாதத்தில் மறைத்து வைத்திருப்பதன் மூலமும் நோன்பை சிறப்படையச் செய்துள்ளான்.

8. நோன்பு பெற்றுத்தரும் பயன்பாடுகள் அது முக்கியத்துவம் வாய்ந்த இபாதத் என்பதை நிரூபிக்கின்றது. ஆன்மீக, லௌகீக ரீதியிலான பயன்பாடுகளை அது தன்னகத்தே கொண்டுள்ளது.

9. உலக முஸ்லிம்களினால் ஏக காலத்தில் ரமழான் நோன்பு நோற்கப்படுவதும் அதன் முக்கியத்துவத்திற்கும் தனித்துவத்திற்கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

## ஸுன்னத்தான நோன்புகள்

நபி (ஸல்) அவர்கள் நோற்ற பர்ளு அல்லாத நோன்புகளும், நோற்குமாறு அவர்களால் கூறப்பட்ட நோன்புகளும் ஸுன்னத்தான நோன்புகள் என்றழைக்கப் படுகின்றன.

ஸுன்னத்தான நோன்புகளை வாரம் தோறும் நோற்பவை, மாதந்தோறும் நோற்பவை, வருடம் தோறும் நோற்பவை என மூன்றாக வகுத்து நோக்க முடியும். ஒவ்வொரு வாரத்திலும் திங்கட்கிழமை, வியாழக்கிழமை தினங்களில் நோன்பு நோற்பது ஸுன்னத்தாகும்.

மாதந்தோறும் நோற்கும் நோன்பில் அய்யாமுல் பீழ், அய்யாமுஸ் ஸுத் ஆகிய தினங்களில் நோன்பு நோற்பது ஸுன்னத்தானதாகும். அய்யாமுல் பீழ் என்பது மாதத்தின் மூன்று பௌர்ணமி தினங்களையும் (பிறை 13,14,15) குறிக்கின்றது. அய்யாமுஸ்ஸுத் என்பது ஒவ்வொரு மாதத்தினதும் (பிறை 27,28,29,30) தினங்களைக் குறிக்கின்றது. அபூதர் அல்-கிபாரி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நபி (ஸல்) அவர்கள் எமக்கு மாதத்தின் மூன்று பௌர்ணமி நாட்களில் நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டார்கள். அவை பிறை 13,14,15 ஆகிய தினங்களாகும். இவை அந்த மாதம் முழுவதும் நோன்பு நோற்றதற்கு சமனாகும்" (நஸாஇ)

வருடந்தோறும் நோற்குமாறு குறிப்பிட்டுள்ள ஸுன்னத்தான நோன்புகளில் முஹர்ரம் மாதத்தில் நோற்கும் ஆசூரா, தாஸுஆ நோன்பு முக்கியமானதாகும். (முஹர்ரம் பிறை 10, 9)

அபூஹுஃரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள் : கடமையான தொழுகைக்குப் பிறகு சிறந்த தொழுகை எது என நபியவர்களிடம் வினவப்பட்டது. "இரவுத் தொழுகை என நபியவர்கள் கூறினார்கள்" ரமழானுக்குப் பிறகு சிறந்த நோன்பு எதுவென வினவப்பட்டது. "முஹர்ரம் என நீங்கள் கூறும் மாதத்தில் நோற்கும் நோன்பு என்றார்கள்" (அஹ்மத், முஸ்லிம், அபூதாவூத்)

ஷஃபான் மாதம் பெரும்பாலான நாட்களில் நோற்கப்படும் நோன்பு. ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். "நபி (ஸல்) அவர்கள் ரமழானைத் தவிர வேறு ஒரு மாதத்தில் முழுமையாக நோன்பு நோற்பதை நான் பார்த்ததில்லை. மேலும் ஷஃபானைவிட அதிகமாக நோன்பு நோற்ற மாதத்தை நான் பார்த்ததில்லை". (புகாரி, முஸ்லிம்)

சங்கையான நான்கு மாதங்களாகிய முஹர்ரம், ரஜப், துல்கஃதா, துல்ஹஜ் ஆகிய மாதங்களில் அதிகமாக நோன்பு நோற்பது ஸுன்னத்தானதாகும்.

ஷவ்வால் மாத ஆறு நோன்புகள் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் " யார் ரமழானில் நோன்பு நோற்று, பின்னர் ஷவ்வால் மாதத்தில் ஆறு நாட்கள் நோன்பு நோற்கிறாரோ அவர் வருடம் முழுவதும் நோன்பு நோற்றவர் போலாவார்" (முஸ்லிம், அபூதாவூத்).

துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்துப் பிறைகள் அல்லாஹ்வை வணங்குவதற்கு ஏற்ற தினங்களாகும். அரபா தினத்தில் நோன்பு நோற்பதும் ஸுன்னத்தானதாகும். (திர்மிதி)

## நோன்பின் விதிமுறைகள்

நோன்பு கடமையாக்கப்பட்டோர் :- "பருவ வயதை அடைந்த, ஆரோக்கியமுள்ள, சித்தசுவாதீனமுள்ள தம்யீஸ் அறிவுள்ள, நோன்பு நோற்க சக்திபெற்ற முஸ்லிமான ஆண், பெண் அனைவரும் நோன்பு நோற்பது கடமை". பெண்களைப் பொறுத்தவரை மாதவிடாய், பிரசவத் தீட்டிலிருந்து தூய்மையாக இருப்பது நிபந்தனையாகும். சிறுவர் சிறுமியரைப் பொறுத்தவரை அவர்களுக்குக் கடமையில்லாவிட்டாலும் அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அதற்கான பயிற்சியை வழங்குவது சிறந்ததாகும்.

## நோன்பு விடுவதற்கு சலுகை வழங்கப்பட்டோர் :

1. நோன்பை விடுவது கடமை ; நோற்பது ஹராம் ; அதனைக் கழாச் செய்வது கடமை. இதில் மாதவிடாய், பிரசவத்தீட்டு உள்ள பெண்கள் அடங்குவர்.

2. நோன்பை விடுவதற்கு அனுமதி இருக்கிறது. அவ்வாறு விடுவது சிலபோது கட்டாயமாகவும் மாறும். இதில் முதியவர்களும், குணமடையமாட்டாது என்ற நிலையில் உள்ள நோயாளிகளும் அடங்குவர். இவர்கள் நோன்பை கழாச் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஒவ்வொரு நோன்பிற்கும் பகரமாக பித்யா வழங்க வேண்டும்.

3. நோன்பை விட அனுமதி இருக்கிறது. ஆயினும் பின்னர் நிறைவேற்ற வேண்டும். இதில் பிரயாணிகள் மற்றும் குணமடையும் என்ற நிலையில் உள்ள நோயாளிகள் அடங்குவர். இவர்கள் விடுபட்ட நோன்புகளை கண்டிப்பாக வேறு நாட்களில் கழாச் செய்து கொள்ள வேண்டும்.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு நோன்பை விடுவதற்கு சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் விடுபட்ட நோன்புகளை கழாச் செய்ய வேண்டுமா அல்லது ஏழைகளுக்கு உணவளித்தால் மட்டும் போதுமா என்பதில் சட்டக்கலை அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இப்னு அப்பாஸ், இப்னு உமர் (ரழி) ஆகியோர் கழாச் செய்ய வேண்டியதில்லை. உணவளித்தால் போதுமானது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். வேறு சில அறிஞர்கள் கழாச் செய்ய வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இப்னு உமர் (ரழி) அவர்களிடம் ஒரு கர்ப்பிணிப் பெண் பற்றிக் கேட்கப்பட்டபோது, "அவள் நோன்பை விடட்டும். ஒவ்வொரு நாளும் ஒரு "முத்" அளவு (இரு கைகள் கொள்ளவும்) ஏழைக்கு கோதுமையை வழங்கட்டும்" எனக் கூறினார்கள். (பைஹகீ)

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் ஒரு கர்ப்பிணியைப் பார்த்து, "நீ நோன்பைவிடுவதற்கு சலுகை அளிக்கப்பட்டவர்களின் பட்டியலில் இருக்கின்றாய்" உனக்கு பித்யா எனும் ஏழைக்கு உணவளித்தல் போதுமானது. கழாச் செய்ய வேண்டியதில்லை" எனக் கூறினார்கள். (பஸ்ஸார்)

கழாச் செய்ய வேண்டுமெனக் குறிப்பிடும் அறிஞர்கள், பாலூட்டும் பெண்களும் கர்ப்பிணிகளும் தங்களுக்கோ, தங்கள் பிள்ளைகளுக்கோ ஆபத்து ஏற்படும் எனப் பயந்தால் அவர்கள் நோன்பை விடுவதற்கு அனுமதி இருக்கிறது. தவறவிட்ட நோன்புகளை ஏனைய காலங்களில் நோற்றுக்கொள்ள வேண்டும். இவர்களைப் பொறுத்தவரை ஏனைய காலங்களிலும் நோன்பு நோற்பது சிரமமாக இருக்கும். இவர்கள் குணமடையாது என்ற நிலையில் உள்ளவர்களுக்கு ஒப்பானவர்கள். இவர்கள் கழாச் செய்ய வேண்டிய அவசியமில்லை, உணவளித்தால் போதுமெனக் குறிப்பிடுகின்றனர்.

## நோன்பின் பர்ளு

1. **நிய்யத்** :- ஒவ்வொரு இரவும் பஜ்ருக்கு முன் நோன்பிருக்கிறேன் என நிய்யத் வைத்துக் கொள்வது.
   ஹப்ஸா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் "எவர் பஜ்ருக்கு முன் நோன்பிருப்பதாக மனதால் உறுதி கொள்ள வில்லையோ அவருக்கு நோன்பு கிடையாது" என ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

2. பஜ்ர் உதயமானது முதல் சூரியன் மறையும் வரை நோன்பை முறிக்கக் கூடிய அனைத்திலிருந்தும் தவிர்ந்து கொள்ளல்.

## நோன்பை முறிப்பவை - முப்திலாதுஸ் ஸவ்ம்

(1) உடலின் திறந்த துவாரங்கள் மூலம் கண்ணுக்குத் தோன்றக்கூடிய எதுவும் செல்லல் உ-ம் : வாய், மூக்கு
(2) பகல் முழுதும் மயக்கமாயிருத்தல்
(3) முனைந்து வாந்தி எடுத்தல்
(4) உடலுறவில் ஈடுபடுதல்
(5) மாதவிடாய், பிரசவத்தீட்டு, பிரசவம் ஏற்படல்.
(6) சுய இன்பத்தின் மூலம் விந்தை வெளிப்படுத்தல்
(7) மதம் மாறுதல்
(8) சித்தக் கோளாறு அல்லது பைத்தியம் உண்டாகுதல்.

மறதியாகவோ, நிர்ப்பந்தமாகவோ, அறியாமலோ நிகழும் காரியங்கள் நோன்பை முறிப்பதில்லை. உடலுறவு தவிர்ந்த ஏனைய செயல்கள் மூலம் நோன்பு முறிந்தால் அந்த நோன்பை மற்றொரு நாளில் கழாச் செய்தால்

போதுமானது. ஆனால் உடலுறவிலீடுபட்டவர் கழாச் செய்தால் மாத்திரம் போதாது. குற்றப்பரிகாரமாக முஸ்லிமான ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அதற்கும் முடியாவிட்டால் இரண்டு மாதம் தொடர்ந்து நோன்பு நோற்க வேண்டும். முடியாவிட்டால் அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.

## நோன்பின் ஸுன்னத்துக்கள்

(1) ஸஹர் செய்தல்.
(2) சூரியன் மறைந்ததும் நோன்பு துறத்தல்.
(3) நோன்பு துறந்ததும் துஆக் கேட்டல்.
(4) நோன்பின் போது உடலுறுப்புக்களை பேணிக் கொள்ளல்.
(5) திலாவதுல் குர்ஆன், திக்ர், ஸலவாத், துஆவில் ஈடுபடுதல்.
(6) அதிகமாக தர்மம் செய்தல்.
(7) இ:.திகாப் இருத்தல்.
(8) குளிப்பு விதியானவர் ஸுஹுபுக்கு முன் குளித்தல்.

## நோன்பின் பயன்கள்

(1) **“தக்வா” இறையச்சத்தைத் தருகின்றது.**

"விசுவாசிகளே! உங்களுக்கு முன்பிருந்தோர் மீது நோன்பு விதிக்கப்பட்ட பிரகாரம் உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் தக்வா உடையவர்களாகலாம். (2:183)

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் தனது நெஞ்சைத் தொட்டுக் காட்டியவர்களாக "இறையச்சம் இங்குதான் இருக்கிறது என மூன்று தடவைகள் கூறினார்கள்" (முஸ்லிம்). தக்வா மனிதனது வெளித் தோற்றமல்ல. அது உள்ளத்தில் உதயமாகும் ஓர் உணர்வாகும் என்பதை இந்த ஹதீஸ் கூறுகின்றது. நோன்பின் மூலம் இதனை மனிதன் பெற்றுக் கொள்கின்றான். நோன்பிருப்பதை எவரும் அறிய முடியாவிட்டாலும், அல்லாஹ் மாத்திரம் அறிகின்றான். அவனை அவதானிக்க அவனது இறைவனைத் தவிர வேறுயாரும் கிடையாது. அவனது தக்வா அவனைப் பாதுகாக்கின்றது.

(2) **உளத்தூய்மையை ஏற்படுத்துகின்றது :-**

மனிதன் உடல், ஆன்மா, அறிவு ஆகியவற்றின் கூட்டுச் சேர்க்கையாக உள்ளான். மூன்றும் சமநிலையில் போசிக்கப்பட வேண்டும். உள்ளம் அல்லது ஆன்மாவுக்கு பயிற்சி வழங்குவதில் நோன்பு பிரதான இடத்தை வகிக்கின்றது. அவனது உள்ளத்தை நோன்பு தூய்மைப்படுத்துகின்றது.

"நிச்சயமாக உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டவர் வெற்றி பெற்றார். அதனைக் களங்கப்படுத்திக் கொண்டவர் தோல்வியடைந்துவிட்டார்" (91 : 9-10)

(3) **பொறுமையைக் கட்டியெழுப்புகின்றது.**

"நீங்கள் பொறுமையின் மாதத்திலும், ஒவ்வொரு மாதத்திலும் ஏனைய மூன்று தினங்கள் நோன்பிருங்கள். அது உள்ளத்தின் மோசமான பண்புகளை நீக்கும்" (அல் ஹதீஸ்)

"எல்லாவற்றுக்கும் ஸகாத் உண்டு. உடலின் ஸகாத் நோன்பாகும். நோன்பு பொறுமையின் பாதியாகும்" (அல் ஹதீஸ்)

இஸ்லாம் தொடர்ந்தேர்ச்சியான உழைப்பினதும் போராட்டத்தினதும் மார்க்கம். இவற்றின் முதல் சாதனம் பொறுமை. தனது உள்ளத்தையும், இச்சைகளையும் வெற்றி கொள்ள முடியாதவன் தனது எதிரியை வெற்றிகொள்வான் எனக் கூறமுடியாது. பசி, தாகம், இச்சை என்பவற்றை கட்டுப்படுத்தி பொறுமை பேண முடியாதவன் ஒரு போதும் இலட்சியத்திற்காய் வாழமாட்டான். நோன்பு பொறுமையையும் உளக்கட்டுப்பாட்டையும் தருகிறது. இப்படி பயிற்றுவிக்கப்படும் ஒரு மு.ஃமின் ; தான் அல்லாஹ்வின் பாதையில் கஷ்டப்படுவதையும், துன்பப்படுவதையும், தான் அனுபவிக்கும் கடுமையான வாழ்வையும் சந்தோசமாக ஏற்றுக் கொள்பவனாகக் காணப்படுவான்.

(4) **ஆன்மீக சூழல் ஏற்படுகிறது** :- ஆன்மீக சூழல் ஏற்படுத்தப்படுவதால் ஆன்மீக விமோசனத்திற்கான வழி வகைகளை செய்து கொள்ள முடிகின்றது.

"ரமழான் வந்துவிட்டால் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன, நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன. ஷைத்தான் விலங்கிடப்படுகின்றான்" (புகாரி, முஸ்லிம்).

"ரமழானில் ஒரு மலக்கு தோன்றி இவ்வாறு அழைப்பு விடுப்பார். 'நன்மைகளைக் கொள்ளையடிப்பவனே ! முந்திக்கொள். தீமைகளைக் கொள்ளையடிப்பவனே ! சுருக்கிக்கொள்'. இந்த அழைப்பு ரமழான் முடியும் வரையில் காணப்படும்" (அஹ்மத்) என நபி (ஸல்) அவர் கூறியுள்ளார்கள். ஆகவே ரமழான் ஆன்மீக நிழல் கிடைக்கும் மாதமெனலாம்.

(5) **அதிகம் நற்செயல் புரிய வாய்ப்பேற்படுகிறது :- ஆன்மீக சூழலில் அதிக நற்செயல்களில் ஈடுபட்டு அதிக நன்மைகளைப் பெற்று ஆன்மீக ஈடேற்றம் பெறமுடிகின்றது.**

ஒரு மாத காலம் ஆன்மீகத்தை வளர்க்கும் நற்செயல்களில் (தொழுகை, திலாவத், திக்ர், ஸலவாத், இஸ்தி:.பார், தவ்பா, தருமம்) ஈடுபட்டு வழமையான காலங்களை விட அதிகமதிகமாக நன்மைகளை ஈட்டிக்கொள்ள முடிகின்றது.

(6) **குர்ஆனுடன் தொடர்பு வலுப்படுகின்றது :-** குர்ஆன் அருளப்பட்ட மாதம் என்பதனால் குர்ஆனோடு தொடர்பு கொண்டு ஆன்மாவை வெற்றிக்குரிய பாதையில் இட்டுச் செல்ல முடிகின்றது.

குர்ஆனை ஓதவும், அதனைப் படித்து விளங்கவும், அதன்படி வாழவும், அதனை பிரசாரம் செய்யவுமான ஒரு சூழலை ஏற்படுத்தி தன்னை வெற்றிக்குரிய பாதையில் முஸ்லிம் இட்டுச் செல்ல முடியும்.

(7) **ஆயிரம் மாதங்களை விட சிறந்ததொரு இரவு கிடைக்கிறது**:- லைலதுல் கத்ர் இரவை அடைந்து கொள்வதன் மூலம் அதிக நன்மைகளைப் பெறும் பாக்கியம் கிடைக்கின்றது.

"உங்களை வந்தடைந்துள்ள இந்த மாதத்தில் ஆயிரம் மாதங்களை விடவும் சிறந்த ஓர் இரவு இருக்கிறது. அதன் நன்மைகள் யாருக்கு கிடைக்காமல் போகின்றனவோ அவன் அனைத்து நன்மைகளையும் இழந்தவனாவான்" (இப்னுமாஜா) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(8) **பாவங்களிலிருந்து பாதுகாப்புப் பெற வழி செய்கிறது :-**

ஒரு முறை வழமைக்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்கள் மிம்பரின் மூன்று படிகளிலும் ஏறி "ஆமீன், ஆமீன், ஆமீன்" என்று கூறிய பின் இறங்கினார்கள். இதனைக் கண்ட தோழர்கள் இது பற்றி வினவியபோது, ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்து நான் மூன்று படிகளிலும் இருக்கும் போது பின்வருமாறு பிரார்த்தித்தார்கள். நான் அதற்கு ஆமீன் என்று கூறினேன். அதில் ஒன்று "எவன் ஒருவன் ரமழானை அடைந்தும் அதன் மூலம் பாவமீட்சி பெற வில்லையோ; அவன் நாசமாகட்டும் எனக் கூறினார்கள். நான் ஆமீன் என்றேன். (புகாரி) நோன்பு மாதம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. "ரஹ்மத்" - அருளுக்குரியது. "ம∴பிரத்"- பாவமன்னிப்புக்குரியது. "இத்குன் மினன்நார்" - நரகவிடுதலைக்குரியது. இவ்வாறு பிரிக்கப்பட்டிருப்பது தவ்பா, இஸ்தி∴பார், துஆ என்பவற்றை மேற்கொள்ளத் தூண்டுகிறது. ரமழான் பாவச்சுமைகளை இறக்கிவிட வரும் மாதமாதலால் முஸ்லிம்கள் அதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

(9) **தீய செயல்களில் இருந்து பாதுகாக்கின்றது :-**

"நோன்பு ஒரு கேடயமாகும். நோன்பு நோற்றவர் துர்வார்த்தைகள் பேச வேண்டாம், உரக்க சப்தமிட்டு பேச வேண்டாம், அவருடன் எவராவது சண்டையிட்டால் அல்லது அவரை ஏசினால் "நான் நோன்பாளி" என்று இரு முறை கூறட்டும்" (புகாரி)

நோன்பு கீழ்த்தரமான இச்சைகள், உணர்ச்சிகள் ; சிந்தனைகள், தரங்கெட்ட நடவடிக்கைகள், செயற்பாடுகள் போன்றவற்றிலிருந்து மனிதனை விடுவித்து ; வாழ்வும் வாக்கும் ஒழுங்குற அமைய வழியமைத்து நரக நெருப்பிலிருந்து அவனைப் பாதுகாக்கின்றது என்ற வகையில் நோன்பு ஒரு கேடயமாக அமைகின்றது என்ற கருத்தையே நபி (ஸல்) அவர்கள் மேற்படி ஹதீஸின் மூலம் இரத்தினச் சுருக்கமாக கூறியுள்ளார்கள்.

"யார் தீய செயலையும், தீய வார்த்தைகளையும் விடவில்லையோ அவர் உணவையும், குடிப்பையும் மாத்திரம் விட்டுவிட வேண்டும் என்ற அவசியம் அல்லாஹ்வுக்கில்லை" (புகாரி) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். பொய், புறம், கோள் போன்ற தகாத செயல்களை விட்டும் நோன்பாளி தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை இந்த ஹதீஸ் வலியுறுத்துவதைக் காணமுடிகின்றது.

(10) **பிறர் கஷ்டங்களை உணரச் செய்தல் :-** நோன்பு பசியின் கொடுமையை, வறுமையின் வன்மையை உணர்த்தி நிற்கும் செயற்பாட்டு ரீதியிலான இபாதத். அடுத்தவர்களது கஷ்டங்களில் பங்குகொள்ளும் மனப்பாங்கை இது ஏற்படுத்துகின்றது.

யூசுப் (அலை) அவர்கள் அதிகம் நோன்பு நோற்பவராக இருந்தார். இதற்கான காரணம் வினவப்பட்ட போது "நான் சாப்பிட்டு பசியாறிய நிலையில் இருந்தால் ஏழையின் பசியை மறந்துவிடுவேனோ என்று பயப்படுகின்றேன். அதனால் அதிகம் நோன்பு நோற்று வருகின்றேன்" என்று கூறினார்கள்.

"வறுமையானது குப்ரை ஏற்படுத்தக் கூடியது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதனால் தான் "தர்மத்தில் சிறந்தது ரமழானில் வழங்கப்படும் தர்மமாகும்" "திண்ணமாக நபி (ஸல்) அவர்களை ஜிப்ரீல் (அலை) அவர்கள் சந்திக்கும் போது வீசி அடிக்கும் காற்றை விட வேகமாக தர்மம் செய்பவராக இருந்தார்கள்" (புகாரி, முஸ்லிம்). ரமழானில் இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் நடந்து கொண்டது சமூகத்திற்கு முன்மாதிரியாகவுள்ளது.

(11) **உடல் ஆரோக்கியத்திற்கு நோன்பு வழிவகுக்கின்றது.**

நோன்பு ஆன்மாவை பலப்படுத்துவதைப் போன்று உடலைப் பலப்படுத்து வதற்கான பயிற்சியாகவுமுள்ளது. மனிதனைப் பீடிக்கும் அதிகமான நோய்களுக்கு காரணம் அவன் சாப்பிடும் உணவு வகைகளாகும். எவ்வாறான உணவு வகைகளை, எந்தளவு சாப்பிட வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் கவனியாது மனிதன் உணவு உட்கொள்வதனால் அவன் ஆரோக்கிய மற்றவனாக மாறுகின்றான். இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் இது பற்றி பின்வருமாறு கூறினார்கள். "ஆதமுடைய மகன் தனது வயிற்றை விட மோசமான ஒரு பாத்திரத்தை நிரப்பியதில்லை. ஆதமின் மகனுக்கு அவனது முள்ளந்தண்டை நிமிர்த்திக் கொள்ளுமளவு சில கவளங்கள் போதுமானவை. அது சாத்தியமில்லையாயின் அவனது வயிற்றில் மூன்றில் ஒரு பகுதியை உணவுக்கும் அடுத்த மூன்றில் ஒரு பகுதியை தண்ணீருக்கும் மிகுதி மூன்றில் ஒரு பகுதியை காற்றுக்கும் ஒதுக்கிக் கொள்ளட்டும்" (அல்ஹதீஸ்)

வயிறு உணவினால் நிரப்பப்பட்டுக் கொண்டேயிருக்குமானால் நோய் தவிர்க்க முடியாததொன்றாகிவிடும். "நீங்கள் நோன்பிருங்கள் ; ஆரோக்கியம் பெறுவீர்கள்" (தபரானி) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(12) **ஏழைகளின் பால் அன்பும், கருணையும் செலுத்தும் பண்பு வளர்கின்றது :-**

ஏழைகளுக்கும், வசதியுடையவர்களுக்கும் இடைவெளி கூடும் போது முரண்பாடுகள், பிரச்சினைகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும். வசதியுள்ளவன் பசிக் கொடுமையை நோன்பின் மூலம் உணர்கின்றான். இதனால் இருதரப்பினருக்கும் இடையில் உடன்பாடான நிலை தோன்றுகின்றது. கருணை, அன்புள்ளம் கொண்டவர்களாக செல்வந்தர்கள் மாறுகின்றார்கள்.

(13) **நோன்பின் மூலம் சகோதரத்துவம், சமூக உணர்வு, ஒற்றுமை, மனித நேயம், சமத்துவப் பண்பு என்பன வளர்கின்றன.**

(14) **கட்டுப்பாடான வாழ்க்கைப் பயிற்சியை ஏற்படுத்துகின்றது.**

(15) **சிக்கனம் பேணுவதற்கும் வீண்விரயத்தை தவிர்ப்பதற்கும் வழிவகுக் கின்றது.**

# அல் ஹஜ்

## ஹஜ்ஜின் முக்கியத்துவமும் சிறப்புக்களும்

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் இறுதியானதே ஹஜ் ஆகும். ஹஜ் அல்லாஹ்வுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு புனித யாத்திரை ; அது ஒரு கடமையான யாத்திரை ; தகுதியுடையோர் அதனை மேற்கொள்ளாவிடில் தண்டனைக்குரிய குற்றமாக அமையும்.

அகில உலகிலுமுள்ள முஸ்லிம்களின் பிரதிநிதிகளாக மக்காவில் கூடுகின்ற ஹாஜிகள் குறிப்பிட்ட நாட்களில் ஒரே உடையில் ஒரே இலட்சியத்தோடு ஒன்றுபட்டு இயங்கும் ஒரு வணக்கமாக இது உள்ளது. எனவே தான் இஸ்லாத்தின் எல்லா வணக்கங்களும் சமநிலையில் காணப்படுவதை அவதானித்த இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் ஹஜ் வணக்கத்தை நிறைவேற்றிய பின் ; ஹஜ் ஏனைய எல்லா வணக்கங்களிலும் சிறந்தது என முடிவெடுத்தார்கள். ஹஜ்ஜில் தொழுகையின் மூலம் ஏற்படும் தூய்மையும் கூட்டுணர்வும் ; ஸகாத்தின் மூலம் ஏற்படும் பொருட்தியாகமும் சமூக நலனும் ; நோன்பின் மூலம் ஏற்படும் கட்டுப்பாடும் ஆன்மீக பக்குவமும் காணப்படுகின்றன.

உலக ஆசாபாசங்களிலிருந்து ஒதுங்கி நின்று மனிதன் தன்னுடைய ஆன்மீக நிலையை வளர்த்துக்கொள்ள வணக்கங்கள் துணை செய்கின்றனவென்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆதலால்தான் இஸ்லாம் தொழுகை நோன்பு போன்ற இபாதத்துக்களை விதியாக்கி ஆன்மீக பயிற்சிக்கு இடமளித்திருக்கின்றது. எனினும் அவற்றை விட நீண்ட கால அவகாசமும் பிற வாய்ப்புகளும் ஹஜ்ஜின் போது கிடைப்பதால் ஆன்மீக பக்குவத்துக்கு அங்கே அதிக பயிற்சி கிடைக்கின்றது. எனவேதான் ஒருவன் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்து அதில் ஆசைகள் பாவங்கள் முதலியவற்றைத் தவிர்த்துக் கொண்டால் தாய் வயிற்றிலிருந்து அன்று பிறந்த பாலகன் போல பாவங்கள் நீங்கி அவன் திரும்புகிறான் (புகாரி) என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஹஜ்ஜையும் உம்ராவையும் நிறைவேற்றுவதன் சிறப்புப் பற்றியும் அவற்றைச் செய்யாதிருப்பதால் ஏற்படுகின்ற இழப்புப் பற்றியும் நபி (ஸல்) அவர்கள் விரிவாகக் கூறியுள்ளார்கள். உதாரணத்துக்குச் சிலவற்றை மாத்திரம் இங்கு சுட்டிக் காட்டுகிறோம்.

"எவர் ஹஜ் செய்ய நாடுகிறாரோ ; அவர் (இறப்பு அல்லது வறுமை வருமுன்) அதனை அவசரமாகச் செய்து விடவும்." (அபூதாவூத்)

ஹஜ்ஜுக்காக வீட்டை விட்டுப் புறப்பட்ட பின்னர் உங்களுடைய ஒட்டகம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வொரு நன்மை எழுதப்படுகிறது. ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்படுகிறது. தவாபுக்குப் பின்னர் இரு ரக்அத் தொழுவதனால் கிடைக்கும் நன்மை ஓர் அடிமையை விடுதலையளித்தற்கான நன்மையைப் போன்றது. "ஸ.்.யு" செய்வதன் நன்மை 70 அடிமைகளை விடுதலை செய்வதற்குச் சமமானது. எப்பொழுது மக்கள் அறபா மைதானத்தில் கூடிவிடுகிறார்களோ அப்பொழுது அல்லாஹ் முதல் வானத்திலிறங்குகிறான். அவர்களின் வணக்கம் பற்றி மலக்குகளுடன் பெருமையாகப் பேசுகிறான். என்னுடைய அடியார்கள் நீண்ட தூரத்திலிருந்து பிரயாணக் களைப்புடன் வந்துள்ளார்கள். என்னுடைய ரஹ்மத்தை அடையும் நம்பிக்கையுடன் வந்திருக் கிறார்கள். அவர்களுடைய பாவங்கள் மண்களின் எண்ணிக்கையளவு இருந்த போதிலும் சரி, சமுத்திரத்தின் நுரையளவு இருந்த போதிலும் சரி, மழைத்துளிகளின் எண்ணிக்கையளவு இருந்த போதிலும் சரி அப்பொழுதும் கூட நான் மன்னித்துவிட்டேன். முழுமையாக மன்னிக்கப்பட்ட நிலையில் நீங்கள் திரும்பிச் செல்வீர்களாக! உங்கள் பாவங்களையும் நீங்கள் சிபாரிசு செய்தவர்களது பாவங்களையும் மன்னித்து விட்டேன். ஷைத்தானுக்காக நீங்கள் எறிந்த ஒவ்வொரு கல்லுக்கும் பதிலாக படுநாசத்திலாழ்த்தும் ஒவ்வொரு பாவம் மன்னிக்கப்படுகிறது. உங்கள் குர்பானிக்குப் பதிலாக அல்லாஹ்வுடைய பெருஞ் சேமிப்பு இருக்கிறது. இஹ்ராமிலிருந்து வெளிப்பட்டுத் தலையைச் சிரைப்பதனால் ஒவ்வொரு முடிக்கும் பதிலாக ஒவ்வொரு நன்மை கிடைக்கிறது. ஒரு பாவம் மன்னிக்கப்படுகிறது. இவற்றுக்குப் பின்னரும் தவாப் செய்கிறானெனில் அவர் மீது எந்தப் பாவமும் இருப்பதில்லை. ஒரு மலக்கு அவர்களுடைய இரு தோள்களுக்கிடையில் கையை வைத்து இனி புதிதாக நற்காரியங்களைச் செய்துகொள் ; உன்னுடைய முன்னைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுவிட்டன எனக் கூறுவார்." (தபரானீ)

"ஹஜ் செய்பவர்களும் உம்ராச் செய்பவர்களும் அல்லாஹ்வின் விருந்தாளிகளாவர். அவர்கள் துஆக் கேட்பார்களாயின் அதனை அல்லாஹ் ஏற்றுக்கொள்வான். அவர்கள் பாவமன்னிப்புக் கோருவார்களாயின் அவர்களின் பாவங்களை மன்னித்து விடுவான்" (இப்னு மாஜா)

"எவரேனும் ஒருவனை முற்றிலும் அவசியமான தேவையோ, கொடுங்கோல் அரசனோ, பிரயாணம் செய்ய முடியாதவாறு பீடித்துள்ள நோயோ ஹஜ் செய்வதைத் தடுக்காதிருந்த பின்னரும் அவன் ஹஜ்ஜுக்குச் செல்லாமலிருந்தால் அதே நிலையில் அவனுக்கு மரணம் வந்துவிட்டால் யூதனாகவோ நஸாராவாகவோ அவன் விரும்பியவாறு இறக்கட்டும்" (தாரமீ)

மேலே குறிப்பிட்ட ஹதீஸ்கள் யாவும் ஹஜ் செய்வதால் ஏற்படுகின்ற சிறப்புக்களையும் ஹஜ் விதியாகியிருந்தும் அதனை நிறைவேற்றாதோரின் இழிநிலையையும் எடுத்துக் காட்டுகின்றன.

ஹஜ்ஜின் களம் மக்கா. அது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் பிரார்த்தனை மூலம் வளம் பெற்ற ஒரு பிரதேசமாகும். அதைப்பற்றி அல்குர்ஆன் பல்வேறு கோணங்களில் சித்தரிப்பதோடு; அதன்மீது சத்தியம் செய்தும் போதனை செய்கின்றது.

- (நபியே அபயமளிக்கும்) இந்நகரத்தின் மீது சத்தியம் செய்கிறேன். (90:1)
- நாம் இந்த ஆலயத்தை மனிதர் ஒதுங்குந்தலமாகவும் அபயமளிக்கக் கூடியதாகவும் ஆக்கினோம். (2:125)
- எவன் அதில் நுழைகிறானோ அவன் அச்சமற்றவனாகி விடுகிறான். (3:97)
- அபயமளிக்கும் புனித இடமாக ஆக்கியிருக்கிறோம். (29:67)
- சிறப்புற்ற வீடாகிய க.்.பாவை மனிதர்களுக்கு அபயமளிக்கக் கூடிய இடமாக அல்லாஹ் ஆக்கியிருக்கிறான். (5:97)

கீழ்க்காணும் நபிமொழிக் கருத்தும் இதனை உறுதிப்படுத்துகின்றது. "மூன்று மஸ்ஜித்களைத் தவிர வேறெங்கும் புனிதப் பயணம் செய்யக்கூடாது. அவை மஸ்ஜிதுல் ஹராம் (மக்கா) மஸ்ஜிதுல் அக்ஸா (ஜெரூசலம்) மஸ்ஜிதுன் நபவீ" (மதீனா). இந்த ஹதீஸ் மூலம் இம்மூன்று இடங்களையும் தவிர வேறு இடங்களுக்கோ மஸ்ஜித்களுக்கோ புனித யாத்திரை மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே தான் ஏனைய இடங்களிற் போன்றல்லாது ஹரம் எல்லையுள் சண்டையிடுவது, உயிர்களைக் கொல்வது; கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேசுவது முதலிய ஆகாத காரியங்களும் வேட்டையாடுதல், மரம்செடி, கொடிகளை வெட்டுதல் முதலிய ஆகுமான காரியங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் போதிக்க முன்பும் கூட அதன் கௌரவம் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. எனவே தான் புனித பிரதேசத்தின் கட்டுப்பாடுகளை மீறி நடந்த ஜாஹிலிய்யாக்காலப் போரொன்றை பாவிகளின் போர் என்ற கருத்தில் "ஹர்புல் புஜ்ஜார்" என வழங்கினர்.

ஹஜ்ஜுக்காக மக்கா செல்ல வேண்டுமென்பதில் மற்றொரு சிறப்பும் உண்டு. அது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்ததும் இஸ்லாம் அறிமுகப் படுத்தப்பட்டதுமான பிரதேசம். அத்தகைய ஒரு பிரதேசத்தை அடைகின்ற எந்த முஸ்லிமின் உள்ளமேனும் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையோட்டத்தை நினைவுபடுத்தாமலிருக்க முடியாது. மக்காவின் சுற்றுவட்டாரத்தை அவதானிக்கின்ற ஹாஜிகள் இஸ்லாத்தின் வரலாற்றை மீட்டிப் பார்க்காமலிருக்க முடியாது. முதலாவது வஹி கிடைத்த ஹிறாக் குகை ; முதலாவது பிரச்சாரக்களம் ஸபா குன்று ; முதல் பயிற்சிப் பாசறை தாருல் அர்கம் ; நபியவர்களையும் ஸஹாபாப் பெருமக்களையும் துன்புறுத்திய பல்வேறு கோணங்கள், சமூகப் பகிஷ்கரிப்புச் சிறையாக அமைந்த ஷி.்.பு அபூதாலிப் ; பிரியாவிடைச் செய்தி தந்த அறபா மைதானம் என்ற இன்னோரன்ன இடங்களை அவர்கள் அகக்கண்ணாலும் புறக்கண்ணாலும் கண்டு கொள்வார்கள். இந்த அனுபவத்தை மக்காவுக்கு வெளியேயுள்ளவர்கள் பெற்றுக் கொள்ளும் ஓர் அரிய வாய்ப்பாக ஹஜ் வணக்கம் அமைகிறதல்லவா?

மேலும் ஹஜ் வணக்கம் துல்ஹஜ் மாதத்தின் 8-13 வரையிலான நாட்களில்தான் இடம் பெறுகின்றது. சுமார் ஒருவார கால இபாதத்துக்காக அல்லாஹ் ஒரு நீண்ட காலத்தைத் தயார்படுத்தி வைத்துள்ளான். குறிப்பிட்ட அந்த வாரத்தைத் தாங்கி நிற்கும் துல்ஹஜ் மாதத்தை மட்டுமன்றி ; அதற்கு முந்திய துல்க.்.தா மாதத்தையும் துல்ஹஜ்ஜுக்குப் பிந்திய மாதமான முஹர்ரம் மாதத்தையும் அல்லாஹ் புனித மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளான்.

> நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரெண்டு தான். (இவ்வாறே) வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்து அல்லாஹ்வின் புத்தகத்தில் பதிவுசெய்யப்படுகின்றது. அவற்றில் நான்கு (மாதங்கள்) சிறப்புற்றவை (9:36)

நபியே (துல்க:்.தா, துல்ஹஜ், முஹர்ரம், றஜப் ஆகிய இச்) சிறப்புற்ற மாதங்களில் யுத்தம் செய்வதைப் பற்றி உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறும். அவைகளில் யுத்தம் புரிவது பெரும்பாவம் (தான்). ஆனால் (மனிதர்கள்) அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் சேருவதைத் தடுப்பதும், அவனை நீங்கள் நிராகரிப்பதும், (ஹஜ்ஜுக்கு வருபவர்களை) மஸ்ஜிதுல் ஹராமுக்கு (வரவிடாது தடுப்பதும்) அதில் வசிப்போரில் விசுவாசம் கொண்டோரை அதிலிருந்து வெளியேற்றுவதும் அல்லாஹ்விடத்தில் அதைவிட மிகப் பெரும் பாவங்களாக இருக்கின்றன. தவிர குழப்பம் விளைவிப்பது கொலையை விட மிகவும் கொடியது... (2:217)

இவ்விரு வசனங்களிலும் ஹஜ்ஜுக்குரிய மாதங்கள் புனிதமாக்கப்பட்டிருப்பதும், அம்மாதங்களில் புனிதபோரில் ஈடுபடுவது தடுக்கப்பட்டிருப்பதும் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. இதிலிருந்து ஹஜ்ஜுக்குச் செல்பவரும் ஹஜ்ஜிலிருந்து மீள்பவரும் பாதுகாப்புடன் பயணம் செய்வதற்கான காலமாக இம்மூன்று மாதங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதும் தெளிவாகிறது. மேலும் உலக சமாதான காலமாக ஆண்டு தோறும் காலாண்டையேனும் வைத்திருக்க ஹஜ் வழிவகுத் துள்ளது ஹஜ்ஜின் நடைமுறைகளை அவதானித்தால் நபி இப்ராஹீம் (அலை) அவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் நினைவுக்கு வருகிறது.

அல்குர்ஆனின் 2:125 முதல் 2:128 வரையிலான வசனங்களில் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் க:்.பாவை நிர்மாணித்தமை, ஹஜ்ஜுக்கு வருமாறு மக்களை அழைத்தமை, மக்காவை வளமாக்குமாறும் தமது சந்ததியை முஸ்லிமாக வைக்குமாறும் பிரார்த்தித்தமை, ஹஜ் வணக்க முறைகளை ஏற்படுத்தியமை என்பன பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மேலும் ஹாஜிகள் ஹஜ்ஜின் போது அதிகமாக ஒலிக்கின்ற தல்பியாவும், நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் அழைப்புக்குப் பதில் சொல்வதாக அமைகின்றது. “உனக்கு சரணடைந்தேன் இறைவா! உனக்கு சரணடைந்தேன்! உனக்கு சரணடைந்தேன் ! உனக்கு (எவ்வகை) இணையுமில்லை, உனக்கு சரணடைந்தேன் ! நிச்சயமாக புகழும் அருளும் ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு (எந்த) இணையுமில்லை.”

இத்தொடர் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் விடுத்த அல்லாஹ்வின் அழைப்புக்கு சரணடைந்ததாகப் பிரகடனப்படுத்தும் தொடராகும். எவ்வாறு மற்றவர்கள் சரணடைந்தார்களோ அவ்வாறு நாமும் சரணடைகிறோம் என்பதைத்தான் தல்பியா மூலம் ஹாஜிகள் பிரகடனப்படுத்துகிறார்கள். இஸ்லாத்தின் அடிப்படையான தௌஹீதுக்காக நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது பொருளையும் மனைவி மக்களையும் நாட்டையும் தியாகம் செய்து தமது உயிரைக் கூட தியாகம் செய்ய முன்வந்தார்கள். அத்தகைய நபி ஒருவரை முஸ்லிம்கள் நினைவூட்டுவது தங்களது ஈமானுக்கும் இஸ்லாமிய வாழ்வுக்கும் மிக வலுவூட்டுவதாகும். நபியவர்கள் வகுத்துத் தந்த ஸலவாத்தில் கூட அவர்களின் பெயரை சேர்த்து இதனை உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

எனவே தான் ஹாஜிகள் க.்.பாவைப் பார்த்தும், மகாமு இப்ராஹீமில் தொழுதும், ஸ.்.யு செய்தும், ஸம்ஸம் நீர் அருந்தியும் ; குர்பானி கொடுத்தும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களையும் அவர்களின் குடும்பத்தையும் நினைவுபடுத்துகிறார்கள். ஹாஜிகள் தம்மை மட்டுமன்றி தமது குடும்பத்தினரையும் இப்ராஹீம் (அலை) அவர்களைப் போன்று இப்பணியிலீடுபடுத்த வேண்டுமென்பதும் இங்கு உணர்த்தப்படுகிறது. நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் இத்தியாக வாழ்வையும் அதன் பிரதிபலிப்புகளையும் அல்குர்ஆன் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறது.

“இப்ராஹீமை அவருடைய இறைவன் (பெரும் சோதனையான) பல கட்டளைகளையிட்டுச் சோதித்த சமயத்தில் அவர் அவையாவையும் பரிபூரணமாகவே செய்தார். ஆதலால் இறைவன் நிச்சயமாக நான் உம்மை மனிதர்களுக்கு (நேர்வழிக்காட்டக்கூடிய) தலைவராக ஆக்குகிறேன் எனக் கூறினான். அதற்கு (இப்ராஹீம்) என்னுடைய சந்ததிகளையுமா (தலைவர்களாக ஆக்குவாய்) எனக் கேட்டார். (அதற்கு உம் சந்ததியிலுள்ள) அநியாயக்காரரை என்னுடைய (இந்த) உறுதி மொழி சாராது எனக் கூறினான்.” (2:124)

எனவே அநேகமாக அந்த நபியின் நடைமுறைகளைப் பின்பற்றும் ஓர் இபாதத்தாக ஹஜ் அமைகிறது. இந்தச் சிறப்பையெல்லாம் விளங்கிக் கொள்ளாமலும் உணராமலும் ஹஜ்ஜைப் புறக்கணிப்பவர்கள் பற்றிக் கூறிய கலீபா உமர் (ரழி) அவர்கள் ; வசதியிருந்தும் ஹஜ் செய்யாமலிருக்கிறவர்களிடம் ஜிஸ்யா அறவிட வேண்டுமென விரும்புகிறேன். அவர்கள் முஸ்லிம்களல்லர் எனக் கண்டித்துக் கூறியுள்ளார்கள். “எவர்கள் அங்கு யாத்திரை செய்யச்

சக்தியுடையவர்களாகயிருக்கிறார்களோ அல்லாஹ்வுக்காக அவ்வாலயத்தை ஹஜ் செய்வது அவர்கள் மீது கடமையாகும். எவரேனும் இதை நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்துவிடுவதில்லை ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் படைப்புக்களிடம் தேவையற்றவனாக இருக்கிறான்." (3:97)

## ஹஜ்ஜின் விதிமுறைகள்

இஸ்லாத்தின் எந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டியேற்பட்டாலும் அது சில விதிமுறைகளை உள்ளடக்கியிருக்கின்றது. இவ்வகையில் ஹஜ்ஜுக்கும் சில விதிமுறைகள் உள்ளன.

## ஹஜ்ஜின் ஷர்த்துக்கள்

1. முஸ்லிமாயிருத்தல்.
2. (பாலிகாக) பருவமடைந்தவராக இருத்தல்.
3. (ஆகிலாக)சித்தசுவாதீனமுள்ளவராக இருத்தல்.
4. சுதந்திரவானாக இருத்தல்.
5. உடல்நலமுள்ளவராயிருத்தல்.
6. பயமற்றவராகவும் பயணவசதியுடையவராகவுமிருத்தல்.
7. போதிய காலமிருத்தல்.
8. பொருள் வசதியிருத்தல்.

## ஹஜ்ஜின் பர்ளுகள்

1. நிய்யத்து வைத்தல்.
2. அறபாவில் தரித்தல்.
3. க.்.பாவைத் தவாப் செய்தல் (தவாபுல் இபாழா).
4. ஸஈ செய்தல் (தொங்கோட்டமோடுதல்).
5. தலைமுடியை நீக்குதல் (ஹல்கு செய்தல்) அல்லது கத்தரித்தல்.
6. வரிசைக் கிரமமாகச் செய்தல்.

## ஹஜ்ஜின் வாஜிபுகள்

1. குறிப்பிட்ட மீக்காத்களில் நிய்யத்து வைத்தல்.
2. துல்ஹஜ் 10 ஆம் நாள் நடுநிசிக்குப்பின் முஸ்தலிபாவில் தங்குதல்.
3. துல்ஹஜ் 10ஆம் நாள் நடுநிசிக்குப்பின் ஜம்ரதுல் அகபாவில் 7 கற்களை எறிதல்.
4. துல்ஹஜ் 11 ஆம் 12ஆம் 13ஆம் நாட்களில் மினாவில் தங்குதல்.
5. அய்யாமுத் தஷ்ரீக் தினங்களில் மூன்று ஜம்ராக்களிலும் கல்லெறிதல்.
6. தவாபுல் விதா.்.வை நிறைவேற்றல்.

## ஹஜ்ஜின் பிரதான ஸுன்னத்துக்கள்

1. நிய்யத்துக்கு முன்பும் மக்காவில் நுழையமுன்பும் அறபாவில், முஸ்தலிபாவில் தங்கமுன்பும் ஜம்றாக்களில் கல்லெறியமுன்பும் தவாப் செய்யமுன்பும் குளித்தல்.
2. நிய்யத்துக்கு முன் மணம் பூசுதல்.
3. நிய்யத்தை வாயால் மொழிதல்.
4. தல்பியா ஓதல்.
5. மக்கா நகருள் நுழைந்ததும் தவாப் செய்தல் (தவாபுல் குதூம்).
6. துல்ஹஜ் 9 ஆம் நாள் இரவில் மினாவில் தங்குதல்.
7. குறிப்பிட்ட துஆக்களை குறிப்பிட்ட இடங்களில் ஓதுதல்.
8. தவாபுக்குப் பின்னர் மகாமு இப்ராஹீமில் இரண்டு ரக்அத்துகள் ஸுன்னத் தொழுதல்.
9. ஸம்ஸம் நீரைத் தாராளமாக அருந்துதல்.

## ஹஜ்ஜின்போது விலக்கப்பட்டவை (முஹர்ரமாத்)

1. தைத்த உடைகளை ஆண்கள் அணிதல்.
2. மணம் பூசுதல்.
3. தலைமுடி, தாடி என்பவற்றில் எண்ணெய் தடவுதல்.
4. உரோமங்களையும் நகங்களையும் களைதல்.
5. திருமணம் செய்தல்.
6. பாலியலின்பம் பெறல். (கணவன் /மனைவியாயினும்)
7. உடலுறவு கொள்ளல்.
8. ஆண்கள் தலையையும் பெண்கள் முகத்தையும் மறைத்தல்.
9. வேட்டையாடுதல்.

**மற்றும் சில விளக்கங்கள்**

1. ஹஜ்ஜின் பர்ளுகள் எவையேனும் விடுபட்டால் ஹஜ் நிறைவேறாது.
2. ஹஜ்ஜின் வாஜிபுகள் எவையேனும் விடுபட்டால் அதற்குப் பரிகாரமாக பித்யா கொடுக்க வேண்டும். பித்யா என்பது ஓர் ஆட்டை அதற்காகக் குர்பானி கொடுப்பதாகும். அதற்கு வசதியில்லையாயின் ஹரமிலுள்ள பத்து ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும். அதற்கும் வசதியில்லையாயின் மக்காவில் வைத்து மூன்று நாட்கள் நோன்பு நோற்க வேண்டும். ஊர் திரும்பியபின் ஏழுநாட்கள்நோன்பு நோற்க வேண்டும்.
3. விலக்கப்பட்டவைகளைச் செய்யின் அதற்கும் பித்யா கொடுக்க வேண்டும். ஆனால் மனைவியுடன் உடலுறவு கொண்டால் மட்டும் அதற்குப் பிரதியாக முறையே ஓர் ஒட்டகம் அல்லது ஒரு மாடு அல்லது எட்டு ஆடுகள் குர்பானி செய்ய வேண்டும். அந்த ஹஜ்ஜை அல்லது உம்றாவைத் தொடர்ந்து நிறைவேற்றுவதோடு காலம் தாழ்த்தாது கழாச் செய்யவும் வேண்டும்.
4. தவாப் என்பது க.ஃ.பத்துல்லாவைச் சுற்றி வருவதைக்குறிக்கும். க.ஃ.பாவைத் தனக்கு இடதுபுறமாக வைத்து ஹஜருல் அஸ்வத் பதிக்கப்பட்ட இடத்திலிருந்து தவாபை ஆரம்பித்தல் வேண்டும். ஒரு தவாப் நிறைவேற ஏழுமுறை சுற்றுதல் வேண்டும். ஒரு ஹாஜி மூன்று வகையான தவாப்களை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நிறைவேற்றுகிறார். அவை,

   I. **தவாபுல் குதூம்**. இது க.ஃ.பாவை அடைந்ததும் முதலில் செய்கின்ற தவாப் இது ஸுன்னத்தாகும். ஏனைய மஸ்ஜிதுகளில் நுழைந்ததும் தஹிய்யத்துல் மஸ்ஜித் நிறைவேற்றுவதைப் போல மஸ்ஜிதுல் ஹராமினுள் நுழைந்ததும் அதற்குப் பதிலாக க.ஃ.பாவைத் தவாப் செய்தல் வேண்டும்.

   II. **தவாபுல் இபாழா**. இது பர்ளான தவாப் ஆகும். துல்ஹஜ் 10 ஆம் நாள் நிறைவேற்றப்படுகிறது.

   III. **தவாபுல் விதா.ஃ.** மக்காவை விட்டு வெளியேறும் போது செய்யும் தவாப். இது வாஜிபானதாகும்.

5. ஸ.ஃ.யு என்பது ஸபாவிலிருந்து மர்வாவுக்கும் மர்வாவிலிருந்து ஸபாவுக்கும் இடையே ஏழு முறை ஓடுவதைக் குறிக்கும் இதனைத் தொங்கோட்டமெனவும் கூறுவர்.
6. துல்ஹஜ் மாதம் 11 ஆம், 12 ஆம், 13 ஆம் நாட்கள் அய்யாமுத் தஷ்ரீக் என்பர். இந்நாட்களில் ஹாஜிகள் ஜம்றதுல் அகபா, ஜம்றதுல்வுஸ்தா; ஜம்றதுல் ஊலா என்ற மூன்று ஜம்றாக்களிலும் கல் எறிவர்.

**மீக்காத்**

மீக்காத் என்பது ஹஜ்ஜை ஆரம்பிப்பதற்காக இஹ்ராம் நிய்யத் வைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லையாகும். இது நபி முஹம்மது (ஸல்) அவர்களின் காலத்திலேயே தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அவைகளாவன :

1. துல்ஹுலைபா. இது மதீனாவிலிருந்து தெற்கே பதினொரு கிலோ மீற்றர் தூரத்திலும் மக்காவிலிருந்து வடக்கே 450 கிலோ மீற்றர் தூரத்திலுமுள்ளது. மதீனாவிலிருந்தும் அதற்கு வடக்கிலிருந்தும் வருபவர்களுக்கு இது மீக்காத்தாக அமைந்துள்ளது.
2. அல்ஜஹ்பா - இது மக்காவிலிருந்து 200 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. சிரியா, துருக்கி முதலான பகுதிகளிலிருந்து வருபவர்களுக்கு இது மீக்காத்தாக உள்ளது.
3. கர்னுல் மன்ஸில் (அஸ்ஸய்லுல் கபீர்). இது மக்கா தாயிப் நெடுந்தெருவில் மக்காவிலிருந்து 94 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. நஜ்த், பாரசீகக் குடா நாடுகளிலிருந்து வருவோருக்கான மீக்காத்தாக உள்ளது.
4. யலம்லம் - மக்காவிலிருந்து 54 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. யமன், பாக்கிஸ்தான், இலங்கை, இந்தோனேசியா, மலேசியா முதலான தெற்குப் பகுதியிலிருந்து வருபவர்களுக்கான மீக்காத்தாக இது உள்ளது.
5. தாத்துல் இராக். மக்காவிலிருந்து வடகிழக்கே 94 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இது இராக்கிலிருந்தும் அதன் திசையிலிருந்தும் வருபவர்களுக்கான மீக்காத்தாக உள்ளது.

குறிப்பிட்ட மீக்காத்களில் இஹ்ராம் நிய்யத் வைத்தல் அசாத்தியமான பொழுது வேறுமுறைகளைக் கையாள இடமுண்டு. அந்த வகையில் ஆகாய மார்க்கமாகப் பிரயாணம் செய்பவர்கள் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது மீக்காத்தின் எல்லையை நெருங்கும்போது இஹ்ராம் நிய்யத்துச் செய்யலாம்.

**இஹ்ராம்**

இஹ்ராம் என்பது ஹஜ்ஜை அல்லது உம்ராவை ஆரம்பிக்கும் நிலையைக் குறிக்கும். குளித்து மணம்பூசி இரு ரக்அத்துகள் ஸுன்னத் தொழுது ஹஜ்ஜுக்கான உடையணிந்து நிய்யத்து வைத்தல் என்பன இதில் அடங்குகின்றன. இந்த நிலையிலிருந்து ஹஜ்ஜின் முஹர்ரமாத்துக்களில் எதனையும்

செய்யக்கூடாது. ஹரம் எல்லையுள் வாழும் சாதாரண மக்களுக்கு இந்தக் கட்டுப்பாடு இல்லை. அவர்களும் ஹஜ் செய்வதாக இருந்தால் அவர்களுக்கும் இந்தக் கட்டுப்பாடு உண்டு.

## ஹஜ் நிறைவேற்றும் முறை

ஹஜ் செய்ய நாடிய ஒருவர் அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டு ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக வீட்டை விட்டுப் புறப்படுவார். அந்த ஹாஜி பயணம் செய்து குறிப்பிட்ட மீக்காத்தை அடைந்ததும் இஹ்ராம் உடையணிந்து நிய்யத்து வைப்பர். அதைத் தொடர்ந்து மக்காவினுள் நுழைந்ததும் கஃபாவைத் தவாப் செய்வார். இதனைத் தவாபுல் குதூம் என்பர். தவாபை ஹஜருல் அஸ்வதிலிருந்து ஆரம்பிப்பார். கஃபாவைத் தனக்கு இடப்புறமாக்கி ஏழுமுறை சுற்றுவார். அது முடிவுற மகாமு இப்ராஹீம் என்ற இடத்தில் இரண்டு ரக்அத் ஸுன்னத் தொழுவார். பின்னர் ஸஃயை நிறைவேற்றுவார். அவர்-உம்ராவை மட்டும் நிறைவேற்றுபவராயின் (அத்தமுத்துஉ) முடியைச் சிரைத்து இஹ்ராமைக் களைவார். ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து செய்பவராயின் (அல்கிரான்) இஹ்ராமைக் களையாமல் அப்படியே இருந்து துல்ஹஜ் மாதம் 8 ஆம் நாள் முற்பகலில் மினாவுக்குச் செல்வார். அங்கு லுஹர், அஸர் ஆகிய இரு நேரத் தொழுகைகளையும் மஃரிப், இஷா ஆகிய இரு நேரத் தொழுகைகளையும் ஜம்உ செய்து தொழுவார். 9 ஆம் நாள் மத்தியானத்துக்கு முன்னர் அறபாவுக்குச் செல்வார். அங்கே லுஹரையும் அஸரையும் சேர்த்துத் தொழுவார். சூரியன் மறையும் போது முஸ்தலிபாவுக்குச் செல்ல ஆயத்தமாவார். முஸ்தலிபாவில் மஃரிபையும் இஷாவையும் ஜம்உ செய்து தொழுவார். நடுநிசிக்கு முன் அங்கிருந்து வெளியேறி மஷ்அருல் ஹராமுக்கு வந்து தங்குவார். முஸ்தலிபாவிலேயே இவ்விடம் அமைந்துள்ளது. இங்கோ அல்லது மினாவிலோ ஜம்றாக்களில் எறிவதற்கான கற்களைப் பொறுக்கிக் கொள்வார். துல்ஹஜ் 10 ஆம் நாள் ஜம்றதுல் அகபா அல்லது குப்ரா எனப்படும் ஜம்றாவில் 7 கற்களை எறிவார். இதன் பின் குர்பான் கொடுத்து விட்டு முடிகளைச் சிரைத்துக் கொள்வார். துல்ஹஜ் 11 ஆம் நாள் மினாவிலுள்ள ஜம்றதுல் அகபா, ஜம்றதுல் வுஸ்தா, ஜம்றதுல் ஊலா ஸுக்ரா என்ற மூன்று ஜம்றாக்களிலும் இவ்வேழு கற்களை எறிவார். 12 ஆம் நாளும் இதே முறையில் கல்லெறிவார்.

13 ஆம் நாளும் இவ்வாறே கல்லெறிவார். கல்லெறிதல் முடிவுற்றபின் தபாபுல் இபாழாவை (பர்ளு) நிறைவேற்ற மக்கா செல்வார். அங்கே தவாபுடன் ஸஃ யையும் நிறைவேற்றுவார். கடைசியாக மக்காவிலிருந்து வெளியேறும்போது தவாபுல் விதாவை நிறை வேற்றுவதோடு ஹஜ் கிரியைகள் முற்றுப் பெறுகின்றன.

## ஹஜ்ஜின் பயன்கள்

ஹஜ் பற்றிப் பிரஸ்தாபித்த அல்குர்ஆன் (22:28) வசனம் ஹஜ்ஜில் மனிதனுக்கு நிறைந்த பயனிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகிறது. இப்பயன் உலகியல் சார்ந்ததாகவோ ஆன்மீகம் சார்ந்ததாகவோ இருக்கலாம். ஹதீஸ்கள் வாயிலாக அவற்றைத் தொகுத்து சுருக்கமாகப் பார்ப்போம்.

1. ஹஜ்ஜை நிறைவேற்றுபவர் பாவமன்னிப்புப் பெறுகிறார்.
2. அவருக்கு அதிக நன்மை (ஸவாபு) கிடைக்கிறது.
3. அல்லாஹ்வை அதிகமாக நினைக்கவும் அவன் பற்றிச் சிந்திக்கவும் வாய்ப்புக் கிடைக்கிறது.
4. மறுமை குறிப்பாக மஹ்ஷரை எடைபோட வாய்ப்பு ஏற்படுகிறது.
5. பிறருக்காகப் பிரார்த்திக்கவும் சிபாரிசு செய்யவும் வாய்ப்புக் கிட்டுகிறது.
6. நான் ஒரு தனியாளல்ல, உலகளாவிய சமூகமொன்றின் உறுப்பினன் என்ற உணர்வு மேலெழுகிறது.
7. அவருக்கு சுவர்க்கம் கிடைக்கிறது.

ஆகவே தான் பின்வரும் ஹதீஸ்கள் இவ்வாறு கூறுகின்றன. ஹாஜிகளைச் சந்தித்தால் அவர்களுக்கு ஸலாம் சொல்லுங்கள். அவருடன் முஸாபஹாச் செய்யுங்கள். இன்னும் அவர் வீடு சென்று நுழையுமுன் அவரிடம் உங்கள் பாவமன்னிப்புக்காக துஆ செய்யும்படி கோருங்கள். ஏனெனில் அவர் பாவங்கள் அனைத்தும் நீங்கப் பெற்று பரிசுத்தமாகித் திரும்பி வந்துள்ளார். (அஹ்மத்)

அல்லாஹ்வே ! ஹாஜிகளை மன்னிப்பாயாக ! அவர் யாருக்காக மன்னிப்புக் கேட்கிறாரோ அவருடைய பாவத்தையும் மன்னிப்பாயாக என்றும். எவர் ஹஜ்ஜுக்குச் செல்லும் வழியில் இறக்கிறாரோ அவருக்கும் எவர் ஜிஹாதுக்குச் செல்லும் வழியில் இறக்கிறாரோ அவருக்கும் எவர் உம்ராவுக்குச் செல்லும் வழியில்

இறக்கிறாரோ அவருக்கும் கியாமநாள் வரை அச்செயல்களுக்காக நன்மை எழுதப்படும். ஹஜ்ஜுக்குச் செலவிடுவதும், ஜிஹாதுக்குச் செலவிடுவதும், ஒன்றுக்கு எழுநூறு நன்மையை ஈட்டித்தரும் (தர்கீப்)

இந்த ஹதீஸ்கள் ஹஜ்ஜினதும் உம்றாவினதும் ஆன்மீகப் பயன்களை இன்னும் தெளிவுபடுத்துகின்றன. ஹஜ்ஜுடன் தொடர்புடைய இடங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள ஹதீஸ்களும் இதற்கு ஆதாரங்களாகும். “அல்லாஹ் க.்.பாவின் மீது தினமும் 120 ரஹ்மத்துக்களை அருளுகிறான். அவற்றுள் அறுபது தவாப் செய்பவர்களுக்கும் நாற்பது தொழுபவர்களுக்கும் மீதி இருப்பவை அதனைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் கிடைக்கின்றன.”

இஸ்லாமிய இபாதத்துக்கள் யாவும் ஆன்மீக பயன்களைத் தருகின்ற அதேவேளை உலகியல் நன்மைகளையும் தருபவை. ஏனெனில் இஸ்லாம் உலகியலையும் ஆன்மீகத்தையும் பிரித்து நோக்கவில்லை.

ஹஜ்ஜின் உலகியற் பயன்களில் முஸ்லிம் சமுதாயத்தின் ஒருமைப்பாடு முக்கியமானது. இஸ்லாத்தை மெச்சுகின்ற அனைவரும் அதன் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் என்றுமே பாராட்டத் தவறுவதில்லை. அந்தச் சமத்து வத்தினதும் சகோதரத்துவத்தினதும் துல்லியமான வெளிப்பாடே ஹஜ் வணக்கமாகும். அங்கே ஆள்பவன், ஆளப்படுபவன், படித்தவன், பாமரன், பணக்காரன், ஏழை, அறபி, அஜமி, கறுப்பன், வெள்ளையன், வலியான், எளியான், சுதேசி, விதேசி என்பன போன்ற எந்த வேறுபாடும் காண்பிக்கப்படுவதில்லை. அனைவரும் அல்லாஹ்வின் அடியார்கள். அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்ற வந்த அகில உலக பிரதிநிதிகள், அவர்களது இலட்சியம் ஒன்று, அவர்கள் நோக்கும் திசையும் அவர்கள் எழுப்பும் கோஷமும் ஒன்று. அவர்கள் அணிந்துள்ள உடையும் அவர்கள் செய்கின்ற வணக்கமும் ஒன்றாகவே உள்ளன. இஸ்லாத்தின் ஒருமைப்பாட்டையும் சமத்துவத்தையும் அவர்கள் இங்கு பகிரங்கப்படுத்துகிறார்கள்.

ஹஜ்ஜின் மூலம் கிடைக்கும் மற்றொரு பயன் தியாக உணர்வாகும். எனவேதான் ஹாஜிகள் அனைவரும் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்றுத் தமது நேரத்தை அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்துள்ளார்கள். தமது சுகத்தையும்

சௌகரியத்தையும் ஒதுக்கிவிடுகிறார்கள். ஓய்வையும் பொருளையும் தியாகம் செய்கிறார்கள். மொத்தமாக உலகத் தொடர்பையே துண்டித்துக் கொண்ட நிலையில் அக்கடமையைப் பக்தி சிரத்தையோடு நிறைவேற்றுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் என்ன பயனை அடைகிறார்கள். பிரச்சினைக்குரிய சூழலில் அல்லது கால கட்டத்தில் மேலே குறிப்பிட்டது போன்ற வளங்களை அல்லது வாய்ப்புக்களைத் தியாகம் செய்து அல்லது பிறருக்கு விட்டுக் கொடுத்து வாழும் நிலைக்குப் பயிற்சி பெறுவதுடன் தலைமைத்துவத்தின் அவசர அழைப்புக்குக் கட்டுப்படும் பயிற்சியையும் பெறுகிறார்கள். ஆகவே தான் ரமழானை தக்வாவின் காலமாகக் கழித்த முஸ்லிம்கள் ஹஜ்ஜில் தியாகத்துக்கான தூண்டுதலையும் பயிற்சியையும் அடைந்து கொள்கிறார்கள்.

வரலாற்றில் மக்கா யாத்திரை இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் காரணமாக அமைந்ததை எவரும் அறிவர். ஹிஜ்ரத்துக்கு முந்திய மூன்றாமாண்டில் மதீனாவிலிருந்து யாத்திரை வந்த 6 நபர்கள் மக்காவுக்கு அண்மையிலுள்ள அகபா என்னுமிடத்தில் நபியவர்களைச் சந்தித்தபோது அவர்களுக்கு இஸ்லாமிய த.்.வத்தை எத்தி வைத்தார்கள். அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டதுடன் அடுத்த ஆண்டில் யாத்திரைக்காக பன்னிருவரை அழைத்து வந்து இஸ்லாத்தை ஏற்க வைத்ததோடு அகபா உறுதிமொழியையும் வழங்கினர். மதீனாவில் இஸ்லாத்தை போதிக்க தூதர் ஒருவரையும் கேட்டு நின்றனர். முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்கள் அங்கு சென்று செய்த பிரசாரம், அடுத்த ஆண்டில் 72 பேரை மக்காவுக்கு அழைத்து வர வழிவகுத்தது. அத்தோடு நபியவர்களையும் மதீனாவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கக்காரணமாக அமைந்தது. இரண்டாவது அகபா உறுதிமொழி இதனை எடுத்துக் காட்டும். ஆகவே நபியவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கும் அங்கு ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மக்கா யாத்திரை ஒரு வழியாக அமைந்தது. மேலும் நபியவர்களும் ஸஹாபாக்களும் உம்றாச் செய்ய வரும்போது ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டில் ஹுதைபியாவில் தடுக்கப்பட்டதும் அங்கு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதும் அதன் மூலம் மக்காவாசிகள் இஸ்லாத்தை நல்லெண்ணத்துடன் அணுக இடமளிக்கப்பட்டதும், பின்னர் மக்காவை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அராபிய தீபகற்பத்தையே இஸ்லாமிய மயப்படுத்துவதற்கு இடம் கிடைத்ததும் மக்கா யாத்திரையின் விளைவுதான்.

இதுபோன்றே ஹஜ்ஜதுல் விதாவில் நபியவர்கள் செய்த உபதேசம் ஸஹாபாக்கள் உலகின் எல்லாக் கோணங்களுக்கும் இஸ்லாத்தை ஏந்திச் செல்ல வழிகாட்டியது. இந்த வகையில் இஸ்லாமிய த.்.வத்தில் ஹஜ்ஜின் பங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

ஹஜ் என்பது இலட்சிய வாழ்க்கைக்கு ஓர் ஒத்திகை எனக் கூறும் அறிஞர்கள் இலட்சிய வாழ்க்கைக்கான படிமுறையான அம்சங்களை ஹஜ்ஜின் மூலம் ஹாஜிகள் பெற்றுக் கொள்கிறார்கள் என்பர். அவை வருமாறு :

1. இலட்சிய வாழ்வு தெளிவான நன்கு அறியப்பட்ட ஒரு முடிவை நாடுகிறது. இதனை இஹ்ராம் மூலம் ஹாஜிகள் வெளிப்படுத்துகிறார்கள்.
2. இலட்சிய வாழ்வு பொருள் ரீதியான தியாகத்தை நாடி நிற்கிறது. இதனை ஹஜ் பயணச் செலவின் மூலம் நிறைவேற்றுகிறார்கள்.
3. இலட்சிய வாழ்வு சுறுசுறுப்பான இயக்கத்தை எதிர்பார்க்கின்றது. இதனை ஹாஜிகள் வெவ்வேறிடங்களுக்குச் செல்வதன் மூலம் பயின்று கொள்கிறார்கள்.
4. இலட்சிய வாழ்வு ஒரு மத்திய நிலையத்தை வைத்துக் கொண்டு அதனைச் சுழன்று இயங்க வேண்டுமென விரும்புகிறது. இதனைக் க.்.பத்துல்லாவை மையமாகக் கொண்ட ஹாஜிகளின் வணக்கங்கள் நிரூபிக்கின்றன.
5. சத்தியப் பாதையில் நடைபோடுவதை இலட்சிய வாழ்வு எதிர்பார்க்கின்றது. இதற்கான பயிற்சியை ஸபா மர்வாவுக் கிடையிலான ஓட்டம் பயிற்றுவிக்கின்றது.
6. இலட்சியம் ஒரு மனிதனிடம் எவற்றைக் கோருகின்றதோ அவற்றைக் கொடுக்கத் தயாரானவனே இலட்சியவாதியாவான். அந்த வகையில் ஹாஜிகள் அனைத்தையும் தியாகம் செய்கின்றனர். குர்பானி மூலம் அதனை நிரூபிக்கின்றனர்.
7. இலட்சியவாதி தன்னைப் போன்றவர்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலமே குறிப்பிட்ட இலட்சியத்தை விரைவாகவும் சரியான வழியிலும் அடைய முடியும். இதனை ஹஜ்ஜுக்காகக் கூடும் குறிப்பாக அறபாவில் இணையும் சகோதரர்கள் மூலம் ஹாஜிகள் அடைந்து கொள்கிறார்கள்.

எனவே ஹஜ் என்னும் இபாதத் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் இலட்சிய வாழ்க்கையை நினைவூட்டி அவ்விலட்சிய வாழ்க்கையின் பக்கம் ஹாஜிகளை அழைத்துச் செல்லும் ஒரு சாதனமாக அமைந்துள்ளது என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். அல்லாஹ் கீழ்வருமாறு இதனைக் குறிப்பிடுகின்றான்.

"எவன் அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்டு நன்மையும் செய்து இப்ராஹீமுடைய நேரான (இம்) மார்க்கத்தையும் பின்பற்றுகிறானோ அவனைவிட அழகான மார்க்கத்தையுடையவன் யார்? அல்லாஹ் இப்ராஹீமைத் (தன்னுடைய) தோழராக எடுத்துக் கொண்டான்." (4:125)

"அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பும் உங்களில் எவருக்கும் நிச்சயமாக இவர்களில் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கின்றது. எவராவது புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் (அத்தகையோரில்) தேவையற்றோனும் மிக்க புகழுடையோனுமாக இருக்கிறான்." (60:6)

எனவே நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் அழைப்பை ஏற்று ஹஜ்ஜுக்குச் சென்ற ஹாஜிகள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் தூதை அறபா மைதானத்தில் ஹஜ்ஜதுல் விதாவில் செய்த பிரகடனத்தை சுமந்து கொண்டு தத்தம் நாடுகளுக்கு மீளுகிறார்கள். அங்கே அவர்கள் ஏற்படுத்திய இலட்சிய வாழ்வை நிலைநாட்டுவது அவர்களின் பணியாக அமைகிறது.

இது தவிர இஸ்லாத்தின் சர்வதேசத் தன்மைக்கு ஹஜ் வணக்கம் ஓர் உச்ச அடையாளமாகும். இஸ்லாம் சர்வதேசமயமானது; சர்வகால மயமானது. அதனை நடைமுறையில் காட்டுவது ஹஜ் வணக்கமேயாகும். எல்லோரும் கலிமாவை அறபு மொழியில் மொழிகிறார்கள். தொழுகையின் மொழியாகவும் அறபு அமைந்துள்ளது. தொழுகையின் போது கஃபத்துல்லாஹ்வின் திசையையே எல்லோரும் முன்னோக்குகிறார்கள். புனித ரமழான் மாதம் எல்லோரையும் ஒரே காலத்தில் நோன்பு நோற்க வைக்கின்றது. எல்லோரும் எல்லாச் சுவாத்தியத்திலும் நோன்பு நோற்று அனுபவப்படுகிறார்கள். ஸகாத் கூட ஒரேவிதமாக மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

இவையனைத்தும் இஸ்லாமிய ஒருமைப்பாட்டின் அம்சங்களாக இருக்கின்றன வென்பது மறுக்க முடியாததுதான். ஆனால் அவை பிரதேசத்தால் சொற்பநேர கால வித்தியாசத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஹஜ்ஜைப் பொறுத்தவரை இந்தக் கட்டுப்பாடு இல்லை. அனைத்தும் ஒரே காலத்தில் ஒரே இடத்தில் அமைகின்றன.

மேலும் பல்வேறு நாடுகளிலிருந்து பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார மட்டங்களைச் சார்ந்த மக்கள் ஹஜ்ஜுக்குச் செல்வதை நாம் அவதானிக்கலாம். அவர்கள் உண்மையில் அல்லாஹ்வின் திருப்தியை நாடிச் செல்கிறார்கள். அந்தத் திருப்தியை ஆன்மீகத் துறையுடன் மாத்திரம் இணைத்து விடுவது பொருத்தமற்றது. ஏனெனில் மறுமைக்கான விளை நிலமாக இம்மை அமைந்துள்ளது. அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் உலகத்தை வளப்படுத்தும் பொறுப்பும் மனிதனுக்கு உண்டு.

எனவே அதற்கான வழியாகவும் ஹஜ்ஜைப் பயன்படுத்தலாம். முஸ்லிம் நாடுகளில் வெவ்வேறான மூலவளங்கள் உண்டு. சந்தைப் படுத்தும் வாய்ப்புகளும் உண்டு. வெவ்வேறான தொழில் முயற்சிகளும் உற்பத்திப் பொருள்களும் உண்டு. மூலதனம் இருப்பவரிடம் உழைப்புத் திறன் இருப்பதில்லை. உழைப்புத் திறன் உடையோர் மூலதனமின்றித் திண்டாடுவர். சிலருக்கு தொழில்நுட்பத்திறன் உண்டு. ஆனால் அதனை வளர்ப்பதற்கான வாய்ப்புக்களும் வளங்களும் இல்லை. இவ்வாறான ஏற்றத்தாழ்வைச் சமப்படுத்தும் வல்லமையும் வளங்களைப் பங்கீடு செய்யும் வாய்ப்பும் ஹஜ் பயணத்துக்குண்டு. ஒவ்வொரு ஹாஜியும் தனது கடமையை முடித்துக் கொண்டபின் தனித்தனியாகவும் இது பற்றிப் பேசலாம். கூட்டாகவும் கலந்துரையாடலாம். அறிவுரைகளும் ஆலோசனைகளும் பரிமாறப்படலாம். எல்லோருமிணைந்து கலந்துரை யாடல்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் முதலியவற்றை ஏற்பாடு செய்வார்களாயின் சமூக பொருளாதார அரசியல் துறைகளில் முஸ்லிம் சமுதாயம் சிறந்த பயனைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இருந்தும்கூட ஹஜ்ஜை தவறாகப் பயன்படுத்தும் ஹாஜிகளும் உள். அவர்களைப் பற்றியும் நபியவர்கள் முன்னெச்சரிக்கை செய்துள்ளார்கள். "கியாமம் நெருங்கக்கூடிய காலகட்டத்தில் என்னுடைய சமுதாயத்தில் செல்வந்தர்கள் ஹஜ்ஜை உல்லாசப் பயணமாக மாற்றிக்கொள்வர். நடுத்தர வகுப்பினர் வியாபாரமாக மாற்றிக்கொள்வர். ஏழைகளோ பிச்சை எடுக்கும் நோக்கத்துடன் செல்ல உலமாக்கள் பெருமைக்கும் புகழுக்குமாகச் செல்வர்" (கன்சுல் உம்மால்)

இவற்றை ஹஜ் பயணமாகக் கணிக்க முடியாது. ஆன்மீக பக்குவமே ஹஜ்ஜின் முதல் நோக்கமாகும். செயல்கள் யாவும் எண்ணத்தைச் சார்ந்தவை என்ற ஹதீஸுக்கு ஏற்ப இதனை மதிப்பிடலாம். இதைத்தான் ஹஸ்ரத் உமர் (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். எவருடைய நிய்யத் பரிசுத்தமாகவும் கைப்பொருள் நல்லதாகவும் இருக்குமோ இன்னும் எவர் அல்லாஹ் மீது ஆழ்ந்த உறுதியும் கொண்டிருக்கிறாரோ அவரே சிறந்த ஹாஜி ஆவார்.

ஹஜ்ஜின் பயன் பற்றி ஓர் அறிஞர் குறிப்பிடுகின்ற உருவகக் கருத்து நோக்கத்தக்கதாகும். கஃபத்துல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்தின் இருதயமாகும். இருதயம் சுகமாக இருக்கும் காலமெல்லாம் மனிதன் உயிரோட்டமுள்ளவனாக இருப்பான். அது மனித உடலில் சுத்த இரத்தத்தைப் பாய்ச்சுகிறது. அது சுவாசப்பைக்குச் செலுத்தப்பட்டு சுவாசத்தின் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது. சுத்தி கரிக்கப்பட்ட இரத்தம் இருதயத்தை அடைய அது நாடிக்கூடாக உடலின் எல்லாப் பாகங்களுக்கும் சுத்த இரத்தத்தைப் பாய்ச்சுகிறது. இதனால் உடம்பு தெம்போடு இயங்குகிறது. இவ்வாறே பாவக்கறைகளால் அசுத்த மடைந்த மனித உள்ளங்களும் நடைமுறைகளும் கஃபத்துல்லாஹ் என்ற இருதயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு ஹஜ் கிரியை மூலமாக பரிசுத்தப்படுத்தப்பட்டு தூய நிலையில் அனுப்பிவைக்கப்படுகின்றன. எனவே முஸ்லிம் சமுதாயம் எப்போதும் ஈமானுடனும் தக்வாவுடனும் இயங்குவதற்கான வருடாந்த சுத்திகரிப்பு நிகழ்வாகவும் பயிற்சிப் பாசறையாகவும் ஹஜ் அமைகின்றது.

# ஆன்மீக செயற்பாடுகள் - இதர வணக்கங்கள்

**1. ஸதகா**

இஸ்லாம் வசதிபடைத்தவர்கள் மீது ஸகாத்தை கடமையாக்கியிருக்கிறது. தமது சொத்துக்களிலிருந்து குறித்த விகிதத்தை குறித்த காலத்தில் குறித்த சிலருக்கு வழங்கும் பர்ளான ஒரு செயற்பாடே ஸகாத் ஆகும். பொதுவாக ஒரு முஸ்லிம் அல்லாஹ் தனக்கு வழங்கிய செல்வத்திலிருந்து ஒரு பகுதியை பிறருக்கு வழங்குவது ஸதகா எனப்படுகிறது. ஸதகா என்பதை இஸ்லாம் மிகவும் விரிவானதொரு பொருளில் பயன்படுத்தியிருக்கிறது. இதனை நபி (ஸல்) அவர்களது ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது. "உங்களுடைய சகோதரரைப் பார்த்து இன்முகத்துடன் புன்னகைப்பது ஸதகாவாகும். நல்லதை செய்யும்படி ஏவுவதும் தீயதைச் செய்யவேண்டாம் என்று தடுப்பதும் ஸதகாவாகும். பாதையில் கிடக்கும் முட்கள், எலும்புகளை அகற்றி சுத்தப்படுத்துவதும் ஸதகாவாகும். உங்களது வாளியால் நீர் அள்ளி சகோதரன் ஒருவனின் பாத்திரத்திற்கு நீர் வார்ப்பதும் ஸதகாவாகும். கண்பார்வை இழந்த ஒருவருக்கு பாதையில் செல்ல உதவுவதும் ஸதகாவாகும். வழி தவறி செல்லும் ஒருவருக்கு சரியான வழியைக் காட்டிக் கொடுப்பதும் ஸதகாவாகும். (புகாரி)

இவ்வாறு ஸதகாவின் வட்டம் மிகவும் விசாலமானது. மாபெரும் கொடையாளியாகிய அல்லாஹ் வழங்கிய செல்வம், ஆரோக்கியம், கல்வி, உடற்பலம் இவை அனைத்தின் மூலமும் அடியார்கள் நன்மை பெற வழி செய்வதும் அவற்றை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வதும் உயர்ந்த ஸதகாவாகும். "விசுவாசிகளே! எவர்கள் தங்கள் பொருள்களை (தர்மத்திற்காக) இரவிலும், பகலிலும், இரகசியமாகவும், பரகசியமாகவும் செலவு செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய கூலி, அவர்களது இறைவனிடம் உண்டு. தவிர அவர்களுக்கு (மறுமையில்) யாதொரு பயமுமில்லை, அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள் (2 : 274)

ஒரு முஸ்லிம் தனக்கு கிடைக்கும் செல்வங்கள் அனைத்தையும் தனது தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்கு மாத்திரம் பயன்படுத்த எண்ணுவது தவறாகும். அல்லாஹ் தந்தவற்றில் அடுத்தவர்களும் பங்கெடுத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும். "எந்த தர்மம் சிறந்தது என ஸஹாபாக்கள் கேட்டபோது,

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் "நீங்கள் ஆரோக்கியம் நிறைந்தவராகவும் பணத்தில் தேவையுடையவர்களாகவும் இருக்கிறீர்கள். நீங்கள் (நாளை) நாம் ஏழை ஆகிவிடுவோமோ என அஞ்சுகிறீர்கள், (அதே நேரத்தில்) நீங்கள் செல்வம் நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையும் ஆசைகளிலிருந்து விடுபட்டுவிடுவோம் என்ற நம்பிக்கையும் உடையவர்களாக இருக்கிறீர்கள் (இத்தகு சூழ்நிலையில்) இருந்தும் நீங்கள் (அடுத்தவர்களுக்குத்) தர்மம் செய்கிறீர்கள். இதுதான் உங்களுக்கு இறைவனிடத்தில் மிகவும் அதிகமான நற்கூலியைப் பெற்றுத்தரும். நீங்கள் இறுதியாக மூச்சு விடுகின்ற போது இன்னாருக்கு இவ்வளவு வழங்குங்கள் இன்னாருக்கு அவ்வளவு வழங்குங்கள் என எழுதி வைக்கின்ற நிலைக்கு தள்ளப்படும் வரை ஸதகா - தர்மம் வழங்குவதை தள்ளிப் போடாதீர்கள் (புகாரி).

அடியான் ஸதகாக்களை வழங்க முற்படுகின்ற போது அவனது பேராசை அவனைத் தடுத்துவிடும், தயக்கம் கொள்ளச் செய்யும். சைத்தான் அதனையே விரும்புகிறான். அல்குர்ஆன் கூறுகின்றது. "நீங்கள் தர்மம் செய்தால் சைத்தான் உங்களுக்கு வறுமையைக் கொண்டு பயமுறுத்தி மானக்கேடான (உலோபித்தனத்)தைச் செய்யும்படி தூண்டுவான்... (2 : 268)

"ஒரு மனிதன் தனது செல்வத்திலிருந்து தர்மம் (ஸதகா) செய்திட விரும்பும்போது எழுபது சைத்தான்கள் அவனிடம் ஓடோடிவந்து அவனை அந்த தர்மத்தை செய்வதிலிருந்து தடுக்க முயலுகின்றன." (அஹ்மத்) என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இத்தகு போராட்டத்திற்கு மத்தியில் தர்மம் செய்பவனது சொத்துக்கள் வளர்ந்து கொண்டே செல்லும். தர்மம் செய்யாது தடுத்துக் கொள்பவனது சொத்துக்கள் அழிந்து போகும். நபி (ஸல்) கூறினார்கள். "ஒவ்வொரு நாளும் இரண்டு மலக்குகள் பூமியில் இறங்குகிறார்கள். அவர்களில் ஒருவர் "யா அல்லாஹ் நல்ல வழிகளில் செலவு செய்பவருக்கு நீ மேலும் வழங்குவாயாக" என்று சொல்வார். அடுத்த மலக்கோ, "யாஅல்லாஹ் தர்மம் கொடுக்காது கஞ்சத்தனம் காட்டி தடுத்து வைத்துக் கொள்கிறானே அவனுக்கு அழிவைக் கொடுப்பாயாக எனப் பிரார்த்திப்பார் !" (முஸ்லிம்)

எனவே ஒரு முஸ்லிம் எப்போதும் ஸதகா செய்கின்றவனாக இருக்க வேண்டும். இனி ஸதகா - ஸகாத் இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை தெரிந்து கொள்வது அவசியமாகும்.

### ஸகாத்துக்கும் ஸதகாவுக்குமிடையிலான வேறுபாடு

| ஸகாத் | ஸதகா |
|---|---|
| 1. பர்ளானது | சுன்னத்தானது |
| 2. குறிப்பிட்ட சில பொருட்களில் மாத்திரமே கடமையானது. | எப்பொருளிலும் கொடுக்கலாம். |
| 3. குறிப்பிட்ட சிலரின் மீது கடமையாகும். | எவரும் கொடுக்கலாம் |
| 4. எவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை உண்டு. | எவ்வளவும் கொடுக்கலாம் |
| 5. குறிப்பிட்ட எட்டு கூட்டத் தினருக்கே கொடுக்கவேண்டும். | எவருக்கும் கொடுக்கலாம். |

**2. உம்ரா**

உம்ரா என்பதன் மொழிக்கருத்து தரிசித்தல் என்பதாகும். இஸ்லாமிய பரிபாஷையில் இது புனித க.்.பாவை தவாப் செய்து, ஸபா மர்வாவுக்கிடையில் (ஸ.்.யு) செய்து தலைமுடியை சிரைக்கும் செயற்பாடுகளடங்கிய ஓர் இபாதத்தையே குறிக்கும்.

இதன் சிறப்பை நபி (ஸல்) அவர்கள் விளக்கியுள்ளார்கள். "ஓர் உம்ரா, மற்றோர் உம்ராவுக்கிடையில் நிகழ்ந்த பாவங்களுக்குப் பரிகாரமாகும்." (புகாரி)

"ரமழான் மாதத்தில் செய்யும் உம்ரா ஒரு ஹஜ்ஜுக்கு நிகரானதாகும். (அஹ்மத்)

உம்ரா ஒரு ஸுன்னத்தான வணக்கமாகும். அதனை வாழ்வில் எத்தனை முறை வேண்டுமானாலும் நிறைவேற்றலாம். அவ்வாறு நிறைவேற்றுவதனை முன்னோர் எவரும் குறை கண்டதில்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது வாழ்நாளில் ஒரேயொரு ஹஜ்ஜையே நிறைவேற்றியுள்ளார்கள். ஆயினும் நான்கு முறை உம்ரா செய்துள்ளார்கள். ஆயிஷா (றழி) அவர்கள் ஒரு வருடத்தில் மூன்று உம்ராக்களை நிறைவேற்றியுள்ளார்கள். எனினும் ஒருவர் வருடத்தில்

பல உம்ராக்களை நிறைவேற்றுவது மக்ரூஹ் என இமாம் மாலிக் (றஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

உம்ராவை நிறைவேற்றுவதற்கு வரையறுக்கப்பட்ட காலமோ நேரமோ இல்லை. வருடத்தின் எந்த நாளிலும் எப்போது வேண்டுமானாலும் அதனை நிறைவேற்றலாம். எனினும் அதனை ஐந்து தினங்களில் நிறைவேற்றுவது மக்ருஹ் என இமாம் அபூஹனீபா கருதுகிறார். அவை :

1. அரபா நாள் - துல்ஹஜ் பிறை - 09
2. யவ்முன் நஹ்ர் - துல்ஹஜ் பிறை 10
3. அய்யாமுத் தஷ்ரீகின் மூன்று தினங்கள் - துல்ஹஜ் பிறை 11, 12, 13

ஹஜ் கடமைக்குரிய விதிமுறைகளில் ஒரு சில தவிர ஏனைய அனைத்தும் உம்ராவுக்குமுரியனவாகும்.

உதாரணமாக, ஹஜ் வாஜிபாவதற்குரிய நிபந்தனைகளில் “மக்கா போய் சேருவதற்குரிய காலமிருத்தல்” என்ற அம்சமும், ஹஜ்ஜின் பர்ளுகளில் “அரபாவில் தரித்தல்” என்ற அம்சமும் தவிர்ந்த மற்றையவை உம்ராவுக்குமுரியனவாகும்.

நபி (ஸல்) அவர்களால் சிறப்பித்துக் கூறப்பட்ட உம்ராவை தூய எண்ணத்தோடு, அதன் புனிதத்துவத்தைப் பேணி நிறைவேற்ற வேண்டும். பெயர் புகழுக்காகவோ, உலக நன்மைகளை எதிர்பார்த்தோ, நிறைவேற்றக் கூடாது.

மேலும் சமூகத்தின் பால் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு கடமைகளை புறக்கணித்துவிட்டு ஒன்றுக்கு மேல் ஒன்று என பல ஹஜ்ஜை, பல உம்ராக்களை நிறைவேற்றுவது பொருத்தமானதல்ல.

எனவே வசதியிருப்பினும் வாழ்க்கையில் பல முறை உம்ராக்களை நிறைவேற்றுமுன், சமூக நலன் குறித்து சிந்தித்து, இதயசுத்தியோடு வேறு பல நற்கிரியைகளையும் ஆர்வத்தோடு நிறைவேற்ற முன் வரவேண்டும்.

### 3. திலாவதுல் குர்ஆன்

அல்குர்ஆன் எனும் பதம் ஓதுதலுடன் தொடர்பானதாக அமைந்துள்ளது. அல்குர்ஆனை ஓதுவதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற நன்மைகள் பயன்பாடுகள் பற்றி அல்குர்ஆன், ஸுன்னா என்பன விளக்குகின்றன.

அல்லாஹ்வின் தூதர் கூறியதாக இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். யார் அல்லாஹ்வின் வேதத்தில் ஓர் எழுத்தை ஓதுகின்றாரோ அவருக்கு ஒரு நன்மை கிடைக்கும். ஒரு நன்மையானது பத்து மடங்குகளாக அதிகரிக்கப்படும். அலி∴ப், லாம், மீம் ஓர் எழுத்து என்று நான் கூறமாட்டேன். மாற்றமாக அலி∴ப் ஓர் எழுத்து, லாம் ஓர் எழுத்து, மீம் ஓர் எழுத்து (திர்மிதி)

அல்குர்ஆனை ஓதிவரும் ஒருவரின் விடயங்களை அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்ளும் அதே நேரம் அதி உயர்ந்த கூலிகளையும் வழங்குகின்றான். இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஸஈத் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். "அல்லாஹுத்தஆலா கூறுகின்றான். என்னிடம் கேட்பதைவிட்டும் யாரை அல்குர்ஆன் ஈடுபடுத்திவிடுமோ அவனுக்கு நான் என்னிடம் கேட்பவர்களுக்குக் கொடுப்பதில் சிறந்ததை வழங்குகின்றேன். ஏனைய வார்த்தைகளை விட அல்லாஹ்வின் வார்த்தைக்குரிய சிறப்பானது அல்லாஹ்வின் படைப்புக்களைவிட அல்லாஹ்வுக் குரிய சிறப்பைப் போன்றதாகும்." (திர்மிதி)

அல்குர்ஆனை ஓதுபவன் இம்மை, மறுமைப் பயன்பாடுகளை அளவின்றிப் பெற்றுக்கொள்கின்றான். அவனது உள்ளம் அமைதி காண்பது மிகப்பெரும் உலக அருளாக அமைகிறது. அல்குர்ஆனை அதிகமதிகம் ஓதுகின்ற மனிதனின் உள்ளம் அமைதியடைவதனால் ஆரோக்கிய வாழ்வொன்று அவனிலே மலரத்தொடங்குகிறது. உள்ளம் அமைதி இழக்கையில் உளரீதியான நோய்கள் மட்டுமன்றி உடல் ரீதியான நோய்களும் உருவாகத் தொடங்குகின்றன. அல்குர்ஆனை ஓதுவதனை வழக்கமாக்கிக் கொண்டுள்ள ஒருவரில் நோய் எதிர்ப்பு சக்தி வளர்வதாக அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள அக்பர் சிகிச்சை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

மறுமை நாளிலும் கூட இவ்வாறான மனிதர்கள் நல்ல நிலையிலிருப்பர் என்பதனை ஹதீஸ்கள் விளக்குகின்றன.

“அல்குர்ஆனை ஓதுங்கள், மறுமை நாளில் அது அதனை ஓதியவர்களுக்காகப் பரிந்துரை செய்யும்.” (முஸ்லிம்)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நோன்பும் அல்குர்ஆனும் அடியானுக்கு (மறுமையில்) சிபாரிசு செய்யும். நோன்பு கூறும் : எனது இறைவனே! நான் பகல் நேரத்தில் உணவு, குடிப்பு என்பவற்றிலிருந்து இவனைத் தடுத்தேன். எனவே அவன் விடயத்தில் பரிந்துரைக்க சந்தர்ப்பம் தருவாயாக. அல்குர்ஆன் கூறும் ! எனது இறைவனே ! நான் தூக்கத்திலிருந்து இவனைத் தடுத்தேன். எனவே, அவன் விடயத்தில் எனக்கு பரிந்துரைக்க சந்தரப்பம் தருவாயாக. பின்னர் இவ்விரண்டிற்கும் சிபாரிசு செய்வதற்கான அவகாசம் கொடுக்கப்படும். (அஹ்மத், தபரானி, ஹாகிம்)

நபி (ஸல்) அவர்கள் அல்குர்ஆனின் சில அத்தியாயங்களில் காணப்படுகின்ற தனிச்சிறப்புக்களை விளக்கிக் காட்டினார்கள். அவற்றை ஓதுகின்ற போது அபரிதமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிகிறது.

ஸூரா இக்லாஸை ஒரு முறை ஓதுவதானது அல்குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியை ஓதியமைக்குச் சமனாகும். (புஹாரி, முஸ்லிம்)

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கும் ரிவாயத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஸூரா ஸல்ஸலா குர்ஆனின் அரைப்பகுதிக்குச் சமனாகும்.” (திர்மிதி, ஹாகிம்)

ஸூரா அல்காபிருன் அல்குர்ஆனின் நான்கில் ஒன்றிற்குச் சமன் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மதி, ஹாகிம்)

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி (ஸல்) அவர்கள் ஒரு தோழரிடம் “உம்மிடம் ஸூரா நஸ்ர் இருக்கிறதா? எனக்கேட்க அம்மனிதர் ஆம்

என்றார். அப்போது நபியவர்கள் அது நான்கில் ஒன்றிற்குச் சமனாகும் என்று கூறினார்கள்." (திர்மிதி)

**அபூஸஈத் அல்குத்ரி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள். "யார் ஸூரா பகராவின் கடைசி இரு வசனங்களையும் இரவில் ஓதுகின்றாரோ, அது அவருக்குப் போதுமானதாகும்." (புகாரி, முஸ்லிம்)**

இத்தகைய அளப்பெரும் நன்மைகள் அல்குர்ஆனை ஓதுவதற்குக் கிடைப்பதனால்தான் ஸஹாபாக்கள், தாபிஈன்கள், பெரும் இமாம்கள், அறிஞர்கள் தினமும் அதனை ஓதுவதனை வழக்கமாக்கிக் கொண்டிருந்ததோடு ரமழானில் முனைப்புடன் அதனை ஓதிவந்திருக்கின்றனர்.

உஸ்மான் (ரழி) அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒரு முறை அல்குர்ஆனை ஓதி முடிப்பார்கள். ஸஈத் இப்னு முஸய்யிப் (ரஹ்) அவர்கள் இரண்டு நாட்களில் ஒரு குர்ஆனை ஓதிமுடிப்பார்கள். வலீத் இப்னு முஸையப் (ரஹ்) இரண்டு நாட்களில் ஒரு அல்குர்ஆனை ஓதி முடிப்பார்கள். வலீத் இப்னு அப்துல் மலிக் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை அல்குர்ஆனை ஓதி முடிப்பார்கள். இமாம் கதாதா (ரஹ்) அவர்கள் பொதுவாக ஏழு நாட்களில் ஒரு குர்ஆனை ஓதி முடிப்பார்கள். ரமழானில் ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் ஒரு முறை ஓதிமுடிப்பார்கள். கடைசிப் பத்து தினங்களிலும் ஒவ்வொரு நாளிலும் ஒரு தடவை ஓதி முடிப்பார்கள். இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் ரமழான் தினமொன்றில் இரு தடவைகள் அல்குர்ஆனை ஓதிமுடிப்பார்கள். இமாம் புஹாரி ரமழானில் பகல் பொழுதில் ஒரு குர்ஆனையும், தராவீஹ் தொழுகைக்குப் பின்னர் இன்னும் ஒரு முறையும் ஓதிமுடிப்பார்கள்.

எல்லா நாட்களிலும் அல்குர்ஆனை ஓதுவது மேலான இபாதாவாகும். ஆயினும் ரமழான் அல்குர்ஆனின் மாதம் என்ற வகையில் தனிச்சிறப்புக் காணப்படுவதனை உணர்ந்த நிலையிலேயே இமாம் மாலிக் போன்றவர்கள் கற்பித்தல், பத்வா வழங்குதல் முதலானவற்றை விட்டுவிட்டு அல்குர்ஆனை ஓதுவதில் நேரத்தைக் கழித்தனர்.

மூன்று நாட்களுக்குக் குறைவான கால எல்லைக்குள் அல்குர்ஆனை ஓதிமுடிப்பது வரவேற்கத்தக்கதல்ல.

“யார் மூன்று நாட்களுக்குள் அல்குர்ஆனை ஓதிமுடிக்கின்றாரோ அவர் அதனை விளங்காதவராவார்.” (அபூதாவூத், திர்மிதி, இப்னு மாஜா)

இந்த ஹதீஸுக்கு விளக்கமளிக்கும் இப்னு ரஜப் (ரஹ்) “தொடர்ச்சியாக இவ்வாறு ஓதுவதனையே நபியவர்கள் தடுத்தார்கள் என்றும், சிறப்புமிக்க தினங்களில் இவ்வாறு ஓதுவதில் தவறில்லையென்றும்” குறிப்பிடுகின்றார். இமாம் அஹ்மதும் இதே கருத்தையே கொண்டிருக்கின்றார்.

இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) போன்ற மேதைகள் ஸலபுஸ் ஸாலிஹீன் களது வழிமுறையைக் கருத்திற்கொண்டு முழுக் குர்ஆனையும் ஓதி முடிப்பதற்கான கால எல்லையை வரையறுத்துத் தந்துள்ளனர்.

1. மூன்று நாட்களுக்கு ஒரு முறை அல்குர்ஆனை ஓதிமுடித்தல்.

2. ஏழு நாட்களுக்கு ஒரு முறை அல்குர்ஆனை ஓதிமுடித்தல்.
   அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) அவர்களுக்கு இம்முறையை நபியவர்கள் கற்றுக்கொடுத்தார்கள். உஸ்மான் (ரழி), ஸைத் இப்னு ஸாபித் (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி), உபை இப்னு க.்.ப் (ரழி) போன்ற ஸஹாபாக்கள் இவ்வழிமுறையைப் பின்பற்றினர்.

3. ஒரு மாத காலப்பிரிவுக்குள் அல்குர்ஆனை ஓதிமுடித்தல்.

அல்குர்ஆனை ஓதும் போது அழகாகவும், சிறப்பாகவும், முறைப்படியும் அதனை ஓதுவது மேலானது.

“எவர் அல்குர்ஆனை அழகிய குரலில் ஓதவில்லையோ அவர் எம்மைச் சேர்ந்தவரல்ல (அபூதாவூத்)”

அபூ மூஸா அஷ்அரி (ரழி) அவர்கள் இனிய குரலில் அல்குர்ஆனை ஓதிய போது நபியவர்களும், தோழர்களும் அமைதி கண்டிருக்கின்றார்கள். தாவூத் (அலை) அவர்களது பரம்பரையில் இனிய ராகம் வழங்கப்பட்டவர் என அபூமூஸா (ரழி) அவர்களை நபியவர்கள் பாராட்டியுள்ளார்கள். (புகாரி)

அல்குர்ஆனை அதற்கேயுரிய கிராஅத் ஒழுங்குகளைப் பேணி ஓதிவருவது மேலானதாகும். அமைதியாகவும் நிறுத்தி நிதானமாகவும் ஓதுகின்ற போது அந்த கிராஅத் பயனளிப்பதாக அமையலாம்.

“மேலும் அல்குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதுவீராக” (73 : 4)

அல்குர்ஆனை ஓதுபவர் இது அல்லாஹ்வின் கலாம் என்ற கண்ணிய உணர்வுடன் இறைத்திருப்தியை அடையும் எண்ணத்தில் அதனை ஓதி வர வேண்டும். வுழுவுடன் அல்குர்ஆனை ஓதுவது சங்கைக்குரியதாகும்.

**4. தவ்பா - இஸ்தி:பார் :**

அனஸ் இப்னு மாலிக் (ரலி) கீழ்வருமாறு கூறுகிறார். “நான் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு சொல்லக் கேட்டேன். அல்லாஹ் கூறுகிறான். ஆதமுடைய மகனே ! நீ (நான் உனது பாவங்களை மன்னிப்பேன் என்று) என்னில் நம்பிக்கை வைத்து என்னிடம் இறைஞ்சினால் உன்னால் உண்டானவற்றை (அதாவது உனது பாவங்களை) மன்னித்து விடுவேன். நான் அவற்றைப் பொருட்படுத்தமாட்டேன்.”

“ஆதமுடைய மகனே நீ செய்த பாவங்கள் வானளாவ உயர்ந்திருந்த நிலையிலும் நீ என்னிடம் மன்னிப்புக் கோரினாலும் நான் உன்னை மன்னிக்கவே செய்வேன்.”

எப்போது மனிதன் தான் இழைத்த குற்றங்களை உணர்ந்து, தன்னை மன்னித்து இரட்சிக்கும் ஓர் இரட்சகன் இருக்கிறான் என்ற ஆழமான நம்பிக்கையுடன் அல்லாஹ்விடம் இறைஞ்சி பாவமன்னிப்புக் கோருகிறானோ அப்பொழுது அந்த மனிதனுக்குப் பூரண மன்னிப்பு வழங்க அல்லாஹ் காத்திருக்கிறான் என்ற உண்மையை இந்த ஹதீஸ் உணர்த்துகிறது.

ஆனால் செய்த பாவங்களுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கிடைக்க வேண்டுமெனில் மூன்று அம்சங்கள் அமையப் பெறுவது மிக முக்கியமானதாகும் என்றும் இந்த ஹதீஸ் கூறுகிறது.

முதலாவது நம்பிக்கையுடன் பிரார்த்தனை (துஆ) செய்வது : பிரார்த்தனைக்கு இறைவனிடம் பதில் கிடைப்பது நிச்சயமானது. உங்கள் இறைவன் கூறுகிறான். “நீங்கள் என்னை அழையுங்கள் நான் விடையளிக்கிறேன்.” (40 : 59)

நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள். “அல்லாஹ் ஓர் அடியானுக்கு பிரார்த்தனையின் வாயிலை மாத்திரம் திறந்து விட்டு அதனை ஏற்றுக்கொள்ளும் வாயிலை மூடிவிடுவதில்லை.”

ஆனால் பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட பல நிபந்தனைகள் உண்டு. அவற்றுள் மிக முக்கியமான ஒரு நிபந்தனையை நாம் விளக்க எடுத்த ஹதீஸ் குறிப்பிடுகிறது. பிரார்த்தனை செய்யும் பொழுது தனது பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கையோடு பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என்பதே அதுவாகும்.

> “இறைவன் என் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்யுங்கள். பொடுபோக்கான உள்ளத்தோடு கேட்கப்படும் துஆவை இறைவன் ஏற்றுக் கொள்வதில்லை” என நபிகளார் குறிப்பிட்டுள்ளார்கள். (திர்மிதி)

இரண்டாவது பாவமன்னிப்புக் கோருவது : பாவம் செய்தவன் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள பாவமன்னிப்புத் தேடியே ஆக வேண்டும் என்பதையும் இந்த ஹதீஸ் வலியுறுத்துகிறது. பாவமன்னிப்புக் கோருவதன் அவசியம் பற்றி அல்குர்ஆனும் கூட ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். பாவமன்னிப்புத் தேடுவது மு.ஃ.மின்களின் அடிப்படைப் பண்புகளில் ஒன்று என அல்குர்ஆன் கூறுகிறது. “அவர்கள் யாதொரு மானக்கேடான காரியத்தைச் செய்துவிட்டாலும் அல்லது ஏதும் பாவமிழைத்துக் தங்களுக்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அல்லாஹ்வை நினைத்து (அவனிடமே) தங்களுடைய பாவமன்னிப்பைத் தேடுவார்கள். அல்லாஹ்வை யன்றி இத்தகையோரின் குற்றங்களை மன்னிப்பவன் யார்? அவர்கள் செய்த தவறான காரியத்தை தவறென்று அவர்கள் அறிந்து கொண்டால் அதில் நிலைத்திருக்கவும் மாட்டார்கள். உடனே அதிலிருந்து விலகி விடுவார்கள். இத்தகையோருக்குரிய பிரதிபலன் இறைவனுடைய மன்னிப்பும் நீரருவிகள் சதா ஓடிக் கொண்டிருக்கும் சுவனபதிகளும் ஆகும்.” (3:135)

மனிதன் தான் செய்த பாவங்களுக்காக மன்னிப்புக் கோரும் போது அவன் எவ்வளவு பாவங்களைச் செய்தவனாக இருந்தாலும் அவனை இறைவன் மன்னிக்காமல் இருப்பதில்லை. ஏனெனில் மனிதன் பாவம் செய்யும் இயல்புள்ளவன் என்பதை இறைவன் அறிந்தே வைத்திருக்கிறான். "ஆதமுடைய மக்கள் அனைவரும் பாவம் செய்யக்கூடியவர்களே பாவம் செய்பவர்களில் மிகச் சிறந்தவர்கள் மன்னிப்புக் கோரி மீள்பவர்களே." (திர்மிதி)

எனவே ஒரு மு.்.மின் அதிகம் பாவம் செய்துவிட்ட காரணத்தினால் தனக்கு மன்னிப்பே கிடைக்காது எனச் சோர்வுற்று விரக்தியடைய வேண்டிய அவசியம் இல்லை. இறைவன் எதிர்பார்ப்பதெல்லாம் தனது அடியார்கள் பாவங்கள் செய்தால் அதில் தொடர்ந்திருக்காமல் தன் பாவங்களை உணர்ந்து தன்னிடம் மன்னிப்புக் கோரி மீள வேண்டும் என்பதையே.

நூறு நபர்களைக் கொலை செய்த மனிதனுக்குக் கூட பாவமன்னிப்புக் கிடைத்த ஒரு வரலாற்றை புகாரி முஸ்லிம் கிரந்தங்களில் காணலாம். கீழ்வரும் அல்குர்ஆன் வசனங்கள் நாம் மேலே விளக்கிய உண்மையைத் தெளிவுபடுத்துகின்றன. "நபியே ! நான் கூறியதாக நீர் கூறும். எனது அடியார்களே உங்களில் எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வின் அருளைப் பற்றி நீங்கள் நம்பிக்கையிழந்து விடவேண்டாம். நீங்கள் பாவத்திலிருந்து விலகி மனம் வருந்தி மன்னிப்பைக் கோரினால், நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய பாவங்கள் யாவையும் மன்னித்துவிடுவான். ஏனென்றால் நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்போனும் கிருபையுடை யோனுமாக இருக்கிறான்." (39:53)

ஆயினும் பாவமன்னிப்புக்குரிய நிபந்தனைகளை நிறை வேற்றுவது மிக முக்கியமானதாகும். குறிப்பாக பாவமன்னிப்பின் போது "செய்த பாவங்களை மீண்டும் செய்யமாட்டேன்" என உறுதி பூணுவது ஓர் அடிப்படை

நிபந்தனையாகும். இவ்வுறுதியின்றி தௌபாச் செய்வது எப்பயனையும் அளிக்காது. அவ்வாறே இரண்டாவது நிபந்தனை ஒரு மு.ஃ.மின் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை வைக்கும் அதே நேரத்தில் தான் செய்த பாவங்களை நினைத்து பயந்து வேதனைப்படுபவனாக இருத்தல் வேண்டும். "அல்லாஹ்வின் பிடியிலிருந்து அவர்கள் அச்சமற்றுவிட்டனரா? முற்றிலும் நஷ்டமடையக்கூடிய மக்களைத் தவிர எவரும் அல்லாஹ்வின் பிடிக்கு அச்சமற்றிருக்கமாட்டார்." (7:99)

நபி (ஸல்) சொன்னார்கள். "எந்த நிமிடத்திலும் இடிந்து விழலாம் என்ற நிலையில் இருக்கின்ற ஒரு மலையின் கீழ் அமர்ந்திருக்கின்ற ஒருவனைப் போல் மு.ஃ.மின் தனது பாவங்களைக் காண்பான். ஆனால் ஒரு பாவியோ தன் பாவங்களை தனது மூக்கைக் கடந்து சென்ற தான் தட்டிவிட்ட ஒரு ஈயைப் போலக் காண்கிறான்." (புகாரி)

மூன்றாவது : ஏகத்துவம் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள ஷிர்க்கை விட்டும் நீங்கியிருப்பது ஓர் அடிப்படை நிபந்தனையாகும் என்று இந்த ஹதீஸ் கூறுகின்றது. உண்மையில் இறைவன் ஷிர்க்கை மன்னிக்கமாட்டான். ஷிர்க்குடன் கேட்கப்படும் பிரார்த்தனைகளையும் அங்கீகரிக்கமாட்டான் என்பது தெளிவான ஒரு விடயமாகும். "நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவேமாட்டான். இதனைத் தவிர எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பான்." (4:48)

தூய்மையான தௌஹீதைக் கொண்ட மனிதரைப் பொறுத்த வரையில் அவரது பாவங்கள் கடலளவு இருந்தாலும் அவர் மன்னிப்புக் கேட்டால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்ற கருத்தில் பல ஹதீஸ்கள் காணப்படுகின்றன.

எனவே ஒவ்வொரு மு.ஃ.மினும் அதிகமதிகம் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருபவராக இருத்தல் வேண்டும். நபி (ஸல்) சொன்னார்கள். "நீங்கள் உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் ஒரு நாளைக்கு எனது இறைவனிடத்தில் நூறு தடவை பாவமன்னிப்புத்

தேடுகிறேன்.” (முஸ்லிம், அபூதாவூத்). இவ்வாறு அதிகமாக இஸ்தி.்.பார் செய்வதனால் அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இன்னொரு முறை நபி (ஸல்) கூறினார்கள். “யார் அதிகமாக இஸ்தி.்.பார் செய்கிறாரோ இறைவன் அவருக்கு அனைத்து நெருக்கடிகளிலிருந்தும் மீட்சியைக் கொடுப்பான். அனைத்து கவலையிலிருந்தும் விடிவைக் கொடுப்பான். அவர் எதிர்பாராத விதத்தில் ரிஸ்கைக் கொடுப்பான்.” (அபூதாவூத், அஹ்மத்).

ஒருவருடைய துன்பங்கள் யாவும் பாவங்களின் காரணமாகவே ஏற்படுகின்றன என அல்குர்ஆன் கூறுகின்றது. “எந்தத் தீங்கும் உங்களை வந்தடைவதெல்லாம் உங்கள் கரங்கள் தேடிக்கொண்ட தீ வினையின் காரணமாகவே தான். ஆயினும் அவைகளில் அனேகமானவற்றை அவன் மன்னித்துவிடுகிறான்.” (42:30)

## 5. திக்ர் - அவ்ராத்ஃ

ஒரு முஸ்லிமின் மிக உயர்ந்த இலட்சியம் மறுமையில் சுவனத்தை அடைவதாகும். இவ்வுலகக் கவர்ச்சியால் வழிதவறாமல் தன்னைப் பாதுகாத்து இலட்சியத்துடன் வாழ வழிகாட்டும் சாதனம் அல்லாஹ்வின் நினைவாகும். இவ்வாறு அல்லாஹ்வின் நினைவோடு வாழ்வதையே அல்குர்ஆனும் ஸுன்னாவும் திக்ர் எனக் குறிப்பிடுகின்றன.

**திக்ர் பற்றி வந்துள்ள சில அல்குர்ஆன் வசனங்கள்**

"அல்லாஹ்வை திக்ர் செய்வதே உயர்ந்தது." (29:45)

"அல்லாஹ்வை அதிகமாக திக்ர் செய்கின்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் அல்லாஹ் பாவமன்னிப்பையும் மகத்தான கூலியையும் ஆயத்தப்படுத்தியுள்ளான்." (33:35)

"நீங்கள் என்னை நினையுங்கள். அல்லாஹ்வை திக்ர் செய்வதன் மூலமே உள்ளங்கள் அமைதி பெறுகின்றன." (13:28)

"அல்லாஹ்வை அதிகமதிகம் திக்ர் செய்யுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள்." (62:10)

"நீர் உம் மனதிற்குள் மிகப் பணிவோடும் அச்சத்தோடும் உரத்த சப்தமின்றியும் காலையிலும் மாலையிலும் உம் இறைவனை திக்ர் செய்து கொண்டிருப்பீராக. அவனை மறந்திருப்போரில் ஒருவராக நீர் இருக்க வேண்டாம்". (7:205)

**திக்ர் இருவகைப்படும்**

**1. திக்ர் கல்பி - உள்ளத்தால் செய்யும் திக்ர்**

திக்ர் கல்பி என்பது உள்ளத்தால் அல்லாஹ்வை நினைவுபடுத்துவதாகும். உள்ளம் அல்லாஹ்வின் நினைவில் இருப்பதால் ஒளி பெறுகின்றது மென்மையடைகின்றது. நற்காரியங்களைச் செய்ய நெகிழ்ந்து கொடுக்கின்றது. அல்லாஹ்வின் நினைவில் வாழாத உள்ளமோ வறட்சியடைந்து ஷைத்தானின் இருப்பிடமாக மாறிவிடுகின்றது.

“அல்லாஹ்வின் திக்ரை விட்டும் விலகி எவருடைய உள்ளங்கள் கடினமாகிவிட்டனவோ அவர்களுக்குக் கேடுதான். இத்தகையோர் பகிரங்கமாக வழிகேட்டில் இருக்கின்றனர்.” (39:22)

“யார் (பேரருள் மிக்கவனான) அர்ரஹ்மானின் திக்ரைப் புறக்கணிக் கின்றனரோ! நாம் அவனுக்கு ஒரு ஷைத்தானை ஏற்படுத்தி விடுவோம். அவன் அவனது நெருங்கிய நண்பனாகி விடுகின்றான்.” (43:36)

## 2. திக்ர் லிஸானி - நாவினால் மொழியும் திக்ர்

“திக்ர் லிஸானி” என்பது அல்லாஹ்வை நினைவுபடுத்தும் வார்த்தைகளை நாவினால் மொழிவதாகும். இது மிக முக்கியமான ஓர் அமலாகும். மார்க்கக் கடமைகளைப் பாரமாகக் கருதிய ஒரு மனிதன் எப்போதும் கடைப்பிடித்து வரக்கூடிய ஒன்றைக் காட்டித் தருமாறு நபி அவர்களிடம் கேட்டபோது, எப்போதும் உனது நாவு அல்லாஹ்வின் திக்ரால் நனைந்திருக்கட்டும் என்று பதில் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொருட்செறிவு மிக்க திக்ர்களை மொழிந்துள்ளார்கள். அவை அல்லாஹ்வின் ஏகத்துவத்தை வெளிப்படுத்தும் தஹ்லீல்களாகவும் அவனைத் துதிக்கும் தஸ்பீஹ்களாகவும் அவனைப் புகழும் தஹ்மீத்களாகவும் அவனைப் பெருமைப்படுத்தும் தக்பீர்களாகவும் காணப்படுகின்றன.

### திக்ர் பற்றிய நபிமொழிகள்

“லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமாவை ஒரு தட்டிலும் வானங்கள் பூமியில் உள்ளவற்றை இன்னொரு தட்டிலும் வைத்தால் கலிமா வைக்கப்பட்ட தட்டே எடையில் கூடியதாக இருக்கும்.” (நஸாஈ)

“யார் ஒரு நாளைக்கு “சுப்ஹானல்லாஹிவபிஹம்திஹி” என்று 100 முறை கூறுகின்றாரோ அவரது பாவங்கள் கடல் நுரையளவு இருந்தாலும் மன்னிக்கப்படும்” (புஹாரி, முஸ்லிம்).

“அல்ஹம்துலில்லாஹ்” எனும் திக்ர் மீஸானை நன்மைகளால் நிரப்பும்.

“ஸுப்ஹானல்லாஹ் அல்ஹம்துலில்லாஹ்” என்பன வானங்கள் பூமிக்கு இடைப்பட்டவற்றை நன்மைகளால் நிரப்பும். (முஸ்லிம்)

இரு வார்த்தைகள் உள்ளன. இவை நாவிற்கு இலகுவானவை, மீஸானில் எடை கூடியவை, ரஹ்மானாகிய அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவை. அவை ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அளீம்" என்பனவாகும். (முஸ்லிம்)

இவை திக்ரு செய்வதற்கு மக்களை ஆர்வமூட்டும் சில ஹதீஸ்களாகும். நபி (ஸல்) அவர்கள் திக்ர் செய்வதற்கு மிகவும் பொருத்தமான நேரங்களையும் காட்டித் தந்துள்ளார்கள், அவையாவன.

- காலை மாலை வேளைகள்
- பர்ழான தொழுகைகளுக்குப் பின்
- தூங்குவதற்கு ஆயத்தமாகும் வேளை

இந்நேரங்களை நாம் திக்ருக்காக ஒதுக்கிக் கொள்ள முயல்வதுடன் நாவினால் திக்ரை மொழியும்போது எமது உள்ளமும் இறை நினைவில் ஈடுபட வேண்டும். வாழ்வின் எல்லா நிகழ்வுகளிலும் இறைவனை நினைவில் விருத்தி செய்ய இவரது ஒரு முஸ்லிமின் பண்பாக அமைய வேண்டும்.

## 6. துஆ

"துஆ" என்ற அறபுப் பதம் பிரார்த்தனை என்ற மொழிக் கருத்தைத் தருகிறது. பிரார்த்தனை ஓர் இபாதத் ஆகும். ஆதலால் அடியான் அல்லாஹ் ஒருவனிடமே தன் தேவைகளை விண்ணப்பித்துப் பிரார்த்திக்க வேண்டும். அல்லாஹ்வை அன்றி வேறு எவரையும் அழைத்துப் பிரார்த்திப்பது அல்லாஹ்வுக்கு இணைவைத்தலாக அமைகிறது. அல்லாஹ்வையே அழைத்துப் பிரார்த்திக்குமாறு அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

"நீங்கள் என்னையே அழையுங்கள். நான் உங்களுக்குப் பதில் அளிக்கின்றேன்" (40 : 60)

"மேலும் (நபியே) என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால், (அதற்கு நீர் கூறுவீராக) நிச்சயமாக நான் (அவர்களுக்கு) மிகச் சமீபமாகவே இருக்கின்றேன். அழைப்பவரின் அழைப்புக்கு, அவர் என்னை அழைத்தால் நான் பதிலளிப்பேன்" (2 : 186)

“அல்லாஹ்வுடன் வேறு எந்த இறைவனையும் அழைத்துப் பிரார்த்திக்க வேண்டாம். அவ்வாறு பிரார்த்தித்து அழைத்தால் அதனால் நீர் வேதனை செய்யப்படுபவர்களில் (உள்ளவராக) ஆகிவிடுவீர்” (26 : 213)

பின்வரும் நபிமொழிகள் பிரார்த்தனையின் சிறப்புக்களை எடுத்துக் காட்டுகின்றன.

* பிரார்த்திப்பது இறை வணக்கமாகும். (திர்மிதி)
* மு.ஃ.மினின் ஆயுதம் பிரார்த்தனையாகும். (ஹாகிம்)
* பிரார்த்தனையை விட அல்லாஹ்வுக்கு விருப்பமான செயல் எதுவுமில்லை. (அஹ்மத்)
* அல்லாஹ்விடம் அவனது அருளைக் கேளுங்கள். அவனிடம் கேட்பதையே அவன் விரும்புகிறான். (திர்மிதி)
* யார் அல்லாஹ்விடம் கேட்கவில்லையோ அவன்மீது அல்லாஹ் கோபப்படுகின்றான். (அஹ்மத்)
* கஷ்டங்களும் துன்பங்களும் நிறைந்த காலங்களில் ஓர் அடியானது பிரார்த்தனைகளுக்குப் பதில் கிடைக்கவேண்டு மென்றால் அவன் நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் இருக்கும் காலங்களில் அதிகமாகப் பிரார்த்திக்கட்டும். (திர்மிதி)
* நிச்சயமாக அல்லாஹ் மிகவும் வெட்கமுடையவன் ; தாராளத்தன்மை கொண்டவன். தனது அடியான் உயர்த்திய கரங்களை வெறும் கைகளாக திருப்பி அனுப்புவதற்கு அவன் மிகவும் வெட்கப்படுகிறான்.” (திர்மிதி)

**பிரார்த்தனை மூலம் அடியான் பல்வேறு பயன்களைப் பெறுகிறான். அவற்றுள் சில வருமாறு :**

* பிரார்த்தனை மனித உள்ளத்தில் இருக்கும் பெருமை மற்றும் மமதையை நீக்கும். அல்லாஹ் ஒருவனே சகலவற்றையும் நிறைவேற்றுபவன் என்ற உயர் விசுவாசத்தையும், பணிவையும் ஏற்படுத்தும்.

  பிரார்த்தனை உள்ளத்திற்கு நிம்மதியைத் தரும் ; கவலைகளை அகற்றும்; காரியங்களை இலகுபடுத்தும் ; மனச் சுமைகளை நீக்கும்.



10-CM14797

**பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின் பின்வரும் ஒழுங்குகளை பேணுவது அவசியமாகும்.**

**பிரார்த்திப்பதற்கான ஒழுங்குகள்**

* அல்லாஹ்விடம் மாத்திரமே பிரார்த்தித்தல்.
* உறுதியான நம்பிக்கையுடன் பிரார்த்தித்தல்.
* உணவு, உடை, பானம் என்பன ஹலாலானவையாக இருத்தல்.
* அல்லாஹ்வைப் புகழ்ந்து முஹம்மத் நபி (ஸல்) மீது ஸலாவத்துச் சொல்லி பிரார்த்தனையை ஆரம்பித்தல்.
* அல்லாஹ்வை அவனுடைய அழகிய திருநாமங்களால் அழைத்துப் பிரார்த்தித்தல்.
* மன்றாடி உள்ளச்சத்துடன் பிரார்த்தித்தல்.
* மிஸ்வாக் செய்து வுழூவுடன் பிரார்த்தித்தல்.
* கிப்லாவை முன்னோக்குதல்.
* இரு கைகளையும் உயர்த்துதல்.
* குரலைத் தாழ்த்துதல்.
* மூன்று முறை பிரார்த்தித்தல்.
* பிரார்த்திக்க முன் நற்செயலொன்றைப் புரிதல்.

**பிரார்த்திப்பதற்கான சிறந்த சந்தர்ப்பங்கள்**

* ஐங்காலத் தொழுகையின் பின்
* இரவின் பிற்பகுதி.
* வுழூச் செய்த பின்.
* அதானுக்கும் இகாமத்துக்கும் இடையில்
* ஸுஜூதில் இருக்கும்போது (அறபியில்)
* மழை பொழியும்போது
* ஜும்ஆ நாளில்
* நோன்பு துறக்கும்போது
* லைலதுல் கத்ர் இரவில்
* அரபா நாளில்.
* ஸம்ஸம் நீர் அருந்துகையில்

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் செய்த பிரார்த்தனைகளைக் கற்றுக் கொள்வோம். பிரார்த்தனையின் ஒழுங்குகளைப் பேணி எல்லா நிலையிலும் மனம் உருகி அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

## 7. அல்கவ்பு - அர்ரஜாஉ

"அல்கவ்பு" என்பது "அச்சம்" என்ற பொருளைத் தருகிறது. அல்லாஹ்வின் தண்டனைக்குப் பயந்து அச்சத்துடன் வாழ்வதை இது குறிக்கும்.

ஒரு முஸ்லிம் எப்போதும் பாவம் செய்வதற்கு பயப்படுவான்; "அல்கஹ்ஹார்" (அடக்கியாள்பவன்), "அல்ஜப்பார்" (அதிகாரமிக்கவன்) போன்ற அல்லாஹ்வின் திருநாமங்களையும், "அல்முன்தகிம்", (கடுமையாகத் தண்டிப்பவன்) போன்ற பண்பையும் எண்ணி அச்சத்துடன் வாழ்வான். எனவேதான் "ஒரு மு.ஃமின் எந்த நிமிடத்திலும் சரிந்து விழலாம் என்ற நிலையில் இருக்கின்ற மலைக்குக் கீழ் அமர்ந்திருக்கின்ற ஒரு மனிதனைப் போல தனது பாவங்களைக் காண்பான். ஆனால் ஒரு பாவியோ தன் பாவங்களை தனது மூக்கைக் கடந்து சென்ற, தான் தட்டி விட்ட ஒரு ஈயைப் போலக் காண்கிறான்". (புகாரி) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தனது தண்டனைக்குப் பயந்து நடக்குமாறு அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் மனிதர்களை எச்சரிக்கின்றான். "நபியே! நிச்சயமாக உமது இரட்சகனின் பிடி மிகக் கடுமையானது"(85 : 12) என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. அதேவேளை, ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் மன்னிப்பையும் அருளையும் ஆதரவு வைத்து நடக்கவேண்டுமென அல்குர்அன் பல இடங்களில் கூறுகின்றது. அவ்வாறு ஆதரவு வைத்து நடப்பதை "அர்-ரஜாஉ" என்கிறோம்.

"(நபியே ! நான் கூறியதாக) நீர் கூறும் : வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட எனது அடியார்களே ! அல்லாஹ்வின் அருளைப் பற்றி நீங்கள் நம்பிக்கை இழந்து விடவேண்டாம். (நீங்கள் பாவத்திலிருந்து விலகி, மனம் வருந்தி மன்னிப்கை கோரினால்) நிச்சயமாக அல்லாஹ் உங்களின் பாவங்கள் யாவையும் மன்னித்து விடுவான். ஏனென்றால் நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்போனும் கிருபை உடையோனுமாக இருக்கின்றான்". (39:53)

"அல்லாஹ்வின் அருளிலிருந்து நீங்கள் நம்பிக்கை இழந்து விடாதீர்கள். நிச்சயமாக நிராகரிப்போரைத் தவிர, (மற்றெவரும்) அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிடமாட்டார்கள்". (12:87) அல்லாஹ்வின் அருள் எவ்வளவு விசாலமானது என்பதையும் அவன் தன் அடியார்களை மன்னிப்பதற்கு எவ்வளவு தூரம் விருப்பமுள்ளவனாக இருக்கின்றான் என்பதையும் மேற்படி வசனங்கள் விளக்குகின்றன.

அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களில் அதிகமானவை அவனுடைய அன்பு, இரக்கம், கருணை, தயாளம், கொடை, மன்னிப்பு என்பவற்றையே உணர்த்திக் கொண்டிருக்கின்றன. "அல்கவ்பு" எனும் அச்சம் "அர்ரஜாஉ" எனும் ஆதரவு வைத்தல் அல்லது பயம் எதிர்பார்ப்பு என்ற இந்த இரு நிலைகள் குறித்தும் இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் ஓர் அழகிய விளக்கத்தை தருகிறார்கள். பயம், எதிர்ப்பார்ப்பு இவற்றில் எது சிறந்தது என்று எவரேனும் கேட்பாராக இருந்தால், அந்தக் கேள்வி ரொட்டி சிறந்ததா? அல்லது தண்ணீர் சிறந்ததா என்ற கேள்வி போன்றதாகும். ஏனெனில், ஒருவருக்கு இரண்டும் அவசியமாகும். இங்கு மிகைத்து நிற்கும் தேவை எது எனப் பார்ப்பதே முக்கியமானது. அந்த வகையில், பசி மிகைத்து நின்றால் அவனுக்கு ரொட்டி முக்கியமானது. தாகம் மிகைத்து நின்றால் அவனுக்கு தண்ணீர் முக்கிமானது. இரண்டும் சமமாக இருப்பின் இரண்டினதும் தேவையும் சமனாகவே இருக்கும். இதுபோல்தான் பயமும், எதிர்ப்பார்ப்புமாகும். இரண்டில் எது சிறந்தது என்பது அதன் நோக்கத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. பயம், எதிர்பார்ப்பு இரண்டும் உள்ளத்தின், நோய்க்கு மருந்தாகவே அமைகின்றன. எனவே, உள்ளத்தில் உள்ள நோயின் வடிவத்தைப் பொறுத்தே பயம் சிறந்ததா? அல்லது எதிர்பார்ப்பு சிறந்ததா? எனத் தீர்மானிக்கப்படுகிறது.

நான் பூரணமாக இருக்கிறேன். என்னில் எந்தக் குறையுமில்லை என்ற இறுமாப்பு உள்ளத்தில் உள்ளபோது பயத்தின் தேவை அதிகம். எனவே, அவனுக்கு பயமே சிறந்தது. அல்லாஹ்வின் அருளில் ஒருவன் நம்பிக்கையிழந்து போயுள்ள நிலையில் அங்கு எதிர்பார்ப்பு அவசியப்படுகிறது. அவனுக்கு எதிர்பார்ப்பே சிறப்புக்குரியதாகிறது. பொதுப்படையாக நோக்குகின்ற பொழுது அதிகமான மனிதர்களுக்கு எதிர்பார்ப்பை விடவும் பயமே பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

இமாம் இப்னுல் கையிம் அவர்கள் கூறுகிறார்கள் : "அல்லாஹ்வை நோக்கிய உள்ளத்தின் பயணம் ஒரு பறவையைப் போன்றது. அல்லாஹ்வின் மீதான அன்புதான் அதன் தலையாகும். பயமும் எதிர்பார்ப்பும் தான் அதன் இரு சிறகுகளாகும். தலையும் இரு சிறகுகளும் சீராக உள்ள ஒரு பறவை சிறப்பாய்ப் பறக்கும். தலை துண்டிக்கப்பட்டால் பறவை இறந்துவிடும். சிறகுகளை இழந்தால் அது எந்த வலையிலும் சிக்கும் வாய்ப்பிருக்கிறது. இது போல்தான் அன்பும் பயமும் எதிர்பார்ப்புமாகும். ஆனால், ஸலப்களைப் பொறுத்தவரையில், ஆரோக்கியமான காலங்களில் பயத்தின் பக்கமே அதிகரித்துக் காணப்பட்டனர்.

ஆனால் உலகை விட்டுச் செல்லும் நாட்கள் நெருங்கும்போது பயத்தின் பக்கத்தை விட எதிர்பார்ப்பின் பக்கமே அதிகரித்திருக்க விரும்புவார்கள். (தஹ்தீப் மதாரிஜ் ஸாலிஹீன்)

மேலுள்ள இரு கூற்றுக்களும் கவ்ப், ராஜாஉ என்ற ஆன்மீக பண்புகளை தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன.

## 8. ரிழா

“ரிழா” என்பதற்கு திருப்தி என்று பொருள் கூறுவர். ஆன்மீக வாழ்க்கையில் ஒருவர் பெற்றுக் கொள்கின்ற மகத்தான வெற்றியே இறை திருப்தியாகும். அல்லாஹ்வின் முடிவுகளில் ஒருவர் திருப்தி காண்கின்றபோது அல்லாஹ்வும் அம்மனிதன் பற்றித் திருப்தியடைகின்றான். சோதனைகளின்போது பொறுமையாக இருப்பதும், வசதிகள் வருகின்றபோது அதற்காக நன்றி செலுத்துவதம், தீர்ப்புக்குரிய இடங்களில் திருப்தியோடு நடந்து கொள்வதும் விசுவாசிகளின் அடையாளம் என நபியவர்கள் ஸஹாபாக்களது கேள்வியொன்றுக்குப் பதிலளித்தபோது குறித்துக் காட்டினார்கள். அப்போது நபியவர்கள் மு∴மின்கள் தமக்குக் கிடைத்துள்ள சுவனபதியை விட அல்லாஹ்வின் திருப்தியையே விரும்புவதாகவும் குறிப்பிட்டார்கள்.

நபித்தோழர்கள் தமது வாழ்க்கையில் எதிர்கொண்ட வெற்றி தோல்விகளின் போது அவற்றை திருப்தியுடன் ஏற்றுக்கொண்டனர். இதனால் அவர்கள் வெற்றிகளின்போது கர்வம் கொள்ளவில்லை. தோல்விகளின் போது விரக்தியடையவு மில்லை. அவர்களைப் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு சிலாகிக்கின்றது.

“அல்லாஹ்வும் அவர்களைப் பொருந்திக் கொண்டான். அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டனர்.” (98 : 8)

ஓர் இறைவிசுவாசி அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வரக்கூடிய அனைத்துமே நன்மையானது என்றே சிந்திப்பான். அல்லாஹ் அவனை வைத்திருக்கும் நிலை குறித்து அவன் திருப்திப்படுவான். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸஅத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

“தனக்காக அல்லாஹ் நிர்ணயிப்பதை ஏற்றுத் திருப்திகொள்வது, அதனைப் போதுமானதாக்கிக் கொள்வது, மனிதனின் நற்பேறாகும். அல்லாஹ்விடம் நன்மையைக் கோரி இறைஞ்சாமலிருப்பது மனிதனின் துர்ப்பாக்கியமாகும். அல்லாஹ்வின் கட்டளையைக் குறித்தும், தீர்ப்பைக் குறித்தும் அதிருப்தி கொள்வதும் மனிதனின் துர்ப்பாக்கியமேயாகும்.” (திர்மிதி)

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு கடுமையான உழைப்பும், தியாகமும் அவசியமாகும். ஸஹாபாக்கள் தம்மை மார்க்கத்துடன் முழுமையாகப் பிணைத்துக்கொள்வதன் மூலமும், செல்வம் உயிர் என்பவற்றை அவனது பாதையில் தியாகம் செய்வதன் மூலமும், மக்களோடுள்ள உறவுகளை சீராக அமைத்துக் கொள்வதன் மூலமுமே அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக்கொண்டனர்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “மறுமை நாளில் அல்லாஹ் மனிதனிடம் கூறுவான். மனிதனே ! நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். நீயோ என்னை நலம் விசாரிக்க வரவில்லை. மனிதன் பதற்றத்துடன் கேட்பான். என் இறைவனே ! நீயோ அனைத்துலகையும் பரிபாலித்துக் காப்பவன். நீ எப்போது நோயுற்றிருந்தாய். நான் எவ்வாறு உன்னை நலம் விசாரிப்பது. அல்லாஹ் கூறுவான். இன்ன மனிதன் நோயுற்றிருந்ததை நீ அறிந்திருந்தாய் தானே. ஆனால் அவனது உடல் நலம் பற்றி நீ விசாரிக்கச் செல்லவில்லையே. நீ அவனைப் பார்க்கச் சென்றிருந்தால் அங்கே என்னைப் பார்த்திருப்பாய். பிறகு இறைவன் கேட்பான். மனிதனே நான் உன்னிடம் உணவு கேட்டேன்; நீ எனக்கு உணவளிக்கவில்லையே ! மனிதன் சொல்வான் ; அகிலமனைத்தின் அதிபதியே நீ எப்போது பசியுடன் இருந்தாய்? நான் உனக்கு உணவளிப்பது எவ்வாறு? இறைவன் சொல்வான். இன்ன மனிதன் உன்னிடம் உணவு கேட்டானே! உனக்கு நினைவில்லையா? ஆனால் நீ அவனுக்கு உணவளிக்கவில்லை. நீ அவனது தேவையை நிறைவேற்றியிருந்தால் என்னைப் பெற்றுக்கொண்டிருப்பாய்.

அல்லாஹ் கூறுவான். மனிதனே! நான் உன்னிடம் தாகத்திற்கு தண்ணீர்கேட்டேன். ஆனால் நீ குடிக்க தண்ணீர் தரவில்லையே ! மனிதன் கேட்பான், ஈருலகத்தின் பாதுகாவலனே ! நீ எப்போது தாகித்தாய்? நான் உனக்கு எவ்வாறு தண்ணீர் புகட்டுவது. அல்லாஹ் கூறுவான் ; இன்ன மனிதன்

உன்னிடம் தண்ணீர் கேட்டான். நீ அவனுக்கு தாகத்தைப் போக்க மறந்துவிட்டாயே! நீ அன்று அவனது தாகத்தைத் தீர்த்திருந்தால் இன்று அதற்கான கூலியைப் பெற்றிருப்பாய் ! (முஸ்லிம்)

இந்த ஹதீஸில் அல்லாஹ்வின் திருப்தியை மனிதன் பெறுவதற்கு அவன் அடியார்களின் தேவைகளை நிறைவு செய்து கொடுக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

அல்லாஹ்வின் திருப்திக்குட்பட்ட மனிதர்கள் உலக வாழ்வில் சோதிக்கப்படுகின்றனர். அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஒரு ஹதீஸ் இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

“அல்லாஹ் எந்த அடியானைப் பற்றியாவது நன்மையை நாடினால் அவருக்கு உலகில் விரைவில் துன்பத்தை அனுப்பி விடுகின்றான். ஆனால் அல்லாஹ் தன் அடியாரில் எவருக்கேனும் தீமையை நாடினால் அவரை விட்டும் சோதனைகளைத் தடுத்து மறுமையில் அதனைக் கொண்டு அவரைப் பரிபூரணமாகப் பிடித்துக் கொள்கிறான்.” (திர்மிதி)

உலகில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்ற மனிதனுக்கு புரியப்படும் அநியாயங்களுக்காக கோபப்படுகின்றான். இதனை பின்வரும் ஹதீஸ் குத்ஸி தெளிவுபடுத்துகின்றது. அல்லாஹ்வின் தூதர் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான். “என்மீது நேசம் வைத்துள்ளவர் மீது எவர் பகைமை கொண்டுள்ளாரோ அவருக்கு எதிராக நான் போர் தொடுப்பேன். நான் விதித்துள்ள மார்க்கக் கடமைகளை விட என்னால் அதிகமாக விரும்பப்படும் எதனையும் கொண்டு என் அடியான் என்னை நெருங்க இயலாது. நான் அவனை நேசிக்க வேண்டுமென்பதற்காக மேலதிகமான வணக்கங்கள் செய்வதன் மூலம் என் அடியான் என்னை நெருங்கிக் கொண்டு வருகின்றான்.”

“நான் அவனை நேசிக்கும்போது நான் அவன் கேட்கும் கேள்வியாகவும், பார்க்கும் பார்வையாகவும், அவன் பிடிக்கும் கரமாகவும், நடக்கும் காலாகவும் ஆகிவிடுகிறேன். என்னிடம் (எதையாவது) அவன் வேண்டினால் நான் நிச்சயமாக அதனை அவனுக்குக் கொடுக்கின்றேன். அவன் என்னிடம் பாதுகாப்புத் தேடினாலும் நிச்சயமாக நான் அவனைப் பாதுகாப்பேன். விசுவாசியான என் அடியானுடைய ஆன்மாவைக் கைப்பற்றுவதற்கு நான் காட்டும் தயக்கத்தைப் போன்று வேறு எதனையும் செய்வதற்கு நான் தயக்கம் காட்டுவதில்லை. அவன் மரணத்தை வெறுக்கிறான். நான் அவனுக்குத் துன்பம் ஏற்படுவதை வெறுக்கிறேன்.” (புகாரி)

அல்லாஹ்வின் முடிவுகளில் திருப்தி காணும் ஒரு மனிதனைப் பற்றி அல்லாஹ் திருப்தியடைகின்றான். அவனது இறுதி முடிவுகளும் சிறப்பானதாகவே அமைந்துவிடுகின்றன. பின்னர் அவனைப் பற்றி என்றும் அல்லாஹ் கோபப்படமாட்டான். நபி (ஸல்) அவர்கள் கூறுவதாக அபூ ஸயித் அல் குத்ரி (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

“அல்லாஹுத்தஆலா சுவர்க்கவாசிகளை நோக்கி சுவர்க்கவாசிகளே! என்றழைப்பான். அவர்கள் எங்கள் அதிபதியே இதோ நாங்கள் வந்து விட்டோம். உனது திருப்திக்காகவே நாங்கள் உள்ளோம். நன்மைகள் யாவும் உந்தன் கரங்களிலேயே உள்ளன என பதிலளிப்பார்கள். அல்லாஹ் நீங்கள் திருப்தியுடன் உள்ளீர்களா? என்று கேட்பான். சுவர்க்கத்து மக்கள், உனது படைப்புக்களிலேயே யாருக்கும் கொடுக்காத ஒன்றை நீ எங்களுக்குத் தந்திருக்கும்போது நாங்கள் எவ்வாறு திருப்தி கொள்ளாமல் இருக்க முடியும் என்று பதிலளிப்பார்கள். அல்லாஹ் இதனை விடச் சிறந்த ஒன்றை நான் உங்களுக்குக் கொடுக்கட்டுமா? என்று கேட்பான். சுவனவாசிகள் அதிபதியே ! இதனை விடச் சிறந்தது எது? என வினவுவார்கள். இதற்கு அல்லாஹ் நான் உங்கள் மீது என் திருப்பொருத்தத்தை இறக்குகிறேன். இதற்குப் பிறகு என்றுமே உங்கள் மீது நான் கோபப்படமாட்டேன் என்று பதிலளிப்பான்.” (புகாரி, முஸ்லிம், திர்மிதி)

# 9. தவக்குல்

நபி (ஸல்) அவர்கள் கீழ்வருமாறு கூறுகின்றார்கள் :

“நீங்கள் அல்லாஹ்வின் மீது உண்மையான தவக்குல் வைப்பீர்களாயின் அவன் பறவைகளுக்கு உணவளிப்பது போன்று உங்களுக்கும் உணவளிப்பான். அவை (பறவைகள்) காலையில் வெறும் வயிற்றுடன் சென்று மாலையில் (பசி தீர்ந்து) நிரம்பிய வயிற்றுடன் திரும்புகின்றன.” (திர்மிதி)

இது தவக்குல் பற்றி விளக்கும் ஓர் அடிப்படை ஹதீஸாகும் என்கிறார் இமாம் அபூஹாதிம் அர்ராஸி. இந் நபி மொழி கூறும் கருத்தை அல்குர்ஆனும் கீழ்வருமாறு விளக்குகின்றது. “எவர் இறைவன்பால் தக்வாவுடன் நடந்து கொள்கின்றாரோ, அவருக்கு அவன் அனைத்து விவகாரங்களிலும் ஒரு நல்வழியை ஏற்படுத்திக் கொடுப்பான். மேலும் அவரறியாத விதத்தில் அவருக்கு வாழ்க்கை வசதிகளையும் அளிப்பான். எவர் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைக்கின்றாரோ அவருக்கு அவனே போதுமானவன்.” (65:2-3)

உண்மையில் தவக்குல் என்பது ஈமானோடு தொடர்புடைய ஓர் அடிப்படைப் பண்பாகும். “நீங்கள் மு.ஃமின்களாக இருப்பின் அல்லாஹ்வின் மீதே தவக்குல் வைப்பீர்களாக” (5:23) எனக் கூறுகின்றது அல்குர்ஆன் மேலும் அது ஒவ்வொரு மு.ஃமினும் இப்பண்பைப் பெற்றிருத்தல் வேண்டுமெனக் கட்டளையாகக் கூறுகின்றது. “மு.ஃமின்கள் அல்லாஹ்வின் மீதே தவக்குல் வைக்கட்டும்.” (12:14) என்பது அல்குர்ஆனின் ஆணையாகும். அல்லாஹ் தனது தூதருக்கும் இதனையிட்டுப் பல சந்தர்ப்பங்களில் அல்குர்ஆனினூடாக ஏவி இருப்பதனைக் காண முடிகின்றது. “(நபியே!) நீர் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைப்பீராக ! நிச்சயமாக ! நீர் தெளிவான சத்தியத்தில் இருக்கின்றீர். (27:79) மேலும், “என்றும் மரணிக்காத நித்திய ஜீவனின் மீது நபியே நீர் தவக்குல் வைப்பீராக” (25:58)

உண்மையாக மு.ஃமின்கள் அனைவரினதும் ஓர் அடிப்படைப் பண்பாக தவக்குலைக் காணமுடிகின்றது. உண்மையான “மு.ஃமின்கள் யாரெனில் அல்லாஹ்வினுடைய திருநாமம் கூறப்பட்டால் அவர்களின் இருதயங்கள்

நடுங்கிவிடும். அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப் பட்டால் ஈமான் அவர்களுக்கு மேலும் அதிகரிக்கும். மேலும் அவர்கள் தங்கள் இறைவன் மீதே முற்றிலும் தவக்குல் வைத்தவர்களாவர்." (8:2)

இஸ்லாம் கூறும் தவக்குல் பற்றிய சரியான விளக்கத்தைத் தமக்கே உரிய எளிய நடையில் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கீழ்வருமாறு விளக்குகிறார். சிலர் உடலால் உழைக்காமலும் உள்ளத்தால் திட்டமிடாமலும் வீசப்பட்ட ஆடைத் துண்டைப் போன்றோ அல்லது இறைச்சிக்கடையில் போடப்பட்ட இறைச்சித் துண்டைப் போன்றோ எறிபட்டு இருப்பதே தவக்குல் என நினைக்கின்றனர். இது உண்மையில் அறிவிலிகளின் கருத்தாகும். இத்தகைய போக்கு ஷரீஅத்தில் ஹராமானதாகும். உண்மையில் தவக்குல் என்பது மனிதனின் வெளிப்படையான காரணிகள் இறைவனின் நாட்டத்தை நீக்க முடியாது என்றும், அவனது நாட்டமே அக்காரணிகளையும் அவற்றுக்கான அடிப்படைகள் உந்துதல் சக்திகள் உட்பட அனைத்தையும் கண்காணித்து நிற்கின்றன என்றும், அந்நாட்டமே அக்காரணிகளின் ஆரம்பம் இறுதி உட்பட அனைத்தையும் மேற்பார்வை செய்வதாக உள்ளது என்றும், உறுதியாக ஏற்று விசுவாசிப்பதாகும். மனிதன் செயற்பட வேண்டும், தனது செயலின் விளைவை இறைவனிடம் விட்டுவிட வேண்டும். இதுவே தவக்குலாகும்.

தவக்குல் பற்றி மேலும் விளக்கும் விதத்தில் இமாம் அஹ்மதின் கீழ்வரும் கூற்று அமைந்துள்ளது. தவக்குல் என்பது உள்ளத்துடன் தொடர்பான ஒரு செயற்பாடாகும். இக்கருத்தை நாம் விளக்க எடுத்துக்கொண்ட ஹதீஸின் அறிவிப்பாளரான உமர் (ரழி) கீழ்வருமாறு கூறுகின்றார். விதையைப் பூமியில் நட்டி விட்டுப் பின்னர் அல்லாஹ்வில் தவக்குல் வைப்பவரே உண்மையில் தவக்குல் கொண்டவராவார். "ஒட்டகத்தைக் கட்டி விட்டுப் பின்னர் தவக்குல் வைப்பாயாக" எனும் பிரபலமான நபிமொழியும் சரியான தவக்குலுக்கு விளக்கமாகவே அமைந்துள்ளது.

சுருங்கக்கூறின், இஸ்லாமிய கண்ணோட்டத்தில் தவக்குல் என்பது மனிதன் இவ்வுலகில் தனது அனைத்துக் காரியங்களையும் பௌதீக விதிகளுக்கு உட்பட்டு மேற்கொள்வதையும் அவற்றின் விளைவுகளை இறைவனிடம் ஒப்படைத்து விடுவதையும் குறிக்கும். விளைவுகள் தனக்குப் பாதகமாக அமையினும் அதனால் உள்ளம் இடிந்துவிடாது. பொறுமையிழந்துவிடாது. அவற்றைத் திருப்தியுடன்

ஏற்றுக்கொள்ளும் மனோ பக்குவத்தையே குறித்து நிற்கின்றது. இதனையே ஆத்மஞானி பிஷ்ருல் ஹாபி “அல்லாஹ்வின் முடிவுகளைத் திருப்தியுடன் ஏற்றுக்கொள்பவர் அல்லாஹ்வில் தவக்குல் வைத்தவராக இருக்க முடியும்” என்கிறார்.

எனவே மனிதன் தனது அனைத்து விவகாரங்களையும் தீர யோசித்து திட்டமிட்டுச் செயற்படுத்துவதும் அனைத்துக்குமான முன்னேற்பாடுகளையும் ஆயத்தங்களையும் மேற்கொள்வதும் தவக்குலுக்கு முரணானதல்ல, மாறாக தவக்குலின் பாறப்பட்டதேயாகும். இதனாலேயே தவக்குலின் அவசியத்தை வலியுறுத்தும் அல்குர்ஆன், மறுபக்கத்தில் மனிதன் பௌதீக விதிகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டிய தேவையை எடுத்துக் கூறுகிறது. உதாரணமாக கீழ்வரும் அல்குர்ஆன் வசனங்களை இங்கு குறிப்பிட முடியும்.

> "ஈமான் கொண்டவர்களே! (தற்பாதுகாப்புக்குரிய) ஆயத்தங்களை எடுத்துக் கொள்ளுங்கள்." (4 : 71)

> “அவர்களை எதிர்ப்பதற்காக (ஆயுத) பலத்தையும் போர்க் குதிரை களையும் உங்களுக்குச் சாத்தியமான அளவு நீங்கள் தயார்படுத்தி வையுங்கள்” (8 : 60)

> “தொழுகை முடிவு பெற்றால் பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடிக்கொள்ளுங்கள்.” (62 : 10)

தவக்குலை முழுமையாகவும் நிறைவாகவும் பெற்றிருந்த நபியவர்கள் தமது அனைத்து செயற்பாடுகளையும் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள பிரபஞ்ச நியதிகளுக்குக் கட்டுப்பட்டும், பௌதீகக் காரணிகளைக் கருத்திற் கொண்டும் அமைத்துக் கொண்டார்கள் என்பதனை அவர்களின் ஸீரா வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. உதாரணத்திற்காக முஸ்லிம்கள் மேற்கொண்ட முதலாவது ஹிஜ்ரத்தை எடுத்துக்கொண்டால் அதற்காக நபியவர்கள் எவ்வளவு தூரம் சிந்தித்து பௌதீக விதிகளைக் கருத்திற் கொண்டு செயற்பட்டிருக்கின்றார்கள் என்பதைக் காண முடிகின்றது. இம்முதல் ஹிஜ்ரத்துக்காக நபியவர்கள் தெரிவு செய்த இடம் அபிஸீனியாவாகும். பூகோள ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சமய அடிப்படையிலும் அன்றிருந்த சூழலில் அபிஸீனியாவைத் தெரிவு செய்வதே மிகப் பொருத்தமாக இருந்தது. ரோம பாரசீகத்தைப் பொறுத்தவரையில் அவை

அன்று இரு பெரும் வல்லரசுகளாக இருந்ததோடு ஆட்சியாளர்கள் அநியாயக்காரர் களாகவும் இருந்தனர். மக்களும் இஸ்லாத்துக்கு வெகுதூரமான நெருப்பு வணங்கிகளாகக் காணப்பட்டனர். அத்தகைய நாடுகளில் முஸ்லிம்களின் இச்சிறு கூட்டத்திற்குப் பாதுகாப்புக் கிட்ட முடியும் என எவ்வகையிலும் நம்ப முடியாது என நபியவர்கள் கருதியிருக்க வேண்டும். தொடர்புகளை வைத்து கொள்ள முடியாத அளவுக்கு இந்தியா, சீனா போன்ற நாடுகள் வெகு தூரத்தில் இருந்தன. ஆனால் அபிஸீனியாவோ எல்லா வகையிலும் பொருத்தமான ஓர் இடமாக இருந்தது. அது மக்காவுக்கு மிக அண்மையில் இருக்கவுமில்லை. வெகு தொலைவில் இருக்கவுமில்லை. அங்கே அன்றிருந்த ஆட்சியாளனோ மிக நேர்மையானவன் எனப் பெயர் பெற்றிருந்தவன். அந்நாட்டு மக்களும் மத ரீதியாக முஸ்லிம்களுக்கு மிக நெருங்கிய கிறிஸ்தவர்களாக இருந்தனர்.

மதீனாவுக்கு மேற்கொண்ட இரண்டாவது ஹிஜ்ரத்தின் போதும் நபி (ஸல்) அவர்கள் அனைத்து ஆயத்தங்களையும் முன்கூட்டியே மேற்கொண்டமையைக் காண முடிகின்றது. ஏற்கனவே மதீனா வாசிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்தி பல தீர்மானங்களை எடுத்தமை, அவர்களின் உறுதி மொழியைப் பெற்றமை, வழித் துணைக்காகத் தமக்கு மிக நெருக்கமான நம்பிக்கைக்குரிய அபூபக்ர் (ரலி) அவர்களைத் தெரிவு செய்தமை, வழிகாட்டியாக அப்துல்லாஹ் பின் உரைகத் என்பவரை ஏற்பாடு செய்துகொண்டமை, காபிர்கள் தான் தன் வீட்டில் இருப்பதாக நினைக்க வேண்டும் என்பதற்காக அலி (ரலி) அவர்களைத் தன் படுக்கையில் உறங்க ஏற்பாடு செய்தமை, பிரயாணத்தில் உணவுத் தேவையைக் கவனிப்பதற்காகவும் செய்திகளை உடனுக்குடன் அறியத் தருவதற் காகவும் அஸ்மா (ரழி), அப்துல்லாஹ் பின் அபீபக்ர் (ரழி) ஆகியோரை நியமித்தமை, மதீனாவுக்குச் செல்லும் வழமையான பாதையை விட்டு ஒரு புதுப்பாதையைத் தெரிவு செய்தமை, பயண நடுவில் தங்குவதற்கு தவ்ர் குகையைத் தெரிவு செய்யத் தீர்மானித்தமை, தாம் செல்லும் பாதையில் பாத அடையாளங்களை அழிப்பதற்காக ஒருவரை நியமித்தமை போன்ற பல முன்னேற்பாடுகளை நபியவர்கள் ஹிஜ்ரத்தின் போது மேற்கொண்டமை போன்றன திட்டமிடலும் முன் ஆயத்தமும் தவக்குலுக்கு முரணானதல்ல என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

யூசுப் (அலை) அவர்கள் தம் நாட்டுக்காக முன்வைத்த பதினைந்தாண்டுப் பொருளாதாரத்திட்டம் பற்றி அல்குர்ஆன் பிரஸ்தாபித்து இருப்பதனையும் ஈண்டு குறிப்பிட முடியும்.

இஸ்லாம் கூறும் ஒவ்வோர் அடிப்படையையும் உரிய விதத்தில் விளங்கிச் செயற்படுவதன் மூலமே எதிர்பார்க்கப்படும் ஈருலக பலாபலன்களை நிறைவாகப் பெற்றிட முடியும் என்பதனைக் கருத்திற் கொள்வோமாக.

## 10. பேணுதல் (அல்வரஉ)

“உனக்குச் சந்தேகம் ஏற்படுத்தக்கூடியதை விட்டுவிட்டுச் சந்தேகம் ஏற்படுத்தாததைப் பின்பற்றுவாயாக” என றஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதை தான் மனப்பதிவு செய்து கொண்டதாக றஸுலுல்லாஹ்வின் பேரர் ஹஸன் இப்னு அலி (ரழி) அறிவிக்கிறார்கள்.

இஸ்லாம் கூறும் உயர்பண்பான பேணுதல் (அல்வரஉ) பற்றிய கருத்துக்கு அடிப்படையாக இந்த ஹதீஸ் கொள்ளப்படுகிறது. மார்க்கத்தில் சந்தேகத்திற்கிடமானவற்றைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் பற்றி இது கூறுகின்றது. ஒருமுறை றஸுலுல்லாஹ் ஒரு மனிதரைப் பார்த்து உமக்குச் சந்தேகமானவற்றை விட்டு விட்டு சந்தேகமில்லாததைப் பின்பற்றும் எனக் கூறினார்கள். அதற்கு அவர் அதனை எவ்வாறு அறிந்துகொள்ள முடியும் எனக் கேட்டார். அப்போது நபிகளார் ஒரு விடயத்தை நீர் செய்ய நாடினால் உமது நெஞ்சில் கை வைத்துப் பார்ப்பீராக. நிச்சயமாக உள்ளம் ஹராத்திற்கு முன்னால் குழப்பமடையும். ஹலாலுக்கு முன்னால் திருப்தியடையும். மன நிறைவையும் காணும். மேலும் பேணுதலான முஸ்லிம் எப்போதும் பெரும் பாவத்திற்கஞ்சி சிறுபாவத்தையும் விட்டு விடுபவனாக இருப்பான் என்றார்கள். (அத்தபரானி)

அல்வரஉ எனும் பேணுதலுக்கு வரைவிலக்கணமாகவும் இந்நபி மொழியைக் கொள்ளலாம். இதனை அடிப்படையாக வைத்தே பல அறிஞர்கள் பேணுதலுக்கு விளக்கங் கொடுப்பதை அவதானிக்க முடிகிறது. இமாம் அல் குஷைரி பேணுதல் (அல்வரஉ) என்பது சந்தேகத்திற்குரியவற்றை விடுவதைக் குறிக்கும் எனக்குறிப்பிடுகிறார். இப்ராஹீம் இப்னு அத்ஹம் பேணுதல் (அல்வரஉ) என்பது சந்தேகத்திற்குரிய அனைத்தையும் விட்டுவிடுவதையும் உனக்கு அவசியமற்ற தையும் தொடர்பற்றதையும் விட்டு விடுவதை குறிக்கும் என்றார்.

பேணுதலுக்கு இதைவிட ஆழமான விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. யஹ்யா இப்னு முஆத் பேணுதலை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து நோக்குகிறார். வெளிப்புறப் பேணுதல், உட்புறப் பேணுதல் ஆகியவையே அவையிரண்டுமாகும். அல்லாஹ்வுக்காகவே செயல்படுகின்ற தன்மையை வெளிப்புறப் பேணுதல் என்றும், அல்லாஹ்வை மாத்திரமே உள்ளத்தில் இருத்தி வேறு எவருக்கும் எதற்கும் அதில் இடம் கொடுக்காத தன்மையை உட்புறப் பேணுதல் என்றும் குறிப்பிடுகிறார்.

இப்பண்பு ஒரு முஃமினைப் பொறுத்தவரையில் அவசியம் இருக்க வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் இப்பண்பு இல்லாதவரை ஒருவர் முத்தகீன் ஆக முடியாது. இதனைக் கீழ்வரும் ஹதீஸ் விளக்குகின்றது. "குற்றமுள்ளது நிகழ்ந்து விடுமோ எனும் பயத்தினால் குற்றமில்லாததை விடுகின்ற தன்மை (அதாவது பேணுதல்) உருவாகாத வரை ஓர் அடியான் முத்தகீன்களில் ஒருவராக மாற முடியாது. (திர்மிதி)

இப்பண்பு நமது எண்ணத்திலும் பேச்சிலும் செயலிலும் வரவேண்டுமென அறிஞர்கள் கூறுவர். பேச்சில் பேணுதலாக நடத்தல் எனும் போது அனைத்து வகையான வீண் பேச்சுக்களை விட்டும் நாவைத் தடுத்துக் கொள்வதைக் குறிக்கும். உள்ளத்தால் பேணுதலாக நடத்தல் என்பது உள்ளத்தை அற்பமான சிந்தனைகளிலிருந்து விடுவித்து அல்லாஹ்வின் சிந்தனையால் நிரப்புவதைக் குறிக்கும். செயலில் பேணுதலாக நடத்தல் என்பது உணவு, உடை ஆகியவற்றை முழுக்க முழுக்க ஹலாலாக அமைத்துக் கொள்வதில் காட்டும் சிரத்தையைக் குறிக்கும்.

அல்வரஉ எனும் பேணுதல் மூன்று படித்தரங்களைக் கொண்டது என ஆன்மீக அறிஞர்கள் கூறுவர். தீயவற்றைத் தவிர்ப்பது அவற்றில் முதலாவது நிலையாகும். இதனால் மூன்று நன்மைகள் ஏற்படுமென அவர்கள் கூறுகின்றனர். அவையாவன :-

1. அல்லாஹ், மலக்குகள், மனிதர்கள் உட்பட ஏனைய படைப்பினங்கள் மத்தியில் களங்கம் ஏற்படாதவாறு உள்ளத்தைப் பாதுகாக்கும் நிலையைப் பெறல்.

2. நன்மைகளைப் பேணும் பேற்றைப் பெறல். அதாவது தீமைகள் செய்யும் நேரத்தை நன்மைகள் செய்வதற்குப் பயன்படுத்தவும், தீமைகளால் செய்த நன்மைகள் குறையாவண்ணம் இருக்கும் வாய்ப்பையும் பெறல்.

3. ஈமானைப் பாதுகாத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டல். ஏனெனில் ஈமானானது நன்மை செய்யும் போது கூடவும், பாவம் செய்வதனால் குறையவும் செய்கின்றது.

குற்றமற்றவற்றையும் தவிர்த்தல் பேணுதலின் இரண்டாம் படித்தரமாகும். இப் படித்தரத்தையடைந்தோர் ஆகுமானவற்றையும் குற்றம் நிகழ்ந்து விடும் என்ற பயத்தின் காரணமாகத் தவிர்ப்போராயிருப்பர்.

தன்னுடைய நேரம், காலம், கவனம் அனைத்தையும் அல்லாஹ்வில் குவிப்பதையும், ஒருமுகப்படுத்துவதையும் தடுக்கின்ற அனைத்து விடயங்களையும் தவிர்த்தல் பேணுதலின் இறுதிப் படித்தரமாகக் கொள்ளப்படுகின்றது.

உண்மையில் பேணுதல் எனும் பண்பு ஒருவரில் அமைந்து விடும்போது அவரது அனைத்து நடவடிக்கைகளும் சீராகிவிடும் என்பதில் ஐயமில்லை. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் அபூஹுரைரா (ரழி) அவர்களுக்கு கீழ்வருமாறு கூறினார்கள். “அபூஹுரைராவே! பேணுதல் உடையவராக இருப்பீராக ! அப்போது நீரே மனிதர்களில் பெரும் வணக்கவாளியாக இருப்பீர்.” (திர்மிதி)

இப்பண்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த நபித் தோழர்கள் இதனை எவ்வளவு தூரம் கடைப்பிடித்தார்களெனின் அவர்களிற் சிலர் ஒரு ஹராம் நிகழ்ந்து விடுமோ என அஞ்சி எழுபது ஹலால்களைத் தவிர்ப்போராய் இருந்து வந்துள்ளனர்.

## 11. பற்றற்ற வாழ்வு (ஸுஹ்த்)

“ஸுஹ்த்” என்பது உலகப்பற்றின்மை, பற்றற்ற வாழ்வு என்ற கருத்தை தருகிறது. இறை கட்டளையை முற்றாக ஏற்று நடப்பதற்காக, உலக ஆசையை உள்ளத்தை விட்டும் நீக்கி மறுமை பற்றிய சிந்தனையுடன் வாழ்வதை இது குறிக்கும். “தாருல்பகா” எனும் முடிவில்லா மறுமை வாழ்வை மறந்துவிடாமலிருப்பதற்காக ஒவ்வொருவருக்கும் உலகப் பற்றின்மை அவசியமாகும்.

ஸஹ்ல் பின் ஸஃத் அஸ்-ஸாஇதிய்யி (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். “நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் எந்தச் செயலைச் செய்தால் அல்லாஹ்வும் என்னை நேசித்து, மனிதர்களும் என்னை விரும்புவார்களோ அத்தகைய செயலொன்றை எனக்குக் காட்டித் தாருங்கள் என்று வினவினார். அதற்கு நபியவர்கள் உலகில் பற்றற்றவனாக இரு, அல்லாஹ் உன்னை நேசிப்பான். மனிதர்களிடம் உள்ளவற்றை விட்டும் தேவையற்றவனாக இரு, மனிதர்கள் உன்னை நேசிப்பார்கள் என விடை பகர்ந்தார்கள். (இப்னு மாஜா)

நபி (ஸல்) அவர்கள் தம் வாழ்நாளில் மக்களுக்குச் செய்த இரண்டு மகத்தான உபதேசங்களை இந்த ஹதீஸ் உள்ளடக்கியிருப்பதை அவதானிக்கலாம்.

(1) இவ்வுலகில் ஒரு மனிதன் பற்றற்ற முறையில் தன் வாழ்வை அமைத்துக் கொள்ளல் வேண்டும். இது அவனுக்கு அவனது இறைவனின் அன்பைப் பெற்றுக்கொடுக்கும்.

(2) மக்களின் கைகளிலுள்ளவற்றின் மீதான ஆசையை விட் டொழிப்பது, இது அவர்களது அன்பையும் நேசத்தையும் அவ்வாறு வாழ்கின்ற மனிதனுக்குப் பெற்றுக்கொடுக்கும்.

முதலாவது உபதேசம் ஒரு மனிதனுக்கும் இவ்வுலகத்துக்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அடுத்த உபதேசம் ஒரு மனிதனுக்கும் அவனது சமூகத்துக்கு மிடையிலான தொடர்பு எப்படி அமைய வேண்டும் என்பதையும் விளக்குகின்றன.

நபியவர்களின் இரத்தினச் சுருக்கமான இவ்வுபதேசங்களை உறுதிப்படுத்துகின்ற வகையில் பல குர்ஆன் வசனங்களும் வேறு பல நபி மொழிகளும் காணப்படுகின்றன.

"அவர்கள் இவ்வுலக வாழ்வையிட்டுச் சந்தோஷமடைகிறார்கள். இவ்வுலக வாழ்வோ அற்ப சுகமேயன்றி வேறெதுவுமன்று" (13:26)

"உங்களை உலக வாழ்வு மயக்கி விட வேண்டாம்." (31 : 33)

"நீங்களோ, உலக வாழ்வையே மேலாக மதிக்கிறீர்கள். ஆனால் மறுமை தான் சிறந்ததும் நிலையானது மாகும்." (87 : 16, 17)

நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் இவ்வுலக வாழ்வை அற்பமான ஒன்றாக வர்ணித்திருக்கிறார்கள்.

ஜாபீர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். "நபி (ஸல்) அவர்கள் மக்கள் புடைசூழ சந்தையைக் கடந்து சென்றார்கள். அவ்வேளை இறந்து போன காது அறுபட்ட ஓர் ஆட்டுக்குட்டியைக் கடந்து கொண்டிருந்தார்கள். உடனே நபியவர்கள் அதனைப் பிடித்துத் தூக்கி இதனை உங்களில் யாராவது ஒரு திர்ஹம் கொடுத்து வாங்க விரும்புவாரா? என வினவினார்கள். அதற்கு மக்களோ எதனைக் கொடுத்தும் அதனைப் பெற்றுக்கொள்ள எங்களுக்கு விருப்பம் கிடையாது. அதனை வைத்து நாங்கள் என்ன செய்ய முடியும்?

என்றார்கள். அதற்கு நபியவர்கள் இது உங்களுக்குரியதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா? என்று கேட்டார்கள் மக்களோ அல்லாஹ்வின் மீது ஆணையாக அது உயிரோடு இருந்திருந்தாலே அது குறைபாடுடைய தாக இருந்திருக்கும். ஏனெனில் அதுவோ காதில்லாதது. அப்படியிருக்கையில் அது செத்துவிட்ட பின்பு எப்படி விரும்புவோம்? என்றனர். இதனைச் செவியுற்ற நபியவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களுக்கு இது எவ்வளவு இழிவாகத் தென்படுகிறதோ அதனை விட அல்லாஹ்விடம் இவ்வுலகம் அற்பமானது என்றார்கள்." (முஸ்லிம்)

"இவ்வுலகம் சபிக்கப்பட்டதாகும். அதிலுள்ளவைகளும் சபிக்கப்பட்ட வைகளே. அல்லாஹ்வின் திக்ரையும், அதற்கு உதவியாக அமைபவை களையும், அறிஞன் அல்லது கல்வி கற்பவனையும் தவிர என்று நபியவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் சொல்கிறார்கள்." (இப்னு மாஜா, திர்மிதி)

இனி பற்றற்ற நிலை (ஸுஹ்த்) எப்படி அமைய வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

உலகில் பற்றற்ற நிலையில் வாழ வேண்டும் எனும்போது உலகத்தை முற்றாகத் துறந்து அதன் பொருட்களையும் அப்படியே ஒதுக்கிவிட வேண்டும் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. அதுபோன்றே அதில் வாழ்கின்ற வாழ்வையும் வேண்டுமென்றே கஷ்டங்கள் மிக்கதாக கரடுமுரடானதாக ஆக்கிக் கொள்ளுதல் என்ற கருத்தையும் அது தராது. அவ்வாறு செய்வது ஸுஹ்த் (பற்றற்ற வாழ்வு) என்ற நிலையை விட்டும் "ரஹ்பானிய்யத்" என்ற துறவற நிலைக்கு இட்டுச் சென்று விடும்.

முதலாவது நிலையான "ஸுஹ்த்" இஸ்லாத்தில் வரவேற்கப்படுகின்ற அதே வேளை, இரண்டாவது நிலையான துறவறம் (ரஹ்பானிய்யத்) இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

"ஈமான் கொண்டோரே! அல்லாஹ் உங்களுக்கு ஆகுமாக்கி வைத்திருக்கும் நல்லவற்றை ஹராமாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் அத்துமீறாதீர்கள். நிச்சயமாக ! அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை." (5 : 87)

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். “உங்கள் மீது நீங்கள் கஷ்டங்களை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்வதனால் அல்லாஹ்வே உங்கள் மீது கஷ்டங்களை ஏற்படுத்திவிடக் கூடும். ஏனெனில் ஒரு கூட்டம் தம்மீது கஷ்டங்களை ஏற்படுத்திக் கொண்டதனால் அல்லாஹ்வும் அவர்கள் மீது கஷ்டங்களை ஏற்படுத்தினான். அதனால் வந்த எச்சசொச்சங்களே இந்த ஆசிரமங்களும் மடாலயங்களுமாகும். இது அவர்களே புதிதாக உருவாக்கிக் கொண்ட துறவற வாழ்வாகும். அதனை நாம் அவர்களுக்கு விதியாக்கியிருக்க வில்லை.”

“இஸ்லாத்தில் துறவறம் கிடையாது.” (அஹ்மத்) என்பதும் நபியவர்களின் இன்னொரு கூற்றாகும். எனவே பற்றற்ற வாழ்வு என்ற போர்வையில் கந்தல் ஆடைகள் அணிந்து கொண்டு எவ்விதமான உழைப்பிலும் சம்பாத்தியத்திலும் ஈடுபடாமல் மக்களின் தானதர்மங்களின் மூலம் வாழ்ந்து வருகின்ற, இஸ்லாத்திற்கும் இஸ்லாமிய சமூகத்துக்கும் உயர்வு தருகின்ற வேறு ஆக்கபூர்வமான பணிகள் எதிலும் ஈடுபடாமல் வெறுமனே வணக்க வழிபாடுகளில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற நிலையை இஸ்லாம் வரவேற்பதில்லை.

நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் உலகில் பற்றற்றவர்களாகவே வாழ்ந்தார்கள். எனினும் அவர்கள் அனைவரும் இவ்வுலகை வளப்படுத்தும் பணிகள் அனைத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மேலும் ஸஹாபாக்களில் சிலர் சமூக வாழ்வைத் துறந்து மலையிடுக்குகளில் சென்று அல்லாஹ்வை வணங்கப் போவதாகவும் திருமணம் முடிக்காமல், இறைச்சி சாப்பிடாமல், தொடர்ந்து நோன்பு நோற்பதில் ஈடுபடப் போவதாகவும் சொன்ன சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்களை நபியவர்கள் தடுத்து, எனது வழி இதுவன்று “என் வழியைப் பின்பற்றாதவர் என்னைச் சார்ந்தவரல்லர்” என்று கூறியமையையும் நாம் ஹதீஸ்களில் காணமுடிகிறது.

எனவே இந்தப் பின்னணியில்தான் பற்றற்ற வாழ்வு என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

யூனுஸ் இப்னு முயஸ்ஸரா (ரழி) சொல்கிறார்கள். “உலகத்தில் பற்றற்று வாழ்தல் என்பது ஹலாலை ஹராமாக்குவதோ செல்வத்தை வீணடிப்பதோ அல்ல. மாறாக பற்றற்ற வாழ்வென்பது உன் கையில் இருப்பதை விட அல்லாஹ்விடம்

இருப்பதில் நீ கூடுதலான நம்பிக்கை வைப்பதும் துன்பத்தால் நீ பீடிக்கப்படுவதும், அவ்வாறு பீடிக்கப்படாமல் இருப்பதும் சமமே என்ற மனோநிலை ஏற்படுவதும், உண்மையின் விடயத்தில் உன்னைப் புகழ்பவர்களும், இகழ்பவர்களும் சமமானவர் களாக உனக்குத் தென்படுவதும் தான் என்றார்கள்." (இப்னு அபித்துன்யா)

ஸுப்யான் பின் உயைனா (ரஹ்) அவர்களிடம் உலகில் பற்றற்றவன் யார் என்று வினவப்பட்டது? அதற்கவர் எவர் மீது அருள் புரியப்பட்டால் நன்றி செலுத்துகிறாரோ எவர் சோதனைக்குட்பட்டால் பொறுமையைக் கடைப்பிடிக்கிறாரோ அவரே என்றார்கள்.

இந்த வகையில் பார்க்கின்றபோது பற்றற்ற வாழ்வு என்பது மறுமை வாழ்வோடு ஒப்பிடும்போது இவ்வுலக வாழ்க்கை எந்தவிதமான பெறுமதியுமற்ற ஒன்று என்ற எண்ணம் ஒரு மனிதனின் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றி விடுவதோடு, அதன் பிரதிபலிப்புக்கள் அவனது நடைமுறைவாழ்விலும் தென்படுவதையே குறிக்கிறது.

## 12. ஸியாரதுல் குபூர்

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை முன்வைக்கிறது. பிறப்பு, வாழ்வு, மரணம் என எல்லா விடயங்களிலும் பொருத்தமானதும், சரியானதுமான போதனைகளைக் கற்றுத் தருகின்றது. இந்த வகையில், உலகில் வாழ்ந்த மனிதன் மரணித்த பின் அடக்கம் செய்யப்படுகின்ற இடம் தொடர்பாகவும், அங்கு பேண வேண்டி ஒழுங்குகள் தொடர்பாகவும் இஸ்லாம் போதிக்கின்றது.

இஸ்லாமிய நடைமுறையில், மரணித்தவர்கள் அடக்கப்படும் இடத்தை "மக்பரா"என அழைப்பர். புதைகுழியை "கப்ர்" என்பர். அந்தக் கப்றுகளைத் தரிசிப்பதை நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்துள்ளார்கள். ஸஹாபாக்களைத் தரிசிக்குமாறு ஏவியதோடு தானும் பல தடவைகள் கப்றுகளைத் தரிசித்திருக்கிறார்கள். இதனை அறபியில் "ஸியாரதுல் குபூர்"என இஸ்லாமிய அறிஞர்கள் சுட்டிக்காட்டுவர்.

"நான் கப்றுகளைத் தரிசிப்பதைத் தடுத்திருந்தேன். இனி நீங்கள் கப்றுகளை தரிசியுங்கள். அது உங்களுக்கு மறுமையை ஞாபகமூட்டும். அங்கு நீங்கள் வீணான பேச்சுக்களில் ஈடுபட வேண்டாம்"என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம், அபூதாவூத்)

“நான் கப்றுகளைத் தரிசிப்பத்தைத் தடை செய்திருந்தேன். இனி நீங்கள் அவற்றைத் தரிசியுங்கள். ஏனெனில், அதில் பல படிப்பினைகள் உண்டு” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத், ஹாகிம்)

“நான் கப்றுகளைத் தரிசிப்பதை விட்டும் உங்களைத் தடுத்திருந்தேன். இப்போது (உங்களுக்கு) அனுமதியளிக்கிறேன். ஆகவே, அவற்றை நீங்கள் தரிசியுங்கள். ஏனெனில், அது உள்ளங்களை இளக வைக்கும். கண்களில் கண்ணீரை உண்டுபண்ணும். மறுமையை நினைவூட்டும். (அங்கு நீங்கள்) வீணான பேச்சுக்களில் ஈடுபட வேண்டாம்”என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஹாகிம்)

மேற்சொன்ன ஹதீஸ்கள், “ஸியாரதுல் குபூர்” என்பது நற்செயல்களுள் ஒன்று என்பதையும் அது மனித வாழ்வில் மாற்றங்களை உண்டு பண்ணுகிறது என்பதையும் தெளிவுபடுத்துவதைக் காணலாம்.

**ஸியாரதுல் குபூரின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் :**

01 அடக்கம் செய்யப்பட்டிருப்போருக்கு ஸலாம் சொல்லல்

புரைதா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நபி (ஸல்) அவர்கள் கப்ருகளைத் தரிசிக்கச் செல்வோருக்குக் கீழ்வரும் பிரார்த்தனையைக் கற்றுக் கொடுக்கக் கூடியவராக இருந்தார்கள்.

“அஸ்ஸலாமு அலைக்கும் அஹ்லத் தியாரி மினல் மு∴மினீன் வல் முஸ்லிமீன். வஇன்னா இன்ஷாஅல்லாஹு பிகும் லாஹிகூன், அஸ்அலுலல்லாஹ் லனா வலகுமுல்ஆபியா.”

“முஸ்லிம்களும், மு∴மின்களும் (அடக்கப்பட்டிருக்கும்) இடத்தைச் சேர்ந்தவர்கள் மீது அல்லாஹ்வின் சாந்தி உண்டாகட்டும். இன்ஷா அல்லாஹ் நாமும் உங்களை வந்தடைவோம். எமக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடத்தில் சுபீட்சத்தைக் கேட்கிறேன்.”(முஸ்லிம்) எனக் கூறுமாறும் பணித்தார்கள்.

இதுபோன்று ஹதீஸ்களில் வேறு விதமான துஆக்களும் வந்துள்ளன.

02 அவர்களுக்காகப் பிரார்த்தித்தல்

“நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களின் மக்பராவுக்குச் சென்று இரு கைகளையும் உயர்த்தி அவர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள்” என ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (அஹ்மத்)

03 ஷரீஆ அங்கீகரிக்காத செயற்பாடுகளைத் தவிர்த்தல்

“உங்களில் ஒருவர் நெருப்புக் கங்கின் மீது அமர்ந்து அது அவரது ஆடையை எரித்து உடலைச் சென்றடைவதானது, அவர் கப்றின் மீது உட்காருவதை விடச் சிறந்தது”என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.” (முஸ்லிம்)

நல்லடியார்களின் கப்ருகளை ஸியாரத் செய்யச் சென்று அங்கு இஸ்லாம் போதித்த வரையறைகளை பேணி நடக்க வேண்டும். தம் தேவைகளை கப்ரில் அடக்கப்பட்டோரிடம் கேட்பது, அவர்களிடம் நோய் நிவாரணம் கேட்டது, குழந்தைகளை கப்ரின் மீது உருட்டி எடுப்பது, அங்குள்ள மண்ணைக் கரைத்துக் குடிப்பது போன்ற ஷரீஆவிற்கு முரணான பாவகாரியங்களில் ஈடுபடாது ஈமானைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

எனவே இஸ்லாம் கூறியவாறு “ஸியாரதுல் குபூர்” என்ற நற்செயலை மேற்கொண்டு நன்மை அடைவோம்.

## 13. குர்பானிகள்

அல்லாஹ் சிலருக்குச் செல்வத்தை அளவாகக் கொடுத்திருக்கிறான். வேறு சிலருக்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறான். அவ்வாறு அதிகமாகக் கொடுக்கப்பட்டவர்கள் தம் செல்வத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென அல்லாஹ் பணித்திருக்கின்றான். இதன் மூலம் கொடுப்பவர் நற்கூலியையும், பெறுபவர் நற்பயனையும் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறான இபாதத்துக்களில் குர்பான், உழுஹிய்யா, அகீகா, நத்ர் என்பன சிலவாகும்.

குர்பான் என்றால் நெருங்குதல் என்பது பொருளாகும். ஓர் அடியான் ஓர் உயிர்ப் பிராணியை உளத்திருப்தியுடன் அல்லாஹ்வுக்காக அறுத்து பகிர்ந்தளிப்பதன் மூலம் அவனை நெருங்குவதை இது குறிக்கின்றது. இது உழுஹிய்யாவாகவோ அகீகாவாகவோ இருக்கலாம்.

உழுஹிய்யா, அகீகா என்பவற்றுக்கு ஆடு, மாடு, ஒட்டகம் என்பவற்றைத் தவிர வேறு எதனையும் அறுக்க முடியாது. மேலும் உழுஹிய்யா என்பது ஒரு குறித்த காலப்பகுதியிலும், அகீகா என்பது ஒரு குறித்த சந்தர்ப்பத்திலும் நிறைவேற்றப்படும் இபாதத் ஆகும். உழுஹிய்யா துல்ஹஜ் 10, 11, 12, 13 ஆம் தினங்களிலும், அகீகா குழந்தை கிடைத்ததற்காகவும் நிறைவேற்றப்படுகின்றன.

எனினும் பரந்த கருத்தில் குர்பான் என்பது குறிப்பாக எந்தக் காரணமும் இல்லாத நிலையில் எல்லாக் காலங்களிலும் இஸ்லாத்தில் உண்பதற்கு அனுமதிக்கப்பட்ட எந்தப் பிராணியையும் அல்லாஹ்வுக்காக அறுத்துப் பகிர்வதைக் குறிக்கின்றது.

உழுஹிய்யா, அகீகா என்பனவும் குர்பானியில் அடங்குகின்றன. எனினும் குறிப்பிட்ட காலப்பகுதியிலும் குறித்த காரணத்துக்காகவும் அவை நிறைவேற்றப்படுவதால் தனிப்பட்ட பெயர்களால் அழைக்கப்படு கின்றன.

**உழ்ஹிய்யா** :- உழுஹிய்யாவுக்குரிய காலம் துல்ஹஜ் மாதம் பிறை 10 (ஹஜ்ஜுப் பெருநாளன்று) சூரியன் உதித்து சுமார் 10 நிமிடங்கள் சென்றது முதல் பிறை 13 முடியும் வரையுள்ள நேரமாகும். ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையும், குத்பாவும் முடிந்த பின்னர் இதனை நிறைவேற்றுவது மிகச் சிறப்பானதாகும். உழுஹிய்யா கொடுப்பவரே அதனை அறுப்பது ஸுன்னத்தாகும். வேறு ஒருவரைக் கொண்டு அறுக்கும் போது அறுக்குமிடத்தில் அவர் சமுகமளித்திருத்தல் மேலானதாகும். அறுப்பதற்கு ஆரம்பிக்கும்போது, “அல்லாஹ்வுக்காக ஸுன்னத்தான உழுஹிய்யாவை நிறைவேற்றுகிறேன்” என்று நிய்யத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

உழுஹிய்யாவின் எந்தவொரு பகுதியையும் விற்கவோ அதை அறுப்பது போன்ற வேலை செய்தவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கவோ கூடாது. தோல், கொம்பு போன்றவைகளாயினும் அவற்றையும் தர்மமாகக் கொடுத்துவிட வேண்டும் அல்லது தான் உபயோகிப்பதற்காக எடுத்துக் கொள்ள வேண்டும். மாமிசத்தின் ஒரு பகுதியை ஏழைகளுக்கு தர்மம் செய்துவிடுவது கடமையாகும். உழுஹிய்யா கொடுப்பவர் அதில் சிறு பகுதியை உணவுக்காக எடுத்துக் கொள்ளலாம். அடுத்த பகுதியை நண்பர்கள் உறவினர்களுக்கு அன்பளிப்பாக வழங்கலாம்.

உழுஹிய்யா, அகீகா என்பவற்றைக் கொடுக்க நேர்ச்சை வைத்தால் அவற்றை நிறைவேற்றுவது கடமையாகிவிடும். அப்போது அவற்றிலிருந்து சிறு பகுதியையேனும் நேர்ச்சை வைத்தவரோ அவரது பொறுப்பிலுள்ளவர்களோ உண்ணக் கூடாது. அனைத்தையும் தர்மம் செய்துவிட வேண்டும்.

**உழுஹிய்யாவுக்காக அறுக்கப்படும் பிராணியின் வயதெல்லை பின்வருமாறு :**

1. செம்மறியாடு ஒரு வருடம் பூர்த்தியானது.
2. மாடும் வெள்ளாடும் இரண்டு வருடம் பூர்த்தியானது.
3. ஒட்டகம் ஐந்து வருடம் பூர்த்தியானது.

மேலும் உழுஹிய்யா கொடுக்கும் பிராணிகள் குறையுள்ளனவாகவோ பார்ப்பதற்கு அவலட்சனமானவையாகவோ மெலிந்த நோய் வாய்ப்பட்டவைகளாகவோ இருக்கக் கூடாது. அவை ஆரோக்கிய மானவையாகவும் தசைப்பிடிப்பானவையாகவும் இருப்பது மேலானதாகும்.

ஹஜ்ஜுப் பெருநாளன்று செய்யக் கூடிய மிகச் சிறந்த நற்காரியம் உழுஹிய்யாக் கொடுப்பதே ஆகும். நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் இதனைச் சிறப்பாகச் செய்துள்ளார்கள். ஆதலால் வசதியுள்ளவர்கள் இதனைச் செய்வதற்கு பின்நிற்கக் கூடாது. மேலும் எமது நாட்டைப் பொறுத்தவரை குர்பான், உழுஹிய்யா போன்றவற்றை நிறைவேற்றும் போது பண்பாக நடந்து கொள்ள வேண்டும். பிற சமூகத்தவர்களின் உணர்வுகளையும் பொது சட்ட விதிகளையும் மதித்து நடத்தல் வேண்டும். பகிரங்கமாக அறுப்பதோ, பகிர்வதோ தவிர்க்கப்படுவது நல்லது.

அகீகா என்பது குழந்தை கிடைத்ததற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வகையில் ஆட்டை அறுத்து தர்மம் செய்வதைக் குறிக்கும். இதனை மாமிசமாகவோ சமைத்து உணவாகவோ வழங்கலாம்.

ஆண்பிள்ளையாயின் இரண்டு ஆடுகளையும், பெண்பிள்ளையாயின் ஓர் ஆட்டையும் அகீகா கொடுப்பது தகப்பன் மீது ஸுன்னத் ஆகும். இதற்கான வசதி இல்லாவிட்டால் இது ஸுன்னத்தாகாது. இதனைக் குழந்தை பிறந்து ஏழாவது நாளில் கொடுப்பதே சிறப்பானதாகும்.

அகீகாவுக்காக அறுக்கப்படும் ஆடும் உழுஹிய்யாவில் கூறப்பட்ட வயதெல்லையையே கொண்டிருக்க வேண்டும். பிராணியை அறுக்கும் போது எனது பிள்ளையின் அகீகாவை நிறைவேற்றுகிறேன் என நிய்யத்து வைத்துக் கொள்ள வேண்டும். அகீகாவை ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் பகிர்ந்தளிப்பதுடன் அதிலிருந்து சாப்பிடலாம். அகீகாவின் முக்கியத்துவத்தை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

"சிறுவன் அவனுடைய அகீகாவைக் கொண்டு பணயம் வைக்கப்பட்டுள்ளான். (பிறந்து) ஏழாவது நாளில் அவனுக்காக அது அறுக்கப்படுகிறது. அன்று அவனுக்கு பெயர் வைக்கப்பட்டு அவனது தலைமுடியும் சிரைக்கப்படும். (அபூதாவூத்)

**“தப்ஹு”** : என்றால் “அறுத்தல்” என்பது பொருளாகும். மீன், வெட்டுக்கிளி ஆகிய இரண்டையும் தவிர ஹலாலான ஏனைய உயிர்ப்பிராணிகளை அறுக்காமல் சாப்பிடுதல் கூடாது. உண்பதற்கு இஸ்லாம் அனுமதித்த உயிர்ப்பிராணிகள் மாத்திரமே அறுப்பதன் மூலம் ஹலாலாகும்.

அறுக்கும்போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்

1. அறுப்பவர் முஸ்லிமாயிருத்தல்.
2. அல்லாஹ்வின் பெயரைக் கூறி அறுத்தல்.
3. அறுக்கும் ஆயுதம் (கத்தி) கூர்மையானதாக இருத்தல்.
4. நிறுத்தாமல் ஒரே முறையில் அறுத்தல்.
5. உணவுக்குழாயும் சுவாசக்குழாயும் பூரணமாக அறுபடும் வரை அறுத்தல்.
6. அறுக்கப்படும் பிராணியை சித்திரவதைக்கு உள்ளாக்காதிருத்தல்.

அறுக்கு முன் பிராணிக்கு நீர்புகட்டுவதும் அறுக்குமிடத்துக்கு அதை மெதுவாக இழுத்துச் செல்வதும் பிராணியின் எதிரில் கத்தியைத் தீட்டாமலிருப்பதும் ஒரு பிராணியின் கண் எதிரில் மற்றொரு பிராணியை அறுக்காதிருப்பதும் கிப்லாவுக்கு நேராக கழுத்தைத் திருப்புவதும் அறுப்பவர் கிப்லாவின் பக்கம் திரும்பி இருப்பதும் முழுமையாக உயிர் பிரிந்த பின்பே தலையைத் துண்டிப்பதும் தோலை உரிப்பதும் உயர்ந்த பண்புகளாகும்.

மேலே குறிப்பிட்ட விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் கவனிக்கும் போது இஸ்லாமிய அடிப்படையில் தப்ஹு செய்யப்படுவதன் நோக்கம் பிராணியைக் கொடுமைப்படுத்தி சித்திரவதைக்குட்படுத்தாதிருப்பதும் ஆகும். எனினும் முஸ்லிம்களில் ஒரு சிலர் இஸ்லாமிய விதிமுறைகளுக்கு மாறாக, அறுக்கப்படும் பிராணிக்குக் கொடுமை செய்வதால் இஸ்லாமிய அடிப்படையிலான தப்ஹு முறை பலராலும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. தனிப்பட்டவர்களின் தவறுக்காக ஷரீஆவின் அடிப்படையிலான தப்ஹு விமர்சிக்கப்படுவது கவலைக்குரியதாகும். ஆதலால் தப்ஹு செய்பவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். ஆகவே பின்வரும் விடயங்கள் கவனிக்கப்படல் வேண்டும்.

1. பிராணிகளைக் கொடுமைப்படுத்தாதிருத்தல். எல்லா நிலைகளிலும் அவற்றுடன் கருணையுடன் நடந்து கொள்ளல்.
2. பொது இடங்களிலும் மக்கள் நடமாடும் இடங்களிலும் அறுக்காதிருத்தல்.
3. உழுஹிய்யா முதலானவற்றைப் பகிரும்போது நாகரிகமாக நடந்து கொள்ளல்.
4. வர்த்தக நோக்கத்தோடு பிராணிகளை அறுக்கும் தொழில் செய்வோர் இலாபத்தை மாத்திரம் கருத்திற் கொள்ளாது, இஸ்லாம் கூறுகின்ற ஒழுங்குகள் விதிகள் பண்புகள் முதலியவற்றைக் கவனத்திற்கொள்ளல்.
5. அறுக்கப்பட்ட பிராணியின் கழிவுகளைப் புதைத்துவிடல்.
6. பிராணிகளை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு அறுப்பதற்குமான அனுமதியை உரிய இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளல்.

# முஆமலாத்

## இஸ்லாமியப் பொருளாதாரம்

### பொருளியல் அறிமுகம்

- மனிதனது தேவைகளையும், அவற்றை நிறைவேற்றப் பயன்படும் இயற்கையின் அருட்கொடைகளையும் இவற்றுக்கிடையிலான மனித நடத்தைகள் பற்றியும் ஆராய்கின்ற ஓர் அறிவியலே பொருளியலாகும். மனிதனது அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படுவது உணவு, உடை, வாழ்விடம், வருமானம் என்பனவாகும். இவற்றை நிறைவேற்றுவதற்காகவே முதலாளித்துவம், சமவுடமை போன்ற பொருளாதார முறைமைகள் தோன்றின. மனித சிந்தனையில் உருவான இப்பொருளாதார முறைமைகள் நாளுக்கு நாள் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளையே தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கையின் ஆன்மீக விடயங்களை ஒதுக்கிவிட்டு பொருளாதார சுபீட்சத்தை மாத்திரம் இலக்காக கொண்டு இவை செயற்படுவதால் மனித வாழ்வின் ஏனைய அம்சங்கள் பாதிக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

- இஸ்லாம் ஆன்மீக விருத்தியுடன் கூடிய பொருளாதார சுபீட்சத்தையே திட்டமிட்டுள்ளது. எனினும், இவ்விரு வகை அபிவிருத்தியிலும் உலகம் முழுமையாக வெற்றியடைய வேண்டுமாயின், இஸ்லாத்தின் பல்வேறு கூறுகளும் சம காலத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மாறாக அதன் ஒரு பகுதியை மட்டும் நடைமுறைப்படுத்தி, மறுபகுதியைக் கைவிடுவதன் மூலம் எதிர்பார்க்கின்ற முழுமையான அபிவிருத்தியைக் காண முடியாமற் போகும்.

### இஸ்லாமியப் பொருளாதார அமைப்பின் சிறப்பியல்புகள்

1. **அல்லாஹ்விடமிருந்து பெறப்பட்ட தெய்வீகத் தன்மை கொண்டது**
   நடைமுறையிலுள்ள பொருளாதார முறைகள் மனித சிந்தனைகளினால் உருவாக்கப்பட்டவைகளாகும். எனவே அவற்றில் மனித பலவீனங்கள் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால், இஸ்லாமியப் பொருளியல் கோட்பாடு, வஹியின் வழிகாட்டலில் கட்டியெழுப்பப்பட்டுள்ளதால் அதில் தெய்வீகத் தன்மை காணப்படுகின்றது. இதனால் அது பூரணத்துவம் வாய்ந்ததாகவும், பொருத்தப்பாடுடையதாகவும் உள்ளது.

2. **சமகாலத்தில் நெகிழாத் தன்மையும், நெகிழும் தன்மையும் கொண்டு இயங்குகின்ற பொருளாதார முறை**

இதன் தெய்வீகத் தன்மை கொண்ட பகுதி நெகிழாத் தன்மை கொண்டதாகவும் இஜ்திஹாதுக்கு அல்லது ஆய்வுக்குரிய பகுதிகள் நெகிழும் தன்மை கொண்டவையாகவும் உள்ளன. இதனால் இப்பொருளாதார முறை எல்லாக் காலத்திற்கும் பொருத்தமானதாக அமைகிறது.

➢ **நெகிழாத் தன்மை கொண்ட பொருளாதார விதிகள்**

- இப்பிரபஞ்சத்திலுள்ள வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை. அல்லாஹ் விதித்த சட்டதிட்டங்களுக்கமையவே மனிதன் அவற்றைப் பயன்படுத்த முடியும். "மேலும் வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அல்லாஹ்வுக்குரியவை."(55:31)

- மனிதர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இவ் வளங்களைப் பயன்படுத்துவதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிமனிதனதும் அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை இப்பொருளாதார முறை ஏற்றுள்ளது. "அவர்களின் செல்வங்களில் கேட்போருக்கும் கேட்காதோருக்கும் குறித்ததோர் உரிமை உண்டு" (70:24-25) நபி (ஸல்) அவர்கள் "வசதியற்றோரைப் பொறுப்பேற்பது எனது கடமை. அத்தகையோர் என்னிடம் வரட்டும்" (ஹாகிம்) என்று கூறியுள்ளார்கள்.

- இஸ்லாமியப் பொருளாதார முறை செல்வச் சுழற்சிக்கு வழிவகுக்கின்றது. எனவே ஒரு சிலரிடம் செல்வம் தேங்கி சமநிலையற்ற நிலை தோன்றுவதை இது தடுத்து விடுகின்றது. "செல்வம் உங்களிலுள்ள பணக்காரர்களுக்கிடையில் மாத்திரம் சுற்றிக் கொண்டிருக்காமல் இருப்பதற்காக ...." (59 : 7) எனும் குர்ஆன் வசனம் இவ்விதியை உறுதிப்படுத்துகின்றது.

- இஸ்லாமியப் பொருளாதார முறையில் தனிமனித சொத்துரிமை உத்தரவாத மளிக்கப்பட்டுள்ளது. அதாவது சொத்துக்களை வைத்துக்கொள்ளவும் செலவிடுவதற்குமான உரிமை வழங்கப் பட்டுள்ளது. "ஆண்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியதாகும். பெண்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியதாகும்." (4:32) எனும் குர்ஆன் வசனம் இவ்விதியை உறுதிப்படுத்துகின்றது.

- இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டில், பொருளாதார சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். வாழ்வாதாரங்களைத் தேடும்போது குர்ஆனும், ஸுன்னாவும் விதித்த சட்டதிட்டங்களை மீற முடியாது. அது அனுமதிக்கப்பட்ட பொருளீட்டல் முறை, தடுக்கப்பட்ட பொருளீட்டல் முறை என இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. "உங்களின் சொத்துக்களை உங்களுக்கிடையில் நியாயமற்ற முறையில் விழுங்காதீர்கள்." (2:188) எனக் குர்ஆன் விதியமைத்துள்ளது.

- செலவினங்களை ஒழுங்குபடுத்தி வீண் விரயத்தை தடுக்கின்றது. ஆடம்பரங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். "அளவு கடந்து வீண் விரயம் செய்யாதிருப்பீராக. நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர்."(17:26) எனும் குர்ஆன் வசனம் இவ்விதியைத் தருகின்றது.

- மேற்படி விதிகள் அனைத்தும் கால மாற்றங்களாலோ, பிரதேச வேறுபாடுகளினாலோ மாற்றமடைவதில்லை. எங்கும் எப்பொழுதும் இவை நிலையானதாகவே இருக்கும். கருத்து வேறுபாடுகளற்ற தெய்வீகத் தன்மை கொண்டதாகவே அவை இருக்கும்.

➢ **நெகிழும் தன்மை கொண்ட அல்லது ஆய்வுக்குரிய விதிகள்.**

- பொருளாதார நடவடிக்கைகளில் அரச தலையீட்டின் அளவைத் தீர்மானிக்கும் நடவடிக்கை.
- சமகால பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டி அமுல்படுத்தல்.
- பொருளாதாரத் துறைகளைப் பொதுவுடமை தனியுடமையாக மாற்றுவது தொடர்பாக வரையறைகளைக் கொண்டுவருதல்.
- வேதனங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுத்தல்.
- வட்டியுடன் தொடர்பான செயற்பாடுகளைத் தெளிவுபடுத்தல்.

மாறா விதி, மாறும் விதிக்கமையவே இஸ்லாமிய பொருளாதார வட்டம் சுழல்வதால் அது, சிறந்த பொருளாதார முறையாக நிலைத்து நிற்கின்றது.

3. **இயற்கைக்கும் மனித இயல்புக்கும் ஏற்ற பொருளாதார முறை**.

இயற்கைச் சட்டங்களை முறிப்பதற்கோ, மனித இயல்புடன் இரண்டறக் கலந்துள்ள வாழ்க்கைக் கோட்பாடுகளை சிதைப்பதற்கோ இஸ்லாமியப் பொருளாதார முறை இடமளிப்பதில்லை. உதாரணமாக விபசாரத்தை ஒரு

பொருளீட்டும் முறையாகக் கொள்வதை இஸ்லாம் தடுக்கின்றது. அது இயற்கை நியதியை முறிக்கின்றது. மது உற்பத்தி, விநியோகம், பாவனை முதலியவற்றை இஸ்லாம் தடுக்கின்றது. அது மனித இயல்பை மாற்றுகின்றது. "நீங்கள் விபசாரத்தை நெருங்காதீர்கள். நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும் (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்.) தீய வழியாகவும் இருக்கின்றது." (17:32) (5:90-91) “போதை தரக் கூடிய எல்லாம் மதுவாகும். எல்லா மது வகைகளும் ஹராமானதாகும்.” (முஸ்லிம்)

4. **ஒழுக்கத்திற்கும், பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொருளாதார முறை.**

எந்த வகையைச் சார்ந்த உற்பத்தியாக இருந்தாலும், விநியோகமாக இருந்தாலும், நுகர்வாக இருந்தாலும் அது ஒழுக்கத்தை பண்பாட்டைத் தகர்ப்பதாக இருந்தால் இஸ்லாம் அதனை அங்கீகரிப்பதில்லை. உதாரணமாக, அரைகுறை ஆடையுற்பத்தி, விநியோகம், நுகர்வு, விவகாரங்களில் இஸ்லாமிய விதிமுறைகளை மீறுபவை, ஆபாச திரைப்படத் தயாரிப்பு, வெளியீடு, பார்வையிடல் போன்றன இஸ்லாமிய ஒழுக்கம், பண்பாட்டுக்கு முரண்படுமானால் இஸ்லாம் அதனை அனுமதிப்பதில்லை.

5. **சமூக நலனுக்கும் தனிமனித நலனுக்கும் இடையில் இணக்கம் காணல்**

நடைமுறையிலுள்ள பொருளாதார முறைகள் முதலாளித்துவம் அல்லது தனிமனித நலனை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படுகின்றன. சமவுடமைப் பொருளாதார முறை, சமூக நலனை மட்டும் கவனத்திற் கொள்கின்றது. ஆனால், இஸ்லாமியப் பொருளாதார முறையில் மனிதனது தனித்துவத்தை முறையாக விருத்தி செய்து கொள்ளவும், சமூக நலனைப் பேணவும் போதனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்றுக்காக மற்றொன்றை இழந்து விடுவதற்கு இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஒன்று மற்றொன்றில் சார்ந்து நின்று தேவைகளைப் பூர்த்தி செய்யும் வழிவகைகளையே அது மேற்கொள்கின்றது.

6. **ஆன்மீகத் தேவை, லௌகீகத் தேவை என்பவற்றை கவனத்திற் கொள்ளல்**

மனிதன் உடல், ஆன்மா, அறிவு என்பவற்றைக் கொண்டவனாக இருப்பதனால் வெறுமனே இலாபத்தை கருத்திற் கொண்டோ, உடலியல் தேவைகளை மாத்திரம் கருத்திற் கொண்டோ இஸ்லாம் பொருளாதார திட்டங்களை அமுல் படுத்தவில்லை. ஆன்மீகத் தேவைகளையும், லௌகீகத் தேவைகளையும் கவனத்திற் கொண்டு பொருளாதாரத் திட்டங்களை அமுல்படுத்துகின்றது. இதனால் மனித விழுமியங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

7. **தெய்வீகத் தன்மை கொண்டமைந்துள்ளமை**

இஸ்லாமிய பொருளாதார முறை அருள், அபிவிருத்தி நிறைந்ததாகவுள்ளது. வரலாற்றில் அது சீராக அமுல்படுத்தப்பட்ட காலப் பகுதிகளில் அதன் பொலிவைக் காண முடிந்தது. இப்பொருளாதார முறை கைவிடப்பட்டுள்ளதால் இன்றைய பொருளாதாரம் மனித வாழ்க்கையில் பிரச்சினைகளைக் கொண்டு வந்துள்ளதைக் காணலாம்.

8. **இஸ்லாமிய பொருளாதார நடவடிக்கைகள் இபாதத்தாகக் கருதப்படு கின்றமை.**

இப்பொருளாதார முறை அல்லாஹ் விதித்த சட்டதிட்டங்களுக்கமையவே மேற்கொள்ளப்படுவதால் அது இபாதத்தாகவே அமைகின்றது.

# உழைப்பின் முக்கியத்துவம்

**தொழில்சார் நடவடிக்கைகளில் விவசாயம் :**

இஸ்லாத்தின் பார்வையில் மனிதன் அல்லாஹ்வுடைய பிரதி நிதியாவான். பிரதி நிதித்துவத்தை நிலைநாட்டுவதற்கு இறைத் தூதின் மூலம் அல்லாஹ் வழிகாட்டினான். அதேபோன்று பிரதிநிதியாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் அவன் பூமியை விரிப்பாக அமைத்து வைத்துள்ளான். அதில் மனிதனுக்குத் தேவையான பயிர் பச்சைகளை படைத்துள்ளான். அதில் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை வெளிப்படுத்துகின்றான். இவற்றின் மூலமாக மனிதன் தனது உணவுத் தேவையை நிறைவுசெய்து கொள்கின்றான். மனிதன் தனது பொருளாதாரத் தேவைகளில் முக்கிய இடத்தை பெறுகின்ற உணவுத் தேவையை நிறைவு செய்துகொள்வதற்காக மேற்கொள்கின்ற பொருளீட்டல் நடவடிக்கைகளில் ஒன்றுதான் விவசாயமாகும்.

முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் உலகிற்கு அனுப்பப் பட்டதிலிருந்து உணவுத் தேவைக்காக விவசாயம் மேற்கொள்ளப்பட்டதை வரலாற்றினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. இம்முயற்சி மனித சமுதாயத்தால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட அநேகமான நபிமார்கள் விவசாயம் செய்து தமது வாழ்வை நடத்தியதற்கான ஆதாரங்கள் அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் காணப்படுகின்றன. இவ்வுழைப்புக்கு ஏற்ற விதத்தில் பூமியை அல்லாஹ் படைத் திருப்பதாகவும் குறிப்பிடுகின்றான்.

"அன்றியும் அல்லாஹ் உங்களுக்காக பூமியை விரிப்பாக ஆக்கினான். அதில் நீங்கள் செல்வதற்காக விசாலமான பாதை களையும் அமைத்தான். (71:19-20)

"அவனே வானத்திலிருந்து மழையை இறக்கினான். அதைக் கொண்டு எல்லா வகையான புற்பூண்டுகளையும் நாம் வெளியாக்கினோம். அதிலிருந்து பசுமையான பயிர்களை வெளிப்படுத்துகிறோம். அதிலிருந்து நாம் வித்துக்களை அடர்த்தியான கதிர்களாக வெளிப்படுத்துகிறோம்."(6:99)

"இன்னும் காற்றை சூல் கொண்ட மேகங்களாக நாமே அனுப்புகிறோம். பின்னர் வானத்திலிருந்து நாம் மழையைப் பொழிவித்து அதனை உங்களுக்குப் புகட்டுகிறோம். அதனை நீங்கள் சேகரித்து வைப்பதும் இல்லை." (15:22)

மேற்படி குர்ஆன் வசனங்களில் பூமியை விவசாயம் செய்வதற்கு ஏற்றவாறு அல்லாஹ் அமைத்துக் கொடுத்திருப்பது பற்றி விபரிக்கப்படுவதைக் காண முடிகின்றது. மழை, காற்று, பூமி, பயிர்பச்சைகள் பற்றியெல்லாம் இதில் விபரிக்கப்பட்டுள்ளது. விவசாயம் செய்து, உணவுத் தேவையை நிறைவுசெய்துகொள்ள இவ்வாறு அல்லாஹ் இலகுபடுத்தி வைத்துள்ளான்.

நபி (ஸல்) அவர்களது போதனைகளும் விவசாயத்துக்கு ஊக்கமளிப்பதாக அமைவதைக் காண முடிகின்றது. எனவேதான் முஸ்லிம்கள் விவசாயததில் ஈடுபட்டு வந்துள்ளதை வரலாற்றில் காணக்கூடியதாகவுள்ளது.

"ஒருவருக்கு நிலம் இருப்பின் அதில் அவர் பயிர் செய்யவும், அல்லது அதைத் தனது சகோதரனுக்கு தர்மம் செய்து விடவும். அதற்கும் அவரால் முடியாவிடின் தானே வைத்துக் கொள்ளவும்." (புஹாரி, முஸ்லிம்.)

இந்த ஹதீஸ் விளைநிலங்களை வெறுமனே விட்டு வைக்காதீர்கள் எனக் கூறுகின்றது. தனக்கு முடியாவிட்டால் அடுத்தவனுக்காவது தர்மம் செய்து விடுமாறு கூறுகின்றது. இந்த ஹதீஸ் பொருளீட்டலில் விவசாயத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

"உரிமை கோரப்படாத நிலத்தை ஒருவர் பயன்படுத்தி வளமாக்கினால் அவரே அதற்கு தகுதி வாய்ந்தவராவார்." (புஹாரி)

உரிமை கோரப்படாத நிலத்தில் விவசாயத்தில் ஈடுபடுபவனுக்கு நிலம் சொந்தமானது எனக் குறிப்பிடுவது விவசாயத்தின், விவசாயியின் சிறப்பை எடுத்துக்காட்டப் போதுமானதாக உள்ளது. மதீனாவாசிகள் பெரும்பாலும் விவசாயிகளாகவே இருந்திருக்கின்றார்கள். மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றிருந்த காலப்பகுதியில் அங்கு வாழ்ந்தவர்கள் பேரீத்தம் மரங்களில்

அயன் மகரந்தச் சேர்க்கை செய்வதற்கான வழிவகைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். ஸஹீஹ் முஸ்லிமில் பதிவாகியிருக்கும் ஒரு ஹதீஸில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஸஹாபிகள் எவ்வளவு தூரம் விவசாய நடவடிக்கைகளில் முன்னேறியிருந்தார்கள் என்பதை இது தெளிவாக்கு கின்றது.

"ஒரு முஸ்லிம் ஒரு தாவரத்தை நட்டி அல்லது பயிரை உற்பத்தி செய்து பின்னர் அதனை ஒரு மனிதன், மிருகம் அல்லது வேறு ஒரு பறவை உட்கொண்டாலும் அது அவருக்கு தர்மமாகவே அமையும்." (முஸ்லிம்)

இஸ்லாத்தின் பார்வையில் ஒரு விவசாயி மகத்தான கூலியை இம்மையிலும் மறுமையிலும் பெறுகின்றான் என்பதை இந்த ஹதீஸ் உணர்த்தி நிற்கின்றது. இது முஸ்லிமை விவசாயத்தில் ஈடுபடத் தூண்டுகின்றது.

ஹதீஸ் தொகுப்பாசிரியர்கள் தரிசு நிலத்தில் பயிர் செய்தல், விவசாயம், குத்தகைக்கு விடல் போன்ற தலைப்புக்களில் விவசாயம் பற்றிய ஹதீஸ்களைத் தொகுத்து எழுதியுள்ளமையும் சட்டத்துறை அறிஞர்கள் இவை பற்றிய சட்டத் தீர்ப்புக்களை இத்தலைப்புக்களின் கீழ் வழங்கி யுள்ளமையும் விவசாயச் செய்கையில் மட்டுமன்றி விவசாயத் துறைசார்ந்த அறிவியலிலும் முஸ்லிம்கள் ஆர்வம் காட்டினார்கள் என்பதைக் காண்பிக்கின்றன.

விவசாயத் துறையில் பல பிரிவுகள் இடம்பெறுகின்றன. அவற்றுள் மிக முக்கியமான இரண்டு பிரிவுகள் உள்ளன. (1) தாவரங்கள், தானியங்களோடு தொடர்பானவை. (2) விலங்கு வேளாண்மை, பறவை வளர்ப்போடு தொடர்பானவை.

பொதுவாக இஸ்லாமியப் பொருளியல் கோட்பாட்டில் அல்லாஹ் ஹறாமாக்கிய எந்த உற்பத்தியும் விநியோகமும், தடுக்கப்பட்டதாகவே இருக்கும். இவை பெரும்பாலும் மனிதனது உயிர், உடல், அறிவு என்பவற்றைப் பாதிக்கக் கூடியதாகவே இருக்கும். விவசாய உற்பத்திகளும் மேற்கூறப்பட்ட விதத்தில் அமையுமாயின் அவற்றை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், நுகர்தல் போன்ற காரியங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. உதாரணமாக ஹஷீஷ், புகையிலை, கஞ்சா என்பவற்றைக் குறிப்பிடலாம். எனவே அவற்றை ஒரு விவசாயி உற்பத்தி செய்வது ஹறாமானதாகும்.



12-CM14797

விலங்கு வேளாண்மையிலும் தடுக்கப்பட்டவைகள் இருக்கின்றன. இவற்றுள் முஸ்லிம்களுக்கு ஹறாம் எனக் குறிப்பிடப்பட்டவை முஸ்லிமல்லாதவர் களுக்காக உற்பத்தி செய்யவும் முடியாது. உதாரணமாக பன்றி வளர்ப்பைக் குறிப்பிடலாம். ஆனால், இஸ்லாம் அனுமதித்த விலங்கு வேளாண்மை நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். அநேகமான நபிமார்கள் இவ்வுழைப்பில் ஈடுபட்டுள்ளார்கள்.

## தொழில்சார் நடவடிக்கைகளில் கைத்தொழில் :

மனிதனின் அடிப்படைத் தேவையான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு எவ்வாறு விவசாயம் உதவுகின்றதோ அவ்வாறே கைத்தொழில் துறையும் வாழ்வின் அதிகமான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பதைக் காணலாம்.

எனவேதான் குர்ஆனும் ஸுன்னாவும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. நபி(ஸல்) அவர்களிடம் தொழில்களில் சிறந்தது எதுவென வினவியபோது "கைத்தொழிலும் பொய் கலவாத வர்த்தகமும்" (அஹ்மத்) எனப் பதிலளித்தார்கள். நபியினால் புகழ்ந்து கூறப்பட்ட ஒரு பொருளீட்டல் நடவடிக்கையாக இது காணப்படுகின்றது. அல்குர்ஆனிலும் கைத்தொழில் துறைக்கான வழிகாட்டல்கள், அதன் தேவை பற்றியெல்லாம் விபரிக்கப்பட்டுள்ளன. நபிமார்கள் எவ்வாறு கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற விளக்கங்கள் எல்லாம் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவேதான் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் ஒரு தொழிலைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பது ஸுன்னத்தான இபாதத் எனவும் ஸதகா எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

நடைமுறை உலகில் இரும்பை மையமாக வைத்து பாரிய கைத்தொழில் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அது வாழ்க்கையை இலகுபடுத்திக் கொள்வதற்கான எல்லா வழிகளிலும் பயன்படுவதைக் காணலாம். அல்குர்ஆனின் பல்வேறு இடங்களில் இரும்பைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஸூறாவின் பெயரே 'அல் ஹதீத்' (இரும்பு) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரும்போடு தொடர்புடைய கைத்தொழில் முறையும் குர்ஆனில் விபரிக்கப்பட்டுள்ளது.

"இரும்பை நாமே இறக்கினோம். அதில் கடுமையான சக்தியும் மனிதருக்குப் பல வகைப்பயனும் இருக்கின்றது." (57:25)

இவ்வசனத்தை விளக்கியுள்ள குர்ஆனிய அறிஞர்கள் 'கடுமையான சக்தி' என்பது போராயுதத்திற்கு மூலப்பொருளாக இரும்பைப் பயன்படுத்து வதையும்' பல்வகைப் பயன்' என்பது அன்றாடப் பாவனைகளுக்குத் தேவையான பொருட்கள், கைத்தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் உற்பத்தி செய்வதையும் குறிப்பதாக விளக்கமளித்துள்ளார்கள்.

"மேலும் நாம் அவருக்கு இரும்பை மிருதுவாக்கித் தந்தோம்." (34:10)

"இன்னும் நீங்கள் போரிடும்போது உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான கவசங்கள் செய்வதை அவருக்கு நாம் கற்றுக் கொடுத்தோம். எனவே இவற்றுக்கெல்லாம் நீங்கள் நன்றி செலுத்து பவர்களாக இருக்கிறீர்களா?" (21 : 80)

நபி தாவூத் (அலை) அவர்களோடு தொடர்புபடுத்தி வரும் மேற்படி குர்ஆன் வசனங்கள் இரும்போடு தொடர்புடைய கைத்தொழில் துறைகளில் அவர் ஈடுபட்டு வந்தார் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

அல்லாஹ்வின் தூதர் நபி நூஹ் (அலை) அவர்கள் கப்பல் கட்டும் வேலையில் ஈடுபட்டார்கள். இன்று கடல் மார்க்கமான கப்பல் போக்குவரத்தே பண்டங்களை நாடுகளுக்கிடையில் ஏற்று, இறக்குமதி செய்ய உதவுகின்றது. இதனை அல்குர்ஆன் பின்வரும் அடிப்படையில் விபரிக்கின்றது.

"இன்னும் மலைகளைப் போல் கடலில் செல்பவையும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்." (42 : 32)

நபிமார்கள் ஒவ்வொருவரும் உழைப்பு முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளதை வரலாற்றினூடாக காண முடிகின்றது. தாவூத் (அலை) அவர்கள் இரும்பாயுதங்கள் செய்வதில் ஈடுபட்டது போல் ஸகரிய்யா (அலை) அவர்கள் தச்சுத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். நபி நூஹ் (அலை) அவர்கள் கப்பல் கட்டும் வேலையிலும் ஈடுபட்டுள்ளார்கள். ஸஹாபாக்களில் பெண்மணிகள் கூட கைத்தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். உம்மஹாதுல் மு∴மினீன்களில் ஸைனப் பிந்தி ஜஹ்ஷ் (ரழி) வலை பின்னி வாழ்க்கை நடத்தினார்கள்.

இஸ்லாம் ஈருலக வாழ்வையும் வளப்படுத்துகின்ற கைத்தொழிற் துறைகளில் ஈடுபடுவதை அனுமதிக்கின்றது. மாற்றமாக அகீதாவை, சமூக வாழ்வை, ஒழுக்கத்தை, பண்பாட்டை சீர்குலைக்கும் எந்தக் கைத்தொழில் துறைகளையும் அனுமதிப்பதில்லை. உதாரணமாக : போதைப் பொருள் உற்பத்தி, மோசமான உணர்வுகளை வெளிக்கொண்டு வரக் கூடிய இசைக் கருவிகள், புகைப்பட உற்பத்திகள், மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய உற்பத்திகள் என்பவற்றைத் தடைசெய்துள்ளதைக் குறிப்பிடலாம். ஆகவே கைத்தொழில் துறை மூலம் பொருளீட்டுவதும் ஓர் இபாதத் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்திருப்பது அவசியமானதாகும்.

# வியாபாரம்

## வியாபாரமும் அதன் முக்கியத்துவமும்

இஸ்லாம் அனுமதித்த கொடுக்கல் - வாங்கல்களில் வியாபாரமும் (அல்பய்உ) ஒன்றாகும். "கொடுப்போனும், வாங்குவோனும் அல்லது வியாபாரியும் நுகர்வோனும் அனுமதிக்கப்பட்ட முறையில் சம்மதத்தின் அடிப்படையில் பிரதியீட்டைப் பெற்றுக்கொண்டு ஓர் உடைமையை ஒருவர் மற்றொருவருக்கு கையளிப்பதைக் குறிக்கும் நடவடிக்கையே வியாபாரம் எனப்படுகிறது. "அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி, வட்டியைத் தடைசெய்துள்ளான்" (2:275)

> உழைப்பில் சிறந்தது எதுவென நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டபோது, "உழைப்பில் சிறந்தது கைத்தொழிலும் நேர்மையான வியாபாரமும் ஆகும்." (அஹ்மத்) எனப் பதிலளித்தார்கள்.

மேற்படி குர்ஆன், ஸுன்னா போதனைகள் இஸ்லாம் வியாபாரத்தை அனுமதித்துள்ளது என்பதை உறுதி செய்கின்றன.

வியாபாரத்துக்கான சகல வழிவகைகளையும் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்துள்ளான். பூமியின் எல்லாப் பாகங்களிலும் பல்வேறு வகையான பொருட்களை அல்லாஹ் வெளிப்படுத்துகின்றான். அவற்றை தரை மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் கொண்டு செல்வதற்கான வசதிகளை மனிதன் பெற்றிருக்கிறான். அவற்றைப் பரிமாறிக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் நேர்மையாகப் பயன்படுத்தி வியாபாரத்தில் ஈடுபடுபவனுக்கே நன்மதிப்பும், உயர்வும் இருக்கின்றன.

- "நாணயமும் வாய்மையுமுடைய வியாபாரி மறுமையில் நபிமார்கள், ஸித்தீகீன்கள் (உண்மையாளர்கள்) ஷுஹதாக்களுடன் இருப்பார்" (இப்னு மாஜா)
- இஸ்லாத்தில் வியாபாரம் இபாதத்தாகக் கணிக்கப்பட்டுள்ளதால் அதற்கெனச் சட்டத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.
- வியாபார விதிமுறைகளில் அது நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள் முக்கியமானவை. "முஸ்லிம்களே, ஒப்பந்தங்களை நிறைவேற்றுங்கள். (5 : 1)

  "முஸ்லிம்கள் அவர்களது ஷர்த்துக்களை நிறைவேற்றுவதற்குக் கடமைப்பாடுடையவர்கள்." (அஹ்மத்)

## வியாபார நிபந்தனைகள்

**வாங்குவோரும் விற்போரும்**

1. இவர்கள் சித்த சுயாதீனம் அற்றவராகவோ, மந்த புத்தியுடையவராகவோ, விபரமறியாத சிறுவர்களாகவோ இருத்தல் கூடாது.

2. **வியாபாரப் பொருள்**

வியாபாரப் பொருட்கள் சுத்தமானவையாகவும், பயனுள்ளவையாகவும் இருத்தல் வேண்டும். அதற்கு மாற்றமாக நஜீஸானவையாகவோ தடுக்கப்பட்டவையாகவோ பயனற்றவையாகவோ இருக்கக் கூடாது. உதாரணமாக செத்த பிராணிகள், பன்றியின் மாமிசம், முறையாக அறுக்கப்படாதவை, விக்கிரகங்கள், இசைக் கருவிகள், கீழ்த்தரமான உணர்வுகளை வெளிக் கொணரக் கூடிய இசைத்தட்டுக்கள், புகைப்படங்கள், வீடியோ நாடாக்கள், இறுவட்டுக்கள் போதைப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்வதை இஸ்லாம் தடுத்துள்ளதைக் குறிப்பிடலாம். இவை ஆன்மீக, சமூக, பொருளாதார, சுகாதார, ஒழுக்க ரீதியான பாதகங்களை ஏற்படுத்தக் கூடியனவாக உள்ளன.

"தானாகவே செத்ததும், இரத்தம், பன்றியின் மாமிசம், அல்லாஹ் அல்லாத பெயர் சொல்லப்பட்டவைகள் ஆகியவற்றைத் தான் அல்லாஹ் உங்கள் மீது ஹறாமாக்கியிருக்கிறான்." (2 : 173)

"நிச்சயமாக அல்லாஹ்வாலும் அவனுடைய தூதராலும் மதுபானம், செத்த பிராணிகள், பன்றி, விக்கிரகங்கள் என்பவற்றின் விற்பனை தடைசெய்யப்பட்டிருக்கிறது."(புஹாரி)

- வியாபாரப் பொருள், விற்பவருக்குச் சொந்தமானதாகவும், வாங்குபவருக்கு ஒப்படைக்க முடியுமானதாகவும் கையிருப்பிலுள்ளதாயும் இருத்தல் வேண்டும். உதாரணமாக இன்னொருவருக்கோ அரசுக்கோ சொந்தமான பொருட்களை விற்க முடியாது. அதே போன்று கடலில் உள்ள மீன், ஆகாயத்தில் பறக்கும் பறவைகள் என்பவற்றையும் குறிப்பிடலாம்.
  "சொந்தமற்றவற்றில் வியாபாரமில்லை."

- பொருளும், விலையும் குறிப்பாக அறியப்படாதவை விற்பனை செய்வதற்குத் தடுக்கப்பட்டுள்ளன. எனினும், கண்ணுக்குப் புலப்படாத பொருட்களின் பண்புகள் அறியப்பட்டிருப்பின் விற்பனை செய்யலாம். உ-ம் : தகர மீன், கொள்கல எரிவாயு

### 3. ஈஜாப் கபூல்

ஒரு வியாபாரி தன்வசமுள்ள குறித்த பொருளை விற்றுவிட்டதாகக் கூறும் கூற்று ஈஜாப் எனப்படுகின்றது. குறித்த பொருளை தான் வாங்கிக் கொண்டதாகக் கூறும் நுகர்வோரின் கூற்று கபூல் எனப்படுகிறது. ஈஜாபும் கபூலும் தெளிவான முறையில் வெளிப்படுத்தப்படுவதும், இரண்டுக்குமிடையே கால தாமதமேற்படா மலிருப்பதும் கட்டாயமானதாகும். இமாம் நவவி (ரஹ்) அவர்களின் கூற்றுப்படி நடைமுறையில் சமூகம் ஈஜாப், கபூல் எனக் கருதும் கூற்றுக்கள் சிறிய வியாபார நடவடிக்கைகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆனால், பாரிய வியாபாரங்களில் ஈஜாப், கபூல் இன்றி வியாபாரம் செல்லுபடியாகாது என இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

## இஸ்லாம் அனுமதித்த வியாபார முறைகள்

- **முழாரபா :**

நவீன கால இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரான அலி ஹபிப் என்பவர் முழாரபாவுக்கு பின்வரும் கருத்தைக் கொடுத்துள்ளார். "ஒரு தரப்பினரின் மூலதனத்தையும், மற்றொரு தரப்பினரது உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வர்த்தக முயற்சியின் போது கிடைக்கப் பெறும் இலாபத்தில் இரு தரப்பினரும் பங்குகொள்ளுதல் என்ற வகையில் இடம்பெறும் ஒரு வகைக் கூட்டுப் பங்காண்மை உடன்படிக்கையே முழாரபாவாகும்.

குர்ஆனும், ஸுன்னாவும் இதனை அங்கீகரித்துள்ளன. இஸ்லாமிய அறிஞர்களும் இது கூடும் என்பதில் ஏகோபித்த கருத்துக் கொண்டுள்ளார்கள். "அல்லாஹ்வின் அருளைத் தேடி பூமியின் பல பாகங்களிலும் செல்ல வேண்டியிருக்கும். " (2:198), (62:60),(73:20) என்பன போன்ற வசனங்கள் முழாரபாவை சட்டபூர்வமானது என உறுதிப்படுத்துவதாக முபஸ்ஸிரீன்கள் உறுதிப்படுத்துகின்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்திற்கு முன்னர் கதீஜா (ரழி) அவர்களிடமிருந்து முழாரபா அடிப்படையிலேயே வியாபாரப் பொருட்களை ஷாம் நாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். ஜாஹிலிய்யா காலத்தில் பிரபல்யமாக இருந்த இந்த வியாபார

முறையினை இஸ்லாத்தின் வருகைக்குப் பின்னர் நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்தார்கள்.

- **முஷாரகா :**

உலகில் காணப்படுகின்ற உற்பத்தி முயற்சிகள், வியாபார நடவடிக்கைகள் மிகச் சிறிய அளவிலும், பாரிய அளவிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. பாரிய அளவிலான உற்பத்தி, வியாபார நடவடிக்கைகளில் ஒரு தனிநபர் மாத்திரம் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்படுவதுண்டு. இதனால்தான் பலர் ஒன்றுசேர்ந்து முதலிட்டு இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. முஷாரகா முறையும் அவ்வாறானதொன்றே.

> "பலர் ஒன்று சேர்ந்து தத்தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து ஓர் உற்பத்தி அல்லது தொழில் முயற்சியில் பங்குதாரர்களாக ஈடுபடும் அமைப்பையே இது குறிக்கின்றது."

- **முராபஹா :**

‘முராபஹா’ என்ற சொல் ‘ரபிஹ’ என்ற வினையடியிலிருந்து தோன்றிய தாகும். இலாபமடைந்தான் என்பது இதன் பொருளாகும். இஸ்லாமிய அறிஞர்கள் இதனைப் பல்வேறு அடிப்படையில் வரைவிலக்கணப் படுத்தியுள்ளார்கள். இமாம் இப்னு ருஷ்த் இதனைப் பின்வருமாறு வரைவிலக்ககணப்படுத்தியுள்ளார்கள்.

‘முராபஹா என்பது ஒரு வியாபாரி தனது விற்பனைப் பொருளின் கொள்விலையை அதனை வாங்க வருபவரிடம் தெளிவுபடுத்தி அதனோடு, தான் அப்பொருளை விற்கின்றபோது எதிர்பார்க்கப்படுகின்ற குறிப்பிட்ட இலாபத் தொகைக்கு அப்பொருளை விற்பனை செய்வார். முராபஹாவில் கொள்வனவு விலை இலாபம் என்பவற்றை கொள்வனவாளர்கள் அறிந்து கொள்வார்.

சாதாரண பொருள் விற்பனையிலிருந்து இது வித்தியாசமானதாகும். சாதாரண விற்பனையில் வியாபாரி விற்பனைப் பொருளின் கொள்வனவு விலையைக் குறிப்பிடாமல் கொள்வனவு விலையோடு இலாபத்தைக் கூட்டி மொத்தத் தொகைக்கு அப்பொருளை விற்பனை செய்வார். முராபஹாவில் கொள்வனவு விலை, இலாபம் என்பவற்றை கொள்வனவாளர்கள் அறிந்து கொள்வார்.

முராபஹா வியாபார அமைப்பு ஷரீஆவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. நான்கு மத்ஹபுகளுடைய இமாம்களும், அதிகமான சன்மார்க்க அறிஞர்களும் இதனை வலியுறுத்தியுள்ளார்கள். இது எந்த வகையிலும் வட்டியோடு தொடர்புடையதல்ல. சாதாரண பொருள் விற்பனையில் பின்பற்றப்படுகின்ற ஷரீஅத் சட்ட ஒழுங்குகளே இதிலும் பின்பற்றப்படுகின்றது. எல்லா வியாபார கொடுக்கல் வாங்கல்களுக்கும் இதனைப் பயன்படுத்த முடியும்.

முராபஹா ஒப்பந்தப்படி விற்பனையாளர் தனது விற்பனைப் பொருளுக்குரிய விலைப் பெறுமானத்தை உடன் காசாகவோ மொத்தமாகவோ, தவணை அடிப்படையிலோ வழங்க முடியும் எனும் நிபந்தனைக்கமையவே தொழிற்படுவார். இவ்விதம் தவணை அடிப்படையில் வழங்கும்போது ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்க கொள்வனவாளரிடம் ஏதும் பாதுகாப்புக்களை முன்வைக்குமாறு கோரலாம்.

- **ஸலம் (முற்பணக் கொடுப்பனவு வியாபாரம்) :**

காலம் தாழ்த்தி பொருளை ஒப்படைத்தல் முறையில் கொள்வனவு செய்தல் ‘ஸலம்’ எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வியாபார அமைப்பில் பொருளின் விலைக்குரிய முழுப் பணத்தையும் வாங்குபவர் செலுத்திவிட, விற்பனையாளர் குறிப்பிட்ட ஒரு திகதியில் பொருளை ஒப்படைப்பார்.

இவ்வியாபார அமைப்பு குர்ஆன், ஸுன்னா, இஜ்மா அடிப்படையில் அனுமதி பெற்றதாகும். மனிதர்களுக்கு ஏற்படும் ஒரு பொதுவான தேவையை நிறைவுசெய்வதற்காகவே இவ்வமைப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது. பணமுள்ளவன் பொருளை வாங்கவேண்டிய தேவையிலிருப்பான். பொருளின் சொந்தக்காரனோ அதனை உற்பத்தி செய்ய முன்னரோ அல்லது அறுவடை செய்ய முன்னரோ பணத் தேவையுள்ளவனாய் இருப்பான். உதாரணமாக விவசாயிக்கு அறுவடைக்கு முன்னர் ஏற்படும் தேவைகளைக் குறிப்பிடலாம்.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது அங்கே இக்கொடுக்கல், வாங்கல் முறை இருந்தது. இதனை ஷரீஅத்துக்கு இணங்கியதாக அமைப்பதற்கான நிபந்தனைகளை நபி (ஸல்) அவர்கள் விதித்தார்கள். "எதற்காவது முற்பணம் செலுத்துவோர் குறித்த அளவு, நிறை ஆகிய இரண்டிற்குமே அவ்வாறு செலுத்த வேண்டும். மேலும் காலத்தையும் நிச்சயித்துக்கொள்ள வேண்டும்.”

- **அல் - இஜாரா :**

மனிதர்கள் எல்லோரும் தமக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் எப்போதும் சொந்தமாக வைத்திருப்பதில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இரவல் வாங்குதல் மூலம், வாடகைக்குப் பெறுதல் மூலம் தமது தேவைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டி ஏற்படுகின்றது. அல் இஜாரா என்பது வாடகைக்குப் பெறுதல் என்பதையே குறிக்கும்.

"ஒரு நபரிடம் அல்லது ஒரு பொருளிலிருந்து பயன் பெறுவதற்காக குறித்த ஒரு தொகையை பதிலீடாகச் செலுத்தலைக் குறிப்பது இஜாராவாகும்."

உதாரணமாக ஒரு வாகனத்தை, கட்டடத்தை, பொருளை வாடகைக்கு எடுத்தலையும் ஒரு நபரை கூலிக்கு அமர்த்துவதையும் குறிப்பிடலாம்.

- **பைஉல் முஅஜ்ஜல் அல்லது பைஉத் தக்ஸீத் :**

பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் அல்லது தவணை அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல் வியாபாரத்தை இது குறிக்கும். "இவ்வியாபாரம் ஒப்பந்தத்தில் பொருள் முன்னதாகவும் அதற்குரிய பெறுமதி பின்னரும் வழங்கப்படுவதால் பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் என வழங்கப்படுகிறது. "இவ்வியாபாரத்தில் மூன்று நபர்கள் சம்பந்தப்படுகிறார்கள். விற்பனையாளன், கொள்வனவாளன், தரகர். தரகர் விற்பனையாளனையும் கொள்வனவாளனையும் இணைப்பவராக இருப்பார். கொள்வனவாளனுக்காக பொருளின் விலையை தரகர் வியாபாரிக்கு வழங்குவார். பின்னர் அவ்விலையை விட மேலதிகமான தொகையையும் சேர்த்து கொள்வனவாளனிடம் தவணை அடிப்படையில் தரகர் பெற்றுக் கொள்வார். இந்த வியாபார ஒப்பந்தத்தில் பொருளுக்கான விலை நடைமுறை விலையிலும் கூடியதாகவே காணப்படும்.

இவ்வியாபாரம் நான்கு மத்ஹபுகளையும் சார்ந்த பெரும்பான்மை அறிஞர் களின் கருத்துப்படி ஷரீஆவின் பார்வையில் அனுமதிக்கப்பட்டதாகும். இதில் பெறப்படும் மேலதிக தொகை ஹலாலானது என்கின்றனர். இதனை நவீன கால அறிஞர்களும் சட்டத்துறை அமைப்புக்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இவ்வியாபாரம் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது என சட்ட அறிஞர்கள் கூறுகின்றனர்.

1. "அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி வைத்து வட்டியை தடுத்துவிட்டான்." (2:275)

இவ்வசனம் அனைத்து வகையான வியாபாரத்தையுமே குறிக்கின்றது. உடன் காசுக்கு கொடுத்தாலும், தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் கொடுத்தாலும் அவை மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டவையாகும்.

2. விசுவாசம் கொண்டவர்களே, நீங்கள் குறிப்பிட்ட தவணை வரை ஒருவருக்கொருவர் கடன் கொடுக்கல், வாங்கல் செய்து கொண்டால் அதை எழுதிக் கொள்ளுங்கள். (2:282)

   பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரத்தில் ஒப்பந்தம் இடம் பெறும் இடத்தில் பொருளின் பெறுமதி பெற்றுக்கொள்ளப்படமாட்டாது. பொருள் மாத்திரம் கைமாற்றப்படுவதால் இதில் ஒரு வகை கடன் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகின்றது. ஆகவே மேற்படி வசனமும் கடன் அடிப்படையிலான வியாபாரத்தை அனுமதித்துள்ளது.

3. பின்வரும் ஹதீஸும் இதனை உறுதிப்படுத்துகின்றது. "யாராவது பேரீத்தம் பழத்தைக் கடனாகக் கொடுத்தால் அதனை அவர் அறியப்பட்ட அளத்தல் அல்லது நிறுத்தல் அளவையில் வரையறுக்கப்பட்ட காலத்துக்கு கடனாகக் கொடுக்கவும்" (முஸ்லிம்).

இங்கு நபி (ஸல்) அவர்கள் பேரீத்தம் பழத்தை வியாபாரப் பண்டங்களில் ஒன்றாகவே குறிப்பிட்டுள்ளார்கள். எனவே வர்ணனைக்கு உட்படக் கூடிய அளக்கக் கூடிய, அனைத்துப் பொருட்களையும் பேரீத்தம் பழத்துடன் எமக்கு ஒப்புநோக்க முடியும்.

பின்வரும் நிபந்தனைகளை பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் பெற்றிருந்தால் அவ்வகை வியாபாரமும், அதன் இலாபமும் ஷரீஆவில் அங்கீகரிக்கப்படும்.

1. ஏமாற்று, மோசடி, பொய் என்பவற்றிலிருந்து நீங்கப் பெற்றவையாக வியாபார முறைமை அமைந்திருத்தல்.
2. வியாபாரக் பொருள் ஷரீஆவில் அனுமதிக்கப்பட்டதாய் இருத்தல்.
3. பணம் செலுத்தப்பட வேண்டிய கால எல்லை வரையறுக்கப்பட்டிருத்தல்.
4. நுகர்வாளருக்குக் கொடுப்பதற்கு முன்னர் விற்பனையாளர் பொருளைக் கையேற்றிருத்தல்.

இவற்றோடு கொடுக்கல், வாங்கலின்போது இரு சாராரும் கைக்கொள்ள வேண்டுமென ஷரீஆ பொதுவாக விதித்துள்ள நிபந்தனைகளும் அடங்கும்.

- **அஸ்ஸம்ஸரா :**

இஸ்லாத்தில் தரகராக இருப்பதற்கு தடையேதும் இல்லை. இது விற்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையில் ஒரு வகைத் தொடர்பை ஏற்படுத்துவதுடன் இலாபகரமான கொடுக்கல் வாங்கலுக்கும் உதவுகின்றது.

இமாம்களான இப்னு ஸீரீன், அதாஉ, இப்றாஹீம், அல் ஹஸன் போன்றோர் தரகராக செயற்படுவதிலும் அதற்காக ஒரு தொகைப் பணத்தைப் பெறுவதிலும் எத்தகைய தவறையும் காணவில்லை என இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள், "இந்த ஆடையை விற்பனை செய்ய வேண்டிய இன்ன விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்தால் மேலதிக தொகை உமக்குரியதாகும்" என்று ஒருவர் இன்னொருவருக்கு கூறுவதில் தவறில்லை என்கிறார். ஆகவே ஒரு தரகர் சேவைக்காக ஒரு கட்டணத்தைப் பெற முடியும் என்பதே பலமான கருத்தாகக் கொள்ளப்படுகின்றது.

- **அர்ரஹ்ன் - (அடகு வைத்தல்)**

கடன் பெற்றவர், தான் பெற்ற கடனுக்கு ஈடாக கடன் கொடுத்தவரிடத்தில் பணப் பெறுமதியுள்ள ஒருபொருளை வைப்புச்செய்வதனை அடகு அல்லது ஈடுவைத்தல் என வழங்குகிறோம்.

ஒருவர் இன்னொருவரிடமிருந்து ஒரு தொகைப் பணத்தை கடனாகப் பெறுகின்றார். தான் பெற்ற கடனுக்கு கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை ஒரு நிலத்தையோ ஒரு மிருகத்தையோ விட்டு வைக்கிறார். இச்செயற்பாடே அடகு வைத்தல் என வழங்கப்படுகின்றது.

அடகு வைத்தல் இஸ்லாமிய சட்டத்தில் அனுமதிக்கப்பட்டதாகும். இதற்குக் கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் ஆதாரமாக உள்ளது.

நீங்கள் பிரயாணத்தில் இருந்து (கொடுக்கல் வாங்கல் செய்ய) எழுத்தாளனைப் பெறாவிட்டால்(ஒரு பொருளை) ஈடாகப் பெற்றுக் கொள்ளுங்கள்."(2:283)

நபி (ஸல்) அவர்களும் இவ்வாறு அடகு வைப்பதை அங்கீகரித் துள்ளதுடன் அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் தன்னுடைய கவசத்தை ஒரு யூதனிடம் ஈடுவைத்து அவனிடமிருந்து உணவுப் பொருளைப் பெற்றுள்ளார்கள். (புஹாரி)

இவ்வமைப்பு சட்டபூர்வமானது என்பதில் இஸ்லாமிய அறிஞர்கள் ஆரம்ப காலம் முதலே ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளார்கள்.

# நவீன வியாபார முறைகள்

## இஸ்லாமிய வங்கி முறை - ஓர் அறிமுகம்

இன்று முஸ்லிம் நாடுகளிலும், முஸ்லிம் அல்லாத நாடுகளிலும் இஸ்லாமிய வங்கி அமோக வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. உலகிலுள்ள ஐந்து கண்டங்களிலும் சிறிய அளவிலும் பாரிய அளவிலும் பல்வேறு பெயர்களில் இந்த வங்கியமைப்பு செயற்படுத்தப்படுகின்றது. முஸ்லிம்கள் இதன்மீது பூரண நம்பிக்கை கொண்டு தமது கணக்குகளை வைப்புச் செய்கின்றார்கள். தமது கொடுக்கல் வாங்கல் தொடர்புகளையும் ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள்.

இந்தவகையில் நவீன பொருளாதாரக் கருத்தோட்டத்திற்கு சவாலாக அமையும் விதத்தில் இதன் வளர்ச்சிவேகம் துரிதமடைந்துள்ளது. தற்காலப் பொருளாதார அமைப்பில் நிலவும் சீர்கேடுகள், ஒழுங்கற்ற நிலமைகள் என்பவற்றை அகற்றி உலகின் பொருளாதார அபிவிருத்திக்கும் சமூக மேம்பாட்டிற்கும் இதன் மூலம் உதவலாம் என்பது நிதர்சனமான உண்மையாகிவிட்டது. பல நூற்றாண்டுகால வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட வட்டி முறையின் அடிப்படையிலான (Traditional System) வங்கிகளோடு போட்டியிட்டு சுமார் இரண்டு தசாப்த காலப்பகுதிக்குள் இஸ்லாமிய வங்கி அடைந்திருக்கின்ற முன்னேற்றம் நவீன கால பொருளியல் விற்பன்னர்களை பிரமிக்கச் செய்துள்ளது. எனவேதான் முஸ்லிம் நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாத்திரமன்றி பிரித்தானியா, அமெரிக்கா, ஜேர்மன் போன்ற நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் கூட இஸ்லாமியப் பொருளியல், இஸ்லாமிய வங்கியியல் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியம் (I.M.F.) இதற்கென தனியானதொரு ஆய்வுப் பிரிவையே உருவாக்கியிருக்கின்றது.

இன்று சில வட்டிசார் வங்கிகள் இஸ்லாமிய வங்கிகளின் துரிதமான வளர்ச்சியையும், பிரபல்யத்தையும் கட்டுப்படுத்த முடியாதென்பதனாலும், தமது வாடிக்கையாளர்கள் அவர்களது பணவைப்புக்களை வாபஸ் பெற்று இஸ்லாமிய வங்கிகளில் மீள் வைப்புச் செய்வதனாலும் தமது இருப்பையே உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவேதான் அவை தமது நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் இஸ்லாமிய வங்கிப் பிரிவுகளைத் தோற்றுவிக்கத் துவங்கியுள்ளன.

## இஸ்லாமிய வங்கியின் தன்மையும் ஒழுங்கமைப்பும்

இஸ்லாமிய வங்கி என்பது சமூகத்தில் பரவலாகக் காணப்படும் செல்வத்தைத் திரட்டி சமூக மேம்பாட்டிற்கும், ஐக்கியத்திற்கும் பயன் நல்கும் விதத்திலும், இஸ்லாமிய அடிப்படையிலான கூட்டு வாழ்வுக்குத் துணைசெய்யும் விதத்திலும், நீதமான செல்வப் பகிர்வை உறுதி செய்வதையும், வட்டி நீங்கலான செல்வப் பரிமாற்றத்திற்கு உதவுவதையும் இஸ்லாமிய ஷரீஅத் விதிமுறைகளுக்கேற்ப செல்வத்தை முதலீடு செய்வதன் மூலம் அபிவிருத்தி அடைய வழிவகுப்பதையும் இலக்காகக் கொண்ட ஒரு நிதி நிறுவனமாகும். இதன் செயற்பாடுகள் அனைத்தும் தக்வாவின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

இஸ்லாமிய வங்கி தனது இலக்குகளை அடைவதற்குப் பின்வரும் மூன்று பிரதான ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கின்றது.

(1) **சேமிப்புக்கான தூண்டுதலையும் அதற்கான பயிற்சியையும் வழங்குதல்.**

அதாவது, செல்வத்தை வீண்விரயம் செய்வதைவிட்டும் சமூக உறுப்பினர்களைத் தடுத்து அவர்களும் சமூகமும் பயன்படும் விதத்தில் அவற்றை எவ்வாறு சேமிக்கலாம் என்பதற்கான தூண்டுதலையும் பயிற்சியையும் வழங்குதல்

(2) **உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான பயிற்சி வழங்குதல்.**

அதாவது, சமூக உறுப்பினர்கள் தமது சேமிப்பையும் வங்கியினால் வழங்கப்படும் கடன்களையும் எவ்வாறு நன்மை பயக்கும் தொழிற்துறைகளில் ஈடுபடுத்தி அபிவிருத்தி செய்து கொள்ள முடியுமென்பதற்கான பயிற்சியையும் தொழில்நுட்பரீதியான உதவிகளையும் (Technical Assistance) வழங்குவதோடு அவசியப்படின் உற்பத்தியாளருக்குத் தேவைப்படும் சில குறிப்பிட்ட மூலவளங்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து அவர்களது தேவைக்கேற்ப கடன் அடிப்படையில் வழங்குதல்.

(3) **முதலீட்டுத் துறையில் எதிர்நோக்கப்படும் சிரமங்களைத் தவிர்ப்ப தற்கான வழிமுறைகளை கற்றுக்கொடுத்தல்.** அதாவது, வங்கி இலாபம் ஈட்டித் தரும் தொழிற்துறைகளை அறிமுகம் செய்துவைப்பதோடு முதலீட்டாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு உடனுக்குடன் தேவையான பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கும். அவர் களுக்கு மன உறுதியையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

## இஸ்லாமிய வங்கியின் அடிப்படைகள்

இஸ்லாமிய வங்கி தனது இலக்குகளை எய்துவதில் பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்கும்.

1. வட்டியுடனான தொடர்புகள், செயற்பாடுகளை முற்றாகவே தவிர்த்தல்.
2. செல்வம் திரட்டுவதற்குரிய மூலதனமாகப் பணம் மட்டுமன்றி மனிதனது உடல் ரீதியான, சிந்தனா ரீதியான உழைப்பும், நம்பிக்கை, நாணயமும் அவசியமாகின்றன என்ற கருத்தை வலியுறுத்தல்.
3. பொருளாதார அபிவிருத்தியோடு சமூக அபிவிருத்தியையும் தொடர்புபடுத்தல்.
4. செல்வப் பரிமாற்றங்களை இலகுபடுத்தல்.
5. உற்பத்தித் திறனை மேம்படுத்தல்.
6. மூலதனத்தை விருத்திசெய்தலும் உறுதிப்படுத்தலும்.
7. இஸ்லாமிய அடிப்படையிலான கூட்டு வாழ்வுக்கும், பரஸ்பர ஒத்துழைப்புக்கும் வழி வகுப்பதோடு மக்கள் மத்தியில் நீதியானதும், சமத்துவமானதுமான வளப் பகிர்வு இடம்பெற உதவுதல்.
8. சமூக ஐக்கியத்திற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் வகைசெய்தல்.
9. ஷரீஅத் சட்ட விதிமுறைகளுக்கமைவான தொழிற்துறைகளையும் முதலீட்டு முயற்சிகளையும் அறிமுகம் செய்தல்.
10. வங்கியின் இயக்கம், செயற்பாடுகள் ஆகியவற்றை இஸ்லாமிய ஷரீஅத் சட்ட விதிகளுக்கு இசைவாக அமைத்துக் கொள்ளல்.

## இஸ்லாமிய வங்கியின் பிரதான தொழிற்பாடுகள்

பொதுவாக வட்டி முறையின் அடிப்படையிலான வங்கிகள் மேற் கொள்கின்ற தொழிற்பாடுகளில் ஷரீஅத் விதிமுறைகளுக்கு முரணில்லாதவற்றை இஸ்லாமிய வங்கியும் அப்படியே அமுல்படுத்துவதோடு அவற்றுக்கு முரணானவற்றில் ஷரீஅத்தின் உயிரோட்டத்திற்கமைய தேவையான திருத்தங்களைச் செய்து அமுல்படுத்தும். மேலும் இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாடுகளுக்கமைய வேறுசில தொழிற்பாடுகளையும் அது கொண்டிருக்கும். இவற்றில் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு :

1. வைப்புக்களைப் பொறுப்பேற்றலும் அவற்றைப் பாதுகாத்தலும்.
2. கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
3. காசோலைகளையும், நாணயக் கடிதங்களையும் பரிமாற்றிக் கொள்ள வாடிக்கையாளர்களுக்கு உதவுதல்.
4. நாணயங்களை இடம்விட்டு இடம் நகர்த்த வழிசெய்தல்.
5. வாடிக்கையாளர்களின் பிரதிநிதியாக நின்று நாணயக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உதவுதல்.
6. வெளிநாட்டு நாணயமாற்று உண்டியல்களை வழங்குதல். (Foreign draft)
7. பாதுகாப்பு அறைகளை வாடகைக்குவிடல்.
8. உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்துக்கு உதவுதல்.
9. வாடிக்கையாளர் சார்பாக உத்தரவாதக் கடிதங்களை வழங்குதல்.
10. சமூகக் காப்புறுதி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
11. வாடகை மற்றும் அடகு சேவைகளை வழங்குதல்
12. பங்குகளைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்.
13. ஷரீஅத் அனுமதித்த வர்த்தகம் மற்றும் தொழிற்துறைசார் முதலீட்டு முயற்சிகளில் ஈடுபட்டு பணம் சம்பாதித்தல்.

- **அத்த.்.மீன் (காப்புறுதி அமைப்பு) :**

இஸ்லாமிய அரசு தனது ஆட்சியின் நிழலில் வாழும் எல்லாப் பிரஜைகளினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. இவ்வுத்தரவாதம் சமூகக் கூட்டுப் பொறுப்பினூடாகவோ அல்லது ‘பைதுல் மால்’ எனப்படும் திறைசேரி மூலமாகவோ நிறைவேற்றப்படுகின்றது. உண்மையில் பைதுல் மால் அமைப்பே இஸ்லாத்தின் காப்புறுதிக் கம்பனியாக செயற்படக் கூடியதாகும்.

இஸ்லாமிய நாட்டில் வாழும் தனிநபர்களுக்கு அனர்த்தங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு கைகொடுத்து உதவுவது அரசின் கடமையாகும்.

கடன்பட்ட நிலையில் உள்ளோருக்கும் இஸ்லாம் ஸகாத்தில் இருந்து ஒரு விஷேட தொகையை வழங்குகின்றது. ஸகாத்தைப் பெற தகுதியுடையோரில் கடன்பட்டோரும் ஒரு பிரிவினர் என்பதனை நீங்கள் அறிவீர்கள். இது தவிர இன்னும் பல அமைப்புக்களின் மூலமாகவும் இஸ்லாம் மனிதர்களின் பாதுகாப்பை உறுதி செய்கின்றது.

இந்த வகையில் இஸ்லாத்தின் கொடுக்கல், வாங்கல் சட்டங்களுக்கு முரண்படாத விதத்தில் காப்புறுதி அமைப்புக்களைச் செயற்படுத்துவதில் தவறில்லை. இஸ்லாத்தின் காப்புறுதி அமைப்பு என்பது ஒத்துழைப்பு, கூட்டுப் பொறுப்பு என்பவற்றின் அடிப்படையில் நன்கொடைகளைப் பெற்று இயங்கும் ஒரு நலன்புரி நிறுவனமாகவே பெரும்பாலும் அமையும்.

ஆயினும் இன்று நடைமுறையில் உள்ள நவீன காப்புறுதி கம்பனிகளும் அவற்றின் செயற்பாடுகளும் இஸ்லாத்திற்கும் அதன் அடிப்படைகளுக்கும் முரண்பட்டதாகவே அமைந்துள்ளன.

இதனாலேயே நடைமுறையில் நாம் காணும் ஆயுள் காப்புறுதி உட்பட அனைத்து வகையான நவீன காப்புறுதி அமைப்புகளும் ஹராமானவை என அறிஞர்கள் கருதுகின்றனர். 'மஜ்மஉல் பிக்ஹில் இஸ்லாமி' எனும் இஸ்லாமிய சட்டமன்றமும் இத்தீர்ப்பையே வழங்கி யுள்ளது. சூதுக்குரிய பண்புகள், வட்டி, பிறர் செல்வத்தை எத்தகைய பிரதியீடும் இன்றி பெறும் நிலை ஆகியன நவீன காப்புறுதியுடன் தொடர்புபட்டுள்ளன.

அத்தோடு கொடுக்கல், வாங்கலில் இருக்கக் கூடாத மயக்கமான, தெளிவற்ற தன்மைகள் காப்புறுதி ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்டிருப்பதனாலும் இவ்வமைப்புகள் விலக்கப்பட வேண்டும் எனக் கருதப்படுகின்றன.

ஆயுள் காப்புறுதி அமைப்பு பெரியளவில் இஸ்லாமிய சட்டத்துடன் முரண்படுகின்றது. ஏனைய காப்புறுதி முறைகளைப் பொறுத்தவரையில் (உ-ம் ) அனர்த்தங்களுக்கான காப்புறுதி) அவற்றை சில திருத்தங்கள் செய்வதன் ஊடாக இஸ்லாமியமயப்படுத்த முடியும்.

உதாரணமாக நவீன இஸ்லாமிய சட்ட அறிஞரான கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, அனர்த்தங்கள் மீதான காப்புறுதியை ‘நஷ்டஈட்டு நிபந்தனையுடன் கூடிய நன்கொடை’ என்ற அடிப்படையில் இஸ்லாமிய முறையில் மேற்கொள்ளலாம் என்கிறார். அதாவது ஒருவர் தனக்கு ஒரு (பொருள்) ஆபத்து ஏற்படும்போது தனக்கு ஏற்படும் இழப்பின் சுமையை குறைக்கக் கூடிய ஒரு தொகையைத் தனக்கு நஷ்டஈடாகத் தரவேண்டும் எனும் நிபந்தனையின் பேரில் தனது கொடுப்பனவை கம்பனிக்கு நன்கொடையாக வழங்குவார். அந்தக் கம்பனி வட்டி அமைப்பைத் தவிர்ப்பதாக இருக்கும்போது இக்காப்புறுதி முறை ஷரீஅத்துக்கு உடன்பாடானதாக இருக்கும்.

# இஸ்லாத்தில் ஹறாமாக்கப்பட்ட உழைப்பு முறைகள்

**அளவை நிறுவையில் மோசடி செய்தல் :**

அளந்து அல்லது நிறுத்து வாங்கும்போது அளவைக் கூட்டி வாங்குவதையும், அளந்து அல்லது நிறுத்து கொடுக்கும்போது அளவைக் குறைத்து விடுவதையும் அளவை நிறுவை மோசடி 'தத்பீப்' என அழைப்பர். இதனை அல்குர்ஆனும் ஸுன்னாவும் வன்மையாகக் கண்டிக்கின்றன.

"அளவை (சரியான அளவுகொண்டு) பூரணமாக அளவுங்கள், எடையை நீதமாக நிறுங்கள். யாதோர் ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் நாம் நிர்ப்பந்திப்பதேயில்லை" (6:152)

"நீங்கள் அளந்தால் பூரணமாக அளவுங்கள். (நிறுத்தால்) சரியான எடையைக் கொண்டு நிறுங்கள். இது (உங்களுக்கு) மிக நன்று. மிக அழகான பலனையும் தரும். (17:35)

இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள். "விற்கும் போதும் வாங்கும்போதும் தன் உரிமையைக் கோரும் போதும் தாராளத் தன்மையுடன் நடந்து கொள்ளும் மனிதனுக்கு அல்லாஹ் அருள்பாளிப்பானாக" எனப் பிரார்த்தித்துள்ளார்கள். (புஹாரி, திர்மிதி)

அளவை நிறுவையில் ஒரு முஸ்லிம் தனக்கு முடியுமான அளவு மிக நீதியோடு நடந்துகொள்ள வேண்டும். ஒரு முஸ்லிம் தனக்கு ஒரு அளவுகோலையும், தான் விரும்புபவர்களுக்கு மற்றொரு அளவு கோலையும் ஏனையவர்களுக்கு இன்னொரு அளவுகோலையும் வைத்துக் கொள்வது நேர்மையானதல்ல. ஒவ்வொரு மனிதரது சொத்திலும் நீதியாகவும் நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

**2. பதுக்கல் - அல்- இஹ்திகார் :**

பொருட்களைச் சந்தைக்கு வராமல் தடுத்து அல்லது மறைத்து , அதன் மூலம் கேள்வியை ஏற்படுத்தி விலையேற்றத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு தந்திரமான வியாபார மோசடியே பதுக்கலாகும். இஸ்லாம் தனிநபர் போட்டிக்கும், சந்தையின் இயற்கையான போட்டிக்கும் சுதந்திரம் அளித்திருக்கின்றது. எனினும், பேராசையினால் உந்தப்பட்டு பிறரை துன்பத்திற்கும் கஷ்டத்திற்கும் உட்படுத்தி செல்வம் திரட்டுவோரை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதனால்தான் பதுக்கலைக் கண்டித்து நபி (ஸல்) அவர்கள் பின்வரும் போதனைகளை முன்வைத்துள்ளார்கள்.

"விலை உயர்வை நாடி நாற்பது நாட்கள் தானியத்தை பதுக்கிக் கொள்பவனை அல்லாஹ் உதறித் தள்ளிவிடுவான்." (அஹ்மத்)

"விலையேறும் வரை பொருட்களைத் தடுத்துக்கொள்பவன் பாவியே" (முஸ்லிம்)

"விற்பவன் இலாபம் பெறுவான்.பதுக்கியவன் சபிக்கப்படுவான்." (இப்னுமாஜா)

இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் மேற்படி ஹதீஸ்களை அடிப்படையாகக் கொண்டு பதுக்கல் இரண்டு நிலைமைகளில் தடைசெய்யப்படுவதாகக் குறிப்பிடுகின்றார்கள்.

(அ) நாட்டு மக்களுக்குப் பதுக்கல் தீங்கிழைப்பதாக இருக்கும் நிலை.
(ஆ) வியாபாரி தனது இலாபத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் தானாகவே செயற்கையாக விலையைக் கூட்டி விற்கின்ற நிலை.

**3. கலப்படம் செய்தலும் ஏமாற்றுதலும் :**

விற்பதிலும் வாங்குவதிலும் மனிதர்களோடு தொடர்புடைய எல்லா விவகாரங் களிலும் மோசடியையும் ஏமாற்றுதலையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. ஒரு முஸ்லிம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையோடும் நேர்மையோடும் நடந்துகொள்ள வேண்டும். அற்ப இலாபத்திற் காக அவற்றை இழந்துவிடக் கூடாது. இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

"ஒரு பொருளைப் பற்றி (எல்லாவற்றையும்) தெளிவாகக் கூறாமல் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்வது ஆகுமான தல்ல. (அப்பொருளின் குறைகளைப் பற்றி) தெரிந்த ஒருவர் அவற்றைக் குறிப்பிடாமல் விடுவதும் ஆகுமானதல்ல. (ஹாகிம், பைஹகி). ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் சந்தைக்குச் சென்று ஒரு வியாபாரியின் தானியக் குவியலினுள் தனது கையை நுழைத்துப் பார்த்தபோது அது ஈரமாக இருக்கக் கண்டார்கள். இது ஏன் என வியாபாரியிடம் கேட்டபோது மழைக்கு நனைந்து விட்டது எனக் கூறினான். அப்போது நபி (ஸல்) அவர்கள் அவனைப் பார்த்து "மனிதர்கள் பார்க்கக் கூடிய வகையில் அதனை மேல் பகுதியில் வைத்திருக்கக் கூடாதா? எனக் கூறி விட்டு எம்மை ஏமாற்றுபவர் எம்மைச் சார்ந்தவரல்லர்" (முஸ்லிம்) என்று எச்சரித்தார்கள்.

4. **திருடப்பட்ட அல்லது கொள்ளையிடப்பட்ட பொருட்களை விலை கொடுத்து வாங்குதல் :**

குற்றங்களைக் களைவது முஸ்லிம்களின் கடமையாகும். திருடப்பட்ட, கொள்ளையிடப்பட்ட, நேர்மையீனமாகப் பெறப்பட்ட பொருட்களாகத் தெரிந்த எதனையும் விலைகொடுத்து வாங்குவதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அவ்வாறு வாங்குவது அநீதிக்கு உடந்தையானதாகும்.

"திருடப்பட்டது என்று தெரிந்திருந்தும் திருட்டுப் பொருளை வாங்குபவன் பாவத்தையும், திருடுவதனால் ஏற்படும் அவமானத்தையும் பகிர்ந்து கொள்கிறான்." (பைஹகி)

விரோதமாகக் கையாடப்பட்ட ஒரு பொருள் சட்ட அங்கீகாரம் பெறமாட்டாது. (அதற்கு உரிமையானவனுக்குரிய உரிமை நீங்கி விடுவதுமில்லை.) காலம் கடந்ததாக இருந்தாலும் ஹராம் ஹலாலாக மாட்டாது.

**5. சூதாட்டம்**

பொதுவாக இஸ்லாம் பொழுதுபோக்கு நடவடிக்கைகள், விளையாட்டு விவகாரங்களில் சூதாட்டம் கலந்திருக்குமானால் அதனைத் தடைசெய்கின்றது. அவை அதில் ஈடுபடுபவர்களுக்கு இலாபத்தை அல்லது நட்டத்தை ஈட்டித்

தந்தாலும் சரியே. பொழுது போக்கிற்காகவோ, ஓய்வு நேரத்தை கழிப்பதற்காகவோ இவ்வாறான காரியங்களில் ஈடுபடுவதை இஸ்லாம் தடை செய்கின்றது. ஆகவே எந்நிலையிலும் ஒரு முஸ்லிம் சூதாட்ட விவகாரங்களில் ஈடுபடமுடியாது.

சூதாட்டத்தை ஒரு எல்லைக்குட்படுத்தி நோக்க முடியாது. இதில் பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இஸ்லாம் இதனைத் தடை செய்தமைக்குப் பின்வருவன தூண்டுதலாக இருந்துள்ளன.

(1) உழைக்கும் போது அல்லாஹ்வினதும், ரஸூலினதும் வழி முறைகளையே பின்பற்ற வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் தனக்கு மறைத்து வைத்திருக்கும் அருளை முயற்சித்துப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கும் மனிதனை சூதாட்டம் குறுக்கு வழியில் செல்ல வழிவகுக்கின்றமை.

(2) மனிதனது சொத்துக்கள், உடைமைகளுக்கு ஒரு பெறுமானத்தைக் கொடுத்திருக்க அதனை சூதாட்டம் மூலம் அபகரிப்பதை இஸ்லாம் முறைகேடான செயலாகவே கருதுகின்றமை. (மாறாக அதனை ஒருவர் ஸதகா, நன்கொடை மூலம் பெறலாம்.)

(3) சூதாட்டம் மூலம் அடுத்தவரது செல்வங்களை அபகரிக்கும் போது பகைமை, குரோதம், பிரச்சினை வளர்கின்றமை.

(4) சூதாட்டத்தில் தோல்வியுற்றவர் தனது நட்டத்தை ஈடுசெய்ய தொடர்ந்தும் அதில் ஈடுபடுவர். ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தை மிகைத்துக் கொண்டேயிருக்கும். இதுவே சூதாட்டத்தின் உண்மையான உருவம்.

(5) இதன் மூலம் சூதாட்டம் பாரிய நஷ்டத்தை சமூகத்திற்கு ஏற்படுத்தும். சூதாட்டக்காரன் தனது ரப்பை, தன்னை, தனது குடும்பத்தை, சமூகத்தையே மறந்து விடுவான். தனது மார்க்கத்தை, மானத்தை, நாட்டையே விற்றுவிடுவான்.

இவ்வாறான பாரிய பின்விளைவுகளை இது கொண்டிருப்பதனால்தான் அல்லாஹ் இதனை மது, சிலைவணக்கம், குறிகேட்டல் எனும் பாவங்களோடு இணைத்துக் கூறுகின்றான். "விசுவாசிகளே நிச்சயமாக மது அருந்துவதும்,

சூதாட்டமும், சிலைவணங்குவதும், அம்பெறிந்து குறிகேட்பதும் ஷைதானின் அருவருக்கத்தக்க செயல்களாகும். எனவே நீங்கள் அவற்றைத் தவிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் நாடுவதெல்லாம் மதுவிலும், சூதாட்டத்திலும் (அதன்மூலம்) உங்களுக்கிடையில் குரோதத்தையும், வெறுப்பையும் உண்டுபண்ணவும், அல்லாஹ்வை நினைவு கூறுவதை விட்டும், தொழுகையை விட்டும் உங்களை அவன் தடுப்பதுமேயாகும். (ஆகவே அவைகளிலிருந்து) நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். (5 : 90-91)

சூதாட்டம் அநியாயமாக அடுத்தவர்களது சொத்துக்களை அபகரிப்பதாக வுள்ளது. ஹலாலாக, தன்கையினால் உழைத்து சாப்பிடுவதையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது. சூதாட்டம் அடுத்தவனுக்கு இழப்பை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான இழப்பை எவரும் நியாயம் காண்பதில்லை. அடுத்தவர்களது அதிருப்திக்கும் ஏக்கத்துக்கும் உட்படுகின்ற செல்வம் ஒரு முஸ்லிமுக்கு என்றுமே ஹலாலாகமாட்டாது. இதனை நபி (ஸல்) பின்வருமாறு கூறினார்கள். “அக்கிரமம் செய்தவர்களின் செல்வம் உங்களுக்கு ஆகுமானதன்று. செல்வத்தின் உரிமையாளர் அதனைத் தன் விருப்பத்துடன் உங்களுக்குக் கொடுத்தாலே தவிர” (பைஹகி)

சூதாட்டம் நடைமுறை உலகில் பாரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. சிரமப்பட்டு உழைக்கின்ற பணம் சுரண்டப்படுவதைக் காண முடிகின்றது. இதனால் தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு, உலகம் பாரிய சவால்களை எதிர்கொள்வதைக் காணமுடிகின்றது. இவ்வாறு ஒரு மனிதன் இன்னொரு மனிதனை, ஒரு குழு, முழு மனித சமூகத்தையும் சுரண்டுவதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு எச்சரித்தார்கள். “ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் ஒரு சாண் நிலத்தை அநியாயமாக அபகரித்துக் கொண்டால் இறுதித் தீர்ப்பு நாளில் அல்லாஹ் ஏழு பூமிகளை அவனுடைய கழுத்தில் விலங்காகப் போடுவான்.” (புகாரி, முஸ்லிம்)

### 6. இலஞ்சம்

இலஞ்சம் என்பது ஓர் அதிகாரியின் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்த அல்லது ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கு, ஒரு தீர்ப்பை தனக்கு சார்பாக பெற்றுக்கொள்வதற்கு, தனக்கு விருப்பமான ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு,

தனக்கும் அல்லது உறவினருக்கு பதவி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு செலுத்தப்படுகின்ற கையூட்டைக் குறிக்கின்றது. இலஞ்சம் வழங்குவதையும் வாங்குவதையும் இஸ்லாம் தடுத்துள்ளது. அல்-குர்ஆன் இதனைப் பின்வருமாறு கூறுகின்றது.

“மேலும் உங்களுடைய செல்வங்களை உங்களுக்கிடையில் உரிமையின்றி உண்ணாதீர்கள். நீங்கள் அறிந்துகொண்டே மனிதர்களின் செல்வங்களிலிருந்து ஒரு பகுதியை பாவமான முறையில் நீங்கள் உண்ணுவதற்காக அவற்றை (இலஞ்சமாகக் கொடுக்க) அதிகாரிகளின் பால் கொண்டும் செல்லாதீர்கள்.” (2:188)

நபி(ஸல்) அவர்கள் இதனைப் பற்றி பின்வருமாறு கூறினார்கள். “அல்லாஹ்வின் சாபம் இலஞ்சம் வாங்குபவன், வழங்குபவன் ஆகிய இருவரின் மீதும் சமனானதே”.

இலஞ்சம் பல்வேறு நோக்கங்களில் வாங்கப்படுகின்றன, செலுத்தப் படுகின்றன. அடுத்தவனுக்கு அநீதி இழைக்க, தனக்கு சாதகமாக நீதித்தீர்ப்பை வழங்கவென பல்வேறு நோக்கங்களில் வழங்கப்படுகின்றன. என்ன நோக்கங்களுக்காக வழங்கப்பட்டாலும் அதன் பிரதிபலன் அநீதியாகும்.

### 7. வட்டி - அர்ரிபா

வியாபாரத்தில் தவிர்க்க வேண்டிய அடுத்த பிரதான அம்சமாக இருப்பது வட்டியாகும். வட்டி சிறிய அளவில் அமைந்தாலும், பெரிய அளவில் இருந்தாலும் ஹராமானதாகும். அல்-குர்ஆன் வட்டியைப் பற்றி கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

> "விசுவாசிகளே நீங்கள் (உண்மை) விசுவாசிகளாக இருந்தால் அல்லாஹ்வுக்குப் பயந்து வட்டியில் (இதுவரை வாங்கியது போக) மீதமிருப்பதை (வாங்காது) விட்டுவிடுங்கள். இவ்வாறு நீங்கள் நடந்துகொள்ளாவிட்டால் அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் யுத்தம் செய்யச் சித்தமாகிவிடுங்கள். ஆயினும், நீங்கள் (வட்டி வாங்கியமைக்காக மனம் வருந்தி) மீண்டுவிட்டால் உங்கள் செல்வத்தின் அடிப்படைத் தொகை உங்களுக்குரியது. நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள். (அவ்வாறே) உங்களுக்கு அநியாயம் இழைக்கப்படவும் கூடாது." (2:278-279)

"ஓர் ஊரில் வட்டியும், விபசாரமும் பரவி விட்டால் அவ்வூரார் அல்லாஹ்வின் தண்டனையைத் தாமே தங்கள் மீது இறக்கிக் கொண்டோராவார்" என்று நபி (ஸல்) அவர்கள் பகர்ந்துள்ளார்கள். (அல்-ஹாகிம்)

"அல்லாஹ் வட்டி உண்பவனையும் அதனை உண்ணக் கொடுப்பனையும் அதற்கு சாட்சியாக இருப்போரையும் அதனை எழுதுபவனையும் சபித்துள்ளான்" என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (அபூதாவூத்)

இஸ்லாத்தில் மாத்திரமன்றி முன்னைய வேதங்களான யூத, கிறிஸ்தவ வேதங்களிலும் வட்டி தடைசெய்யப்பட்டே இருந்தது.

வட்டியில் இரு வகையான அமைப்புகள் காணப்படுகின்றன. அவையாவன:

1. ரிபா - அந்நஸீஆ
2. ரிபா – அல் பழ்ல்

ரிபா – அந்நஸீஆ என்பது, கடன் கொடுத்தவர் கடன் பெற்றவரிடமிருந்து கால தாமதத்திற்கான பிரதியீடாகப் பெறக் கூடிய தீர்மானிக்கப்பட்ட மேலதிகத் தொகையைக் குறிக்கும்.

ரிபா – அல் பழ்ல் என்பது, குறைந்த பணத்தை கூடிய பணத்திற்கும் குறைந்த உணவை கூடிய உணவிற்கும் கைமாற்றிக் கொள்வதனைக் குறிக்கும்.

முதலாவது வகையைப் போன்றே இரண்டாவது வகை வட்டியும் ஹராமாகும். இதுவும் உண்மையான வட்டிக்கு இட்டுச் செல்வதாக அமையும் என்ற காரணத்தினால் விலக்கப்பட்டுள்ளது.

இதனைப் பற்றி நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "ஒரு தங்க நாணயத்தை இரண்டு தங்க நாணயத்திற்கும், ஒரு வெள்ளி நாணயத்தை இரண்டு வெள்ளி நாணயத்திற்கும் விற்காதீர்கள். ஏனெனில் நான் வட்டியையிட்டுப் பயப்படுகிறேன்." (முவத்தா மாலிக்)

ஆறு பொருட்களில் இருந்து இவ்வகை வட்டியைப் பெறுவது விலக்கப்பட்டுள்ளதை ஹதீஸ்களில் இருந்து அறிய முடிகின்றது. அவையாவன: தங்கம், வெள்ளி, கோதுமை, வாற்கோதுமை, ஈத்தம்பழம், உப்பு ஆகியனவாகும்.

> "தங்கத்திற்குத் தங்கமும், வெள்ளிக்கு வெள்ளியும் , உப்புக்கு உப்புமாக சமஅளவில் உடனுக்குடன் கைமாற்றிக் கொள்ள வேண்டும். மாறாக அளவைக் கூட்டினால் அல்லது கூட்டுமாறு வேண்டினால் பெற்றவரும், கொடுத்தவரும் ஆகிய இருவரும் வட்டி நடவடிக்கைகளில் ஈடுபட்டவராவார்." (புஹாரி)

ஹதீஸ்களில் குறிப்பாக இந்த ஆறு பொருட்கள் மாத்திரம் கூறப்பட்டுள்ளமைக்கான காரணம் யாதெனில், இவை மனித வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளாக அமைந்திருத்தலேயாகும். தங்கமும் வெள்ளியும் கொடுக்கல் வாங்கல் ஊடகமாகவும் விலைகளுக்கான அளவுகோல்களாகவும் காணப்படுகின்றன. ஏனைய நான்கும் பிரதான உணவுப் பொருட்களாகக் காணப்படுகின்றன. இவற்றில் வட்டி இடம்பெறுவது மக்களைப் பெரிதும் பாதிக்கக் கூடியதாய் அமையும். எனவே மக்களின் நலனைக் கருத்திற் கொண்டே குறிப்பாக இவற்றில் மேலதிகமாகப் பெறுவது விலக்கப்பட்டுள்ளது.

தங்கம், வெள்ளி அல்லாத விலையைத் தீர்மானிக்கக் கூடியவையும் இதில் அடங்கும். (உ-ம் : பணம்)

மேலும் குறித்த நிலையில் உள்ள குறிப்பிடப்படாத உணவுப் பொருட்களும் இதில் அடங்கும். (உ-ம் : அரிசி)

எனவே தங்கம், வெள்ளி போன்றவற்றையோ அவற்றின் இனத்தைச் சேர்ந்தவற்றையோ மாற்றும்போது (உ-ம் : தங்கத்திற்கு தங்கத்தையும், கோதுமைக்கு கோதுமையையும் மாற்றுதல்) இரண்டு நிபந்தனைகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

1. இரண்டும் சமஅளவாக இருத்தல் : இங்கு ரகத்தையோ, தரத்தையோ கவனத்திற் கொள்ளக் கூடாது. உதாரணமாக ஒரு கிலோ சம்பா அரிசியை 1 1/2 கிலோ நாட்டு அரிசிக்கு மாற்றிக் கொள்ளக் கூடாது. அது வட்டியாக அமையும். இதே நடவடிக்கையை ஹலாலான முறையில் அமைத்துக் கொள்ள வேண்டுமாயின் முதலில் நாட்டு அரிசியின்

சொந்தக்காரர் அதனை சம்பா அரிசியின் சொந்தக்காரருக்கு பணத்திற்கு விற்க வேண்டும். இங்கு விலை வித்தியாசமாக அமைவது பாதிப்பை ஏற்படுத்தாது.

2. பண்டமாற்றின்போது ஒன்றைக் கொடுத்து மற்றதைத் தாமதப்படுத்திக் கொடுக்கக் கூடாது. மாறாக உடனுக்குடன் கைமாற்றிக் கொள்ள வேண்டும்.

இரு பண்டங்களும் இனத்தில் வேறுபட்டு நோக்கத்தில் ஒத்திருத்தல்

(உ-ம் : தங்கமும் வெள்ளியும்) அளவு வித்தியாசம் ஹராமாகாது. ஆனால், இங்கும் காலதாமதம் கூடாது. உதாரணமாக தங்கத்திற்கு வெள்ளியை மாற்றும்போது தவணையிடாது உடனுக்குடன் கைமாற்றிக் கொள்வது நிபந்தனையாகும். ஆனால் அளவில் வித்தியாசம் இருப்பது தவறல்ல. இங்கு குறைந்த தங்கத்திற்கு கூடிய வெள்ளியைப் பெறலாம். இவ்வாறே கோதுமையையும் வாற்கோதுமையையும் மாற்றிக் கொள்ளலாம்.

கைமாறும் இரு பண்டங்களும் இனம், நோக்கம் இரண்டிலும் வேறுபட்டால் குறித்த இரண்டு நிபந்தனைகளுமே அவசியமற்றதாகும்.

மேலும் தங்கம், வெள்ளி, பிரதான உணவுப் பொருட்கள் போன்றவை தவிர்ந்தவற்றில் அளவு வித்தியாசமோ, கால தாமதமோ (தவணையிடல்) பிழையானதல்ல

உ-ம் : ஓர் ஆட்டை இரண்டு ஆடுகளுக்கு மாற்றிக் கொடுக்கலாம்.

வட்டி பொருளாதார ரீதியாகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பது தெளிவான ஒன்றாகும். நடைமுறை உலகில் உள்ள பொருளாதார சமூக ரீதியிலான பிரச்சினைகளும் பின்னடைவுகளும் இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

# முனாகஹாத்

## நிகாஹ் - விவாகம்

விவாகத்தைக் குறிக்க அரபியில் "நிகாஹ்' என்ற சொல் பயன்படுகின்றது. 'நிகாஹ்' என்பதன் அகராதிப் பொருள் திருமண ஒப்பந்தம் செய்தல், மனைவியுடன் உடல் ரீதியாக ஒன்றிணைதல் என்பனவாகும். குடும்பமாக இணைந்து வாழ்வதற்காக ஷரீஅத் விதித்துள்ள நிபந்தனைகளைப் பேணி ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கு மிடையில் மேற்கொள்ளப்படுகின்ற உடன்படிக்கையே திருமணமாகும்.

விவாகம் குடும்ப வாழ்க்கைக்கு வாயிலாக அமைகின்றது. இஸ்லாத்தின் பார்வையில் விவாகம் ஒரு வணக்கமாகும். அதனுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் நற்கூலியுண்டு. அல்குர்ஆனும் சுன்னாவும் இவ்வணக்கத்தின் பால் ஆர்வமூட்டுகின்றன.

"உங்களில் வாழ்க்கைத் துணை இல்லாதோர்க்கு திருமணம் செய்து வையுங்கள்." (24:32)

"வாலிபர்களே! உங்களில் பலமுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளவும். ஏனெனில் அது பார்வையைக் கட்டுப்படுத்தவும், கற்பைப் பேணவும் சிறந்ததாகும். சக்தியில்லாதவர் நோன்பு நோற்கவும். அது அவருக்குப் பாதுகாப்பாகும்." (புஹாரி, முஸ்லிம்)

இஸ்லாமிய ஷரீஅத்தின் மூன்று பொது நோக்குகளான லரூரிய்யாத், ஹாஜிய்யாத், தஹ்ஸீனிய்யாத் என்பவற்றுள் ஷரீஅத்தின் மிக அடிப்படை நோக்கமாகிய லரூரிய்யாத்தில் உள்ளடங்கும் ஐந்து விடயங்களில் பரம்பரையைப் பாதுகாத்துப் பேணலும் ஒன்றாகின்றது. இவ்வகையில் திருமணம் ஷரீஅத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

"விவாகம் எனது வழிமுறையைச் சார்ந்தது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதில் இருந்து அது அடிப்படையில் ஸுன்னா என்று விளங்குகின்றது. இருப்பினும் ஆணினதும் பெண்ணினதும் உடல், உள, பொருளாதார, சமூக நிலையைப் பொறுத்து வாஜிப், மக்ரூஹ், ஹராம், முபாஹ் என்றவாறு சட்டவிதிமுறையின் பெறுமானம் மாறுபடுகின்றது.

இஸ்லாத்தின் பார்வையில் திருமணம் மதிக்கப்பட வேண்டிய ஓர் உடன்படிக்கையாகும். திருமண வாழ்வு நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக இஸ்லாம் சீரிய வழிகாட்டல்களை வழங்குவதுடன், விவாக உடன்படிக்கைக்கான விதிமுறைகளையும் தெளிவுபடுத்தியுள்ளது. இதன் மூலம் ஏனைய விவாக மரபுகளில் இருந்து இஸ்லாமிய மரபு சிறந்து விளங்குவதை அவதானிக்க முடிகிறது.

விவாகத்துடன் தொடர்பான இஸ்லாமிய நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கின்படி மூன்று கட்டங்களாக வகைப்படுத்தி நோக்கலாம்.

1. தயாராகுதல்
2. ஒப்பந்தம் (அக்து)
3. பகிரங்கப்படுத்தல்

1. தயாராகுதல் முதல் கட்டமாகும். இதில்

- கணவன் மனைவி தெரிவு
- பெண் பார்த்தல்
- மணமகன், மணமகள் விருப்பம் பெறல்
- திருமணப் பேச்சுவார்த்தை (அல்ஹித்பா)
- பொருத்தப்பாட்டை அவதானித்தல் (அல்குப்உ)

போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்றன.

முதல்கட்ட நடவடிக்கைகளில் கண்டிப்பாகக் கவனம் செலுத்த வேண்டிய விடயம் தனக்கு வாழ்க்கைத் துணையாக வரும் கணவனோ மனைவியோ தான் திருமணம் முடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அஜ்னபியாக இருக்கின்றாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதாகும். திருமணம் முடிக்க அனுமதிக்கப் பட்ட அஜ்னபிகளையும் அனுமதிக்கப்படாத மஹ்ரமிகளையும் அல்குர்ஆன் மிகத் தெளிவாக விளக்கியுள்ளது. பார்க்க ... (4 : 21-24) (2 : 221) (24 : 3)

"பெண் நான்கு காரணங்களுக்காக திருமணம் முடிக்கப்படுகின்றாள். அவை செல்வம், அழகு, குடும்பம், மார்க்க உணர்வு என்பன. மார்க்க உணர்வு கொண்ட பெண்ணையே தெரிவு செய்துகொள். அவ்வாறு நடக்கவில்லை யாயின் உன்னை வறுமை பீடிக்கட்டும்." (புகாரி, முஸ்லிம்)

முகீரா இப்னு ஷுஃபா (ரழி) ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய தெரிவு செய்தார்கள். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நீ அவளைப் பார்த்தாயா எனக் கேட்டார்கள். இல்லை என்று அவர் பதிலளித்தபோது அவளைப்பார். அது உங்கள் தொடர்பைப் பலப்படுத்தும் எனக் கூறினார்கள். (நஸாயீ, இப்னுமாஜா, திர்மிதி)

ஒரு கன்னிப் பெண் நபியவர்களிடம் வந்து, தனது தந்தை அவரது சகோதரனின் மகனைத் - தான் விருப்பமில்லாதபோது- தனக்கு திருமணம் முடித்துக் கொடுத்துள்ளதாக முறையிட்டாள். இறைத்தூதர் (ஸல்) அப்பெண்ணை அவளது தனிப்பட்ட முடிவுக்கு விட்டுவிட்டார்கள். அப்போது என் தந்தை செய்துவைத்ததை ஏற்றுக் கொள்கிறேன். ஆயினும் தந்தையர்களுக்கு இவ்விடயத்தில் எத்தகைய அதிகாரமும் கிடையாது என்பதைப் பெண்களுக்கு உணர்த்தவே நான் விரும்பினேன் என்றாள். (இப்னுமாஜா) கன்னிப் பெண்ணிடம் அனுமதி கோரப்பட வேண்டும். அவள் மௌனமாக இருப்பதே அவளது அனுமதியாகும். (முஸ்லிம்)

ஒரு முஃமின் மற்ற முஃமினின் சகோதரனாவான். அவன் தன் சகோதரனின் வியாபாரத்திற்கெதிரான முறையில் வியாபாரம் செய்யக்கூடாது. தன் சகோதரனின் திருமணப் பேச்சுக்கு எதிராகத் திருமணம் பேசவும் கூடாது. (முஸ்லிம்)

## நிகாஹ் - சட்ட விதிகள்

### திருமணம் நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள்

இஸ்லாம் உடன்படிக்கைகளை அவற்றுக்குரிய நிபந்தனைகளைப் பேணி நிறைவேற்றுமாறு கூறுகின்றது. "விசுவாசிகளே ஒப்பந்தங்களை நிறைவேற்றுங்கள்" (5 : 1)

"முஸ்லிம்கள் அவர்களது ஷர்த்துக்களை நிறைவேற்றுவதற்குக் கடமைப்பாடு கொண்டவர்கள்" (அபூதாவூத்)

திருமணமும் புனிதமானதொரு உடன்படிக்கையாக இருப்பதனால் அதன் ஷர்த்துக்கள் அல்லது நிபந்தனைகள் பேணப்பட வேண்டும். திருமணம் நிறைவேறுவதற்குத் தேவையானவை.

1. மணமகன், மணமகள்
2. வலீ
3. ஷாஹிதுகள்
4. ஈஜாப், கபூல்

மணமகன், மணமகள் பற்றிய விடயத்தில் திருமணம் முடிக்க அனுமதிக்கப் பட்டவர்கள் (அஜ்னபிகள்) திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதோர் (மஹ்ரமிகள்) பற்றிய விடயம் முக்கியமானதாகும். திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாத வர்களை அறிவதனூடாக அனுமதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு கொள்ள முடியும்.

மஹ்ரமிகள் இரண்டு பிரிவினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

1. நிரந்தர மஹ்ரமிகள்
2. தற்காலிக மஹ்ரமிகள்

இஸ்லாத்தில் பெண்களில் சிலர் ஆண்களில் சிலரை மணமுடிப்பது நிரந்தரமாகவே தடுக்கப்பட்டுள்ளது. இது மூன்று காரணங்களினால் உருவாகின்றது.

## நிரந்தர மஹ்ரமிகள் :

### இரத்த உறவு, திருமண உறவு, பால்குடி உறவு

- இரத்த உறவினால் திருமண முடிக்க ஹராமாக்கப்பட்டவர்கள்
    1. பிறப்பின் காரணமாக தாய், தாயின் தாய் இவ்வகையில் மேலுயர்ந்து செல்லும் உறவு முறையினர்
    2. பெற்றெடுத்த பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் என்றவாறு கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்
    3. சொந்தத் தாய் தந்தையர் அல்லது அவர்களில் ஒருவரது பிள்ளைகள், அவர்களது பிள்ளைகளின் பிள்ளைகள் என்றவாறு கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர். அதாவது தனது சொந்தச் சகோதரிகள், அவர்களது பிள்ளைகள் என்போரை இது குறிக்கின்றது.
    4. சொந்தப்பாட்டன் பாட்டியின் பிள்ளைகள் இது முதலாவது கட்டத்தோடு நின்றுவிடுகின்றது. அதாவது தாயின் அல்லது தந்தையின் சகோதரிகளைத் திருமண முடிப்பது கூடாது. ஆனால் அவர்களது பிள்ளைகளைத் திருமணம் முடிப்பது அனுமதிக்கப்படுகிறது.

- **திருமண உறவால் திருமண முடிக்க அனுமதிக்கப்படாதோர்**

1. மனைவியைப் பெற்றெடுத்தோர். அதாவது மனைவியின் தாயின் தாய் என்றவாறு மேலுயர்ந்து செல்லும் உறவு முறையினர்.
2. உடலுறவு கொண்ட மனைவியின் பிள்ளைகள், மனைவியின் பிள்ளைகளின் பிள்ளைகள் என்றவாறு கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்.
3. மகனின் மனைவி, தனது மகனின் மகனின் மனைவி, மகளின் மகனின் மனைவி, இந்த அடிப்படையில் தொடர்ந்து கீழிறங்கிச் செல்லும் உறவு முறையினர்.
4. தந்தையின் மனைவி

- **பால்குடி காரணமாகத் திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதோர்:**

"இரத்த உறவால் திருமண உறவு வைக்க அனுமதிக்கப் படாதோரே பால்குடியாலும் திருமண உறவு வைக்க அனுமதிக்கப்படாதோராவர்" (புகாரி, முஸ்லிம்)

1. பால் கொடுத்த பெண்
2. பால் கொடுத்த பெண்ணின் தாய்
3. பால் கொடுத்த பெண்ணின் கணவனின் தாய்
4. பால் கொடுத்த பெண்ணின் சகோதரி
5. பால் கொடுத்த பெண்ணின் கணவனின் சகோதரி
6. பால் கொடுத்த பெண்ணின் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும்
7. ஒரு பெண்ணிடத்தில் பால் குடித்த வகையில் உறவாகும் சகோதரி

- **தற்காலிகமாக திருமண முடிக்க அனுமதிக்கப்படாதோர்**:

1. ஏக காலத்திலே இரு சகோதரிகளை மனைவிகளாகக் கொள்ளல்
2. ஒரு பெண்ணையும் அவளது தந்தையின் சகோதரியையும் ஏக காலத்தில் மனைவிகளாகக் கொள்ளல்
3. ஒரு பெண்ணையும் அவளது தாயின் சகோதரியையும் ஏக காலத்தில் மனைவியாகக் கொள்ளல்
4. மாற்றான் மனைவியாக இருக்கும் ஒரு பெண்

5. மூன்று முறை தலாக் சொல்லப்பட்ட பெண் முதற்கணவனுக்குத் தற்காலிகமாகத் திருமணமுடிக்க அனுமதிக்கப்படாதவளாவாள்
6. முஷ்ரிக்கான பெண்
7. விபசாரிகள் : விபச்சாரிகள் பாவமன்னிப்புக் கேட்டு இப்பாவச் செயலிலிருந்து முற்றிலும் நீங்கி தூய்மையுடன் வாழ்ந்தால் அவர்களைத் திருமண முடிப்பது ஹலாலாக முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட மஹ்ரமிகள் அல்லாதவர்களை அதாவது அஜ்னபிகளைத் திருமணம் முடிக்கும்போது மணமகன், மணமகள் ஆகிய இருவரிடமும் பின்வரும் இலட்சணங்கள் இருப்பது விரும்பத்தக்கதென ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன.

மணப்பெண் : மகப்பேற்றுப் பாக்கியம், புத்திசாதுரியம், மார்க்க பக்தி, கௌரவமான குடும்பம், அழகு, கன்னிப் பெண்

மணமகன் : மார்க்க பக்தி, சிறந்த கல்வி, பொருளாதார வசதி, குடும்ப அந்தஸ்து, சிறந்த ஆளுமை, மலட்டுத் தன்மை யில்லாமை, அன்புள்ளம், அழகு

மேற்படி சட்டவிதிகளுக்கமைய பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட வர்களாக மணமகனும், மணமகளும் இருத்தல் வேண்டும்

மணமகன் : முஸ்லிமாய் இருத்தல், சமகாலத்தில் நான்கு மனைவியரை வைத்திராதவராக இருத்தல், மணப்பெண்ணுக்கு அஜ்னபியாக இருத்தல், ஹஜ்ஜுக்காக இஹ்ராம் தரிக்காதவராக இருத்தல்

மணமகள் : முஸ்லிமாய் அல்லது தூய அஹ்லுல் கிதாபாக இருத்தல், மாற்றான் மனைவியாக இல்லாதிருத்தல், இத்தா அனுஷ்ட்டிக்காதவரா யிருத்தல், ஹஜ்ஜுக்கு இஹ்ராம் தரிக்காதவராயிருத்தல்

## வலீ : மணப்பெண்ணின் பொறுப்புதாரர்

ஒரு பெண் திருமணம் முடிப்பதற்கு பொறுப்புதாரர் ஒருவர் இருக்க வேண்டும். அவள் சுயமாகத் திருமணம் முடிக்கவோ மற்றொருவருக்குத் திருமணம் முடித்து வைக்கவோ முடியாது. திருமண ஒப்பந்தம் நிறைவேறுவதற்குப் பொறுப்புதாரர் திருமணத்தை நடாத்தி வைத்தல் ஒரு ஷர்த்தாகும். இந்த ஷர்த்து இல்லா விட்டால் திருமணம் நிறைவேறாது. இதுவே பெரும்பாலான சட்ட அறிஞர்களின் கருத்தாகும். இதற்காக அவர்கள் முன்வைத்துள்ள ஆதாரங்கள்

"ஈமான் கொள்ளும் வரை உங்கள் பெண்களை இணை வைப்போருக்குத் திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டாம்." (2 : 221)

"பொறுப்புதாரர் இன்றித் திருமணம் இல்லை" (அஹ்மத்)

ஒரு பெண்ணின் திருமணம் அவளுக்கு நெருங்கிய உறவாக உள்ள பொறுப்புதாரரின் வார்த்தை மூலமே நிறைவேறும். அவர் இல்லாதபோது தூர உறவு கொண்ட பொறுப்புதாரரின் வார்த்தை மூலம் நிறைவேறும். அவரும் இல்லையாயின் நீதிபதியின் வார்த்தையால் நிறைவேறும். இமாம் ஷாபி (ரஹ்) கருத்துப்படி பொறுப்புதாரர் கீழ்வரும் ஒழுங்கில் அமையும்.

1. தந்தை
2. தந்தையின் தந்தை
3. தாய் தந்தையின் ஊடாக வந்த சகோதரன்
4. தந்தையின் ஊடாக வந்த சகோதரன்
5. தாய் தந்தையின் ஊடாக சகோதரனின் மகன்
6. சகோதரனின் மகன்
7. தந்தையின் சகோதரன்
8. தந்தையின் சகோதரனின் மகன்
9. நீதிபதி

பொறுப்புதாரர் புத்திசுவாதீனமுள்ளவராகவும், சுதந்திர புருஷராகவும், பருவவயதை அடைந்தவராகவும் இருக்க வேண்டும். பொறுப்புதாரர் குற்றமற்றவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது.

**ஷாஹிதுகள் - சாட்சிகள்**

திருமணம் நிறைவேறியதற்கான ஆதாரங்களே சாட்சிகளாவர். சாட்சிகள் இல்லாமல் திருமணம் செல்லுபடியாகாது. சாட்சிகள், பொறுப்பாளர்களோடு சேர்ந்து இரகசியமாக பங்குபற்றினாலும் திருமண ஒப்பந்தம் செல்லுபடியாகும். இதுவே அனேகமான இமாம்களது கருத்தாகும். இதற்கான ஆதாரங்கள் பின்வருமாறு:

"விபசாரிகள் எத்தகைய ஆதாரமும் இன்றித் தாமாகவே திருமண ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொள்வர்" (திர்மிதி)

"பொறுப்புதாரர், இரு நேர்மையான சாட்சிகள் இன்றித் திருமணம் என்பது கிடையாது" (தாரகுத்னி)

சாட்சியாக வருவோர் புத்திசுவாதீனம் உள்ளவர்களாகவும் பருவ வயதை அடைந்தவர்களாகவும், ஒப்பந்தத்தின் இரு தரத்தினரதும் பேச்சைக் கேட்டு விளங்கக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். சாட்சிகள் நேர்மையுடையவர்களாகவும், நன்னடத்தை கொண்டவராகவும் இருக்க வேண்டும். சாட்சிகள் முஸ்லிமாகவும், சுதந்திரவானாகவும் இருத்தல் வேண்டும். சாட்சிகள் ஆண்களில் இருவராக இருக்க வேண்டும்.

### ஈஜாப், கபூல்

திருமண ஒப்பந்தத்தின் அடிப்படைப் பகுதி ஆண், பெண் இரு சாராரதும் பரஸ்பர திருப்தியாகும். திருப்தி உள்ளத்தோடு சார்ந்த செயலாகும். உள்ளத்தின் நிலையை அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலும் அறிய முடியாது. எனவே, உளத்திருப்தியை வெளிக்காட்ட வாய்மொழியே சாதனமாகும். திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடும் இரு பிரிவினரும் தங்கள் திருப்தியை சொற்களின் மூலம் வெளியிடுவர். ஒப்பந்தத்தில் இரு சாராரிலும் முதலில் பேசுபவரின் வாய் மூல வெளியீடு திருப்தியை உறுதிப்படுத்தல்" (ஈஜாப்) எனவும், இரண்டாவது பிரிவினரின் வாய் மூல வெளியீடு "திருப்தியுடன் ஏற்றல்" (கபூல்) எனவும் வழங்கப்படுகிறது.

### ஈஜாப், கபூலுக்கான ஷர்த்துக்கள்

1. ஒப்பந்தத்தில் ஈடுபடுவர் ஒப்பந்தத்தை நிகழ்த்துவதற்கான பூரண தகுதி கொண்டவராக இருக்க வேண்டும்.
2. ஈஜாப், கபூல் ஒரே அமர்வில் இடம்பெறல் வேண்டும்.
3. ஒப்பந்தத்தில் இணையும் இருசாராரும் திருமண ஒப்பந்தம் நிகழ்வதற்கான வார்த்தைப் பிரயோகங்களைச் செவிமடுத்தல்.
4. ஈஜாபின் வார்த்தைகளுக்கு முரணாக கபூலின் வார்த்தைகள் அமையக்கூடாது.

"திருமணம்" என்ற கருத்தைக் காட்டும் எந்தச் சொற்களாலும் திருமணம் நிறைவேறும். ஈஜாப், கபூலுக்கென தனிப்பட்ட குறிப்பிடப்பட்ட சொற்பிரயோகங்கள் கிடையாது. திருமணம் என்ற கருத்தை கொடுக்கும் எந்தச் சொல்லாலும் அது

எந்த மொழியில் அமைந்தாலும் திருமணம் நிறைவேறும். ஈஜாபைப் பொறுத்தவரையில் திருமணம் என்ற கருத்தை நேரடியாகக் கொடுக்கும் "ஸவாஜ்" என்ற சொற்களாலும் திருமணம் நிறைவேறும். கபூலைப் பொறுத்தவரையில் "ஏற்றுக்கொள்ளல்" என்ற கருத்தை காட்டும் எந்த சொல்லாக அமையினும் அது நிறைவேறும். ஈஜாப், கபூலுக்கான சொற்கள் அது இறந்த கால சொற்பிரயோகமாக இரு பகுதியினராலும் பிரயோகிக்கப்பட வேண்டும். திருமண ஒப்பந்தத்திற்கான சொற்பிரயோகங்கள் எத்தகைய ஷர்த்தையும் நிறைவேற்று வதற்கான எத்தகைய காட்டுப்பாட்டையும் கொண்டிருக்கக் கூடாது.

**மஹர் அல்லது ஸதாக்**

திருமண ஒப்பந்தத்தின் போது மணமகன் மணமகளுக்கு கொடுக்க வேண்டிய கட்டாயமான கொடுப்பனவை இது குறிக்கின்றது. இதனைப் பணமாகவோ பொருளாகவோ வழங்கலாம். இதுபற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. "நீங்கள் (திருமணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய ஸதாக்கை (அல்லது மஹரை) மகிழ்வோடு கொடுத்து விடுங்கள். அதிலிருந்து ஏதேனுமொன்றை மனமுவந்து அவர்கள் உங்களுக்கு கொடுத்தால் அதைத்தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள்" (4 : 4)

மஹர் தொகையினைத் தீர்மானிப்பதற்கு மணமகன் தனது பொருளாதார வசதி, மணமகளின் கோரிக்கை அல்லது இருவரின் பரஸ்பர ஒப்பந்தம் என்பவற்றை அடிப்படையாகக் கொள்ளலாம். மஹரை உடலுறவு கொள்வதற்கு முன்னர் வழங்கிவிடுவது சிறந்ததாகும். மஹரை வழங்காமல் விடுவதும், வழங்கியதை திருப்பி வாங்குவதும் பாவமானதாகும். மனைவி தானாக விரும்பி அதனை கணவனுக்குச் செலவு செய்தால் தவறு இருக்காது.

**3. பகிரங்கப்படுத்தல்**

வலீமாவே கணவன் மனைவியாக ஒன்று சேர்ந்ததை பகிரங்கப்படுத்தும் நிகழ்ச்சியாக அமைகின்றது. வலீமா என்பது திருமணத்தின் பின்னர் மணமகன் கொடுக்கும் விருந்தாகும். இதற்கு உறவினர், நண்பர், அயலவர், ஏழை, செல்வந்தர் போன்ற எல்லோரும் அழைக்கப்படுவது சிறந்தது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திருமணத்தை பகிரங்கப் படுத்தி அறிவியுங்கள்.

உங்களில் ஒருவர் மணவிருந்திற்கு அழைக்கப்பட்டால் அவர் அதற்குச் சென்று விடட்டும். (புஹாரி)

திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட புதுத்தம்பதியினரை வாழ்த்துக் கூறி மகிழ்விப்பது சுன்னத்தான நடைமுறையாகும்.

# பலதாரமணம்

பலதாரமணம் என்பது ஓர் ஆண் ஒரே நேரத்தில் பல பெண்களுக்குக் கணவனாக இருத்தல் என்பதாகும். ஒரு பெண்ணை பல ஆண்கள் மணந்து கொள்ளும் முறையும், பல பெண்களும் பல ஆண்களும் கூட்டாக கூட்டாகக் குடும்பமாக வாழும் முறையும் வரலாற்றில் சில இடங்களில் இருந்து வந்துள்ளன. இவ்விரு முறைகளையும் இஸ்லாம் முழுமையாகத் தடைசெய்துள்ளது.

## பலதாரமணம் பற்றி அல்குர்ஆனும் அல்ஹதீஸும்

“அநாதைப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு அவர்கள் விஷயத்தில் நீதம் செலுத்த முடியாது என நீங்கள் அஞ்சினால் மற்றப் பெண்களில் உங்களுக்கு விருப்பமானவர்களை இரண்டிரண்டாகவோ மும்மூன்றாகவோ நன்னான்காகவோ நீங்கள் திருமணம் புரிந்து கொள்ளுங்கள். அவர்களுக்கிடையில் நீங்கள் நீதமாக நடக்க முடியாதெனப் பயந்தால் ஒரு பெண்ணை அல்லது உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் அநீதி செய்யாமலிருப்பதற்கு இதுவே சுலபமாகும்.” (4:3)

“இன்னும் நீங்கள் எவ்வளவுதான் விரும்பிய போதிலும் மனைவியருக் கிடையில் நீதமாக நடக்க நீங்கள் சக்தி பெறவே மாட்டீர்கள். ஆனால் ஒரே மனைவியரின் பால் நீங்கள் முற்றிலும் சாய்ந்து மற்றவளை தொங்க விடப்பட்டவள் போல் விட்டுவிடாதீர்கள். இன்னும் நீங்கள் சமாதானமாக நடந்து கொண்டு அல்லாஹ்வையும் பயந்து கொண்டால் அப்போது நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்புடையவனாகவும் மிகக் கிருபையுடைய வனாகவும் இருக்கின்றான்.” (4 : 129)

இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். கைலான் பின் ஸலாமா அஸ்ஸகபீ இஸ்லாத்தை ஏற்றபோது ஜாஹிலிய்யாக் காலத்தில் அவர் மணமுடித்திருந்த பத்து மனைவிகளும் அவரோடு இஸ்லாத்துக்கு வந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் நான்கு பேர்களை வைத்துக் கொண்டு மற்றவர்களை விவாகரத்து செய்து விடுங்கள் என்று சொன்னார்கள். (அஹ்மத், திர்மிதி, இப்னு மாஜா)

நௌபல் பின் முஆவியா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் இஸ்லாத்தை ஏற்றபோது எனக்கு ஐந்து மனைவிமார் இருந்தனர். நான் நபியவர்களிடம் வினவியபோது ஒருவரைத் தலாக் சொல்லிவிட்டு நான்கு பேரை வைத்துக் கொள்வீராக என்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது மனைவிமார் களிடையே ஓர் ஒழுங்கு முறையை வைத்திருந்ததோடு நீதியாகவும் நடந்து கொள் வார்கள். அல்லாஹ்வே இந்த ஒழுங்குமுறை எனது சக்திக்குட்பட்டதாகும். உனது சக்திக்குட்பட்ட என்னால் முடியாத அம்சங்களில் என்னைக் குறைபிடித்து விடாதே என்று வழமையாகச் சொல்வார்கள் இவ்வாறு ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். (திர்மிதி, அபூதாவூத், இப்னு மாஜா)

யார் இரு மனைவியரைப் பெற்று அவர்களுக்கிடையில் நீதி செலுத்தவில்லையோ; அவர் விசாரணை நாளில் ஒரு பக்கம் சாய்ந்தவராக வருவார் என நபி (ஸல்) அவர்கள கூறியதாக அபூஹுரைரா ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். (திர்மிதி, அபூதாவூத், நஸாஈ)

## இஸ்லாம் பலதாரமணத்திற்கு விதித்துள்ள விதிமுறைகளும் நிபந்தனை களும்

01. பலதாரமணம் சில நிபந்தனைகளுக்குக் கீழும் சில சூழ்நிலைகளின் போதுமே அனுமதிக்கப்படும். இந்த அனுமதி நிபந்தனைகளுக்குட்பட்ட அனுமதியாகும். இது ஈமானின் ஒரு பிரிவுமல்ல, தவிர்க்க முடியாத கட்டாயக் கடமையுமல்ல, இஸ்லாம் ஊக்குவித்த செயற்பாடுமல்ல.

02. ஒரே நேரத்தில் ஓர் ஆண் நான்கு மனைவியரை மாத்திரமே வைத்துக் கொள்ள முடியும். அதற்கு மேல் எவரையும் மனைவியாக வைத்திருக்க முடியாது.

03 இரண்டாவது அல்லது மூன்றாவது மனைவியருக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் உரிய செலவினங்களையும் பாதுகாப்பையும் பராமரிப் பையும் வழங்க முடியுமான உடல் பொருளாதார பலமுள்ளவர்களுக்கே அடுத்த மனைவியைப் பற்றி சிந்திக்க முடியும். முதல் மனைவிக்குரிய அனைத்து உரிமைகளும் அடுத்த மனைவியருக்கும் உரியன. அவற்றில் குறைபாடு வைக்காமல் நடக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.

04. எல்லா மனைவிமார்களுக்கிடையேயும் நீதமாக நடந்துகொள்ள முடியும் என்ற மன உறுதியும் திடசங்கற்பமும் இருப்பவர்களுக்கே இவ்வனுமதி வழங்கப்படுகின்றது.

05. அடுத்த மனைவியைப் பராமரிக்க உடல், உள, பொருளாதார பலமில்லாதவர் ஒரு பெண்ணை மாத்திரமே மனைவியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

06. பலதாரமணத்திற்குத் தரப்படும் அனுமதி அசாதாரண சூழ்நிலையின் போதேயாகும். தவிர்க்க முடியாத சில ஒழுக்கப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் சில சிக்கலான சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும் இறுதித் தீர்வாகவே இவ்வனுமதி வழங்கப் பட்டுள்ளது.

## பலதாரமணத்தை அனுமதிப்பதற்கான நியாயங்கள்

01. **சாதாரணமாக பெண்கள் ஆண்களைவிட அதிகமாக இருத்தல்**: உலகின் பல நாடுகளில் பெண்களைவிட ஆண்களின் பிறப்பு வீதம் அதிகமாக இருந்த போதிலும் பல்வேறு காரணங்களினால் பெண்களின் சனத்தொகை அதிகரித்துவிடுகின்றது. பெண் குழந்தைகளின் நோய் எதிர்ப்புச் சக்தி ஆண் பிள்ளைகளை விட அதிகமாகவும் வீரியமாகவும் உள்ளது. இதன் காரணமாக பால்குடிப்பருவத்திலிருந்தே பெண் குழந்தைகளின் வீதம் அதிகரித்து விடுகின்றது. திருமணத்திற்கு தயாராகும் வயதிலும் வேறுபாடு இருக்கின்றது. ஆண் அந்நிலையை அடைவதற்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்னதாகவே பெண் அந்நிலையை அடைந்து விடுகின்றாள். (ஆண் வயது 25 பெண் வயது 15) இதனால் சார்ட் 84:100 ஆர்மோனியா 88:100 எல்செலவடோர் 91:100 லெபனான் 92:100 என ஆண் பெண் விகிதாசாரம் அமைகின்றது இவ்வாறான நிலையில் பலதாரமணத்தை அனுமதிப்பதே பெண்களுக்கான பாதுகாப்பையும் சுயமரியாதையையும் வழங்குவதோடு பிள்ளைகளிள் சுபீட்சமான வாழ்வையும் உறுதிப்படுத்தும்.

02. **யுத்தம் விபத்துக்கள் மூலம் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தல்**: போர், விபத்து போன்றவைகளால் பெரும்பாலும் ஆண்களே அழிவுக்குட்படுகின்றனர். இதனால் பெண்களின் தொகை அதிகரித்து விடுகின்றது. கம்பூச்சியாவில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தால் சுமார் 13 1/2 இலட்சம் ஆண்கள் கொல்லப்பட்டனர். அங்கு ஐந்து பெண்களுக்கு ஓர் ஆண் என்ற விகிதம் ஏற்பட்டுவிட்டது. ஆப்கானிஸ்தானில் இடம்பெற்று வரும் யுத்தத்தில் இதுவரை 15 இலட்சம் பேர் இறந்துள்ளனர். அவர்களுள் பெரும்பாலானோர் ஆண்களேயாவர். முதலாம் உலகப் போரில் இறந்த ஆண்கள் 10 மில்லியன்கள், இரண்டாம் உலகப்போரில் 60 மில்லியன்கள், இலங்கையின் இனப்பிரச்சினையில் கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள். இதுதவிர தற்கொலை, போதைப் பொருள் பாவனை போன்றவற்றால் இறப்பெய்துபவர்களுள் பெரும்பகுதியினர் ஆண்களேயாவர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதே நேரம் பொதுவாக வயது முதிர்வினால் ஏற்படும் மரணத்தில் முந்திக் கொள்பவர்களுள் அதிகமானோர் ஆண்களேயாவர். 65 வயதுக்கு மேற்பட்டோரின் சதவீதம் பல நாடுகளில் மிக அதிகமாகவே இருக்கின்றது (ரஷ்யா ஆண் 45 பெண் 100 பெலாரஸ் 48 : 100 லெத்வியா 49 : 100). இப்படியான சந்தர்ப்பங்களில் சமூகம் சீராக அமைவதற்கு பலதாரமணமே தீர்வாகும்.

போர்கள் காரணமாக ஆண்கள் குறைந்து பெண்கள் அதிகரிக்கின்றமை தொடர்பாக 1650 இல் Nuremberg இல் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாட்டின் இறுதியில் ஆண்கள் ஒரு மனைவியைவிடக் கூடுதலான பெண்களை மணம் புரிய அனுமதிப்பதென்று முடிவு எடுக்கப்பட்டது.

இதே போன்று இரண்டாம் உலகயுத்தம் முடிவுற்றதும் ஜேர்மனியில் 1948 இல் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதன் இறுதியிலும் பலதாரமணம் ஒன்றே பரிகாரம் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

03. **மனைவி மலட்டுத்தன்மை உள்ளவளாக இருத்தல்** : சில பெண்களுக்கு குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருப்பதுண்டு. கணவன் பிள்ளைகள் வேண்டும், தனது வம்சாவளியை விருத்தி செய்து கொள்ளவும் தனது பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளவும் பிள்ளைகள் தேவை என ஆசையோடு எதிர்பார்ப்பான். இந்த நிலையில் தனது மனைவி மலட்டுத்தன்மையுடைய வளாக இருந்தால் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதே

சிறப்பானது. இந்நிலையில் முதல் மனைவி விவாகரத்துச் செய்யப்படாமல் இருப்பதால் அவளது வாழ்வும் பாதிக்கப்படுவதில்லை.

04. **மனைவி நிரந்தர நோயாளியாக இருத்தல் :** மனைவி தொடர்ச்சியான நோய் அல்லது தொற்று நோய் அல்லது வெறுக்கத் தக்க நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால் அவளை விவாகரத்து செய்வதைவிட அவளுக்குரிய உரிமைகளை வழங்கிக் கொண்டே மேலுமொரு மனைவியை சட்டரீதியான வளாக ஆக்கிக் கொள்வதே பொருத்தமானது.

05. **அதிகரித்த காம உணர்வு :** மனைவியின் இயல்பு, வயது முதிர்ச்சி அல்லது உடலுறவு கொள்ள முடியாத காலப்பகுதி நீண்டதாக அமைதல் போன்ற காரணங்களால் கணவன் தன்னுடைய உடற்தேவையை அவளின் மூலம் நிறைவு செய்து கொள்ள முடியாது போகலாம். இந்நிலையில் சட்டரீதியாக இன்னுமொரு மனைவியை விவாகம் செய்வதற்கு அனுமதிப்பதே விவேகமானது.

06. **தவறான முறையில் குழந்தைகள் பிறப்பதை இல்லாதொழித்தல்**: பிரித்தானியாவில் 1998 ஆம் ஆண்டு 12% ஆக இருந்த முறை தவறிப் பிறக்கும் குழந்தைகளின் வீதம் 2004 ஆம் ஆண்டு 42% ஆக மாறியது. (Office for National Statistics) மேற்கைரோப்பிய நாடுகளில் இதன் விகிதம் 33 ஆகும். (The Annual ONS Social Trends Report)

1986 - 87 ஆண்டுகளில் சேகரித்த புள்ளி விபரங்களின்படி முறைதவறிப் பிறந்த குழந்தைகளின் வீதம் டென்மார்க்கில் 43.8% ஆகவும் பிரான்ஸில் 21.9% ஆகவும் பிரிட்டனில் 20.9% ஆகவும் இருந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை சார்பாக வெளியிடப்படும் Demograpic Reivew என்ற இதழின் 1959 ஆம் ஆண்டுமலரில் நவீன காலத்தில் சட்டத்திற்கு உட்பட்டுப் பிறக்கும் குழந்தைகளைவிட சட்டத்திற்கு புறம்பான முறையில் பிறக்கும் குழந்தைகளே அதிகமாகும் என்று தகவல் உறுதி செய்யப்பட்டது. சில நாடுகளில் 75% ஆகவும் இருக்கின்றது. லத்தீன் அமெரிக்காவில் இது இன்னும்

அதிகம். ஆனால் முஸ்லிம் நாடுகளில் முறைதவறிப் பிறக்கும் குழந்தைகள் ஏறக்குறைய இல்லையென்றே சொல்லமுடியும். எனவே முறையற்ற குழந்தைகளின் பிறப்பை ஒழிப்பதற்கும் அதனால் ஏற்படும் சமூகப் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கும் சிறந்த வழிமுறையாக நாம் பலதார மணத்தைக் கூறலாம்.

07. **வரதட்சணை, சிசுக் கொலை என்பவற்றைத் தடுத்தல்** : வரதட்சணைக் கொடுமையால் செல்வமும் வசதி வாய்ப்புகளும் இல்லாதோர் பாதிப்படை கின்றனர். சீதனத்தை ஒழிக்க முடியாத நிலையில் ஒரு மாற்றீடாக பலதாரமணம் அமையமுடியும்.

எதிர்காலத்தில் திருமணம் செய்விப்பதில் ஏற்படும் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு கருவிலிருப்பது பெண் குழந்தை எனத் தெரியும் பட்சத்தில் அதற்கு கருவிலேயே சமாதி கட்டப்படுகின்றது. இவ்வாறு இந்தியாவில் மாத்திரம் 10 இலட்சம் பெண் சிசுக்கள் ஆண்டுதோறும் கொல்லப்படுகின்றனர். மாப்பிள்ளைகள் இலகுவாகக் கிடைக்க மாட்டார்கள் என்பதுவே இதற்குப் பிரதான காரணமாக இருக்கின்றது. எனவே இதற்கு மாற்றீடாகவும் பலதாரமணம் அமையலாம்.

### பலதாரமணத்தால் பெண்கள் பாதிக்கப்படுகின்றனரா?

மேலோட்டமாகப் பார்க்கின்ற போது பலதாரமணத்தினால் பெண்களுக்கு பாதிப்பேற்படுகின்றது எனத் தென்படலாம். ஆனால் சமுதாயக் கண்ணோட்டத்தில் இதனை நோக்கினால் பலதாரமணம் பெண்களுக்கு கண்ணியத்தையும் உயரிய அந்தஸ்தையும் வழங்குகின்றது என்பது தெளிவாகும்.

திருமணம் முடிக்க நாதியற்ற பெண்கள், ஏழைகள், விதவைகள், அநாதைகள் தங்கள் மீது அன்பு செலுத்தும் ஓர் ஆண் துணை வேண்டும் என ஆசைப்படுகின்றனர். நியாயமாக அவர்களின் ஆசைகளை நிறைவு செய்துகொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் பலதாரமணம் அவர்களுக்கு வாழ்வளிக்கின்றது. சட்டரீதியாக சமூகம் ஏற்றுக்கொண்ட பொறுப்புக்கள் நிறைந்த கணவன் அவளுக்கு கிடைக்கின்றான். இந்நிலை இல்லையாயின் அவள் காலமெல்லாம் நிர்க்கதியாக தனிமையில் வாழ வேண்டும், அல்லது பிழையான வழிமுறைகளில் தனது உடற் தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டும்.

ஒருவேளை திருமணமாகி கணவனோடு வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு இது கசப்பானதாக இருக்க முடியும். தன்னைப் போலவே ஆசாபாசங்களுள்ள சிலவேளை தன்னால் நிறைவு செய்ய முடியாத அம்சங்களை நிறைவு செய்யக் கூடிய தன்மையுள்ள ஒரு பெண் ஆண் துணையில்லாமல் எவ்வளவு பெரிய இன்னல்களுக்கு உட்படுவாள் என்பதைச் சுயநலமில்லாது சிந்திக்கும் போது பலதாரமணம் சமூகக் கண்ணோட்டத்தில் சரியானது என அவர்கள் உணர்வர். அதேவேளை தனது கணவன் வேறொரு பெண்ணுடன் இரகசிய உறவை ஏற்படுத்திக் கொண்டால் ஒழுக்க வரம்புகள் மீறப்பட்டு, குடும்ப கௌரவம் பாதிக்கப்படுவதோடு சமூகமும் சீர்குலையும், இந்நிலை ஏற்படுவதைவிட சட்டரீதியாக கணவனின் துணையைப் பகிர்ந்து கொள்வது சிறப்பானது.

மேற்கு நாடுகளில் தற்போது அவதானிக்கப்படுவது போல் பெண்தோழியர் (Girl friends, Call girls) என்ற பெயரில் எண்ணற்ற பெண்களை இரகசிய உறவுகள் மூலம் தொடர்பு கொள்கின்றனர். இந்த விடயம், அந்தப் பெண் மீதான அந்த உறவின் மூலம் ஏற்படும் விளைவுகள் மீதோ எந்த பொறுப்புமில்லாத நிலையே ஏற்படுகிறது. 1950 களில் Kinsey என்பவர் 10 ஆயிரம் அமெரிக்கர்களோடு தொடர்பு கொண்டு விபரங்கள் சேகரித்த போது அவர்களில் 90% பெண்கள் திருமணத்திற்கு முன்பு உடலுறவு அனுபவமுள்ளவர்களாக இருந்தனர்.

பெண்கள் சட்டரீதியான மனைவியாகவும் எண்ணிக்கைக்குட்பட்ட தொகையினராகவும் இருக்கும் அதே வேளை கணவன் அவளதும் அவளது பிள்ளைகளதும் விடயங்களுக்கு பொறுப்பாளனாக பலதார திருமணமுறை மூலம் மாறுகின்றான். இது நிச்சயமாக பெண்களுக்கும் சமூகத்திற்கும் நன்மையையே கொடுக்கின்றது.

# விவாகரத்து - தலாக்

திருமணத்துக்கு சட்டங்களும் விதிமுறைகளும் காணப்படுவது போல, மண முறிவுக்கும் சட்டங்களும் விதிமுறைகளும் இஸ்லாத்தில் வகுக்கப்பட்டுள்ளன. இஸ்லாம், திருமணம் முடித்த ஆணும் பெண்ணும் பரஸ்பரம் புரிந்துணர்வோடு இன்பமாக வாழ வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றது. என்றாலும் சில சந்தர்ப்பங்களில் இல்லற வாழ்வை நிறைவேற்றுவதற்குத் தடைகள் காணப்படுகின்ற போது அல்லது இருவருக்குமிடையில் கருத்தொற்றுமை நிலவாத போது, அல்லது குடும்ப வாழ்வை நடாத்த பௌதீக நிலைகள் தடையாக அமைகின்ற போது, அல்லது இருவரும் இணைந்து வாழ முடியாத அளவுக்கு நோய்களோ வேறு இடையூறுகளோ ஏற்படுகின்ற போது திருமண ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொள்வதற்கு வழங்கப்பட்ட சலுகையே தலாக் ஆகும். என்றாலும் பிரச்சினைகளின் போது ஒருவரை ஒருவர் சமாளித்து பிரச்சினைக்கான தீர்வை இனங் கண்டு குடும்ப வாழ்வை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு வழி காண்பதே சிறந்ததாகும்.

பொதுவாக திருமணத்தின் நோக்கம், நிம்மதியான, இன்பமான குடும்ப வாழ்வை நடாத்தி அதனூடாக சிறந்த சந்ததியொன்றை தோற்றுவிப்பதாகும். இவ்வாறான நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தடையாக அமைந்த திருமண பந்தங்களை தொடரச் செய்வதில் அர்த்தம் இருக்கமாட்டாது. இதனால் முரண்பாடுகளும் சிக்கல்களும் பாதகமான சூழ்நிலைகளுமே தோன்றும். வெறுப்பும் விரக்தியும் உற்ற இவர்கள் பிழையான வழிகளை நாடவும் முடியும். இத்தகைய ஒரு சூழ்நிலையில் திருமணத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்தில் திருமண ஒப்பந்தங்களில் இருந்து விலகி மறுமணம் செய்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகவே தலாக் அமைகின்றது.

நஸாராக்களிடையே தலாக் சொல்வது ஹராமாக்கப்பட்டிருக்கின்றது. ஒரு பெண் தன் கணவனுக்கு துரோகம் செய்து, படுக்கையை மாசுபடுத்திவிட்டால் கூட அவளுடனே இருக்க வேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் இஸ்லாம் இதற்கு மாற்றமாக நியாயமான காரணங்களுக்காக திருமண ஒப்பந்தத்தில் இருந்து தம்மை விடுவித்து கொள்ள வாய்ப்பை வழங்கியுள்ளது. யஹூதிகளிடத்தில் எத்தகைய காரணமும் இன்றி பெண்ணை தலாக் செய்துவிடலாம். அழகான ஒரு பெண்ணை மண முடிப்பதற்காக முந்தைய மனைவிகளை தலாக் செய்வதில்

எத்தகைய தவறையும் அவர்கள் காண்பதில்லை. இவ்வாறே ஜாஹிலிய்யாக் காலத்தில் ஒரே பெண்ணை பலமுறை வேண்டுமானாலும் தலாக் சொல்லி விட்டு மீண்டும் மீண்டும் முணமுடிக்கும் நிலை காணப்பட்டது. இவ்வாறன நிலையை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. மாறாக தலாக் என்ற முடிவுக்கு வருவதற்கு முன்னரும் பின்னரும் கடைப்பிடிக்க வேண்டிய கடுமையான சட்டங்களை இஸ்லாம் வகுத்துள்ளது.

இஸ்லாம் தலாக்கை அனுமதித்திருந்த போதிலும் விருப்பத்துடன் அதனை அனுமதிக்கவில்லை. ஏனெனில் தலாக் என்பதே அடிப்படையில் ஹராமானதாகும். தேவையை பொறுத்து மாத்திரமே அது அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. ஹலாலான வற்றுள் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்பானது ஆகும். “பெண்களை அனுபவிப்பதில் ஆசை கொண்டு அதிகமாக தலாக் சொல்பவனை அல்லாஹ் சபிக்கிறான்.” (தபரானீ) “ஆண்களிடம் விவாக விடுதலை பெற்றும் கொள்ளும் பெண்கள் முனாபிக்குகளாவர் என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள்” (அபூதாவூத்) எனவே இஸ்லாத்தைப் பொறுத்தமட்டில் தலாக் என்பது அல்லாஹ்விடத்தில் வெறுப்பான ஒரு செயலாகும். மிகவும் அசாதாரண சூழ்நிலைகளில் மணவாழ் வொன்று சீராக நடப்பதற்கான தடையாக காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே இதனை இஸ்லாம் அனுமதிக்கின்றது.

மணமுறிவொன்று ஏற்படக் கூடாதென்பதற்காகவே திருமணத்திற்கு முன்னர் இஸ்லாம் சில வழிமுறைகளை கடைப்பிடிக்க வழிகாட்டியிருக்கிறது. திருமணப் பேச்சுவார்த்தை, மணப்பொருத்தம் பார்த்தல் என்பன இவற்றில் முக்கிய மானவைகளாகும். திருமண வாழ்வில் நுழைந்த பின்னர் உங்கள் மனைவி யரிடத்தில் நீங்கள் வெறுக்கக்கூடிய ஒரு தீய பண்பைக் கண்டால் அவளிடம் காணப்படக்கூடிய நல்ல பண்பொன்றை பார்த்து திருப்திப்படுங்கள் என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்த நபி மொழியும் (விவாகரத்துக்கு வருவதற்கு முன்னர்) குடும்ப வாழ்வில் வெறுப்புக்கள் தோன்றுகின்ற போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் காட்டியிருக்கிறது.

பிரச்சினைகளையும் நிலைமைகளையும் எடுத்துச்சொல்லி நல்ல வார்த்தைகள் உணர்வூட்டும் உபதேசங்கள் போன்றவற்றால் அவளை சீர்திருத்தி விடுவது

ஏற்றமானதாகும். “அப்பெண்கள் உங்களுக்கு மாற்றமாக நடப்பார்கள் என்ற அஞ்சினால் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்.” (4:34)

அடுத்து படுக்கையில் இருந்து அவளை ஒதுக்கிவைப்பதன் மூலம் நல்வழிப்படுத்த முயற்சிப்பது. முதலாவது வழிமுறை பயனளிக்காத போது இவ்விரண்டாம் வழி முறையை கையாள வேண்டும். இதுபற்றி அல்குர்ஆன் “அவர்களை படுக்கையிலிருந்து விலக்கி விடுங்கள்” (4 : 34) என்று கூறுகிறது.

மேற்குறிப்பிட்ட இரு வழிமுறைகளும் பயனளிக்காத போது அவளைத் திருத்தும் நோக்குடன் “இலேசாக அடியுங்கள்” (4 : 34) என்று அல்குர்ஆன் கூறுகிறது. பெண்களின் முகத்தில் அடிப்பதையும்; காயம் ஏற்படும் விதமாக அடிப்பதையும் இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

இரு தரப்பில் இருந்தும் பொறுப்பான நன்மதிப்புக்குரிய இருவர் முன்வந்து பிரச்சினையை தீர்த்து வைத்தல். இதுபற்றி அவ்விருவரிடையே பிரிவினை ஏற்பட்டு விடும் என்று நீங்கள் அஞ்சினால் கணவனின் குடும்பத்தில் ஒருவரையும் மனைவியின் குடும்பத்தில் ஒருவரையும் நடுவர்களாக ஏற்படுத்துங்கள். அவ்விருவரும் சமாதானத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விருவரிடையே ஒற்றுமை ஏற்படும்படி செய்து விடுவான். இந்த நான்கு வழி முறைகளும் பயனளிக்காத போது மாத்திரமே விவாகரத்து என்ற முடிவுக்கு வர முடியும்.

விவாக விடுதலைக்குப் பின்னர் இத்தா அனுஷ்டிக்க வேண்டும் என்பது இஸ்லாத்துக்குரிய தனிச் சிறப்பாகும். இது ஏனைய சமயங்களில் காணப்படுவ தில்லை. அவ்வாறே விவாகரத்துக்குரிய வழிமுறைகள் ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் காணப்படுவது இஸ்லாத்துக்குரிய மற்றொரு சிறப்பம்சமாகும்.

ஆண்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தலாக் உரிமையை போன்று பெண்களுக்கு வழங்கப்படவில்லை. பெண்களின் இயல்பு, தன்மை அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைப் பிரச்சினை என்பவற்றினை மையமாக வைத்து பெண்களுக்கான உரிமை குறைவாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு ஆண் தலாக் சொல்கின்ற போது அதற்கான காரணங்களை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க

வேண்டிய அவசியம் இல்லை. இதனால் பெண்ணோடு சம்பந்தப்பட்ட இரகசியம் பாதுகாக்கப்படுகின்றது. காரணம் அம்பலப்படுத்தப்படுமானால் அது மறுமணம் செய்கின்ற போது பெண்ணுக்கு பாதகமாக அமையலாம். அதேநேரம் ஒரு பெண் தனது கணவரிடம் விவாகரத்து கூறுகின்ற போது அதற்கான காரணம் கட்டாயம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். பெண்கள், பெரும்பாலும் கவர்ச்சிகளுக்கும் அவசர முடிவுகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் உட்படுவதனால் தூர நோக்கற்ற திடீர் முடிவுகளுக்கு அவர்கள் வருவதனாலேயே தலாக்-மணமுறிவுகளுக்கான உரிமைகள் பெண்களுக்கு குறைவாக வழங்கப்பட்டிருக்கலாம். இனி தலாக் பற்றி விரிவாக நோக்குவோம்.

தலாக் என்பது மணமுறிவு என்ற மொழிக்கருத்தைத் தரும். கணவன் மனைவியை விலக்கி விடுவதையே இது குறிக்கும். கணவன் சில வார்த்தைகளைக் கூறி மனைவியை விவாக விடுதலை செய்வதைக் குறிக்கும். இதனை இரு முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம். அவை தலாக் சுன்னி, தலாக் பிதஇ ஆகும்.

தலாக் சுன்னி : தலாக் சொல்வதற்கு இஸ்லாம் வகுத்த வரம்புகளைப் பேணி அதை செய்யும் போது தலாக் சுன்னி எனப்படும். உடலுறவு கொள்ளப்படாத பெண்ணை அவள் மாதவிடாய் நீங்கி தூய்மையாக இருக்கும் காலப்பிரிவில் ஒரு முறை மட்டும் தலாக் செய்தால் அது தலாக் சுன்னி என்பதாகும்.

தலாக் பிதஇ : இஸ்லாமிய சட்ட வரம்புகளைப் பேணாமல் அதற்கு மாற்றமாக அமையும் தலாக்கையே இது குறிக்கும். அதாவது ஒரே சொல்லில் மூன்று தலாக்குகளையும் சொல்லல், ஒரே இடத்தில் மூன்று தலாக்குகளையும் ஒவ்வொன்றாகச் சொல்லல், மாதவிடாய்க் காலப்பிரிவில் அல்லது பிள்ளை பெற்ற துப்பரவாகாத (நிபாஸ்) காலப்பிரிவில் தலாக் சொல்லுதல், மாதவிடாய் நீங்கிய காலப்பிரிவில் உடலுறவு கொண்டுவிட்டு தலாக் சொல்லல் என்பன இந்த வகையில் அமையும்.

தலாக்கை தலாக் பாஇன், தலாக் றஜஇ என்று மேலும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். தலாக் செய்யப்பட்டவளை மீண்டும் மனைவியாகக் கொள்ள முடியாத தலாக்கையே தலாக் பாஇன் குறிக்கும். அதாவது மூன்று தலாக்குகளையும்

பூரணப்படுத்திய நிலைமையையே குறிக்கும். தலாக் றஜஇ, தலாக் சொல்லப் பட்டவளை மீண்டும் மனைவியாகக் கொள்ள முடியுமான தலாக்கைக் குறிக்கும். அதாவது தலாக் சலுகையை பயன்படுத்தி ஒன்று அல்லது இரண்டு தலாக்குகளை கூறிவிட்டு இத்தாக்காலத்துக்குள் மீண்டும் இருவரும் இணங்கிக் கொள்ள முடியுமானதையே இது குறிக்கும்.

**குல்உ**

களைதல், நீக்குதல், அகற்றுதல் என்பது இதன் மொழிக்கருத்தாகும். பெண் தனது கணவருடன் வாழமுடியாத ஒரு நிலை ஏற்பட்டு ஒரு தொகைப் பணத்தை அல்லது சொத்தொன்றைக் கணவனுக்கு கொடுத்து மனைவி தன்னை விடுவித்துக் கொள்வதையே இது குறிக்கும். இவ்வுரிமை பெண்ணுக்கு வழங்கப்பட்டதாகும். கணவனிடமிருந்து பெற்ற அனைத்தையும் திருப்பிக் கொடுப்பதோடு மேலதிக மாகவும் அவன் கோரினால் அதனையும் அவள் கொடுக்க வேண்டும். (குல்உ செய்வதற்கு பெண் சுத்தமாகவோ அசுத்தமாகவோ இருக்க வேண்டியதில்லை) மேலும் குல்உ செய்தால் மூன்று ஹைழ் காலம் இத்தா இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

**பஸ்கு**

முறித்தான் என்ற மொழிக்கருத்தை தருகின்றது. உடன்படிக்கையில் ஏற்பட்ட ஒரு கோளாறு காரணமாகவோ திடீரென ஏற்பட்ட ஒரு நிகழ்வு காரணமாகவோ பஸ்கு நிகழலாம். (உ-ம்) திருமணம் முடித்த பின் இருவரும் பால்குடி மூலம் உறவினர்கள் என்று தெரியவருகின்ற போது பஸ்கு நிகழும். இருவருள் ஒருவர் மதம் மாறினாலும் பஸ்கு நிகழும். அதே போல் நோய் வறுமை போன்றவற்றை காதியிடம் முறையிட்டு இருவரும் விவாகரத்தை முறித்துக் கொள்வதும் இவ்வகையையே சாரும். பஸ்கு இஸ்லாமிய நீதிபதியிடம் கூறி ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதை குறிக்கும்.

**லிஆன்**

லிஆன் என்பது சாபமிடுதல் ஆகும். கணவன் மனைவியிடையே விபசாரக் குற்றச்சாட்டு பிரச்சினைகள் தோன்றி நிரூபித்துக் கொள்ள முடியாதபோது

அல்லாஹ் மீது ஆணையாக சத்தியமிட்டு சாப முண்டாகட்டும் என்று கூறி இருவரும் பிரிந்து கொள்வதனையே இது குறிக்கும். அதாவது விபசாரக் குற்றம் ஒன்றை நிறுவுவதற்கு நான்கு சாட்சிகள் காணப்பட வேண்டும். எனினும் சாட்சியங்களை முன்வைக்க முடியாத போது ஒருவர் தனது குற்றச்சாட்டை நிறுவுவதற்கு நான்கு முறை சத்தியமிட்டு பின்னர் ஐந்தாவது முறையாக "தன் கூற்று பொய்யாயின் அல்லாஹ்வின் சாபம் தன் மீது உண்டாகட்டும்" என்று கூறுவார். மனைவி நிரபராதியாயின் அவள் தனது தூய நிலையை எடுத்துக்காட்டி நான்கு முறை சத்தியம் செய்து விட்டு "தனது கூற்று பொய்யாயின் தன் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்" என்று ஐந்தாவது முறை கூற வேண்டும். இவ்வாறு கூறிவிட்டுப் பிரிவதே லிஆன் ஆகும். லிஆன் மூலம் பிரிந்த கணவன் மனைவி மீண்டும் சேர்ந்து வாழ அனுமதிக்கப்படுவதில்லை.

**லிஹார்**

இது ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட ஒரு தலாக் முறையாகும். ஒருவன் தன் மனைவியை தாய்க்கு ஒப்பிட்டு கூறி பேசுவதாகும். தன் தாய்க்கு அல்லது மஹ்ரமான ஒருவருக்கு மனைவியை ஒப்பிடுவதன் மூலம் லிஹார் நிகழ்ந்து விடும். லிஹாரின் மூலம் பிரிந்த ஒருவர் மீண்டும் சேர்ந்து வாழ வேண்டுமானால் ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அல்லது இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பிருக்க வேண்டும், அல்லது 60 மிஸ்கீன்களுக்கு உணவளிக்க வேண்டும்.

**ஈலாஉ**

சத்தியமிட்டு தவிர்ந்து கொள்ளுதல் என்ற மொழிக்கருத்தை தருகிறது. தன் மனைவியுடன் சேரமாட்டேன் என சத்தியமிடுவதையே ஈலாஉ குறிக்கும். சத்தியமிட்டு நான்கு மாதத்துக்குள் இணையாவிட்டால் இருவரும் பிரிந்து விடுவர். இவ்வாறு பிரிந்தால் சாதாரண தலாக்குப் போன்றே இத்தா இருக்க வேண்டும்.

"தங்கள் மனைவிகளுடன் சேருவதில்லை" என சத்தியம் செய்து கொண்டவனுக்கு நான்கு மாத தவணை உண்டு. ஆகவே இதற்குள் இவர்கள்

மீண்டும் சேர்ந்து கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனும் கருணையுடையோனுமாக இருக்கிறான். ஆனால் அவர்கள் தவணைக்குள் சேராமல் திருமணப் பிரிவினை உறுதிப் படுத்திக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுடைய சத்தியத்தை செவியுறுவோனாகவும் இருக்கிறான். ஆகவே அத்தவணைக்குப் பின் தலாக் ஏற்பட்டுவிடும்.

"தனது மனைவியுடன் சேருவதில்லை என சத்தியம் செய்து கொண்டவருக்கு 4 மாத தவணை உண்டு. ஆகவே அதற்குள் அவர்கள் மீண்டு கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்போனும் கருணையுடையோனுமாக இருக்கிறான்." (2 : 226)

## இத்தா - விளக்கம், விதிகள், (தாபரிப்பு)

## இத்தா

இத்தா என்பது கணித்தல், எண்ணுதல் என்ற மொழிக்கருத்தைத் தரும். கணவனின் இழப்புக்காக அல்லது பிரிவுக்காக மனைவி குறிப்பிட்ட சில காலத்துக்கு திருமணம் முடிக்காமல் தவிர்ந்திருப்பதை இது குறிக்கும். இத்தா இருக்கும் மரபு ஜாஹிலிய்யாக் காலத்திலும் காணப்பட்டது.

1. கணவன் இறந்ததற்காக அனுஷ்டிக்கும் இத்தா. கணவன் இறந்ததற்காக ஒரு பெண் 4 மாதமும் 10 நாட்களும் இத்தா இருக்க வேண்டும். "உங்களில் தம் கணவனை இழந்த பெண்கள் 4 மாதமும் 10 நாட்கள் காத்து நிற்கட்டும் (2 : 234) என்று அல்குர்ஆன் கூறுகிறது."

2. கணவனை இழந்த பெண் கர்ப்பவதியாயின் அவள் பிள்ளை பெறும் வரையிலும் இத்தா இருக்க வேண்டும். "கர்ப்பஸ்திரிகளுக்கு அவர்களின் இத்தாவின் தவணை அவர்கள் பிரசவிக்கும் வரை இருக்கின்றது." (65 : 4)

3. தலாக் சொல்லப்பட்ட பெண் மூன்று குறூஉகள் இத்தா இருக்க வேண்டும். முதலாம் அல்லது இரண்டாம் தலாக் சொல்லப்பட்ட நிலையில் உள்ள ஒரு பெண்ணை கணவன் விரும்பினால் இத்தா தவணைக்குள் மீட்டிக் கொள்ள முடியும். "திருமணம் முடித்து உடலுறவு கொள்ளப்படாத நிலையில் ஒரு பெண்ணை தலாக் சொன்னால் அப்பெண்ணுக்கு இத்தா இல்லை" (33:48)

தலாக் சொல்லப்பட்ட பெண் ஹைழ் வருவதை விட்டும் நீங்கிய மிகவும் வயது முதிர்ந்த பெண்ணாக இருந்தால் அவள் 3 மாதங்கள் மாத்திரம் இத்தா இருத்தல் போதுமானதாகும். "(தலாக் சொல்லப்பட்ட) உங்கள் மனைவிகளில் எவரேனும் (அதிக வயதாகி) மாதவிடாயின் நம்பிக்கை இழந்து இத்தாவை கணக்கிட என்ன செய்வதென்று நீங்கள் சந்தேகத்துக்குள்ளாகிவிட்டால் அப்பெண்களுக்கும் இன்னும் எவர்களுக்கு இது வரையில் மாதவிடாய் ஏற்படவில்லையோ அவர்களுக்கும் இத்தாவின் தவணை 3 மாதங்களாகும்." (65:4)

## இத்தாவின் போது பேணவேண்டியவைகள் :

முஸ்லிம் சமூகத்திலுள்ள இத்தா சம்பந்தமான சில நடைமுறைகளே இஸ்லாத்தின் எதிரிகள், இத்தா ஒரு சமூகக் கொடுமை என்று பிரசாரம் செய்யத் தூண்டியது எனலாம்.

உண்மையில், இஸ்லாத்தில் இத்தாவின் அமைப்பு மிகவும் பின்பற்றுவதற்கு எளிமையானது. சாதாரணமானது. ஒரு முஸ்லிம் பெண் ஏனைய காலங்களில் எவ்வாறு பர்தா அணிந்து தனது அலங்காரங்களை ஏனையவர்களுக்கு வெளிக்காட்டாது தேவையின்றி வெளியே செல்லக் கூடாதோ அதே நடைமுறையே இத்தாக் காலத்திலும் பேணப்படும். இத்தாவுடைய நாட்களில் மேலதிகமாக இரு விடயங்கள் மட்டுமே கடைப்பிடிக்கப்படும்.

1. அவள் கணவனின் இழப்புக்காகத் துக்கம் அனுஷ்டிக்கிறாள் என்ற வகையில் அலங்காரமான ஆடை அணிகளை அணிந்து கொண்டு பிறர் முன் தோன்றக்கூடாது

2. தனது இத்தாக் காலம் முடியும்வரை அவள் திருமணம் செய்வதோ, திருமண பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதோ கூடாது

இத்தா அனுஷ்டிப்பது எவ்வளவு இலகுவானது என்பதைக் காட்ட நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் நடந்த சம்பவங்களில் இரண்டைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

இத்தா அனுஷ்டிக்கின்ற பெண்ணொருத்தி நபி (ஸல்) அவர்களது காலத்தில் காட்டுக்கு விறகு வெட்டச் சென்றாள். இடையில். அவளை ஒரு மனிதர் சந்தித்து, "இத்தா அனுஷ்டிக்கும் பெண்கள் இவ்வாறு வெளியிறங்கிச் செல்லக் கூடாது" என்றார். இதனால் சஞ்சலத்துக்குள்ளான அப்பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "இத்தாவுடைய காலத்தில் விறகு வெட்டச் செல்வது தவறானதா?" என்று வினவினாள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அது ஒரு பிரச்சினைக்குரிய விடயமல்ல, அது அவளுக்கு ஆகுமானதே" என்று பதிலளித்தார்கள். இந்தச் சம்பவம், இத்தாவுடைய காலத்தில் ஒரு பெண், அந்த இரு நிபந்தனைகளையும் பேணி நிர்ப்பந்தமான சூழ்நிலையில் செயற்பட இடமுண்டு என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

ஒரு தடவை இத்தா இருந்த ஒரு பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, தனது வீட்டில் சகோதரர்கள் மட்டும்தான் இருப்பதாகவும், தான் ஆறுதல் பெறுவதற்காகப் பேசிக் கொண்டிருக்க எந்தப் பெண்களும் தனது வீட்டில் இல்லை என்றும், எனது பக்கத்து வீட்டுக்குச் சென்று அங்குள்ள பெண்களுடன் பேசிக் கொண்டிருப்பதற்கு அனுமதியளிக்க வேண்டிக் கொண்டாள். இந்த வேண்டுகோளை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். எனவே, தவிர்க்கமுடியாத தேவைகளின் போது, இத்தா இருக்கின்ற பெண் வீட்டை விட்டு வெளியே செல்லலாம் என்பது தெளிவாகிறது.

இவ்வாறு இஸ்லாத்தில் இத்தா அமைப்பு இலகுபடுத்தப்பட்டிருக்கும் போது எமது சமூகத்தில் இத்தா மிகுந்த சிரமத்துடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இன்று, சமுதாயத்தின் சில மட்டங்களில் ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால் இத்தா அனுஷ்டிப்பதற்காக அவள் கட்டாயமாக வெள்ளாடை உடுத்துக் கொள்ள வேண்டும். அவள் வீட்டில் ஒரு மறைவான இடத்தில் அமர்த்தப்படுவாள். எந்த ஆடவரினதும் பார்வை அவள்மீது தவறுதலாகவும் பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவள் தங்கியிருக்கும் இடத்தை சூழ மறைப்பதற்கான கடுமையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். அவள் அந்த சிறிய இருளான இடத்திலேயே இத்தாக் காலம் முழுக்க அமர்ந்திருக்க வேண்டும். சில இடங்களில் சிறுவர்கள் கூட அவளைப் பார்த்துவிடக் கூடாது என்ற கடுமையான சட்டம் பேணப்படுகிறது. அவளை ஆண்கள் தவறுதலாகக் கூட பார்த்து விடக்கூடாது. அவ்வாறு அவர்கள் இவளைப் பார்த்து விட்டால் இது இவள் செய்யும் பாவம் என்ற கருத்து எமது சமூகத்தில் பொதுவாக

நிலவிவருகிறது. சில ஊர்களில் இதைவிட ஒருபடி மேலாகச் சென்று பெண்கள் இத்தா இருக்கும்போது ஆண்கள் அவளைக் கண்டுவிட்டால், அல்லது ஆண்களைச் சந்திக்க வேண்டிய கட்டாய நிலை இவளுக்கு ஏற்பட்டு, ஆண்களை அவள் சந்தித்துவிட்டால் தனது இத்தாவைப் புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் பணிக்கப்படுகிறாள். இத்தாவில் இத்தகைய கடுமையான ஆசாரங்கள் சமூகத்தில் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதன் காரணமாக இத்தா குறித்து பல மோசமான அபிப் பிராயங்கள் எழுந்துள்ளன. கணவன் மரணித்த பெண்கள் இத்தாவைத் தாங்க முடியாத பெரியதொரு சுமையாகக் கருதத் தலைப்பட்டுள்ளனர். இதனால் சில ஊர்களில் நாற்பது நாட்கள் மட்டும் இத்தா அனுஷ்டிக்கும் பிழையான மரபு காணப்படுகிறது.

ஆனால் இஸ்லாம் இத்தாவை மிக இலகுவானதாக அமைத்து வைத்துள்ளது. இத்தா இருக்கின்ற ஒரு பெண்ணுக்கு எவ்வித மேலதிக சுமையும் ஏற்படுவதில்லை. இத்தா இருக்கின்ற காலத்தில் அவள் திருமணம் செய்யக் கூடாது. திருமண பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக் கூடாது. அலங்காரங்களைத் தவிர்த்தல் வேண்டும் என்பது மட்டும்தான் அவளுக்கு இடப்படும் கட்டளை.

நோயின் காரணமாக வைத்தியரைச் சந்தித்தல் போன்ற இன்னோரன்ன அடிப்படைத் தேவைகளுக்காக இத்தா இருக்கின்ற பெண்ணொருத்தி வெளியே செல்வது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே நாம் இத்தா பற்றிய சீரிய இஸ்லாமிய நெறிமுறையை உரிய முறையில் புரிந்திருப்பது அவசியமாகும். அல்லாஹ் எவ்வளவு உயர்ந்த ஞானத்தின் அடிப்படையில் மார்க்க வழிகாட்டல்களை வகுத்தமைத்துள்ளான் என்பதையும் நாம் விளங்கிக் கொள்வதோடு அவற்றை பொது மக்களுக்கும் விளங்க வைக்க வேண்டும்.

கணவன் மரணித்ததற்காக இத்தாவை அனுஷ்டிக்கும் பெண் நான்கு மாதமும் 10 நாட்கள் கணவனின் இறப்பிற்காக துக்கம் அனுஷ்டிப்பதை இஸ்லாம் அனுமதித்துள்ளது. இது ஒரு சமூக கொடுமையல்ல. கணவன் இறந்தவுடன் எந்தப் பெண்ணும் தனது கவலையோடு மீண்டும் திருமண இன்பத்தில் நுழைய விரும்பமாட்டாள். மேலும் பெண் இளகிய மணமுடையவள் என்பதால் கணவனை இழந்தவள் திடீரென மீண்டும் மணவாழ்வில் நுழைய விரும்பமாட்டாள்.

கணவனை இழந்தவள் இத்தாக் காலத்தில் தனது கவலையை பிரதிபலிக்கச் செய்வதோடு அவள் ஆடம்பரங்களை தவிர்த்து எளிமையைப் பேணி, நகைகள், அலங்கார ஆடைகள் அணிந்து தன்னை அலங்கரித்துக் கொள்வதை தவிர்ந்து நடத்தல் வேண்டும். இத்தாவுடைய காலத்தில் திரும்பவும் திருமணச் பேச்சில் ஈடுபடுவது முற்றாகத் தவிர்க்க வேண்டியதொன்றாகும். இத்தா அது மிகவும் இலகுவாக அனுஷ்டிக்க முடிந்த ஒரு வணக்கமாகும்.

ஒரு முஸ்லிம் பெண் சாதாரண காலங்களில் எவ்வாறு பர்தா அணிந்து, அவ்றத்தை மறைத்து, தனது அலங்காரங்களை வெளிக்காட்டாது தேவைக்கன்றி வெளிச்செல்லக் கூடாதோ அதே விதிகளையே இத்தாவிலும் கடைபிடிக்க வேண்டும். இத்தாவின் போது ஒரு பெண் உழைப்பிற்காக, தனது ஜீவனோபாயத்துக்கு வழியைத் தேடிக் கொள்வதற்காக பகற்பொழுதில் வெளியே சென்று உழைத்துவிட்டு இரவில் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் இருக்க முடியும்.

தலாக் சொல்லப்பட்ட பெண் இத்தாவில் இருக்கும்போது அவளை மீண்டும் மனைவியாக்கிக் கொள்ள வாய்ப்புக் காணப்படுகின்றது என்ற வகையில் இவள் கணவனின் வீட்டிலேயே இத்தாவை அனுஷ்டிக்க வேண்டும். இக்காலத்தில் இருவரும் இணைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் முகமாக அவள் கணவனைக் கவரும் விதத்தில் தன்னை கணவனுக்காக அலங்கரித்துக் கொள்ளும் விதத்தை இஸ்லாம் தடுக்கவில்லை. தலாக் பாஇன் ஆன நிலையில் உள்ள ஒரு பெண் இவ்வாறு கணவனைக் கவரும் விதத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

நிகாஹ் நிகழ்வின் போது மனைவிக்கு கணவன் வழங்கும் அன்பளிப்பு மஹர் எனப்படுகிறது. அவ்விருவரும் குடும்பமாக வாழும்போது மனைவிக்கு கணவன் வழங்கும் தாபரிப்பு உதவி “நபகா” ஆகும். விவாக வாழ்வில் இருந்து கணவன் மனைவியைப் பிரிந்து வேறாகிவிடுகின்ற போது அவளுக்கு வழங்கும் அன்பளிப்பு “மதாஉ” ஆகும். மனைவியை தலாக் கூறி விவாகரத்து செய்யும்போது மதாஉ கொடுப்பது பற்றி அல்குர்ஆனின் 2:29, 2:24 வசனங்கள் விளக்குகின்றன. தலாகின் காரணமாக இத்தா இருக்கும் பெண்ணுக்கு தலாக் காலம் முடியும் வரை வாழ்க்கைச் செலவை அவளுக்கு தலாக் கூறிய கணவன் வழங்க வேண்டும். இது பொதுவாக இத்தாக் காலத்தில் கணவன் மனைவிக்கு நிறைவேற்ற வேண்டிய ஓர் அம்சமாகும்.

**இத்தாவின் பயன்கள்**

1. இறைகட்டளையை ஏற்று நிறைவேற்றுவதன் மூலம் இறைகூலியை பெற்றுக் கொள்ளல்
2. உளத்தாக்கங்களில் இருந்து மீட்சி பெறுவதற்கான வழி
3. முன்னைய கணவன் மூலம் கருவுற்றிருக்கிறாளா என்பதை அவதானிப்பதற் குரிய காலம்
4. கணவனையிழந்த பெண் துக்கம் அனுஷ்டிப்பதற்குரிய இஸ்லாமிய கால எல்லை
5. முன்னைய கணவனது நடவடிக்கைகளை நினைவுகூறவும், அவருக்காக மனப்பூர்வமாக பிரார்த்தனை புரியவும் உள்ள ஒரு சந்தர்ப்பம்
6. மறுமணம் பற்றிய தீர்க்கமான ஒரு முடிவுக்கு வருவதற்கான சந்தர்ப்பம்
7. தலாக் ரஜஇ ஆயின் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பம்

# குடும்ப வாழ்வின் முக்கியத்துவம்

**தனிமனிதன் :**

தனித்த ஓர் ஆண் அல்லது ஒரு பெண் தனிமனிதன் என்ற வரையறைக்குள் வருகின்றானர். இத்தனிமனிதன் ஒரு கட்டிடத்தின் ஒரு கல்லைப் போன்றவனாவான்.

தனிமனிதர்களைக் கொண்டு குடும்பம் என்ற அலகும் குடும்பங்களைக் கொண்டு சமூகம் என்ற கட்டடமும் உருவாகின்றன. இஸ்லாம் சிறந்த சமூக உருவாக்கத்தை இலட்சியமாகக் கொண்ட மார்க்கம் என்ற வகையில் அது தனிமனிதனுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்குகின்றது.

ஈமான், இபாதா, அக்லாக் போன்ற அடிப்படை அம்சங்களினூடாக இஸ்லாம் தனிமனிதர்களை உருவாக்கப் பயிற்சியளிக்கின்றது. இப்பயிற்சியைப் பெறுவது தனிமனிதனின் கடமையாகும். அதுவே “பர்ளு ஐன்” எனப்படுகின்றது.

மறுமையில் மனிதர்கள் அல்லாஹ்வின் முன்னிலையில் தனிமனிதர்களாகவே விசாரிக்கப்படுவார்கள்.

> “எந்த ஒரு மனிதனும் இன்னொரு மனிதனின் சுமையை சுமக்க முடியாது” (6 : 164)
>
> “யார் ஓர் அணுப்பிரமாணமளவு நன்மை செய்கிறாரோ அவர் அதைக் கண்டு கொள்வார். இன்னும் யார் ஓர் அணுப் பிரமாணமளவு தீமை செய்கிறாரோ அவர் அதனையும் கண்டு கொள்வார்.” (99: 6 - 7)
>
> நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். உங்கள் பொறுப்பைப் பற்றி (தனித்தனியாக) விசாரிக்கப்படுவீர்கள்” (புஹாரி)

மனிதன் பலவீனமானவன் என்ற வகையில் அவன் தனிமனிதனாக நின்று அவனது கடமைகளை நிறைவேற்றி வெற்றியடைவது சிரமசாத்தியமாகையால் தனிமனிதனாக வாழ்வதை இஸ்லாம் எச்சரித்து கூட்டு வாழ்க்கையில் ஆர்வமூட்டுகின்றது.

* “தனித்துச் செல்லும் ஆட்டை ஓநாய் பிடிப்பது போல கூட்டத்தில் இருந்து பிரிந்து செல்லும் தனிமனிதர்களை சைத்தான் பிடித்துக் கொள்வான்”
* “அல்லாஹ்வின் உதவிக்கரம் கூடி வாழ்வோருடனேயே இருக்கிறது”

**குடும்பம் :**

ஓர் ஆணும் பெண்ணும் சட்ட ரீதியாக மணமுடிப்பதன் மூலம் குடும்பம் உருவாகின்றது. அவர்களுடன் அவர்களின் பிள்ளைகள் இரத்த உறவின் மூலமோ அல்லது பால்குடி உறவின் மூலமோ ஏனைய உறுப்பினர்கள் ஒன்றிணைகின்ற போது குடும்பம் விரிவடைகின்றது. திருமண உறவு, இரத்த உறவு, பால்குடி உறவு அல்லாத வேறு எந்த விதமான நிலையிலும் குடும்பம் அமைவதை இஸ்லாம் ஆதரிப்பதில்லை. அதாவது (தத்தெடுத்தல், தவறான பாலுறவின் மூலம் குழந்தை பெறுதல் போன்றன குடும்ப உறவை ஏற்படுத்தாது). குடும்ப உருவாக்கத்தில் அல்லாஹ் வைத்துள்ள அடிப்படையான இயற்கை நியதி, ஆண் பெண் என்ற எதிர்பாலான தனிமனிதர்கள் சட்டபூர்வமான பங்காளிகளாக மாறுவதாகும். இந்நியதிக்கு மாற்றமாக செயல்படுவது மனித சமுதாயத்துக்கே கேடுண்டாக்குவதாகும்.

நவீன யுகத்தில் “குடும்பம்” எனும் அடித்தளத்தை சிதைத்துச் சின்னா பின்னமாக்கும் சிந்தனைகள் செல்வாக்குப் பெறுவதன் காரணமாக, கட்டுக்கோப்பான குடும்ப அமைப்பை பாதுகாக்க வேண்டிய தேவை அதிகமாக உணரப்பட்டுள்ளது. உலகச் சுகாதார அமைப்பு 1994 ஆம் ஆண்டை சர்வதேச குடும்ப நல ஆண்டாக அறிவிப்புச் செய்ததுடன் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 15 ஆம் திகதியை சர்வதேச குடும்ப நாளாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இஸ்லாம் ஓர் இயற்கை மார்க்கம் என்ற வகையில், அது மனித இனவிருத்தியில் இயற்கை வரம்பை மீறாமல் செயற்படும் நிறுவனமான குடும்ப அமைப்புக்கு அதிகூடிய முக்கியத்துவத்தை வழங்கியிருக்கின்றது. இதனால் இஸ்லாம் குடும்பம் சார்ந்த (Family oriented) மார்க்கம் என வர்ணிக்கப்படுகின்றது.

இஸ்லாம், குடும்பமாக சேருமாறு தனிமனிதர்களைத் தூண்டுகின்றது. இதற்கான காரணம் அது தனிமனிதனைப் பாதுகாக்கும் அரணாக செயல்படுவதேயாகும்.

இஸ்லாமிய சமூக அமைப்பில் ஒரு குடும்பம் உருவாக பல குடும்பங்கள் துணை நிற்கின்றன. தனியான ஒரு குடும்பத்தின் பாதிப்பு பல குடும்பங்களின் இணைப்பான சமுதாயத்தையும் பாதிக்கவே செய்யும். அதேபோல் ஒரு குடும்பத்தின் வெற்றி அந்தச் சமுதாயத்தின் வெற்றியாகவும் வளர முடியும்.

## குடும்ப வாழ்க்கையின் முக்கியத்துவம்

கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், உற்றார் உறவினர் ஆகிய பல தரப்பினரும் ஒருவருடனொருவர் புரிந்துணர்வுடன் மகிழ்ச்சியாக வாழும் வாழ்க்கையே குடும்ப வாழ்க்கையாகும். குடும்ப வாழ்க்கைக்கு எதிரான வாழ்க்கை முறையே துறவறமாகும். இஸ்லாத்தில் துறவறத்திற்கு இடமே கிடையாது. அது நபி (ஸல்) அவர்களின் வழிமுறைக்கு மாற்றமானது. இயற்கைக்கே முரணானது.

இஸ்லாம் துறவறத்தை மனிதர்கள் உருவாக்கிக் கொண்ட செயற்கை வழிமுறை என எடுத்துக்காட்டுகின்றது

“(இறைதிருப்தியைப் பெற) அவர்கள் உருவாக்கிக் கொண்ட துறவறத்தை நாம் ஒருபோதும் அவர்களுக்குக் கடமையாக்கவில்லை” (57:27)

உஸ்மான் பின் மழ்ஊன் (ரழி) என்ற நபித்தோழர், நபி(ஸல்) அவர்களை அணுகி, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாமல் துறவறம் மேற்கொள்ள அனுமதி கோரியபோது நபியவர்கள் அதனை நிராகரித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கியிருந்தால் நாங்கள் ஆண்மை நீக்கம் செய்திருப்போம் என்று ஸ.்.து பின் அபீ வக்காஸ் (ரழி) அறிவிக்கும் நபிமொழி புஹாரி, முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் பதிவாகியுள்ளது.

அல்லாஹ், உள்ளத்திற்கு அமைதியையும் உடலிற்கு ஆரோக்கியத்தையும் தனது சட்டரீதியான சோடியுடன் சேர்ந்து வாழ்வதிலேயே வைத்துள்ளான். எனவே மனிதன் தனித்து வாழும்போது உளநோய்க்கு ஆளாவது போலவே உடல் ரீதியாகவும் பல பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றான்.

“நீங்கள் ஆறுதல் பெறுவதற்குரிய துணையை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே அன்பையும் கிருபையையும் உள்ளடக்கி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்.” (30:21)

ஆணும், பெண்ணும் இயற்கையிலேயே சோடியாகப் படைக்கப்பட்டவர்கள். எனவே அச்சோடிகள் குடும்பமாக ஒன்றிணைந்து வாழாதவரை அவ்விருவரும் முழுமை பெறுவதில்லை.

“மனிதர்களே! உங்கள் இரட்சகனைப் பயந்து கொள்ளுங்கள். அவன்தான் உங்களை ஓர் ஆத்மாவில் இருந்து படைத்தான், (எவ்வாறெனில்) அவ்வாத்மாவில் இருந்து அதன் சோடியைப் படைத்தான். அவ்விருவர் மூலமும் அதிகமான ஆண்களையும் (சோடியான) பெண்களையும் பெருக வைத்தான்.” (4:1)

குடும்ப வாழ்வின் மூலம் மனிதன் தனக்கு மாத்திரம் என்ற சுயநலத்தில் இருந்து விடுபட்டு தனது பங்காளியான மனைவி பிள்ளைகளுக்கும் என்றவாறு சிந்தித்து செயலாற்றுகின்றான். இதற்கு அல்லாஹ்விடத்தில் சிறந்த வெகுமதிகள் காணப்படுகின்றன. “நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவிடும் ஒரு தீனார், அடிமை விடுதலைக்காக செலவிடும் ஒரு தீனார், ஓர் ஏழைக்கு தர்மம் செய்யும் ஒரு தீனார், உங்களது குடும்பத்துக்காக செலவு செய்யும் ஒரு தீனார் என்பவற்றுள் அதிகமான நன்மைகளைப் பெற்றுத்தரக் கூடியது குடும்பத்திற்காக செலவிடப்பட்ட தீனாரேயாகும்.” (முஸ்லிம்) இப்பாக்கியம் குடும்ப வாழ்க்கை வாழ்பவனுக்கே கிடைக்கின்றது.

குடும்ப வாழ்க்கையின் மூலம் ஒருவன் அல்லது ஒருத்தி பொறுப்புள்ள மனிதனாக மாறுகின்றான். இதனால் அவனது வாழ்க்கை ஒழுங்குபடுத்தப்படுகின்றது. மனக்கட்டுப்பாடு, சந்ததி விருத்தி, பரிசுத்தம், பாதுகாப்பு கௌரவம், ஆரோக்கியம் போன்ற பல பயன்கள் திருமணத்தின் மூலம் கிடைக்கின்றன என்பதை ஹதீஸ்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஹலாலான முறையில் இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் போது அதற்கும் அல்லாஹ்விடம் நற்கூலி இருக்கின்றது.

நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதரிடம் வினவினார்கள். “ஒருவன் தனது மனைவியுடன் தன் ஆசையைத் தீர்த்துக் கொள்வதற்கும் நன்மையுண்டா? அதற்கு நபியவர்கள்: அதை ஹராமான முறையில் தீர்த்துக் கொண்டால் பாவம் கிடைக்குமல்லவா? அவ்வாறாயின் ஹலாலான வழியில் தீர்த்துக் கொண்டால் நன்மையுண்டு.” என்றார்கள். ஒரு மனிதன் உடலின்பத்தைப் பெறவும், அன்பைப் பரிமாறிக் கொள்ளவும் குழந்தைகளால் கண்குளிர்ச்சி பெறவும் முதுமையில் பராமரிக்கப்படவும் குடும்ப வாழ்க்கை ஒன்றே முழுமையாக உத்தரவாத மளிக்கின்றது. குடும்ப வாழ்க்கை மூலம் ஆணும் பெண்ணும் பாதுகாக்கப்படு கின்றார்கள்.

# கணவன் மனைவி உறவு

## கடமைகளும் உரிமைகளும்

**கணவன் மனைவிக்கும் மனவைி கணவனுக்கும் செய்ய வேண்டிய கடமைகளும் உரிமைகளும் :**

உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஆண்களும் பெண்களும் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டிருந்தாலும் ஒருவர் மற்றவரைச் சார்ந்து வாழ்ந்து ஆறுதல் பெறுகின்ற இயற்கைத் தன்மையில் அல்லாஹ் இரு சாராரையும் படைத்துள்ளான்.

"(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை, நீங்கள் அவர்களிடம் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டு பண்ணியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்." (30 : 20)

மகிழ்ச்சியும் இன்பமும் நிறைந்த இத்தகு தொடர்பை அல்லாஹ் ஏற்படுத்தியதன் நோக்கம் மகத்தான பல பொறுப்புக்களை மகிழ்வுடன் மேற்கொள்ள வேண்டுமென்பதற்காகவேயாகும்.

கணவன் மனைவிக்கிடையிலான இத்தொடர்பு சீராக நடைபெற இருவரது கடமைகளும் உரிமைகளும் பேணப்பட வேண்டியது அவசியமாகும்.

ஓர் ஆணும் பெண்ணும் திருமணத்தின் மூலம் குடும்ப வாழ்வை ஆரம்பிக்கும் போது விளையாட்டுக்காகவோ உடலிச்சைக்காகவோ அன்றி, அல்லாஹ் வைத்துள்ள இயற்கை விதியை (சுன்னாவை) நடைமுறைப்படுத்தவே ஒன்றிணைந்துள்ளோம் என்றுணர வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "திருமணம் என்பது எனது வழிமுறை (சுன்னா) ஆகும். யார் அதை வெறுக்கின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல" (முஸ்லிம்)

அல்லாஹ் பின்வரும் விடயங்களை கணவன், மனைவி ஆகியோர் மீது கடமையாக்கியுள்ளான்.

ஸாலிஹான சந்ததிகளை உருவாக்கல்.

குடும்பத்திற்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

குடும்ப உறவுகளைப் பேணல்.

கணவன் மனைவி ஆகியோர் மீது விதியாக்கப்பட்டுள்ள இக்கூட்டுப் பொறுப்பு, அவர்களுக்கிடையிலான சீரான தொடர்பு மூலமே நிறைவேற்றப்பட வேண்டுமெனின், அவ்விருவரதும் கடமைகளும் உரிமைகளும் வரை யறுக்கப்பட வேண்டும். கணவன் மனைவியருடைய கடமைகளும் உரிமைகளும் படைத்த இறைவனாலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளமை இஸ்லாமியக் குடும்ப அமைப்பின் சிறப்பம்சமாகும். கணவன் மனைவிக் கிடையே காணப்படும் இயல்பான பலங்களும் பலவீனங்களும் கருத்தில் கொள்ளப்பட்டே அவர்களது கடமைகளும் உரிமைகளும் வரையறை செய்யப்பட்டுள்ளன. இவ்வகையில் தம்பதியருக்கிடையில் ஒருவர் ஆற்ற வேண்டிய கடமை மற்றொருவரின் உரிமையாக மாறிவிடுகின்றது.

கணவன், மனைவியின் முழுமையான கடமைகளையும் உரிமைகளையும் மூன்று முக்கிய தலைப்புக்களில் அடக்கி விடலாம்.

1. குடும்பத்தை நிருவாகம் செய்தல்.
2. குடும்பத்தின் சமூக, பொருளாதார மேம்பாட்டைக் கண் காணித்தல்.
3. குடும்பத்தின் உணர்வுபூர்வமான ஆன்மீக வளர்ச்சியைப் பராமரித்துப் பேணி வருதல்.

இம்மூன்றிலும் ஆணும் பெண்ணும் சமபங்கேற்க வேண்டும். இருவரதும் பங்கு சமபெறுமானமுடையது. ஆனால் வெவ்வேறானது.

### 1. குடும்பத்தை நிர்வாகம் செய்தல்

இஸ்லாம் குடும்ப நிருவாகத்தில் ஆணுக்கு தலைமைத்துவத்தை வழங்கி யுள்ளது. அதற்கான காரணத்தையும் அல்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது. “ஆண்கள் பெண்களை நிர்வகிப்போர் ஆவர்.” (4:34) இதற்குக் காரணம்

அல்லாஹ் அவர்களில் சிலருக்குச் சிலரை விட உயர்வை அளித்திருக்கிறான் என்பதும், ஆண்கள் தங்களுடைய செல்வத்தில் இருந்து செலவு செய்கிறார்கள் என்பதுமாகும்". இஸ்லாமியத் தலைமைத்துவத்தின் முக்கிய கடமை கலந்தாலோசித்தலாகும். அல்குர்ஆன் ஏவுகின்றது. "அவர்களது செயற்பாடுகள் கலந்தாலோசனையின் அடிப்படையில் அமையும்" (3:159)

குடும்ப நிர்வாகத்தின் தலைவன் என்ற வகையில் ஆணுக்கு மூன்று முக்கிய பணிகள் உண்டு

1. மனைவியை அன்பாக, கண்ணியமாக நடத்துதல்
2. மனைவியின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவு செய்தல்
3. மனைவியையும், குடும்பத்தையும் பாதுகாத்து அவர்களுக்கு சரியான வழிகாட்டல் வழங்கல்

கணவன் தன்னுடைய கடமைகளைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. "அல்லாஹ் ஒருவனுக்கு அதிகாரத்தை வழங்கி மக்களின் நல்வாழ்வுக்காக அதனைப் பயன்படுத்தாத எவனொருவனும் சுவனத்தின் நறுமணத்தை நுகர்ந்திடமாட்டான்" (புஹாரி)

கடமைகளும் உரிமைகளும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இவ்வழிகாட்டலின் அடிப்படையில் வகுக்கப்பட்டு இரு சாராரும் அதை புரிந்துணர்வுடன் ஏற்றுக் கொள்ளும் போது குடும்ப நிர்வாகம் சீர்பெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

### 2. குடும்பத்தின் பொருளாதார சமூக மேம்பாட்டைக் கண்காணித்தல்

குடும்பத்தின் பொருளாதார மேம்பாடு இரண்டு விடயங்களில் தங்கியுள்ளது

1. உழைத்தல் (வரவு)
2. செலவு செய்தல் (செலவு)

இவ்விரு விடயங்களிலும் கணவனும் மனைவியும் இஸ்லாம் விதித்துள்ள விதிமுறைகளைப் பேணி சலுகையளித்துள்ள விடயங்களில் கலந்தாலோசித்துச் செயல்பட வேண்டும். வரவும் செலவும் ஹலாலான வழியில் நிகழ வேண்டும்

என்பதும், மார்க்கக் கடமைகளுக்கு அவை இடையூறாக இருக்கக் கூடாது என்பதும் இஸ்லாமிய விதிமுறையாகும்.

குடும்பத்துக்கான செலவைக் கொடுப்பது (நபகா) கணவனின் கடமையாகும். பிள்ளைகளை அழகிய முறையில் வளர்த்து ஆளாக்குவது மனைவியின் கடமையாகும். மனைவிக்கும் உழைக்க உரிமையுண்டு. ஆனால் கணவன் அனுமதிக்க வேண்டும். அது அவளின் குடும்பக் கடமைகளுக்கு இடையூறாக இருக்கக் கூடாது. மார்க்க வரம்புகளையும் மீறக் கூடாது.

செலவு செய்வதில் கஞ்சத்தனமோ, வீண்விரயமோ இருக்கக் கூடாது. ஹிந்த் பின்த் உத்பா கூறினார் : "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (எனது கணவர்) அபூ சுப்யான் ஒரு கஞ்சன். எனவே அவருடைய பொருளில் இருந்து எடுத்து என் குழந்தைகளுக்கு உணவளிப்பது என் மீது குற்றமாகுமா? அல்லாஹ்வின் தூதர் கூறினார். "உன்னுடைய தேவைகளுக்குப் போதுமானதையும், நீதமானதையும் எடுத்துக் கொள்வதில் தவறேதுமில்லை. (புஹாரி)

"மேலும் (உலோபியைப் போன்று செலவு செய்யாது) உம்முடைய கையை உம்முடைய கழுத்தில் கட்டப்பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர். அன்றியும் (உம்மிடம்) இருப்பதை செலவழித்துவிடுவதில் அ(க்கையான)தை ஒரே விரிப்பாக விரித்தும் விடாதீர். இதனால் நிந்திக்கப்பட்டவராக, முடைப்பட்டவராக உட்கார்ந்துவிடுவீர்." (17 : 29)

கணவனின் பொருளாதார சமூக அந்தஸ்தை உயர்த்துவதில் பங்காற்ற வேண்டும். கணவன் இல்லாத நேரத்தில் அவனது பொருளையும் கண்ணியத்தையும் அவள் கட்டிக்காக்க வேண்டும்.

3. **குடும்பத்தின் உணர்வுபூர்வமான ஆன்மீக வளர்ச்சியைப் பராமரித்தல் பேணி வருதல்.**

குடும்ப வாழ்க்கையின் மிக முக்கிய விடயம் இதுவாகும். குடும்பத்தை தலைமை தாங்கி நடாத்தும் கணவன் இதன் முக்கியத்துவத்தை உணர பின்வரும் அல்குர்ஆன் வசனமே போதுமானதாகும். "விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும், மனிதர்களும் கற்களும் எரிபொருள்களாகக் கூடிய நரக நெருப்பிலிருந்து இரட்சித்துக் கொள்ளுங்கள்." (66 : 6). கணவன் மனைவி பரஸ்பரம் தமது பலங்களையும் பலவீனங்களையும் இனங்கண்டு வாழ்வை நெறிப்படுத்திக் கொள்ளவேண்டும். தனது கட்டுப்பாட்டிலுள்ள குடும்பத்தை ஆன்மீக ரீதியாக வளர்த்தெடுப்பதும், மனைவி மக்களுக்கு இஸ்லாமிய அறிவைப் பெற்றுக்

கொள்ள வழி செய்வதும் கணவனின் பொறுப்பாகும். குடும்பத் தலைவன் தனது குடும்பத்தை வழிநடாத்துப வனாவான். அது குறித்து அவன் மறுமையில் வகை கூற வேண்டும்.” (புஹாரி)

“(நபியே) உமது குடும்பத்தினரை தொழுகையைக் கொண்டு ஏவுவீராக. நீரும் அதில் நிலைத்திருப்பீராக” (20:132)

ஆணையும் பெண்ணையும் படைத்த அல்லாஹ் இருவரதும் உள்ளார்ந்த தேவைகளையும் அறிந்தவனாக இருக்கின்றான். பெண்ணை நிர்வகிக்கும் பொறுப்பை கணவனுக்குக் கொடுத்துள்ளமையால் தனது ஆண்மையை வெளிப்படுத்தும் முக்கிய சந்தர்ப்பத்தில் கணவனுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளான். “உங்கள் மனைவியர் உங்களுக்குரிய விளைநிலங்கள். ஆகவே உங்கள் விளைநிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு செல்லுங்கள். உங்களுக்காக முற்படுத்திக் கொள்ளுங்கள். இன்னும் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் அவனைச் சந்திக்கக்கூடியவர்கள் என்பதையும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். (நபியே) விசுவாசிகளுக்கு நன்மாராயங் கூறுவீராக” (2:223) பொதுவாக கணவன் தன் அதிக நேரத்தை வெளியில் கழிக்கின்றான். மனைவி வீட்டினுள் கழிக்கின்றாள். கணவன் வெளியில் இருக்கும் போது மனைவி விசுவாசமாக இருக்க வேண்டும். எனவே கணவன் விரும்பாத எவரையும் வீட்டிற்குள் அனுமதிக்கக்கூடாது.

குடும்பத்தை கணவனது வழிகாட்டலின் கீழ் நிருவகிப்பதும் சொத்துக்களை முறையாகப் பேணிப் பாதுகாப்பதும் அவளது கடமையாகும்

“பெண் தனது கணவனின் வீட்டைப் பராமரிப்பவராவார். அது பற்றி அவளிடம் விசாரிக்கப்படும்.” (முஸ்லிம்)

சிறப்பானதொரு குடும்ப வாழ்வை கட்டியெழுப்புவதற்காக கணவனுக்கு தன் சொத்திலிருந்து வழங்கி இன்புறுவது விரும்பத்தக்கது.

“அதிலிருந்து அவர்கள் கொஞ்சமேனும் கொடுத்தால் நீங்கள் தாராளமாக மகிழ்வுடன் உண்ணுங்கள்” (4:4)



16-CM14797

# குழந்தை வளர்ப்பு தொடர்பான போதனைகளும் வழிகாட்டல்களும்

**பெற்றோர் பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் பெற்றோருக்கும் செய்ய வேண்டிய கடமைகளும் உரிமைகளும்**

**பெற்றோர் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டியவை**

பிள்ளைகளே மனிதர்களுக்குக் கண்குளிச்சியாவார்கள். அவர்களால் மனித வாழ்வு இன்பம் பெறுகிறது. அவர்கள் மீது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்படுகின்றன. அவர்கள் மீது இறங்கும் அல்லாஹ்வின் அருள் பெற்றோருக்கும் கிடைக்கிறது. பிள்ளைகளால் அல்லாஹ் பரகத் செய்கின்றான்.

பிள்ளை வளர்ப்பிலும் அவர்களைச் சிறந்த முறையில் கண்காணித்துக் கவனம் செலுத்துவதிலும் அசட்டையாக இருந்தால் அக்குழந்தைகள் கவலையளிக்கக்கூடியவர்களாக மாறிவிடுவார்கள். பிள்ளைகள் விடயத்தில் பெற்றோருக்குள்ள கடமைகளை இஸ்லாம் தெளிவாக விளக்கியுள்ளது. பிள்ளை பிறந்தது முதல் முழுமையான மனிதனாக மாறும் வரை அவர்களுக்காக பெற்றோர் மீதுள்ள கடமைகள் பல தரப்பட்டவைகளாகும்.

**பிள்ளை பிறந்ததும் அதற்காகப் பெற்றோர் செய்ய வேண்டிய கடமைகளை இஸ்லாம் விளக்கியுள்ளது.**

* பிள்ளைக்காக அல்லாஹ் தயார்படுத்தி வைத்துள்ள இயற்கை ஆகாரமாகிய தாய்ப்பாலை பருகச் செய்தல்

* அழகிய பெயரைக் சூட்டுதல். "மறுமையில் அல்லாஹ்விடத்தில் உங்களதும் உங்கள் பெற்றோரினதும் பெயர்களைத் கொண்டு அழைக்கப்படுவீர்கள். எனவே அழகிய பெயர்களைக் சூட்டுங்கள்" (முஸ்லிம்)

* குழந்தையின் முடியையிறக்கி அதன் நிறைக்குச் சமனாக வெள்ளியை தர்மம் செய்தல்

* அகீகா கொடுத்தல். "ஒவ்வொரு பிள்ளையும் அதன் அகீகாவைக் கொண்டு அடகு வைக்கப்பட்டுள்ளது." (புகாரி)

* கத்னாவை நிறைவேற்றல். "கத்னா செய்தல், நகம் வெட்டுதல் போன்றன இயற்கை சார்ந்த கடமை" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்"

**பிள்ளைகள் இளமைப் பருவத்தை அடையும் போது பெற்றோர் செய்ய வேண்டிய கடமைகளாவன :**

பிள்ளைகளின் உடல், உள, அறிவு வளர்ச்சியில் கரிசனை காட்டுதல்.

அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் பிள்ளைகளை உறுதிப்படுத்தல். "உங்கள் பிள்ளைகள் ஏழு வயதை அடையும் போது அவர்களுக்குத் தொழுகையை ஏவுங்கள். பத்து வயதாகியும் தொழவில்லையானால் அவர்களை அடியுங்கள்..."

படுக்கையில் பிள்ளைகளைப் பிரித்து வைத்தல். இது நபி (ஸல்) அவர்களது போதனையாகும். இதில் பயனளிக்கும் பல்வேறு அர்த்தங்கள் பொதிந்துள்ளன.

குடும்ப உறவைப் பேணல், மூத்தோரை கண்ணியப்படுத்தல், ஆசிரியர்களை கௌரவித்தல், சிறந்த நட்பைப் பேணல் போன்ற நற்பண்புகளில் பிள்ளைகளைப் பயிற்றுவித்தல்.

புன்னகை, அழகிய வார்த்தை பேசல், ஸலாம் கூறல், அனுமதி பெற்று உள்ளே செல்லல், கொட்டாவி, தும்மல் போன்றவற்றின் போதும் சாப்பிடும் போதும் தூங்கும் போதும் காலைக் கடன்களை நிறைவேற்றும் போதும் கடைபிடிக்க வேண்டிய இஸ்லாமிய வழிமுறைகளையும் சுகாதார பழக்க வழக்கங்களையும் சொல்லிக் கொடுத்தல், புறம், கோள், பொய், களவு, தூற்றல், தீய நட்பு, தீய வார்த்தைப் பிரயோகம் போன்ற தீய செயல்களிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல்.

பிள்ளையின் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும் கல்வியைக் கற்பிக்க ஏற்பாடு செய்தல்.

பிள்ளைகளின் விளையாட்டுக்களிலும் ஆக்க வேலைகளிலும் தடைக்கல்லாக நிற்காது வழிகாட்டியாக செயற்படல்.

## பிள்ளைகள் பருவ வயதை அடைந்து வாலிபத்தை நோக்கிச் செல்லும் போது உள்ள கடமைகள்.

பிள்ளைகளுடன் ஆலோசனை நடத்தல், மற்றவர்கள் மத்தியில் அவர்களது கண்ணியத்தைப் பாதுகாத்தல், அவர்களின் நட்பை மதித்தல், வழிகாட்டல், குடும்ப நிருவாகத்தில் அவர்களைப் பங்காளியாக்குதல், அவர்களுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்தல்.

## பிள்ளைகளின் கடமைகளைச் செய்வதில் பெற்றோர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு

1. முன்மாதிரிமிக்க ஒழுக்கம்
2. மனம் விட்டு கலந்து பழகுதல்
3. அன்பு செலுத்துதல்
4. நம்பகமாக நடத்தல்
5. ஊக்கமளித்து உற்சாகமூட்டல்
6. நீதியும் சமத்துவமும்
7. நளினமும் கண்டிப்பும்

## பெற்றோருக்காக முன்வைக்கப்படும் இஸ்லாமிய போதனைகள்

“ஈமான் கொண்டவர்களே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நரக நெருப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.” (66 : 6)

“நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளே. நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்புக் குறித்து விசாரிக்கப்படுவீர்கள்....” (புஹாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள், அப்பாஸ் (ரழி) அவர்களின் பிள்ளைகளான அப்துல்லாஹ், உபைதுல்லாஹ், ருஸய்யிர் (ரழி) ஆகிய மூவரையும் அணிவகுக்கச் செய்து “எவர் என்னிடம் முந்தி வருகிறாரோ அவருக்கு இன்னன்ன கிடைக்கும்” என்று கூறுவார்கள். “சிறுவர்கள் நபியவர்களிடம்

ஓடிவந்து நபியவர்களின் மேனியில் விழுவார்கள். அப்போது நபியவர்கள் அச்சிறுவர்களை முத்தமிடுவார்கள்" (முஸ்னத், அஹ்மத்)

"நபி (ஸல்) அவர்கள் ஹஸன், ஹுஸைன் (ரழி) அவர்களின் கரத்தைப் பிடித்து அவர்களது பாதங்களை தனது பாதத்தின் மீது வைத்து நீ மேலே ஏறு என்று கூறினார்கள்" (தபரானி) "நபி (ஸல்) அவர்கள் சிறுவர்களைக் கண்டால் அன்பை வெளிப்படுத்தி அவர்களுக்கு ஸலாம் கூறுவார்கள்" (புஹாரி, முஸ்லிம்)

ஒரு கிராமவாசி நபியவர்களிடம், "நீங்கள் உங்கள் குழந்தை களை முத்தமிடுகிறீர்களா? நாங்கள் முத்தமிடுவதில்லை என்றார். அதற்கு நபியவர்கள், "அல்லாஹ் உமது இதயத்தில் இருந்து அன்பை நீக்கியிருப்பதற்கு நான் பொறுப்பாளியா?" என்றார்கள் (புஹாரி, முஸ்லிம்)

"தான் உணவளிக்க வேண்டியவர்களை வீணடிப்பது ஒரு மனிதனுக்குப் பாவத்தால் போதுமானதாகும்." (முஸ்லிம்)

"எவருக்கு மூன்று பெண்மக்கள் இருந்து அவர்கள் மீது பொறுமை காத்து, நல்ல முறையில் தனது உழைப்பில் இருந்து அவர்களுக்கு உணவு, பானம், உடையளித்து வருகிறாரோ அவருக்கு அப்பெண்கள் மறுமை நாளில் நரக நெருப்பில் இருந்து காக்கும் திரையாக ஆவார்கள்" (முஸ்னத் அஹ்மத்)

## பெற்றோருக்காகப் பிள்ளைகள் செய்யவேண்டியவை

இஸ்லாத்தின் பார்வையில் அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் அடுத்தபடியான அந்தஸ்த்தை பெற்றோர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. பெற்றோரின் மாண்புகளைத் தெளிவுபடுத்தி பெற்றோரின் விஷயத்தில் முஸ்லிம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை திருக்குர்ஆன் விவரிக்கிறது. அவர்களில் ஒருவரோ அல்லது இருவரோ இருந்து, வயோதிபத்தின் பலவீனத்திற்கு இலக்காகி இருந்தால் இஸ்லாம் அவர்களுக்கு மகத்தான கௌரவத்தை வழங்குகிறது. நபியே ! உங்களது இறைவன் தன்னைத் தவிர (மற்றெவரையும்) வணங்கக்கூடாதென்று

(கட்டளையிட்டிருப்பதுடன்) தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படியாகவும் கட்டளையிட்டிருக்கிறான். “உங்களிடம் இருக்கும் அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்த போதிலும் அவர்களை வெருட்டவும் வேண்டாம் ; அவர்களை “சீ” என்றும் சொல்ல வேண்டாம். அவர்களிடம் (எதைக் கூறிய போதிலும்) மிக்க மரியாதையாகவும் அன்பாகவும் பேசுங்கள், அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடவுங்கள். அன்றி, “என் இறைவனே! நான் குழந்தையாக இருந்தபொழுது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் வளரத்துப் பாதுகாத்தவாறே நீயும் அவ்விருவர் மீதும் அருள் புரிவாயாக என்று பிரார்த்தியுங்கள். (17:23,24)

பெற்றோர் முஸ்லிம்களாக இல்லாவிடினும் அவர்களுடன் உபகாரமாகவும் நன்றியுடனும் நடந்து கொள்ளவே இஸ்லாம் உபதேசித்துள்ளது. அஸ்மா (ரழி) அவர்கள் கூறினார்கள்: இணைவைப்பவராக இருந்த என் அன்னை ஒரு முறை என்னிடம் வந்திருந்தார். இது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் சென்று எனது தாய் மிக ஆவலுடன் என்னிடம் வந்திருக்கிறார். எனது அன்னைக்கு உபகாரம் செய்யலாமா? என்று வினவினேன். நபியவர்கள் “ஆம் உனது அன்னைக்கு உபகாரம் செய்” என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

தாய் தந்தை இருவரிலும் உபகாரம் செய்வதற்கு இஸ்லாத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டவர் தாயாவார். ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து “அல்லாஹ்வின் தூதரே! நான் அழகிய முறையில் நடந்து கொள்ள மிகவும் தகுதியானவர் யார்? என்று கேட்டார். உமது தாய் என்றார்கள். பிறகு யார்? என்று கேட்டார். உமது தாய் என்றார்கள். பிறகு யார்? என்று கேட்டார். உமது தந்தை என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.” (புஹாரி)

ஒரு மனிதன் 40 வயதை அடையும் போது தனது மனைவி, பிள்ளைகள் என்று பெரிய குடும்பச் சுமையை சுமக்கின்றான். அவ்வாறான நேரத்தில் ஒரு நல்ல முஸ்லிம் தன் பெற்றோர் உயிருடன் இருப்பின் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வான் என்பதை அல்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. “மனிதன் தன்னுடைய தாய், தந்தைக்கு நன்றி செலுத்தும்படி நாம் அவனுக்கு நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் கஷ்டத்துடனேயே அவனை (கர்ப்பத்தில்) சுமந்திருந்து கஷ்டத்துடனேயே பிரசவிக்கின்றாள். அவள் கர்ப்பமானதிலிருந்து

இவன் பால்குடி மறக்கும் வரையில் முப்பது மாதங்கள் (மிக்க கஷ்டத்துடன்) செல்கின்றன. இவன் வாலிபமாகி நாற்பது வயதையடைந்தால், “என் இறைவனே! நீ என் மீதும், என் தாய், தந்தை மீதும் புரிந்த அருளுக்காக உனக்கு நன்றி செலுத்தி, உன்னுடைய திருப்தியை அடையக்கூடிய நற்செயல்களைச் செய்யும்படி(யான நல்லறிவை) நீ எனக்குத் தந்தருள்வாயாக ! எனக்கு உதவியாக இருக்கும்படி என்னுடைய குடும்பத்தை சீர்த்திருத்திவை. நிச்சயமாக நான் உன்னையே நோக்கினேன். (உனக்கு) முற்றிலும் வழிபட்டவர்களில் நானும் ஒருவன்” என்று கூறுவான். (46:15)

**பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை இரண்டாக வகைப்படுத்தி நோக்க முடியும்.**

1. பெற்றோர் உயிருடன் இருக்கும் போது செய்ய வேண்டியவை.
2. பெற்றோர் மரணித்த பின் செய்ய வேண்டியவை

**பெற்றோர் உயிருடன் இருக்கும்போது அவர்களது அழைப்புக்கு உடனடியாகப் பதில் கூறல்**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “ஜுரைஜ் மார்க்கத்தை விளங்கியவராக இருந்திருந்தால் தொழுகையை நீண்ட நேரம் தொடர்வதை விட தாய்க்குப் பதிலளிப்பது அவசியம் என்பதை அறிந்திருப்பார்” (புகாரி)

ஜுரைஜ் என்பவர் தாயின் அழைப்புக்கு உடன் பதிலளிக்காமையால் கண்டனத்திற்கு உள்ளானார் என்பதை ஹதீஸ் தெளிவுறுத்துகிறது.

பெற்றோர்களுடன் அன்புடனும் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

ஸஃதிப்னு அபிவக்காஸ் (ரழி) அவர்களது தாய், ஸஃதை இஸ்லாத்தை விட்டுவிட நிர்ப்பந்திக்குமுகமாக உண்பதையும் பருகுவதையும் தவிர்த்துக் கொண்டாள். அப்போது ஸஃத் தன் தாயிடம் இறைவன் மீது ஆணையாக உமக்கு பல உயிர்கள் இருந்து அவை ஒவ்வொன்றாகப் பிரிந்தாலும்

எனது மார்க்கத்தில் இருந்து விலகமாட்டேன் என்றார். பின்னர் ஸ:ஃ.தின் இக்கடின வார்த்தையை அல்லாஹ் கண்டித்தான். (31:15)

பெற்றோர் செய்த தியாகத்திற்காக அவர்களுடன் நன்றியுணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். நபியே உமது இறைவன் தாய், தந்தைக்கு நன்றி செய்யும் படியாகவும் கட்டளையிட்டிருக்கின்றான்.

பெற்றோரை தம்முடன் வைத்துக்கொள்வதும் பிள்ளைகளது கடமையாகும். “அவர்களில் ஒருவரோ, அல்லது இருவருமோ முதுமை அடைந்துவிட்ட போதிலும் உம்மிடமிருந்து அவர்களை விரட்டவும் வேண்டாம்.” (17 : 23)

பெற்றோருக்காகப் பிள்ளைகள் என்றும் பிரார்த்திக்கவேண்டும். “இறைவா! நான் சிறியவனாக இருந்தபோது என்மீது அவ்விருவரும் இரக்கம் காட்டியது போல் அவர்கள் மீது நீ இரக்கம் காட்டுவாயாக!” (17 : 24)

மற்றவர்கள் தம் பெற்றோரை திட்டும் விதமாக நாம் ஒருபோதும் நடந்துகொள்ளக்கூடாது.

பெற்றோர் மரணித்த பின் அவர்களுக்கு செய்ய வேண்டியவைகளும் சில காணப்படுகின்றன. அவை

* பெற்றோரின் ஜனாஸாத் தொழுகையில் கலந்துகொள்ளல்.
* அவர்கள் செய்த வஸிய்யத்துக்கள், உடன்படிக்கைகளை நிறைவேற்றல்.
* அவர்களது உறவினருடன் சேர்ந்து நடத்தல், உதவுதல்.
* அவர்களது நண்பர்களை கண்ணியப்படுத்தல்.

# வாரிசுரிமை

பண்டைக்காலம் தொட்டே ஒவ்வொரு சமூகத்திலும் இறந்த ஒருவர் விட்டுச் செல்லும் சொத்துக்களை ஏதோ ஓர் அமைப்பில் அவரின் வாரிசுகள் மத்தியில் பகிர்ந்தளிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

யூதர்கள் மரணித்தவருக்கு ஆண் குழந்தை (மகன்) இருக்கும் நிலையில் அவரின் பெண் குழந்தைகளுக்கோ, மனைவிக்கோ வாரிசுச் சொத்தில் எத்தகைய பாகத்தையும் கொடுப்பதில்லை. மேலும் மூத்த சகோதரருக்கு, இளைய சகோதரர்கள் இவருவருக்குரிய பங்கு கொடுக்கப்பட வேண்டும் என்பது யூதர்களின் சட்டமாகும். மரணித்தவருக்கு மகன் இல்லாத போது மகளின் மகனுக்குச் சொத்து வழங்கப்படும். அவரும் இல்லாத நிலையில் மரணித்தவரின் மகளுக்குக் கொடுக்கப்படும்.

மரணித்தவருக்கு மனைவி மக்கள் எவரும் இல்லாதிருந்தால் அவரின் தந்தைக்கும் அடுத்துப் பாட்டனுக்கும் சொத்து வழங்கப்படும். இவை யூதர்கள் மத்தியில் காணப்படும் வாரிசுரிமையுடன் தொடர்பான சில சட்டங்களாகும்.

ஜாஹிலிய்யாக் கால மக்கள் மத்தியிலும் வாரிசுச் சொத்துக்களைப் பகிர்ந்தளிப்பதில் ஒரு வகை ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டது.

அவர்கள் குடும்பத்தில் இருந்த வீரமுள்ள வளர்ந்த ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரமே மரணித்தவரின் சொத்தைப் பகிர்ந்தளித்தனர். பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் எத்தகைய பாகத்தையும் கொடுக்கவில்லை. இஸ்லாத்தின் வருகைக்குப் பின்னர் இந்நிலை சிறிது காலம் தொடர்ந்தது. மதீனாவில் வைத்துக் கீழ்வரும் அல்குர்ஆன் வசனங்கள் இறங்கியதைத் தொடர்ந்து பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் கூட சொத்தில் பங்கு கொடுக்கும் அமைப்புத் தோன்றியது.

“பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்) தில் ஆண்களுக்குப் பாகமுண்டு. அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பாகமுண்டு. (அதிலிருந்து சொத்து) குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே. இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட பாகமாகும்.” (4:7)

“உங்கள் பிள்ளைகளில் ஓர் ஆணுக்கும் இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பங்கு போன்றது கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான். பெண்கள் மட்டும் இருந்து அவர்கள் தொகையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் அவர்களுக்கு இறந்து போனவர் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகம் கிடைக்கும். ஒரு பெண்ணாக இருந்தால் அவளின் பங்கு சொத்தில் பாதியாகும்.” (4:11)

ஜாஹிலிய்யாக்கால மக்கள் மத்தியில் உடன்படிக்கை செய்துகொள்வதன் மூலம் வாரிசுச் சொத்தில் பங்கு பெறும் ஒரு வழக்கமும் காணப்பட்டது.

அவ்வாறே ஒருவரின் வளர்ப்பு மகன் அவரின் சொந்த மகனாகக் கருதப்பட்டு வாரிசுச் சொத்திலும் பங்கு பெறும் நிலை காணப்பட்டது. ஆனால் இஸ்லாம் வளர்ப்பு மகன் சொந்த மகனல்ல எனப் பிரகடனப்படுத்தியது.

இதனால் வளர்ப்புப் பிள்ளைக்கு வாரிசுச் சொத்தில் பங்கில்லை என்பதை அல்குர்ஆன் விளக்கியது.

“முஹம்மத் (ஸல்) அவர்கள், உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களுக்கெல்லாம் இறுதியாகவும் இருக்கின்றார். மேலும் அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.” (33 : 40)

“அவ்வாறே அல்லாஹ் உங்களுடைய சுவீகாரப் பிள்ளைகளை உங்களுடைய புதல்வர்களாக ஆக்கவில்லை. வளர்ப்பு மகன் சொந்த மகனாவான் என்று கூறுவது போன்ற, இவை யாவும் உங்களுடைய வாய்களால் சொல்லும் வெறும் வார்த்தைகளேயாகும். அல்லாஹ் உண்மையையே கூறுகின்றான். இன்னும் அவன் நேர்வழியே காட்டு கின்றான்.” (33 : 4) மதீனா ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களால் சகோதரர்களாக்கப்பட்ட ஒவ்வொரு அன்ஸாரியும் முஹா ஜிரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் வாரிசுகளாகக் கொள்ளப்பட்டனர். அதாவது அவர்களில் ஒருவர் மரணித்தால் மற்றவர் சொத்தில் பங்கு பெறும் நிலை இருந்தது. ஆனால் பின்னர் இவ்வமைப்பும் மாற்றப்பட்டது.

இஸ்லாமிய சட்டத்திலும் வாரிசுரிமைச் சட்டம் அதி முக்கியத்துவம் பெறுகின்றது. இத்துறை இஸ்லாத்தில் ஒரு தனிக்கலையாகவே அமைந்து காணப்படுகின்றது. இது “இல்ம் அல் மீராஸ்”என்றும் “இல்ம் அல்பராஇழ்”என்றும் வழங்கப்படுகின்றது.

வாரிசுரிமை சட்டங்களை விளக்கியது போன்று தெளிவாக வேறெந்த அம்சத்துடனும் தொடர்பான சட்டதிட்டங்களையும் அல்குர்ஆன் விளக்கியுள்ளதாகத் தெரியவில்லை என அறிஞர்கள் கூறுகின்றனர்.

இதுவொன்றே அல்குர்ஆன் இத்துறைக்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை விளங்கப் போதுமான சான்றாகும்.

“இன்னும் உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில் அவர்களுக்குப் பிள்ளை இல்லாதிருந்தால் உங்களுக்கு அரைப்பாகமுண்டு. அவர் களுக்குப் பிள்ளை இருந்தால் அவர்கள் விட்டுச்சென்றவற்றிலிருந்து உங்களுக்குக் காற்பாகம் தான். (அதுவும்) அவர்கள் செய்திருக்கின்ற மரண சாசனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னர் தான். தவிர, உங்களுக்குப் பிள்ளை இல்லாதிருப்பின் நீங்கள் விட்டுச் சென்றதிலிருந்து அவர்களுக்குக் காற்பாகம் தான். உங்களுக்குப் பிள்ளை இருந்தால் அப்போது அவர்களுக்கு நீங்கள் விட்டுச் சென்றதில் எட்டில் ஒரு பாகம் தான். இதுவும் நீங்கள் செய்திருக்கும் மரண சாசனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னரே தான். தந்தை ; பாட்டன் போன்ற முன்வாரிசுகள் இல்லாத ஓர் ஆணோ அல்லது ஒரு பெண்ணோ இவர்களுக்கு ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அதில் ஆறில் ஒரு பாகமுண்டு. ஆனால் இதற்கு அதிகமாக இருந்தால் மூன்றில் ஒரு பாகத்தை பங்கிட்டுக் கொள்ள வேண்டும். (இதுவும்) அவர்களின் மரண சாசனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னர் தான். ஆனால் மரண சாசனத்தைக் கொண்டு வாரிசுகள் எவருக்கும் நஷ்டம் ஏற்படக்கூடாது. (இது) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும். இன்னும் அல்லாஹ் யாவற்றையும் நன்கு அறிந்தவனாகவும் மிக பொறுமையுடையவனாகவும் இருக்கின்றான்.” (4 : 12)

“(நபியே) கலாலா (தகப்பன், தாய், பாட்டன், பிள்ளை, பேரன் ஆகிய வாரிசுகள் இல்லாத சொத்து) பற்றிய மார்க்கக் கட்டளையை அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும் அல்லாஹ் உங்களுக்கு இவ்வாறு கட்டளையிடுகின்றான்.

ஒரு மனிதன் இறந்து அவனுக்கு மக்கள் இல்லாதிருந்து ஒரு சகோதரி மட்டுமிருந்தால் அவளுக்கு, அவன் விட்டுச் சென்றதிலிருந்து அரைப்பங்கு உண்டு. இதற்கு மாறாக ஒரு பெண் இறந்து விட்டால் அவளுக்கு மக்கள் யாரும் இல்லாதிருந்தால் அவளுடைய சகோதரனாகிய அவன், சொத்து முழுமைக்கும் வாரிசாவான். இரு சகோதரிகள் இருந்தால் அவன் விட்டுச் சென்ற சொத்தில் மூன்றில் இரண்டு பாகத்தை அடைவார்கள். அவளுக்கு உடன் பிறந்தவர்கள் ஆண்களும் பெண்களுமாக இருந்தால் இரண்டு பெண்களுக்குரிய பாகம் ஓர் ஆணுக்கு உண்டு. நீங்கள் வழிதவறாமல் இருப்பதற்காகவே அல்லாஹ் உங்களுக்கு இவ்விதிகளை விளக்கி வைக்கின்றான். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான். (4:17)

இவ்வாரிசுரிமைச் சட்டக் கலையின் முக்கியத்துவம் பற்றி நபி (ஸல்) அவர்களும் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். உதாரணமாக :

"நீங்கள் பராஇழ் (வாரிசுரிமைச்) சட்டங்களைக் கற்று அவற்றை மனிதர்களுக்கு கற்பிப்பீர்களாக. நான் மரணிக்கக் கூடியவனாக இருக்கின்றேன். அறிவும் அழியக்கூடியதாய் உள்ளது. பின்னர் குழப்பங்கள் உருவாகும். இருவர் சொத்துப் பங்கீட்டில் கருத்து வேறுபாடு படினும் அவர்களுக்கு மத்தியில் சரியான தீர்ப்பை வழங்கும் எவரும் அவர்களுக்குக் கிடைக்காத நிலை தோன்றும்." (அஹ்மத், திர்மிதி)

"நீங்கள் பராஇழ் (வாரிசுரிமை) சட்டங்களைக் கற்று, அவற்றை பிறருக்குக் கற்பிப்பீர்களாக. ஏனெனில் அவை அறிவின் பாதியாகும். மேலும் இக்கலை மறக்கக் கூடியதாகும். இதுவே எனது சமூகத்தில் இருந்து அகற்றப்படும் முதல் அம்சமாகும்." (இப்னு மாஜா, தாரக்குத்னி)

"நீங்கள் பேசினால் அல்பராஇழ் எனும் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டங்கள் பற்றியே பேசுங்கள். நீங்கள் விளையாடுவதாக இருந்தால் அம்பெறிந்து விளையாடுங்கள்." என்ற உமர் (ரழி) அவர்களின் கூற்றும் இக்கலையின் முக்கியத்துவத்தைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

இத்தகைய சட்ட வசனங்களை அடிப்படையாக வைத்து இஸ்லாம் கூறும் வாரிசுரிமைச் சட்டங்களைக் கற்பது "பர்ளுகிபாயா" ஆகும் என்று சட்ட மேதைகள் கூறுகின்றனர்.

**வாரிசுச் சொத்துக்களுடன் தொடர்பான விபரங்கள்**

1. **மரணித்தவர்களின் சொத்துக்களுடன் தொடர்பான கடமைகள் :**
ஒருவர் தனது மரணத்திற்குப் பின் விட்டுச் செல்கின்ற சொத்துக்களே வாரிசுச் சொத்துக்களாகும். பொதுவாக இச்சொத்துக்கள் இஸ்லாமிய சட்டவழக்கில் “அத்தரிகா” எனப்படுகின்றன. இப்பதத்திற்கு “விட்டுச் செல்லப்பட்டது” என்பது கருத்தாகும். இச்சொத்துக்கள் வாரிசுகள் மத்தியில் பகிரப்பட முன் அவற்றில் இருந்து நிறைவேற்ற வேண்டிய சில கடமைகள் உண்டு. அவையாவன :

    1. **ஜனாஸாவுடன் தொடர்பான செலவினங்களை மேற் கொள்ளல் :**
    மரணித்த ஒருவரின் ஜனாஸாவைக் குளிப்பாட்டுதல், கபனிடுதல், சுமந்து செல்லல், அடக்கம் செய்தல் போன்ற கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான செலவினங்கள் அவரின் சொத்தில் இருந்து பெறப்படும். இதுவே மரணித்த ஒருவரின் சொத்தில் நிறைவேற்ற வேண்டிய முதற்கடமையாகும். ஜனாஸாவின் கடமைகளில் குறைகள் ஏற்படாத விதத்திலும் வாரிசுகளின் உரிமைகள் பாதிக்கப்படாத வகையிலும் இச்செலவினங்கள் செய்யப்படல் வேண்டும்.

    2. **மரணித்தவரின் கடன்களைக் கொடுத்தல்.**
    மரணித்தவர் பிறருக்குக் கொடுக்க வேண்டிய கடன்களை “தரிகா”வில் இருந்து வழங்க வேண்டும்.

    இங்கு இறந்தவர் மனிதர்களுக்குச் செலுத்த வேண்டிய கடன்களை விட ஸகாத், நத்ர், கப்பாரா, பித்யா போன்ற அல்லாஹ்வுக்குச் செலுத்தவேண்டிய கடன்கள் இருப்பின் அவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது ஷாபிஈயாக்களின் கருத்தாகும். அல்லாஹ்விற்குரிய கடன்கள் அவசியம் நிறைவேற்றப்பட வேண்டியவை அல்ல. ஆனால் மரணித்தவர் அவற்றையிட்டு “வஸிய்யத்” செய்திருந்தால் மாத்திரமே கண்டிப்பாக அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பது ஹனபிய்யாக்களின் அபிப்பிராயமாகும்.

3. **வஸிய்யத்தை நிறைவேற்றல் :**

மரணச் செலவும், கடனும் போக சொத்தில் எஞ்சியுள்ளதில் இருந்து மரணித்தவரின் வஸிய்யத் நிறைவேற்றப்படல் வேண்டும். ஒருவர் தான் மரணித்த பின்னர் தனது சொத்தில் தான் குறிப்பிடுவோருக்கு வழங்குமாறு பணிப்பதையே வஸிய்யத் என்கின்றோம். ஒருவர் தனது முழுச்சொத்தில் ஆகக்கூடியது மூன்றில் ஒரு பகுதியையே வஸிய்யத்தாகக் குறிப்பிட முடியும். வஸிய்யத் இத்தொகையை விடக் கூடியதாக அமைந்தால் மேலதிகத் தொகையை கொடுக்க வேண்டியதில்லை. எனவே ஒருவர் தனது முழுச் சொத்தையும் வஸிய்யத் செய்திருந்தாலும் அவரின் வஸிய்யத்தில் கூறப்பட்டவாறன்றி மூன்றில் ஒரு பகுதியே நிறைவேற்றப்படும்.

**வாரிசுச் சொத்துக்கான நிபந்தனைகள் :**

ஒருவரின் சொத்து வாரிசுச் சொத்தாகக் கொள்ளப்படுவதற்கு சில நிபந்தனைகள் அமையப் பெறுவது அவசியமாகும்.

I. ஒரு சொத்து வாரிசுச் சொத்தாகக் கருதப்படுவதற்கு அதன் சொந்தக்காரர் மரணமடைந்திருத்தல் வேண்டும். ஒருவர் காணாமல் போய் நீண்ட காலமாகத் திரும்பி வராத நிலையில் நீதிபதி அவர் மரணமடைந்திருப்பார் எனத் தீர்ப்பு வழங்கின் அவரின் சொத்துக்களும் வாரிசுச் சொத்தாகக் கருதப்படும்.

II. சொத்துக்குரியவர் மரணித்த வேளையில் வாரிசு உயிருடன் இருப்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். உதாரணமாக ஒருவர் மரணித்த வேளையில் அவரின் வாரிசுகளில் ஒருவர் காணாமல்போய் இருந்து அவர் உயிருடன் இருப்பது உறுதிப்படுத்தப்படாதிருந்தால் அவருக்கு சொத்தில் பங்கு வழங்கப்படமாட்டாது. ஆயினும் அவர் திரும்பி வர வாய்ப்பிருப்பின் அவருக்குரிய பங்கை ஒதுக்கி வைத்தல் வேண்டும். அவர் மரணமாகிவிட்டார் என்பது முடிவு செய்யப்பட்டால் குறித்த பங்கும் மற்றைய வாரிசுகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படும்.

ஒருவர் இறந்த வேளையில் அவரின் மனைவி கருவுற்றிருந்தால் கர்ப்பத்தில் இருக்கும் சிசுவுக்கும் வாரிசுச் சொத்தில் பங்கு ஒதுக்கப்படவேண்டும் என்பது இமாம்களின் கருத்தாகும்.

III. **வாரிசுச் சொத்தில் பங்கு பெறத் தடையாக உள்ள எந்த ஒரு அம்சமும் இல்லாதிருத்தல்.**

ஒருவர் மரணித்தவருக்கு வாரிசாக இருந்தாலும் சில வேளைகளில் சொத்தில் இருந்து பாகம் பெறத் தடையாக அமைகின்ற ஓர் அம்சம் இருந்தால் அவர் தனக்குரிய பாகத்தைப்பெற முடியாமல் போகும்.

**வாரிசுச் சொத்தின் பங்கு பெறத் தடையானவைகள் :**

I. **கொலை செய்தல் :**

வாரிசாக அமையக் கூடியவர் சொத்துக்குரியவரைக் கொலை செய்திருந்தால் அவர் குறித்த சொத்திலிருந்து பங்கு பெற அருகதையற்றவராகின்றார். "கொலை செய்தவர் வாரிசாகமாட்டார்."

II. **மதவேறுபாடு :**

அதாவது ஒரு முஸ்லிமின் வாரிசாக ஒரு காபிர் இருக்க முடியாது. உதாரணமாக ஒரு முஸ்லிம் மரணித்து அவரது தந்தை ஒரு காபிராக இருந்தால் அவருக்கு தனது மகனின் சொத்தில் எவ்வித பங்கும் கிடைக்காது. மேலும் ஒரு முஸ்லிம் ஒரு காபிரின் வாரிசாக இருக்க முடியாது என்பதும் பெரும்பாலான இமாம்களின் முடிவாகும்.

"முஸ்லிம் காபிரின் வாரிசல்ல ; காபிர் முஸ்லிமின் வாரிசல்ல" (புஹாரி, முஸ்லிம்)

III. **அடிமையாக இருத்தல்**

அடிமைக்கு வாரிசுச் சொத்தில் பங்கு கிடைப்பதில்லை.

IV. **வாரிசுச் சொத்தில் பங்கு கிடைப்பதற்கான காரணங்கள் வருமாறு :**

1. **இன பந்துத் தொடர்பு**

சொத்தை விட்டுச் செல்பவருக்கும் வாரிசுக்கும் இடையிலான குடும்ப, இரத்த உறவு அவரின் சொத்தில் பங்கு பெறுவதற்கான முக்கிய காரணியாகும். இவ்வடிப்படையிலே ஒருவரின் சந்ததியினர் அல்புரூஉ, பெற்றோர், பாட்டன்மார், அல் உஸூல் சுற்றத்தார் அல்ஹவாஷி ஆகியோர் வாரிசுகளாகின்றனர்.

2. **திருமணத் தொடர்பு**

கணவன், மனைவி தொடர்பு வாரிசாவதற்கான மற்றுமொரு காரணமாகும். இந்த வகையில் கணவனுக்கு மனைவியும் மனைவிக்கு கணவனும் வாரிசாவர்.

3. **அடிமை, எஜமானர் தொடர்பு**

அடிமை ஒரு வாரிசாக இருக்க முடியாது என்பதனை மேலே அறிந்தீர்கள். ஆனால் விடுதலை செய்யப்பட்ட அடிமைக்கு வாரிசுகள் எவரும் இல்லாத போது அவரை விடுதலை செய்த எஜமான் வாரிசாகக் கொள்ளப்படுவார்.

**வாரிசுகளின் விபரமும் அவர்களின் பிரிவுகளும்**

வாரிசுகள் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளனர். அப்பிரிவுகள் பின்வருமாறு :-

**முதல் பிரிவினர் : அஸ்ஹாபுல் புருழ்**

குறித்த ஒரு பங்கிற்கு உரித்துடையவர்கள் என ஷரீஅத்தில் குறிப்பிடப்பட்டோர். இவர்களை அஸ்ஹாபுல்புரூள் என அழைப்பர். இப்பிரிவிலிருந்து பங்கு பெறுபவர் “பர்ழ்”அடிப்படையில் பெறுபவர் எனக் கொள்ளப்படுகிறார். இப்பிரிவில்

மரணித்தவரின் கணவன், மனைவி, தந்தை, தாய், பாட்டன், பாட்டி, மகள், மகனின்மகள், உடன் பிறந்த சகோதரி, தந்தை வழிச் சகோதரி, தாய் வழிச் சகோதரன், தாய்வழிச் சகோதரி போன்றோர் அடங்குவர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய பாகங்கள் அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**இரண்டாம் பிரிவினர் அல்-அஸபா**

பாகம் நிர்ணயிக்கப்பட்ட முதல் பிரிவு வாரிசுகள் பெற்றுக்கொண்ட பங்குகள் போக மீதமுள்ளதைப் பெறத் தகுதிபெறுவர்கள் அல்அஸபா என அழைக்கப்படுகின்றனர்.

1. நேரடி அஸபாக்கள்
2. பிறர் மூலம் அஸபாக்களாவோர்.
3. பிறருடன் சேர்ந்து அஸபாக்களாவோர்.

**நேரடி அஸபாக்களில் அடங்குவோர் விபரம் பின்வருமாறு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | மகன்கள் | 5. | சகோதரர்கள் |
| 2. | மகனுடைய மகன்கள் | 6. | சகோதரருடைய மகன்கள் |
| 3. | தந்தை | 7. | சிறிய, பெரிய தந்தைகள் |
| 4. | பாட்டன் | 8. | சிறிய, பெரிய தந்தைகளின் மகன்கள் |

**பிறர் மூலம் அஸபாக்கள் ஆவோர் விபரம் :-**

1. மகனுடன் மகள் (அதாவது : மரணித்தவருக்கு மகன் இருந்து மகளும் இருந்தால் மகள் அஸபாக்களில் அடங்குவாள். மகன் இல்லாதிருந்தால் மகள் இப்பிரிவில் அடங்கமாட்டாள்.) இதே அடிப்படையில் தொடர்ந்துவரும் அமைப்புக்களையும் விளங்கிக் கொள்ளுங்கள்.
2. மகனுடைய மகனுடன் மகனுடைய மகள்.
3. இரு வழி சகோதருடன் இரு வழிச் சகோதரி.
   (ஒரே தாய் தந்தையின் பிள்ளைகள்)
4. தந்தை வழி சகோதரருடன் தந்தை வழிச் சகோதரி.



17-CM14797

பிறருடன் சேர்ந்து அஸபாக்கள் ஆவோர் அடங்குவர். மரணித்தவரின் மகளுடன் அல்லது மரணித்தவரின் மகனுடைய மகளுடன் மரணித்தவரின் சகோதரிகள் இருக்கும்போது அச்சகோதரிகள் அவர்களின் அஸபாக்களாக மாறி பங்கு பெறுவர்.

**மூன்றாம் பிரிவினர் பிற இனபந்துக்கள் - அல் அர்ஹாம்**

மேலே கண்ட இரு பிரிவுகளிலும் அடங்காத உறவினர்களான இவர்கள் அல் அர்ஹாம் எனப்படுகின்றனர். பெரும்பாலும் மரணித்தவருக்கும் தங்களுக்கும் இடையிலான உறவை ஒரு பெண் வழியாகப் பெற்றுள்ளோரே இப்பிரிவில் அடங்குகின்றனர். உதாரணமாக மகளின் பிள்ளைகள் சகோதரிகளின் குழந்தைகள் போன்றோரைக் குறிப்பிடலாம்.

முதல் பிரிவினரான அஸ்ஹாபுல்புரூழ் தங்களுக்குரிய பாகங்களைப் பெற்ற பின்னரே மீதமுள்ள பங்கில் இருந்து அஸபாக்கள் பங்கு பெறுவர். இவ்விரு பிரிவினருக்கும் அடுத்த நிலையிலேயே அர்ஹாம்கள் பங்கு பெறுவர்.

அல் குர்ஆன் வரையறுத்துக் குறிப்பிட்டுள்ள பங்குகளின் விபரம் வருமாறு :

1. நாலில் ஒன்று 1/ 4
2. இரண்டில் ஒன்று 1/ 2
3. எட்டில் ஒன்று 1/ 8
4. மூன்றில் ஒன்று 1/ 3
5. மூன்றில் இரண்டு 2/ 3
6. ஆறில் ஒன்று 1/ 6

வாரிசுகளில் குறித்த ஒவ்வொரு பாகத்தையும் பெறக் கூடியவர்கள் விபரமும் அவர்கள் அவற்றை எந்நிலைகளில் பெறுகிறார்கள் என்பதும் ஷரீஅத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1/ 4 நாலில் ஒரு பாகம் பெறுவோர் இப்பாகத்தைப் பெறுவோர் இருவராவர்.**

1. கணவன், மரணித்தவருக்கு வாரிசாகப் பிள்ளைகளோ அல்லது மகனின் பிள்ளைகளோ இருக்கும் போது கணவனுக்கு 1/ 4 பாகம் கிடைக்கும்.

2. மனைவி (மனைவிமார்கள்) மரணித்தவருக்கு வாரிசுகளாகப் பிள்ளைகளோ மகனுடைய பிள்ளைகளோ இல்லாது இருக்கும் போது மனைவிக்கு 1/4 பாகம் வழங்கப்படும்.

**1/2 இரண்டில் ஒருபாகம் பெறுவோர்**

இப்பாகத்தைப் பெறுவோர் ஐவராவர். அவர்களின் விபரம் பின்வருமாறு:

1. கணவன் - மரணித்தவருக்குப் பிள்ளைகளோ மகனுடைய பிள்ளைகளோ இல்லாத போது கணவர் 1/2 பாகம் பெறுவார்.

2. மகள் - மகள் 1/2 பாகம் பெறுவதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு.

   அவையாவன :
   1. மற்றுமொரு சகோதரி இன்றி தனித்திருத்தல்.
   2. அவளுடன் அவளின் சகோதரன் ஒருவன் இல்லா திருத்தல்.

3. மகனுடைய மகள் - மகனின் மகளுக்கு 1/2 பாகம் கொடுக்கப்படுவதற்கு கீழ்வரும் நிபந்தனைகள் இருத்தல் வேண்டும்.
   1. அவளுக்கு சகோதரன் இல்லாதிருத்தல்.
   2. அவளுக்கு மற்றுமொரு சகோதரி இல்லாதிருத்தல்.

4. உடன் பிறந்த சகோதரி - (தாய், தந்தை, இருவழிச் சகோதரி) மற்றுமொரு சகோதரி இல்லாது இருக்கும் நிலையில் உடன் பிறந்த சகோதரி 1/2 பாகம் பெறுவாள்.

5. தந்தை வழிச் சகோதரி - தந்தை வழிச் சகோதரி மற்றுமொரு சகோதரி இன்றி தனித்திருக்கும்போது 1/2 பாகம் பெறுவாள்.

**1/8 எட்டில் ஒரு பாகம் பெறுவோர் :**

மனைவி மாத்திரமே 1/8 பாகம் பெற முடியும். மரணித்தவருக்குப் பிள்ளைகளோ மகனின் பிள்ளைகளோ இருக்கும்போது மனைவி 1/8 பங்கைப் பெற்றுக்கொள்வாள்.

**1/ 3 மூன்றில் ஒரு பாகம் பெறுவோர்.**

இப்பாகத்தைப் பெறும் இருவர் இருக்கின்றனர்.

1. தாய் - தாய் 1/3 பங்கு பெறப் பின்வரும் நிபந்தனைகள் காணப்படல் வேண்டும்.

   (i) மரணித்தவருக்குப் பிள்ளைகள் அல்லது மகனுடைய பிள்ளைகள் இல்லாதிருத்தல்.
   (ii) மரணித்தவருக்குச் சகோதர, சகோதரிகள் இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ இல்லாதிருத்தல்.

2. தாய் வழிச் சகோதர சகோதரிகள் (அதாவது தாய் ஒருவராகவும் தந்தைமார்கள் வேறுபட்டவர்களாகவும் இருக்கும் சகோதரர்கள்.)

இவர்கள் 1/ 3 பங்கைப் பெறுவதற்குத் தேவையான நிபந்தனைகள் பின்வருமாறு :

1. மரணித்தவருக்கு பிள்ளைகள் எவரும் இல்லாதிருத்தல்.
2. அச்சகோதரர்கள் இருவராகவோ அதற்கு மேற்பட்டோராகவோ இருத்தல்.

**2/ 3 மூன்றில் இரண்டு பாகம் பெறுவோர்**

முன்னர் கூறப்பட்ட அரைப்பாகம் கிடைப்போரில் இருவருக்கு மேற்பட்ட தொகையினர் இருப்பின் 2/ 3 பாகம் கிடைக்கும். உதாரணம் - மகள் (மார்) மகளின் மகள்(மார்) இருவழிச் சகோதரிகள்.

**1/ 6 ஆறில் ஒரு பாகம் பெறுவோர்**

இப்பாகத்தைப் பெறும் ஏழு பேர் உள்ளனர். அவர்கள் விபரம் பின்வருமாறு,

1. தந்தை - மரணித்தவருக்குப் பிள்ளையோ மகனுடைய பிள்ளையோ இருக்கும் போது தந்தை 1/ 6 பாகத்தைப் பெறுவர்.

2. தாய் - பிள்ளையோ, மகனுடைய பிள்ளையோ இருக்கும் நிலையில் அல்லது சகோதர சகோதரிகளில் இருவர் இருக்கும் போது தாய் 1/6 பாகத்தைப் பெறுவார்.

3. பாட்டன் - மரணித்தவருக்குத் தந்தை இல்லாதிருந்து மகன் அல்லது மகனுடைய மகன் இருக்கும் நிலையில் பாட்டன் 1/6 பாகத்தைப் பெறுவார்.

4. மகனின் மகள் - மரணித்தவருக்கு மகள் ஒருவர் இருக்கும் போது மகனின் மகள் 1/6 பாகத்தைப் பெறுவார்.

5. தந்தை வழிச் சகோதரி - இருவழிச் சகோதரி ஒருவருடன் தந்தை வழிச் சகோதரி ஒருவர் இருக்கும் போது அவர் 1/6 பாகத்தைப் பெறுவார்.

6. பாட்டி - மரணித்தவருக்குத் தாய் இல்லாத போது பாட்டி 1/6 பாகத்தைப் பெறுவார்.

7. தாய் வழிச் சகோதரன் ஒருவர் அல்லது சகோதரி ஒருவர் - மரணித்தவருக்குப் பிள்ளைகள் இல்லாத நிலையில் இவர்கள் 1/6 பாகத்தைப் பெறுவார். நீங்கள் இங்கு மற்றுமொரு பாகப் பிரிவினை ஒழுங்கையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆணுக்கு இரண்டு பெண்ணுக்கு ஒன்று என்ற அமைப்பில் வழங்கப்படுவதே அவ்வொழுங்காகும்.

பின்வரும் அமைப்புகளில் இவ்வொழுங்கில் பங்கு வழங்கப்படும்.

1. மரணித்தவரின் மகனும் அவனின் சகோதரியும் (மகள்) இருக்கும் நிலை.
2. மகனுடைய மகனும் (பேரன்) அவனுடைய சகோதரியும் (பேத்தி) இருக்கும் நிலை.
3. இரு வழி அல்லது தந்தை வழிச் சகோதரர்களுடன் அவர்களுடைய சகோதரி இருக்கும் நிலை.

வாரிசுக் கலை மிகவும் விரிவானதொன்று, அது பற்றிய தெளிவான ஒரு விளக்கத்தைப் பெற்றவருக்கே சொத்துக்களை முறையாக உரிய பங்குதாரர்களுக்கு பிரித்து வழங்கமுடியும்.

# ஜினாயாத்

## குற்றமும் தண்டனையும்

நடைமுறை உலகிலுள்ள குற்றவியல் சட்டங்கள் நவீன மேற்கத்திய சட்ட வல்லுனர்கள் குறிப்பிட்ட சில விதிகளின் கீழும், பிரமாணங்களின் கீழும் ஆக்கி வைத்த சிந்தனைகளும், கோட்பாடுகளுமாகவே உள்ளன. இவை எந்த வகையிலும் உளப்பண்பாட்டுப் பயிற்சி மாற்றங்களையோ, சமூக சீர்திருத்தப் பெறுமானங்களையோ இலக்காக கொள்ளாதவைகளாகவே உள்ளன. குற்றங்களைப் பற்றியும் அவற்றின் தன்மைகள், சட்ட ஆக்க உத்திகள் என்பன பற்றியும் கவனம் செலுத்திய அளவிற்கு குற்றங்களுக்கான தண்டணைகளைக் கூறுவதிலோ அல்லது குற்றங்களைச் சந்தேகமற நிறுவ முயற்சிப்பதிலோ மேற்கத்தைய குற்றவியல் சட்டங்கள் அதிக கரிசனை கொண்டவைகளாக புலப்பட வில்லை. சில போது குற்றவாளியை வாதத் திறமையால் சுற்றவாளியாக அறிமுகப்படுத்தக்கூடிய அளவுக்கு தாழ்ந்து போன பிரமாணங்களையே அவற்றில் காண முடிகிறது. இதனால் சமூக அழிவும் சீர்குலைவுகளும் மிகைத்திருக்கும் நிலை உருவாகின்றது. சமூக விரோதிகளைப் பாதுகாத்து சமூகத்தை இழக்கும் நிலைக்கு மேற்கத்தேய சட்டங்களின் பண்புகள் காணப்படுகின்றன. இதனால் உலகத்தில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களின் கை ஓங்கி சமூக உரிமைகள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் குற்றவியல், தண்டனை தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டத்தை அறிவது மிகப் பொருத்தமானதாகும்.

பொதுவாக குற்றமென்பது குறித்த சட்ட வரையறைகளுக்கு அல்லது உடன்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உடன்பட்ட ஒருவர் அதனை மீறுவதைக் குறிக்கின்றது. அவ்வாறு மீறிய ஒருவரை முன்னைய நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளும் பல மாற்று நடவடிக்கை தண்டனைகளில் ஒன்றாக இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் குற்றத்தைப் பல்வேறு அடிப்படையில் குறித்து காட்ட முடியும். பருவ வயதையடைந்த, புத்தி சுவாதீனமுள்ள ஒருவர் அல்லாஹ்வும், றஸுலும் விதித்த ஒன்றை விடுவதும் தடுத்த ஒன்றை செய்வதும் குற்றமெனக் குறிக்கப்படுகின்றது. இதனை சமூகக் கண்ணோட்டத்தில் குறிப்பிடுவதாயின் ஒரு தனி நபர் அல்லது ஒரு குழுவினரின் இன்னொரு தனிநபரின் அல்லது குழுவினர் உடலுக்கு அல்லது சொத்துக்களுக்கு அல்லது சுயகௌரவத்துக்கு பங்கமேற்படுத்தக் கூடிய விதத்தில் செயற்படுவதனைக்

குறிக்கின்றது. இதிலிருந்து தனிநபர்களையும், சமூக உறுப்பினர்களையும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சி தண்டனை என அழைக்கப்படுகிறது.

இஸ்லாம் சில அடிப்படைகளைப் பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் அதிகம் கவனம் செலுத்துகின்றது. அவை (தீன்) மார்க்கம், பொருள், மானம், உடல், உயிர், பரம்பரை, புத்தி இவை பாதுகாக்கப்படாவிட்டால் ஒழுங்கீனம், அநீதி, அராஜகம் தலை தூக்கிவிடும். இதனால் தான் இஸ்லாம் இவற்றை பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் அதன் கவனத்தைச் செலுத்துகின்றது. இஸ்லாத்தில் குற்றம், தண்டனை பற்றிய கோட்பாடுகளும் இப்பிரமாணங்களுக்கமைய நிறுவப்பட்டுள்ளன. குற்றங்களின் வகைகள்

01) **(ஜராஇமுல் ஹுதூத்) தண்டனைகள் வரையறுக்கப்பட்ட குற்றங்கள்.**

i. விபச்சாரம்.
ii. அபாண்டம் சுமத்துதல் அவதூறு கூறுதல்.
iii. மது அருந்துதல்.
iv. திருடுதல்
v. வழிப்பறிக் கொள்ளை.
vi. மதம் மாறுதல்.
vii. இஸ்லாமிய ஆட்சிக்கெதிராகப் புரட்சி செய்தல்.

இவ்வகையான குற்றங்களுக்கு அல்குர்ஆன், சுன்னா மூலம் தண்டனைகள் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கும். இவ்வகையான குற்றங்கள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

1) இவை நிகழ்ந்தால் சமூக நலன் கருதி கண்டிப்பாக தண்டனை வழங்கப்படும்.
2) தண்டனைகளில் கூடுதல், குறைதல் செய்ய முடியாது.
3) இத்தண்டனைகளுக்குரித்தானவர்களில் எவருக்கும் மன்னிப்பு வழங்க முடியாது.

இவ்வகையான குற்றங்களின் போது குற்றமிழைத்தவனைப் புறக்கணித்து சமூக நலனைப் பேணுவதற்காக கண்டிப்பாக தண்டனையை வழங்குகின்றது. இவ்வாறு இஸ்லாம் கடுமையைக் காட்டுவதற்கு அடிப்படைக் காரணம் இக்குற்றங்களின் போது தாராளத் தன்மையோடு நடந்து கொண்டால் அது

ஒழுக்கச் சீர்குலைவுக்கும், சமூக நாசத்திற்கும் சமூக கட்டுக்கோப்பின் தளர்வுக்கும், குற்றங்களின் அதிகரிப்புக்கும் காரணமாக அமையும் என்பதனாலாகும்.

02) **(ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா) பழி வாங்கல், நஷ்டஈடு பெறல் எனும் தண்டனைகளையுடைய குற்றங்கள்.**

i. மன முரண்டாகச் செய்த கொலை
ii. கை மோசக் கொலை.
iii. தவறுதலாக இடம் பெற்ற கொலை.
iv. மனமுரண்டாகச் செய்த காயம்.
v. தவறுதலாக இடம் பெற்ற காயம்.

உலக வரலாற்றில் மேற்படி குற்றங்கள் பாரிய குற்றங்களாகவே கருதப்பட்டு வந்துள்ளன. இவ்வகையான குற்றங்கள் முன்னைய அதாவது ஜராஇமுல் ஹுதூத் குற்றங்களை விட மன்னிக்க முடியுமான குற்றங்களாகவுமுள்ளன. இவற்றுக்கான முடிவுகளை எடுப்பதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகாரமுண்டு. எனினும் இவ்வுரிமை துஷ்பிரயோகம் செய்யப்படலாகாது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசு தலையிட்டு த∴ஸீர் அடிப்படையில் தண்டனைகளை வழங்கும்.

03) **கப்பாராவுக்குரிய குற்றங்கள்.**

i. நோன்பை முறித்தல்.
ii. இஹ்ராமை முறித்தல்.
iii. சத்தியத்தை முறித்தல்.
iv. லிஹார், ஈலாஉவின் போது உறவு கொள்ளல்

04) **த∴ஸீர் குற்றங்கள்.**

ஜராஇமுல் ஹுதூத், ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா, ஜராஇமுல் கப்பாராவில் அடங்காத அனைத்துக் குற்றங்களும் த∴ஸீருக்குரிய குற்றங்களாகக் குறிக்கப்படுகின்றன. இவை த∴தீப் சீர்திருத்தத் தண்டனைக்குரிய குற்றங்களாகவும் குறிக்கப்படுகின்றன. குற்றத்தின் பரப்பைப் பொறுத்தவரை இது விசாலமானதாகவும் இவ்வகையான குற்றங்களுக்கு தீர்ப்பு வழங்கும் பூரண அதிகாரம் (காழிக்கே) நீதிபதிக்கே உரியதாகவும் அமைந்துள்ளது. இவ்வகைக் குற்றங்களுக்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

i. வட்டித் தொழிலில் ஈடுபடல்.
ii. இலஞ்சம் வழங்குதல்.
iii. உடன்படிக்கை மீறுதல்.
iv. வியாபார மோசடிகள்.
v. பொறுப்புக்களில் கவனயீனம்.

* தண்டனைகளை வழங்குமுன் இஸ்லாம் சில அடிப்படைகளைக் கருத்திற் கொள்கிறது.

1. நிர்ணயிக்கப்படும் தண்டனை குற்றம் நிகழ முன்னர் தடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. தண்டனை மிகப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.
3. தண்டனைகளின் போது குற்றமிழைத்தவனின் பதவி, அந்தஸ்து போன்றனவற்றைப் பொருட்படுத்தலாகாது.
4. தண்டனைகள் சமூகப் பாதுகாப்பு, சமூக நிலைப்பாட்டை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. தண்டனைகள் சட்டரீதியானதாக இருத்தல் வேண்டும்.
6. சாதாரண குற்றங்களின்போது தண்டனைகள் குற்றவாளியைப் பொறுத்து வேறுபடலாம்.

இஸ்லாமிய தண்டனைகள் கொண்டிருக்கும் இவ்வடிப்படைகள் தவறாக விளங்கப்பட்டுள்ளன. அவை நியாயமானதுதான் என ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள போதிய சான்றுகள் உள்ளன.

* இஸ்லாமிய தண்டனையின் நோக்கங்கள், இலக்குகள் அது தவறாக விளங்கப்பட்டுள்ளதை நீக்கிவிடும்.

1. அறிவு புகட்டி, நேர்வழி காட்டி நல்ல மனிதர்களாக மாற்றுதல்.
2. தீமைகளைக் களைந்து சமூக ஒழுங்கையும் நீதியையும் பாதுகாத்தல்.
3. சமூக, சீர்திருத்தமும் கட்டுப்பாடும்.
4. தனிமனித, சமூக உரிமைகளைப் பாதுகாத்தல்.
5. மக்களை நன்மையின்பால் வழிநடத்தலும் சுயகட்டுப்பாட்டையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்தலும்.
6. குற்றவாளியை நல்வழிப்படுத்தல்.
7. எதிர்காலத்தில் குற்றம் நிகழாமல் தடுத்தல்.
8. செய்த குற்றத்திற்கு கூலி வழங்கல்.

இவ்வாறான இலக்குகளை அடிப்படையாக வைத்துக்கொண்டே இஸ்லாம் தண்டனைகளை அமுல்படுத்துகின்றது. அதன் மூலம் குற்றம் நிகழாத சூழல் ஒன்றை உருவாக்க முயற்சிக்கின்றது.

* இஸ்லாமிய தண்டனைகள் மிலேச்சத்தனமானவை, மிருகத்தனமானவை, மனித உரிமைகளில் தலையிடுபவை, கொடூரமானவை என்றவாறான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. உதாரணமாக விபசாரம் புரிந்தவனுக்கு நூறு கசையடிகள் அல்லது திருமண முடித்தவனாயின் கல்லெறிந்து கொல்லல், மது அருந்தியவனுக்கு நாற்பது கசையடிகள், களவெடுத்தவனின் கரம் துண்டிக்கப்படுதல், அவதூறு கூறியவனுக்கு எண்பது கசையடிகள் வழங்குதல், மதம் மாறியவனுக்கு எச்சரிக்கையின் பின்னர் மரண தண்டனை விதிப்பது போன்றவை இவர்கள் இந்தக் குற்றங்களின் மூலம் சமூகத்தின் அடிப்படை பாதிக்கப்படுகிறது என்பதையும் அவை உலகத்தில் ஏற்படுத்தியுள்ள பாதக விளைவுகளை சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள். இத்தண்டனைகளை அமுல்படுத்தாததன் விளைவாக குற்றங்களைச் செய்வோரின் கைகள் ஓங்கி அது சமூகத்தில் சமூக, பொருளாதார, ஒழுக்க, பண்பாட்டுச் சீரழிவுகளை ஏற்படுத்தியிருப்பதையும் காணத் தவறுகிறார்கள்.

* இஸ்லாமிய தண்டனைகளுக்கான நியாயங்கள் :

1. இஸ்லாம் அல்லாஹ்வினால் உருவாக்கப்பட்ட இவ்வுலகத்தையும் மறுமையையும் தொடர்புபடுத்தியுள்ள பரிபூரண வாழ்க்கைத் திட்டமாகும். அதன் சட்ட யாப்புக்கள் அனைத்தும் ஈருலகத்தையும் தொடர்புபடுத்தி யவையாகவுள்ளதால் இவ்விரண்டையும் தொடர்பு படுத்தி ஆராய்கின்றவர் களுக்கே அதனை விமர்சிக்கலாம். வெறுமனே உலகத்தை இலக்காக வைத்துக்கொண்டு சிந்திப்பவனுக்கு இதன் அர்த்தமே புரியாமல் போகும்.

2. இஸ்லாம் என்ன நோக்கங்களை இலக்காகக் கொண்டு தண்டனைகளை அமுல்படுத்துகின்றதோ அந்த நோக்கங்களை அடைய அத்தண்டனைகள் துணையாக இருப்பதனால் அது நியாயமானதாகும். இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்பட்ட, நபி (ஸல்) அவர்களதும், குலபாஉர் ராஷிதூன்களதும் காலங்களிலும் இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்படும் நாடுகளிலும் இதனைக் கண்டுகொள்ள முடிகின்றது.

3. குற்றங்கள் நிகழ்வதைத் தடுக்கக்கூடிய ஒரு சூழலை உருவாக்கிய தன் பின்னரே இஸ்லாம் தண்டனைகளை அமுல்படுத்துகின்றது. அதன் நம்பிக்கைக் கோட்பாடுகள், சமூக, பொருளாதார, அரசியல், ஆன்மீக, ஒழுக்கப் போதனைகள் குற்றம் நிகழாத சூழ்நிலைகளை ஏற்படுத்த வழியமைக்கின்றன. இதற்கு உதாரணம் திருமணம், பலதாரமணம் என்பன விபசாரத்தை தடுக்கும். இஸ்லாமிய உடை ஆண்-பெண் தொடர்பு சம்பந்தமான ஒழுங்குகள் கடைப்பிடிக்கப் படும்போது அங்கே தகாத தொடர்புகள், நடத்தைகள் ஏற்பட வாய்ப்பில்லை. ஸகாத், வாரிசுரிமை, மரண சாசனம், ஸதகா, ஸகாதுல் பித்ர் அமுலாகும் இடத்தில் களவு இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை. இஸ்லாம் இவ்வாறானதொரு சூழலிலேயே தண்டனைகளை அமுல்படுத்த முனைவதால் அது நியாயமானதாக வுள்ளது. அதனைத் தவறாகப் புரிந்துள்ளவர்கள் இந்நியாயத்தைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளார்கள்.

4. குற்றம், தண்டனை பற்றி முன்கூட்டியே தெளிவை இஸ்லாம் வழங்கியுள்ளது. மிகத் தெளிவான முறையில் “ஜராஇமுல் ஹுதூத்”, “ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா” பற்றி குர்ஆனிலும், ஸுன்னாவிலும் விளக்கப்பட்டுள்ளதால் இஸ்லாத்தை ஏற்ற ஒரு முஸ்லிம் இவற்றை ஏற்று நடப்பது இலகுவாகின்றது. ஸஹாபாக்கள் இதற்கு உடன்பட்டார்கள் என்பதை ஸஹாபியான “மாஇஸ்” என்பவரின் வரலாற்றுச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

5. மறுமையில் வழங்கும் தண்டனைகளை வலியுறுத்துவதன் ஊடாக உளப் பக்குவத்தை இஸ்லாம் வழங்குகின்றது. இவ்வாறான உளப் பக்குவம் உள்ளவர்களிடம் குற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்பிருக்காது. மறுமையின் தண்டனையுடன் ஒப்பிடும்போது உலகியல் தண்டனை அற்பமானதே என்ற உளப்பக்குவமுள்ளவர்களாக நபித்தோழர்கள் இருந்ததனால் தான் அவர்களிடமிருந்து குற்றங்கள் நிகழ்வது அரிதாகவிருந்தது.

6. தண்டனைகளை வழங்குவதற்கு இஸ்லாம் நிபந்தனைகள் விதித்துள்ளது. குற்றங்கள் சாட்சிகளுடன் நிறுவப்படல் வேண்டும் அல்லது குற்றவாளி தானாக குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். குற்றம் இழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கக் கூடாது. அறிவு, சுதந்திரம் உள்ள நிலையில் குற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். குற்றமிழைக்கும் மனநிலையில் குற்றத்தைச் செய்திருத்தல் வேண்டும். அவ்வாறு விதிக்கப்படும் தண்டனை ஆதாரபூர்வமான தாகவும் தர்க்க வாதத்துக்கும் மதிநுட்பமிக்க பகுத்தறிவுக்கும் பொருத்தமாகவும் இருக்குமேயன்றி அது எவ்விதமான குற்றவியல் கொள்கைகளையும் தழுவியதாகவோ அல்லது ஒரு தேசத்தின் அல்லது தனிநபரின் விருப்பு வெறுப்புகளால் பாதிக்கப்பட்டதாகவோ இருக்க மாட்டாது.

7. குற்றம் நிகழ்ந்த சூழலைக் கருத்திற் கொண்டு இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்படுவதால் அது நியாயமானதாக வுள்ளது. களவெடுத்தவனின் கையைத் துண்டிக்க வேண்டுமென்பது இஸ்லாமியத் தண்டனையாயினும் திருடனுக்குத் திருட்டைச் செய்யத் தூண்டியது அவனுடைய பசியாகவிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படுமாயின் அவனுக்கு அத்தண்டனை அளிக்கப்படுவதில்லை. உமர் (ரழி) அவர்கள் பசியின் காரணமாக மக்கள் திருடக் கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டதால் பஞ்ச காலம் ஒன்றில் திருட்டுக்குரிய தண்டனையை நிறைவேற்றாதுவிட்டார். இது இஸ்லாமியத் தண்டனை என்ன இலக்கை அடிப்படையாக வைத்து நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

8. இஸ்லாம் கண்மூடித்தனமாகத் தண்டனைகளை அமுல்படுத்த இடமளிப்பதில்லை. "சந்தேகத்தின் அடிப்படையில் தண்டனைகளை நிறைவேற்றுவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்". இதனை உமர் (ரழி) காலத்தில் இடம்பெற்ற ஒரு வரலாற்றுச் சம்பவம் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. ஹாதிப் இப்னு பல்தஆவிடம் பணிபுரிந்த சில பையன்கள் முஸ்னா குலத்தைச் சேர்ந்த ஒருவரின் பெண் ஒட்டகை ஒன்றைத் திருடிவிட்டதாக உமர் (ரழி) அவர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. உமர் (ரழி) இதனை விசாரித்தபோது அப்பையன்கள் தாம் திருடியதாக ஒப்புக் கொண்டமையால் அவர்களின் கைகளைத் துண்டிக்குமாறு தீர்ப்பளித்தார். மறுகணம் சற்று சிந்தித்து விட்டு "இறைவன் மீது ஆணையாக இப்பையன்களை நீர் வேலைக்கமர்த்தி அவர்களைப் பட்டினி போட்டதையும் அதன் காரணமாக அவர்கள் அவ்விலக்கப்பட்ட உணவைப் புசிக்க நீர் காரணமாயிருந்ததையும்

நான் அறிந்திருக்காவிட்டால் நிச்சயமாக நான் அவர்களின் கைகளைத் துண்டித்திருப்பேன்” எனக் கூறி அப்பையன்களின் எஜமானை விளித்து “இறைவன் மீது ஆணையாக நான் அவர்களுடைய கையைத் துண்டிக்காமல் விட்டமைக்காக உம்மைத் துன்புறுத்தக்கூடிய ஒரு தண்டத்தை விதிக்கப் போகிறேன்” என்று கூறி அந்த ஒட்டகையின் விலையைப் போல் இரு மடங்கைத் தண்டமாகச் செலுத்தும்படி அப்பையன்களின் எஜமானனுக்கு உத்தரவிட்டார்.”

ஒருவனுக்கு குற்றச் செயலைச் செய்யத் தூண்டும் ஒரு சந்தர்ப்பமிருப்பின் அவனுக்கு தண்டனை வழங்கப்படுவதில்லை என்பதை இச்சம்பவம் உறுதிப்படுத்துகின்றது.

9. குறிப்பிட்ட குற்றச் செயல்களுக்கு மன்னிப்பு வழங்குவதும் தண்டிக்கப்படுபவனின் குடும்ப நலனில் இஸ்லாம் காட்டும் அக்கறை இஸ்லாமியத் தண்டனை கொடூரமானவை அல்ல என்பதை நிரூபிக்கின்றது. தண்டிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு பொது நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகின்றது.

10. தனிநபர் சுதந்திரம் எல்லைக்குட்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு இஸ்லாமியத் தண்டனை உதவுவதால் அது நியாயமானதாகவுள்ளது. ஏனெனில், குற்றமிழைப்பவர்களின் கையோங்கி, அவர்கள் கட்டுப்பாடின்றி வெறுமனே விடப்படுவது சமூக நாசத்திற்குக் காரணமாகின்றது.

11. நபி (ஸல்) அவர்களது காலத்திலும் குலபாஉர் ராஷிதூன்கள் காலத்திலும் தண்டனைகள் மிகக் குறைவாகவே அமுல்படுத்தப் பட்டுள்ளன. இதற்கு அடிப்படைக் காரணங்கள் பல இருக்கின்றன. ஒன்று இஸ்லாமியத் தண்டனைகள் குற்றங்கள் நிகழாமல் இருக்கக் கூடிய சூழலைக் கொண்டு வந்தமை. இரண்டு மக்கள் குற்றங்களிலிருந்து விடுவதற்கான சமூகச் சூழல் உருவாகியமை. நடைமுறையிலுள்ள தண்டனை முறைகள் குற்றங்களைத் தூண்டிக் கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் குற்றம் நிகழ்வதற்கான சகல வாயில்களும் திறந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

12. இஸ்லாமிய வரலாற்றில் தண்டனைகள் அமுல்படுத்தப்பட்ட விதம் தண்டனைகள் கொடூரமானவையல்ல என்பதையும், தண்டனை

வழங்குவதுதான் இஸ்லாம் மார்க்கத்தின் நோக்கமல்ல என்பதும் உறுதியாகின்றது. விபசாரம் செய்த ஒரு பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தனக்கு தண்டனை வழங்குமாறு வேண்டினாள். குழந்தையைப் பெற்றதன் பின்னர் வா என அனுப்பி வைத்தார்கள். குழந்தை கிடைத்ததும் அப்பெண் மீண்டும் வந்தாள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் பாலூட்டியதன் பின்னர் வா என அனுப்பி வைத்தார்கள். இரண்டு வருடங்கள் கழிந்து வந்ததன் பின்னரே அப்பெண்ணுக்கு தண்டனை வழங்கப்பட்டது.

இஸ்லாத்தையும், அதனது தண்டனை முறைகளையும் தவறாகப் புரிந்துகொண்டவர்கள் அது பற்றி திறந்த மனதுடன் நியாயமாக சிந்திப்பதனூடாக ஒரு ஆரோக்கியமான முடிவுக்கு வரலாம் என்பதை மேற்குறிப்பிடப்பட்ட நியாயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

I. தண்டனை நிகழா சூழலுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை.

II. தண்டனைகள் மோசமானவை என்ற குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கும் முயற்சிக்கு முதன்மை கொடுத்து எழுதப்பட்டுள்ளது.

## காப்பாரா

| காரணம் | கப்பாரா | அதன் விதி | நிறைவேற்றும் முறை |
|---|---|---|---|
| 1. சத்தியத்தை முறித்தல் | 10 ஏழைகளுக்கு உணவு அல்லது அவர்களுக்கு ஆடை அல்லது மு.்.மினான அடிமையொன்றை விடுதலை செய்தல் அல்லது மூன்று நோன்பு நோற்றல் | வாஜிப் (கட்டாயமானது) | தெரிவுக்குட்பட்டது விரும்பியதை நிறைவேற்றலாம், உணவு, ஆடை, அடிமை என்பவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர் நோன்பு நோற்க வேண்டும். |
| 2. ஈலாஉ செய்தல் மனைவியோடு சேர்வதில்லையென சத்தியம் பண்ணுதல் | ஏழைகளுக்கு உணவு அல்லது ஆடை அல்லது தொடராக மூன்று நோன்பு நோற்றல் | வாஜிப் | உணவு, ஆடை, அடிமை என்பவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர் மூன்று நோன்பு நோற்க வேண்டும் |
| 3. அழ்ழிஹார் : (தனது மனைவியின் தனக்கு மஹ்ரமான ஒருவரது முதுகை, முதுகுக்கு ஒப்பாகிப் பேசுவது) | 1. மு.்.மினான அடிமையை உரிமையிடல்<br>2. இரண்டு மாதம் தொடராக நோன்பு நோற்றல்<br>3. 60 மிஸ்கீன்களுக்கு உணவளித்தல் | வாஜிப் | தெரிவில்லை. ஒழுங்குப்பிரகாரம் ஒன்றின்றேல் மற்றதை நிறை வேண்டும். |
| 4. ரமழான் பகற்பொழுதில் உடலுறவில் ஈடுபட்டு நோன்பை முறித்துக் கொண்டவர் | 1. மு.்.மினான அடிமையை உரிமையிடல்<br>2. இரண்டு மாதம் தொடராக நோன்பு நோற்றல்<br>3. 60 மிஸ்கீன்களுக்கு உணவளித்தல் | வாஜிப் | தெரிவில்லை. ஒழுங்குப்பிரகாரம் ஒன்றின்றேல் மற்றதை நிறை வேண்டும். |
| 5. கொலை செய்தல் | 1. மு.்.மினான அடிமையை உரிமையிடல்<br>2. இரண்டு மாதம் தொடராக நோன்பு நோற்றல் | வாஜிப் | தெரிவில்லை. ஒழுங்குப்பிரகாரம் ஒன்றின்றேல் மற்றதை நிறை வேண்டும். |
| 6. ஹஜ்ஜின் போது தடுக்கப்பட்ட ஒன்றை செய்தல் | 1. ஆடொன்றை அறுத்துக் கொடுத்தல்<br>2. ஆறு ஏழைகளுக்கு உணவளித்தல் | வாஜிப் | தெரிவில்லை. ஒழுங்குப்பிரகாரம் ஒன்றின்றேல் மற்றதை நிறை வேண்டும். |
| 7. ஹஜ்ஜின் போது கடமையான (வாஜிபான) ஒன்றை விடுவது | 1. ஆடொன்றை அறுத்துக் கொடுத்தல்<br>2. பத்து நோன்புகள் நோற்றல் அதில் மூன்று ஹஜ்ஜிலும் மற்று ஏழு நோன்பையும் தன் இருப்பிடம் திரும்பிய பின்பு நோற்றல் வேண்டும். | வாஜிப் | தெரிவில்லை. ஒன்றின்றேல் மற்றது |

## காப்பாரா

| *காரணம்* | *கப்பாரா* | *அதன் விதி* | *நிறைவேற்றும் முறை* |
|---|---|---|---|
| 8. ஹஜ்ஜு செய்யச் சென்று தடை ஏற்படல், தமத்து.'. அல்லது கிரான் முறையில் ஹஜ்ஜை நிறைவேற்றல். | 1. ஒரு ஆட்டை அறுத்துக் கொடுத்தல்<br>2. பத்து நோன்புகள் நோற்றல் (அதில் மூன்று ஹஜ்ஜிலும் மற்ற ஏழு நோன்பையும் தன் இருப்பிடம் திரும்பிய பின்பு நோற்றல் வேண்டும்.) | வாஜிப் | தெரிவில்லை. ஒழுங்குப் பிரகாரம் ஒன்றின்றேல் மற்றதை நிறை வேற்ற வேண்டும் |
| 9. இஹ்ராம் அணிந்த நிலையில் வேட்டையாடல் | வேட்டையாடப்பட்டது போன்ற பிராணி யொன்றை அறுத்து மக்காவிலுள்ள ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தல் | வாஜிப் | அப்பிராணியின் பெறுமதி பார்த்து உணவு கொடுப்பது அல்லது ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டிய ஒவ்வொரு நாளைக்கும் நோன்பு நோற்றல் இரண்டிலொன்றைச் செய்யலாம். |
| 10. இஹ்ராமிலிருந்து நீங்க முன்பு உடலுறவில் ஈடுபடுதல் | 1. ஒரு ஒட்டகையை அறுத்துக் கொடுத்தல்<br>2. பத்து நோன்புகள் நோற்றல் (அதில் மூன்று ஹஜ்ஜிலும் மற்ற ஏழு நோன்பையும் தன் இருப்பிடம் திரும்பிய பின்பும் நோற்றல் வேண்டும்.) | வாஜிப் | ஒட்டகையின்றேல் நோன்பு நோற்க வேண்டும். |

**IDCE**

# அல்-பிக்ஹுல் இஸ்லாம்